தெய்வத்திற்கு மேல்

கி. ஸரஸ்வதி அம்மாள்

592 — 354
304
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

உரிமை பதிவு]
கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை
[விலை ரூ. 2/8

முதற் பதிப்பு : 194.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 672
நன்கொடை எண்: 672

அவ்வை
தி.க. சண்முகம்
தமிழியல்

Printed at the Madras Law Journal Press, Mylapore, Madras.
MS. 76—1st February, 1947—2,000 c.

சமர்ப்பணம்

வாழ்க்கையில் எனக்
குத் தந்தைபோல்
இருந்த
ஆர். நாராயணஸ்வாமி ஐயர்
அவர்களுக்கு.

பொருளடக்கம்

		பக்கம்
முகவுரை	...	v
முன்னுரை	...	ix
தெய்வத்திற்குமேல்	...	1
முடிக்காத கடிதம்	...	15
அதிலும் ஒரு லாபம்	...	31
மனக் குரங்கு	...	41
பாட்டியின் அபிமானம்	...	56
வெற்றி யாருக்கு?	...	65
பச்சை மோதிரம்	...	78
ராமுவின் தீர்மானம்	...	89
காணுமற் போன காதோலை	...	97
மனம் மாறிற்று	...	109
காசி யாத்திரை	...	125
விருந்தனுபவம்	...	134
சாம்பசிவத்தின் அதிசயம்	...	140
சம்பந்தி உபசாரம்	...	151
நண்பருள் நடிப்பு	...	162
கண்டிப்பு	...	170

முகவுரை

தமிழ் நாட்டில் எடுத்துக் காட்டாகச் சிறந்து விளங்கும் ஒரு குடும்பத்தைச் சொல்லவேண்டும் என்று வடநாட்டார் யாராவது நம்மிடம் கேட்டால், "மயிலாப்பூரில் கல்வி, பதவி, செல்வம், செல்வாக்கு எல்லாவற்றிலும் சிறந்து புகழ்பெற்ற ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் இருந்தார்கள்; அவர்களுடைய புதல்வர் புதல்விகளாகிய குடும்பம் இருக்கிறது. அவர்களுடைய வீடுதான் 'ஆசிரமம்'. அவர்களைப் பார்க்கலாம் வாருங்கள்" என்று பெருமையுடன் அழைத்துச் செல்லலாம்.

ஆசிரமத்துக்கு வராத பெரியார்கள் இந்தியாவில் இல்லை என்று சொல்லத் தோன்றும். பிரபல பண்டிதர்களும் பேராசிரியர்களும் வந்து அளவளாவிப் போவார்கள்.

ஆங்கிலப் பயிற்சி, வடமொழிப் பயிற்சி, தமிழ்ப் பண்பாடு எல்லாவற்றிற்கும் ஆசிரமம் ஒரு நிலைக் களம். காளிதாஸர், வால்மீகி, வியாசர் இவர்கள் வருவார்கள். கம்பர், திருவள்ளுவர், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், ஆழ்வார்கள் எல்லோருக்கும் அங்கே இடம். அவர்களோடு கோபாலகிருஷ்ண பாரதியார், சுப்பிரமணிய பாரதியார், தேசிகவிநாயகம் பிள்ளை ஆகிய கவிஞர்களுக்கும் வரவேற்பு. ரவீந்திரநாத தாகூர் நன்ருய் உறவாடுகிறவர். ஆங்கில ஆசிரியர்கள் ஷேக்ஸ்பியர், ஷெல்லி, கீட்ஸ் முதலான பலர் வந்து சதா ஊடாடிக் கொண்டிருப்பார்கள்.

இத்தகைய நெருக்கடிக்குள் வளர்ந்தவர்கள், உல்லாசமாகவே வளர்ந்தவர்கள், ஸ்ரீமதி சரஸ்வதி அம்மாள். இவர்கள் கதைகளை வாசிக்கும்போது ஆசிரியையின் பிறப்பு, வளர்ப்பு வெகு தெளிவாய்த் தெரியவரும்.

"மனஸ்தத்துவம்" என்ற பாடத்தை எடுத்துப் பரீக்ஷைக்குப் படிக்கிறவர்கள் பலர். பரீக்ஷையோடு நிற்கிறதில்லை அந்த விபத்து. ரெயில்வே'புக்ஸ்டால்'களிலும் அந்த மனஸ்தத்துவம் சம்பந்தமான புஸ்தகங்களை வைத்து விற்கிறார்கள். அவைகளையும் வாங்கிப் படித்து, வேண்டாத கஷ்டங்களுக்கு உள்ளாகிறவர்களை அடிக்கடி பார்க்கிறோம்.

ஆணோ பெண்ணோ குழந்தையோ சிரிக்கவேண்டியது; இது வெறுஞ் சிரிப்பா? அல்ல; ஓர் அபாயமான மனக் கோளாறு பற்றி அந்த ஜெர்மன் ஆசிரியர் எழுதியிருக்கிறார் அல்லவா, அந்தக் கோளாறுதான் இந்தச் சிரிப்பு! சிரிப்பே இந்தப் பாடு பட்டால் அழுகையைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? எத்தனையோ ஜெர்மன் ஆசிரியர்கள் வந்து நாடி பார்க்க ஆரம்பித்துவிடுவார்கள்.

இப்படியெல்லாம் மனஸ்தத்துவத்தோடு உருண்டு புரண்டுகொண்டிருக்கிறவர்கள், தங்களை மாத்திரம் அல்ல, எத்தனையோ பேரையும் வேண்டாத மனக் கலக்கத்துக்கு உள்ளாக்குவார்கள் என்பதை "மனக்குரங்கு" என்னும் கதையில் காணலாம். வெகு ரஸமான கதை.

இந்த மாதிரியான வேடிக்கைப் பாத்திரங்கள்—ஆனாலும் உண்மைப் பாத்திரங்கள் — காட்சியளிக்கிறார்கள். ரொம்ப சந்தோஷம். இனி:

நம்முடைய வாழ்க்கையில் "கோஷா" இல்லைதான். ஆனாலும் முன்கட்டுக்கும் மூன்றாம் கட்டுக்கும் வெகு தொலை. பிராணிவர்க்கத்தில் ஆடவர் ஒரு இனம்; பெண்டுகள் வேறோர் இனம் என்றுதான் சொல்லவேண்டும்.

பெண்டுகளின் உணர்ச்சி வேகங்களையும் மனப்பாங்குகளையும் ஆடவர் அறிந்துகொள்ளுதல் எளிதல்ல. அவர்களது இதய உலகம் தனி. ஏன்? மிக விசாலமான பிரதேசம் அது. தாய் தந்தையரை சகோதர சகோதரிகளை, மாமன் மைத்துனர்களை, குழந்தைகளைப் பெண்டுகள் பார்க்கிற பார்வை வேறு. புருஷனுக்கு மனைவி எப்படியோ

அப்படித்தான் மனைவிக்கும் புருஷன் என்று சொல்லிவிட முடியாது.

பெண்டுகளது இதய உலகம் தனியான ஆர்வமும் வேகமும் கொண்டது. இத்தகைய விசித்திரமான உலகத்தை ஆடவர் பார்த்தார்கள், தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள் என்பது இல்லை. பேராசிரியர்கள் எல்லாருக்கும் இந்த விஷயம் கஷ்டமாகத்தான் இருந்திருக்கிறது.

ஆகவே ஆடவர் எழுதியுள்ள இலக்கியங்களில் பெண்பகுதி—சந்திரனில் சூரியனைக் காணாத இருட்பகுதி போல—மங்கலான பகுதிதான்.

அந்தப் பகுதியை வெளிச்சம்போட்டுக் காட்டுவது போலக் காட்டுகிறார்கள் சரஸ்வதி அம்மாள். என்றும் காணாத உண்மைகளை அங்கே தெள்ளத் தெளிந்த முறையில் காண்கிறோம். பாத்திரங்களில் உயிர்நாடி அப்படியே பேசுகிறது.

வாழ்க்கையின் துன்பங்களுக்கெல்லாம் வாரிசாகப் பிறந்த ஒரு பெண்பால், மூர்த்தியும் கோயிலுமே உலகத்தில் சிறந்த பொருள், அதற்கே தன் உயிரையும் தன் செல்வத்தையும் அர்ப்பணம் பண்ணிவிட வேண்டும் என்று எண்ணுவதும், ஒரே ஆதரவென்று தனக்கிருந்த சகோதரனது குடும்பத்தின் ஏழைமை நிலையை மறக்க நேர்ந்ததும் முற்றும் இயல்பான பெண் மனப்பாங்கு. குற்றம் சொல்லுவதற்கு இடம் இல்லை.

மக்கள் சமுதாயத்தின் அறியாமையையும் கொடுமையையும் நோக்க நோக்கக் கருங்கல்லால் ஆகிய கோயிலினிடத்தும் மூர்த்தியினிடத்தும் பக்தி சிரத்தை அதிகரிக்கிறது.

ஆனாலும் பெண் இதயத்துக்குக் கண்ணைத் துடைத்துக்கொண்டு நேர்ப் பார்வையாகப் பார்க்கும் சக்தியும் சிறப்பாக உண்டு.

"மெல்ல எண்ணிப் பார்த்தாள். இருதயம் புண்பட்டுத் துடி துடிக்காமல் ஒரு சமயம் காப்பாற்றிய

தமையனை எண்ணும்போது—ஆம், அவன் தெய்வத்திற்கு மேல், என்ற முடிவுக்கு வந்தாள்."

புஸ்தகத்தில் இது போன்ற வெகு அருமையான உண்மைகள், கட்டங்கள், பாத்திரங்கள், இவைகளைக் கையால் தொட்டுப் பரிசிக்கும் முறையில் பார்த்து அநுபவிக்கலாம். அவைகளைத் தெளிவான பளிங்குப் பெட்டகத்தில் வைத்து அழகாகக் காட்டியிருக்கிறது. பார்க்கப் பார்க்க அழகாக இருக்கும். எத்தனை தடவையும் பார்க்கலாம்; தெவிட்டாது.

தமிழோ வீட்டுத் தமிழ்; செந்தமிழ். அன்பு, ஆர்வம், எளிமை எல்லாம் கலந்த பண்பட்ட தமிழ்.

புஸ்தகம் தமிழர்களுக்கு ஒரு நல்ல விருந்து. நன்றாய் அநுபவிக்கவேண்டும்.

டி. கே. சி.

முன்னுரை

முன்னுரை எப்படி எழுதுவது? அதன் முறையொன்றும் எனக்குத் தெரியாது. எனது முயற்சி ஏதும் இல்லாமலே 'கலைமகள்' காரியாலயத்தார் என் புத்தகத்தைப் பதிப்பித்திருக்கிறார்கள். அந்தப் புத்தகத்திற்கு முன்னுரை எழுதும் பொறுப்பு எனக்கு வந்திருக்கிறது; அவ்வளவுதான்.

வாஸ்தவத்தில் எழுத்தாளர் உலகில் புகும்படி கல்வியறிவோ வேறு தகுதியோ எனக்கு இல்லை. ஸ்ரீ டி. கே. சி. அவர்கள் சொல்லியிருப்பது போல இலக்கியப் பண்பு நிறைந்த குடும்பத்தில் பிறந்த பாக்கியம் ஒன்றுதான் ஒருகால் அந்த உரிமைக்கு இடம் தரலாம்.

என் சகோதரிகள் எழுதுவார்கள். அதிலிருந்து எனக்கும் ஏதாவது எழுதவேண்டும் என்கிற ஆசை உண்டாயிற்று. ஆனால் அவர்களுக்குள்ள படிப்புக்கூட எனக்கு இல்லை. அது பெருங் குறையாகவே இருந்தது.

ஓர் அளவிற்கு என் சகோதரன் கி. சந்திரசேகரன் தான் இந்தச் சிறுகதைகள் எழுத எனக்குத் தூண்டுகோலாயிருந்திருக்கிறான். நான் ஏதாவது எழுதி அவனிடம் வாசித்துக்காட்டுவேன். அவனும் அதைப் பிரமாதமாகப் புகழ்ந்து பத்திரிகைகளுக்கு அனுப்பும்படி தூண்டுவான். நான் எழுதுவதில் அவனுக்குள்ள உத்ஸாகத்தில்தான் அவைகளுக்கு அளவுக்கு மிஞ்சிய உயர்வை அளிக்கிறானோ என்று எனக்குப் பலத்த சந்தேகம் உண்டாகும். என்னுடைய இந்தத் தயக்கத்தை ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் அடியோடு போக்கினார். அவருக்கு நான் மிகவும் கடமைப்பட்டவள். முதல் முதலில் ஒரு சமயம் 'அதிலும் ஒரு லாபம்' (அந்தக் கதைக்கு அந்தத் தலைப்பு அவர் கொடுத்ததுதான்) என்னும் சிறுகதையை வெகுவாகப் புகழ்ந்து கலைமகள் பொங்கல் மலரில் வெளியிட்டார். அது சாமான்யமான புகழ்ச்சியாக எனக்

குத் தோன்றவில்லை. அதிலிருந்தே கதை எழுத எனக்கு ஓர் உத்ஸாகம் பிறந்தது. உண்மையில் அவர் கொடுத்த மதிப்பு 'லாப' கரமாகவே ஆயிற்று, எனக்கு.

இன்னும், எங்கள் அம்மாஞ்சி பாலு (பாலசுப்பிரமணியன்) சிறு கதைகளினுடைய முறை, அதாவது டெக்னிக் தானுகவே என் கதைகளில் அமைந்திருப்பதாக அடிக்கடி சொல்லாவிட்டால் என் கதைகள் உருவாகி இருக்குமோ என்னவோ; சந்தேகந்தான். இவ்வளவுக்கும் மேலானது, நான் எழுதுகிறேன் என்பதிலேயே தந்தையைப் போல் பெருமை கொண்டிருந்த என் தமக்கை புருஷர் (அத்திம்பேர்) ஆர். நாராயணசாமி ஐயரின் புகழுரைகளின் தெம்புதான். வீட்டில் நடக்கும் எதையும் ஓர் அழகிய சிறு கதையாக ஜோடிக்கும் திறன் என்னிடத்தில் இருப்பதாக அவர் பேசுவார் இந்தப் புத்தகம் உருவாகும்பொழுது என் சந்தோஷத்தினுல் பெருமை அடைய அவர் இல்லையே என்பது எனது பெரும் துக்கம்.

எனது வேண்டுகோளுக்கு இணங்கித் தமது எத்தனையோ அலுவல்களிடையேயும் என் புத்தகத்தை முழுதும் படித்து அதற்குத் தம் பாராட்டைத் தாராளமாய்க் கொடுத்திருக்கும் ஸ்ரீ டி. கே. சி. அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்த நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் கம்பனையும், திருவள்ளுவரையும், இன்னும் நம் நாட்டுப் பெரும் கவிகளையும் சதா அநுபவிக்கும் பெரியார். எனது இந்தச் சிறு புத்தகத்தை அவர் எப்படித்தான் படித்தாரோ என்பது எனது தீரா வியப்பு.

இந்தப் புத்தகத்தில் வந்திருக்கும் கதைகள் கலைமகள், குமரிமலர், கல்கி தீபாவளி மலர், ஆனந்த விகடன், மங்கை ஆகிய பத்திரிகைகளில் வெளியானவை அவற்றை வெளியிட உதவிய அந்தப் பத்திரிகைகளுக்கும் என் நன்றியை அறிவிக்கின்றேன்.

கி. சரஸ்வதி

தெய்வத்திற்கு மேல்

தெய்வத்திற்கு மேல்

"ஜோஸ்யரே, நான் பிழைப்பேனா? ஜாதகம் பார்த்தீர்களே" என்று படுத்த படுக்கையாக இருந்த மீனாக்ஷியின் தாய் ஜோஸ்யரைப் பார்த்துக் கேட்டாள்.

"அதுதான் இத்தனை நாழி உன் ஆம்படையானுக்கு எடுத்துச் சொல்லிண்டிருந்தேன். உனக்கும் சொல்லித் தைரிய மூட்டச் சொன்னான். உள்ளே வந்தேன். ஆயுசுக்கு ஒண்ணும் பயமில்லே; கவலைப்படாதே. இன்னும் இரண்டு மாசந்தான் சனிதசையிலே சூரியனுடைய புக்தி படுத்தறது. இரண்டுபேரும் பரம வைரியோன்னோ? சங்கராந்தி ஆகவேண்டியதுதான். சூரிய புக்தி முடிந்து சந்திர புக்தி ஆரம்பமாகிறது; அப்பறம் ஒண்ணும் பண்ணாது. படிப்படியாக் குணந்தான். நான் சொல்றேன்னு பாரு."

"என்னமோ, உங்க வாயாலே சொல்லுங்கோ. பலிக்கட்டும்."

"நானா சொல்றேன்? சாஸ்திரம்னா சொல்லறது?"

"அவர் ஜாதகத்தை, பையன் கிருஷ்ணமூர்த்தி ஜாதகத்தை ரெண்டையும் பார்த்தேளா? அதுலே ஏதாவது எனக்குப் போராதூன்னு இருந்தா?"

"ரெண்டையுந்தான் பார்த்தேன். எல்லாத்திலேயும் படுத்தறத்துக்கு வேணுங்கறது இருக்கு. அதுக்குமேலே ஒண்ணுமில்லே."

இப்படிச் சொல்லிக்கொண்டே ஜோஸ்யர் அங்கு இவர்கள் சம்பாஷணையை ஆவலாய்க் கவனித்துக் கொண்டிருந்த சிறு பெண் மீனாக்ஷியைப் பார்த்து, "இந்தாடி குட்டி, உள்ளே கேட்டுக் கொஞ்சம் மோர்த்

தீர்த்தம் வாங்கிண்டு வா, நல்ல ஆம்படையான் வருவன்'' என்ருர் சிரித்துக்கொண்டு.

"போடி, தாத்தாவுக்கு மோர் வாங்கிண்டுவா'' என்று அவள் தாய் சொல்லிவிட்டு, "வாஸ்தவமாகவே ஜோஸ்யரே, குழந்தை ஜாதகத்தையும் பார்த்து, எப்படி வாழ்க்கைப்படுவள், என்னமாயிருப்பள் எல்லாம் சொல்லுங்களேன். இருந்து பார்க்கிறேனே என்னமோ; காதாலே யாவது கேட்கிறேன்'' என்ருள்.

'இருந்து பார்க்கிறேனே' என்ற தாயின் வார்த்தை மீனுக்ஷியின் கண்களில் கலகலவென்று கண்ணீரை வரச் செய்துவிட்டது. அதை அவர்கள் பார்க்காமல் இருக்க வேண்டியே அவள் மோர் வாங்கிவர உள்ளே ஓடினுள். அப்பொழுது மீனுக்ஷிக்கு ஏழு அல்லது எட்டு வயசிற்கு மேல் இல்லை. இருந்தாலும் தாய் பத்து மாதமாகக் காயலாவாகக் கிடப்பது அவளை உள்ளூறக் கவலைப்படுத்தியது. பாதி சமயம் தன்னேடொத்த பெண்களுடன் விளையாட்டில்கூட அவள் மனம் செல்லவில்லை.

திரும்பி அவள் மோருடன் வந்த பொழுது, ஓர் ஓலைச் சுவடியை வெகு கவனமாக மூக்குக் கண்ணுடி அணிந்து பார்த்துக்கொண்டிருந்தார் ஜோஸ்யர். அவர் சொன்னது முழுவதும் மீனுக்ஷிக்குத் தெரியாவிட்டாலும், "தனுதிபதியும் லாபாதிபதியும் பரஸ்பர வீக்ஷண்யம், அம்மா! குழந்தைக்கு நல்ல தனலாபம் உண்டு'' என்று சொல்லிக்கொண்டிருந்தது தெரிந்தது.

ஜோஸ்யர் போனபிறகு மீனுக்ஷியைத் தன்னிடம் அணைத்துக்கொண்டு அவள் தாய், "நல்ல பணக்காரியாயிருப்பயாம்டி கண்ணே! நல்ல மனசாய்த் தான தருமம் செய்துண்டிரு; தெரியுமா?'' என்ருள். பணக்காரி என்ற சொல், பணத்தின் பெருமையை அறியச் சக்தியற்ற அந்தச் சிறுமியைக்கூடச் சந்தோஷத்தால் தலைநிமிரச் செய்தது. அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டே வந்த அவள் தமையன் கிருஷ்ணமூர்த்தி, "பணக்காரி என்கிறதுக்குள்ளே சந்தோஷத்தைப் பாரு, தலை கழுத்துலே நிக்கல்லே!'' என்ருன் கிண்டலாக.

"போடா, குழந்தையை ஒன்னும் சொல்லாதே. உனக்குப் பத்து வயசு சின்னவள். உன்னைவிட்டா அவளுக்கு யாரு? நீதான் அவளைப் பாத்துக்கணும். நான் பிழைப்பேன்னு தோணல்லே" என்றாள் அவர்கள் தாய், வருத்தத்துடன்.

"என்னம்மா, ஜோஸ்யர் சொன்னதை வேறு கேட்டுவிட்டு மறுபடியும் இப்படிப் பேசறயே? சாவைப் பத்தியே நினைக்கப்படாதுன்னு, நீ அதுதான் சதா நினைவா இருக்கே" என்றான் கிருஷ்ணமூர்த்தி. 'அம்மா இருந்தாலும் செத்துப் போவதையே நினைச்சுண்டு இருக்கா. அதுதான் தப்பு' என்று மீனாக்ஷிக்கும் தோன்றிற்று. 'நான் பணக்காரியாவேன்னு ஜோஸ்யர் சொன்னா அம்மா நம்பறா; அவரே அவள் பிழைப்பாள்னா நம்ப மாட்டேங்கறாளே, அது ஏன்?' அவளுக்கு அது புரியவே இல்லை. அதை நினைத்தபொழுது வேதனை வேறு தாங்காது உண்டாயிற்று.

கடைசியில் ஜோஸ்யர்கள், வைத்தியர்கள் எல்லாருக்கும் மேலாக அவள் தாய் நினைத்ததுதான் சரியாக இருந்தது. இரண்டு மாதம் கழித்துச் சூரிய புக்தி முடிந்து சந்திர புக்தி ஆரம்பிக்கும் அன்று, அவள் கண்மூடியே விட்டாள். சிறுமி மீனாக்ஷியின் மனத்தில் மட்டும் அவள் தாய் அவளை அணைத்துக்கொண்டு அன்று சொன்ன சொல் மறக்காமல் பதிந்தது. அவள் பணக்காரியாவாள், அப்பொழுது தான தருமங்கள் செய்வாள் என்பதுதான் அது.

அதற்கப்புறம் இப்பொழுது முப்பது வருஷங்கள் சென்றுவிட்டன. 'மீனாக்ஷி' என்ற அம்பாளின் பெயருக்கு இரண்டு பொருள்கள் கவிகள் சொல்லுகிறார்கள். மீன் வடிவைப் போன்று அகன்று நீண்ட கண்கள் என்பது ஒன்று. மற்றதுதான் பின்னும் விசேஷமானது. மீன் குஞ்சு பொரிக்கும் முறையே தனி. தண்ணீரில் முட்டை இட்டுக்கொண்டே போய், போகும்போதே திரும்பிப் பார்த்துக்கொண்டே போகுமாம். அந்தப் பார்வை பட்டதுமே குஞ்சுகள் உயிர் பெற்றுவிடுமாம். ஸாக்ஷாத் அம்பிகையின் கடைக்கண் பார்வைக்கும் உயிர்களை உஜ்

ஜீவிக்கும் சக்தி உண்டாதலால், மீனின் தன்மை பொருந்திய கண்கள் என்று பொருள் பட மீனுக்ஷி என்று பெயர் அமைந்தது என்பதாகச் சொல்லுகிருர்கள். நம் மீனுக்ஷியின் விழிகளும் நீண்டு அகன்றவையே. அதனுல் உயிர்ப்பிக்கும் சக்தியொன்றும் அவைகளுக்கு ஏற்பட்டுவிடவில்லை. அதற்கு மாருக அவளைச் சுற்றி அவள் அன்புக்குப் பாத்திரமானவர்களின் சாவைத்தான் அவை அதிகம் பார்த்தன.

அவள் தாய் இறந்து நாலைந்து வருஷம் கழித்து அவள் கல்யாணம் நடந்த வருஷமே அவள் தந்தையும் இறந்து போனுர். பிறகு அவள் கணவனுடன் வாழ்ந்ததெல்லாம் நாலைந்து வருஷங்களுக்குள்ளே தான். அதிலும் அவள் முழுவதும் சந்தோஷமாக இருந்தாளென்று சொல்வதற்கில்லை. கணவன் செலவாளியாக இருந்தான் என்பதற்காக அவன் தமையன் சொத்தைப் பிரித்துக் கொடுத்து அவனைத் தனியே அனுப்பிவிட்டான். தன் பங்குச் சொத்தையும் சேர்த்து இழக்க அவன் விரும்பவில்லை,

கணவன் பட்டணத்தில் சொற்ப உத்தியோகத்தில் இருந்தான். குதிரைப் பந்தயம், ஸினிமா இவ்விதம் பல துறைகளில் அவன் பணம் போய்க்கொண்டிருந்தது. திடீரென்று ஒரு நாள் இரவு பலத்த காயலாவாகிப் பிதற்றலும் பிடுங்கலுமாக அவன் வீடு திரும்பினுன். ஒரு வாரத்திற்கெல்லாம் அந்த ஜுரம் அவனைக் கொண்டே போயிற்று. பிறகு மீனுக்ஷி தமையன் ஆதரவில் வந்து சேர்ந்தாள். "உன்னைவிட்டால் அவளுக்கு யாருடா?" என்று அவள் தாய் அவளிடம் சொன்னது அப்படியே உண்மையாயிற்று. எங்கோ சேலம் ஜில்லாவில் அவள் கணவனுக்கு இருந்த வானம் பார்த்த சிறு பூமியிலிருந்து ஒரு காசும் அவளுக்கு வரவில்லை. ரொக்கம் பிரித்துக்கொண்டதை எல்லாந்தான் அவன் செலவழித்துவிட்டானே. அவள் ஜாதகத்திலிருந்த தனயோகத்தின் பலன் அவ்வளவுதான். 'அம்மா இருந்தால் இப்போது தன் நிலைமையைக் கண்டு என்ன நினைப்பாளோ? அவளுக்குப் பெண்ணினுடைய தனலாபத்தில் அவ்வளவு நம்பிக்கை இருந்ததே!' என்று மீனுக்ஷி நினைத்தாள்.

அண்ணன் வீட்டில் அவளுக்கு ஒரு குறைவும் இல்லை. அவள்தான் வீட்டிற்கு எஜமானி. அவள் மனம் வருந்தக் கூடாதென்று எதிலும் அவள் இட்டது சட்ட மாக அவன் வீட்டில் வைத்திருந்தான். மதனிக்கும் அடிக் கடி பிரசவித்து உடம்பு இருந்த துர்ப்பலத்தில் மீனுக்ஷி குடும்ப பாரத்தை முழுவதும் வகிப்பது சௌகரியமாகவே இருந்தது. அண்ணு குடும்பமும் ஐந்தாறு குழந்தைகளுடன் விருத்தியாகி இருந்தது. அவன் சம்சாரி என்ற பட்டம் பெற்று வரவு செலவுக் கணக்குப் பார்க்கும் நிலைமையில் இருந்தான். பட்டணத்தில் இருக்கும் பெரிய பிள்ளைக்கு மாதம் பிறந்தால் காலேஜுக்கும் ஹாஸ்டலுக்குமாகப் பணம் அனுப்பவேண்டியிருந்தது. குடித்தனக்காரர்கள் மாதமாதம் சுளை சுளையாக ரூபாய்க்கு எங்கே போவார் கள்! பெண்ணென்று கல்யாணத்திற்கு வயசு நிரம்பி நின்றது. இன்னும் எவ்வளவோ சில்லறைச் செலவு.

அவன் சிரமப்படுவது மீனுக்ஷிக்குத் தெரிந்துதான் இருந்தது. கடன் வாங்கியும் சமாளித்துக்கொண் டிருந் தான். ஒரு பகுதி நிலத்தை விற்க அவன் அவர்கள் அம் மாஞ்சியுடன் யோசனை செய்துகொண் டிருந்தது அவன் சொல்லாவிட்டாலும் இவளுக்குத் தெரியவந்தது. அவர் கள் குடியானவன் குப்பன் ஒரு நாள் மீனுக்ஷியிடம் வந்து முறையிட்டுக்கொண்டான். "அம்மா, எசமான் நிலத்தை விக்கப் போறுங்களாம். நீங்கதான் கூடாதுன்னு சொல் லித் தடுக்கணும்" என்ருன்.

மீனுக்ஷிக்குக் கேட்கத் தூக்கிவாரிப் போட்டது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, "பணமுடைக்குக் கொஞ்சத்தை வித்தா என்னடா மோசம் போச்சு? கடன் வாங்குவதைவிட அது மேலல்லவா?" என்று சொல்லிப் பார்த்தாள். குப்பன் ஒப்புக்கொள்ளவில்லை.

குப்பனுக்குத்தான் அவர்கள் குடும்பத்தினிடம் எவ் வளவு அபிமானம்! அவர்கள் தந்தை நாளிலிருந்து அவன் அவர்களுக்காகப் பாடு படுகிருன். "நமது கையை விட்டு நிலம் போயிட்டா அப்புறம் என்ன இருக்கு? கௌர வமே போயிடுமே. கூடவே கூடாது" என்ருன் குப்பன். "எப்படியாவது அண்ணுவுக்குச் சொல்லுங்க. நான் சொன்னத்துக்கு அவரு கேக்கல்லே. நீங்க சொன்னுக்

கேப்பாருன்னுட்டுத்தான் உங்களிடம் ஓடியாந்தேன்'' என்றான்.

அதைப்பற்றி மீனாக்ஷி அண்ணாவைக் கேட்டாள். "குப்பன் கூடாதுன்னு அடித்துக்கொள்கிறானே'' என்று சொல்லிப் பார்த்தாள். "கடன் ஏறி, நிலம் முழுவதும் போவது தேவலையாமா?'' என்றுதான் அவள் தமையன் பதில் சொன்னான். அதற்குமேல் அவள் என்ன செய்வாள்? சமைத்துப்போட்டுச் செட்டாய்க் குடித்தனம் செய்யும் ஒத்தாசைதான் அவள் செய்யக்கூடியது. வேறென்ன அவளால் முடியும்? 'சண்டையினால் ஏற்பட்டிருக்கும் பஞ்சம் கிராமத்தைக்கூடப் பீடித்திருக்கிறது. மலிந்து கிடக்கும் கறிகாய், நெய், பால், தயிர் எல்லாங்கூட விலை ஏறிக் கிராக்கியாகிவிட்டது; என்ன செய்வது?' என்று மீனாக்ஷி நினைத்தாள்.

இப்படி இருக்கும்போதுதான் ஒரு நாள் கிருஷ்ண மூர்த்தி கையில் ஒரு கடிதத்தோடு மீனாக்ஷியிடம் வந்தான். "மீனாக்ஷி, இதற்கு என்ன சொல்கிறாய்? உன் நிலத்தை யாரோ விலைக்குக் கேட்கிறார்களாம். ரூபாய் பதினாயிரம் தருகிறார்களாம்'' என்றான்.

பதினாயிரமா! அவள் நிலத்திற்கா! இதென்ன அதி சயம்? அவள் காதுகள் சரியாகக் கேட்கின்றனவா? அவளுக்கு நம்பிக்கையே வரவில்லை.

"அதிலிருந்து காலணா வரவில்லையே, அண்ணா. அதற்கா அவ்வளவு தொகை கொடுக்கிறேன் என்கிறார் கள்?'' என்றாள் அதிசயத்துடன்.

"பர்மா போனதில் யாரோ செட்டி பணத்தோடு வந்திருக்கிறான். பாங்கிகளை நம்ப மனமில்லை. உங்கள் ஊரையே வாங்குகிறான்போல் இருக்கிறது. நமக்கென்ன? நல்லதாயிற்று. சந்தோஷமாக விற்றுவிடுவோமே'' என்றான் அவள் தமையன்.

"பணம் வேண்டாம் என்பாரும் உண்டா? அதுக் குச் சொல்லல்லே அண்ணா. பாவம்! அதை வாங்குகிறவ னுக்கு நஷ்டந்தானேன்னு பாத்தேன்'' என்றாள்.

இளமையிலேயே வாழ்க்கை இன்பத்தைத் துறந்த அவளுக்குப் புராணக் கதைகளை வாசிப்பதும் நீதி சாஸ்திரங்களைப் பயில்வதும் பொழுது போக்காக இருந்தன. அந்தப் போக்கிலே சென்ற உள்ளத்தில் பாவ புண்ணியம், நியாய அநியாயம், பிறரிடம் கருணை, தெய்வ பக்தி ஆகியவை குடிபுகுந்து நிற்பது இயல்புதானே ?

" அவன் கேவலம் உழுது பயிரிட அதை வாங்குவதாகத் தோன்றவில்லை. அங்கு அவர்கள் ஏதோ தொழிற்சாலை ஏற்படுத்துவதாகக் கேள்வி. எதுவாயிருந்தால் நமக்கென்ன ? சரியென்று எழுதி ஏற்பாடு செய்யச் சொல்லிவிடுகிறேன் " என்றான் அவள் தமையன்.

மீனாக்ஷி ஒப்புக்கொள்ளத் தடை என்ன இருக்கிறது ? 'பணம் வந்தால் அண்ணாவுக்காவது உதவலாம்' என்று நினைத்தாள். விற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கைக்குப் பணமும் வந்து சேர்ந்தது. 'ஜோஸ்யமும் ஒருவாறு பலிக்கத்தான் பலித்திருக்கிறது!' என்று மீனாக்ஷி எண்ணினாள்.

இதற்குள் ஊரெல்லாம் இது விஷயம் பரவி, ஏதோ லாட்டரி விழுந்த மாதிரித்தான் அமர்க்களப்பட்டது. எல்லாரும் வித விதமாய் அவளைச் சந்தோஷம் விசாரித்தார்கள். அடுத்த தெருவில் இருந்த அவள் அம்மாஞ்சி, "பெரிய பணக்காரியாப் போயிட்டே. இனிமே மீனாக்ஷி அம்மாள் என்றுதான் சொல்லவேணும்! மீனாக்ஷி என்று ஏக வசனத்தில் என்னைப் போன்ற பந்துகூடச் சொல்லப்படாது ; இல்லையா ?" என்றெல்லாம் வேடிக்கை செய்தான். மீனாக்ஷிக்குப் பணம் வந்ததில் சந்தோஷப்படுபவர்களில் முக்கியமாக அவன் ஒருவன். ஊரிலேயே எல்லோரும், 'லக்ஷக்கணக்கில் கிடைத்துவிட்டதா என்ன?' என்று மீனாக்ஷிக்கே தோன்றும்படி பேசினார்கள்.

அவ்வூர்க் கோவில் தர்மகர்த்தா சுப்பையர் காதிலும் இது விஷயம் விழுந்தது. அவர் வயசு சென்றவர். மீனாக்ஷியைக் குழந்தை முதல் அறிந்தவர். இப்பொழுது அவ்வூரில் இடிந்துகிடந்த கோவிலைப் பல பேர் பண உதவியைக் கொண்டு புதுப்பிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்

தார். புதுப்பித்த பெருமை முழுவதும் தம்மையே சேர வேண்டுமென்பது அவர் விருப்பம். அதற்கு ஒரு தடங்கல் இருந்தது. இன்னும் கோவில் கர்ப்பக்கிருகத்திற்கு விமானம் கட்டியாகவேண்டும். அதற்கு வேண்டிய பொருள் அனைத்தும் அவருக்குக் கிடைப்பதாக இல்லை. இப்பொழுது மீனாக்ஷிக்குப் பணம் கிடைத்திருக்கும் செய்தி தெரியவுமே, எப்படியாவது உபதேசம் செய்து அவள் மனத்தைத் தர்ம கைங்கர்யத்தில் திருப்ப அவளைத் தேடி அவர் வெகு வேகமாக வந்தார்.

"அம்மா, இந்த அதிசயத்தைப் பாரு. சுவாமி காரியம் முடிவதற்கும் கிட்டத் தட்டப் பதினாயிரம் ரூபாய்தான் வேண்டியிருக்கிறது. உன் கைக்கும் அதே தொகை வந்திருக்கிறது. என்றென்றைக்கும் உன் பெயர் நிலைத்து விளங்கவேதான் இந்த மாதிரி நேர்ந்திருக்கிறது. அதிலும் சுவாமி தலைக்குமேல் இருக்கும் விமானத்துக்கு உன் பணம் உதவப்போகிறதென்றால் அந்தப் புண்ணியமும் பேரும் யாருக்குக் கிட்டும்? நீ எத்தனை ஜன்மமாகத் தவம் செய்தாயோ, இந்த நல்ல சந்தர்ப்பம் நேர்ந்திருக்கிறது. உங்கள் அம்மாவுக்குக் கோவில் குளத்தில் இருந்த பக்திதான் இதற்குக் காரணம்" என்றார்.

பொதுக் காரியங்களுக்குச் சந்தா சேர்ப்பதையே தொழிலாகக் கொண்ட தர்ம தூதர்களுக்கும், இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டுகளுக்கும் பேசச் சொல்லித் தர வேண்டுமா என்ன? கல்லையும் கரைக்கும் அதிசய சாமர்த்தியம் அவர்களிடமுள்ள மூலதனம்.

தர்மகர்த்தாவின் பேச்சைக் கேட்கக் கேட்க மீனாக்ஷிக்கு மயிர் சிலிர்த்தது. சுவாமியே தன்னிடம் யாசகத்திற்கு வந்ததுபோல் இருந்தது. அவள் சிறு பிராயம் முதல் ஈசுவர பக்தி மணம் வீசும் இடத்தில் இருந்தவள். அவள் வாழ்க்கையும் அதை ஒட்டியே அமைந்து விட்டது. ஏதோ அண்ணா குடும்பத்திற்கு உழைத்தது போக மீதி நேரத்தைப் பகவந் நாம ஸ்மரணையில்தான் இதுவரையும் அவள் கழித்து வந்திருக்கிறாள். அதனால் தான் தனக்கு இந்தப் பாக்கியம் இப்பொழுது கிட்டுகிறதோ என்று அவளுக்குத் தோன்றிற்று.

கோவில் கட்டி முடிவதற்கு வேண்டிய அதே தொகை அவளுக்குக் கிடைத்திருக்கிறது. அவ்விதம் நேர்ந்திருப்பது அவள் கோவிலுக்குக் கொடுக்கவேண்டும் என்பதற்காகவே போலும்! ஜோஸ்யப்படி அவள் பணக்காரியாகிவிட்டாள். அம்மாவின் விருப்பப்படி அவள் தருமம் செய்யவேண்டும். அதற்கு இதை விட்டால்வேறு நல்ல சந்தர்ப்பம் அவளுக்கு எங்கே கிடைக்கப் போகிறது? அவள் வாழ்வு முழுவதற்கும், ஏழு ஜன்மத்திற்கும் இது ஒன்றே போதுமே; வேறு என்ன வேண்டும்? அண்ணுவுக்கு வேண்டுமானுல் உபகாரம் பண்ணலாம். அது சுவாமிக்குச் செய்வதுபோல் ஆகுமா? ஒருவேளை அண்ணு தனக்குப் பணமுடையாக இருக்கும் பொழுது வேறு ஏதோ செய்கிருளே என்று நினைப்பானே? அவன் இவ்வளவு நாளும் அவளை வைத்து ரக்ஷித்திருக்கிருன். அதற்கு ஒருவாருகப் பிரதி செய்ய அவள் கடமைப்பட்டிருக்கிருள். ஆனுல் அவன் குடும்பத்திற்குத்தானே இவ்வளவு நாளும் அவள் சரீரத்தால் உழைத்திருக்கிருள்? இன்னும் உழைக்கிருள். அது போதாதா?—இவ்விதம் இரண்டு விதமாகவும் அவள் மனம் நினைத்தது.

அண்ணுவிடம் அவள் தன் எண்ணத்தைச் சொன்னபொழுது, அவள் பயந்தது போல அவன் தப்பாக நினைக்கவோ தடுத்துச் சொல்லவோ இல்லை, 'கைக்குப் பணம் வந்த வேகத்தில் அதை விட்டுப் பிரிய அவளுக்கு எப்படி மனசு வருகிறது?' என்றே அதிசயித்தான். தனக்குக் கொடுக்கக்கூடாதா என்று அவன் சிறிதும் நினைக்கவில்லை. இவ்வளவு நாளும் அவள் ஒத்தாசையை எதிர்பார்த்து வழக்கப்படாத அவன் மனசு இப்பொழுது மட்டும் எதற்காக மாறவேண்டும்? ஏதோ அவள் போகிற வழிக்குப் பேரும் புண்ணியமும் சம்பாதித்துக் கொள்வதில் அவனுக்கு வெகு திருப்தி. 'இவ்வுலகில் அவளுக்கு வேறு கிடைக்கக்கூடியது என்ன? நாலுபேர் புகழக் கேட்டாவது அவள் மனசு சந்தோஷப்படட்டுமே' என்று நினைத்தான். அதை அப்படியே மனசை விட்டு மீனுக்ஷியிடம் சொல்லவும் சொன்னுன்.

அண்ணு மனசு தெரிந்தபோது அவளுக்கு நிம்மதி

ஏற்பட்டது. தான் சிரமப்படும் பொழுது தனக்கு உதவாமல் ஏதோ புகழை விரும்பிச் சுயநலமாகக் காரியம் செய்வதாகவே அவன் கருதவில்லை. அதற்குமேல் அவள் வேண்டுவது என்ன! கோவில் கட்டி முடிந்து கும்பாபிஷேகம் நடப்பது போலவும், சுற்றுவட்ட ஊர்களிலிருந்து வந்து கூடிய ஜனங்கள் அவள்தான் கோவில் பூர்த்தியாகக் காரணமென்று தெரிந்து அவளைப் பிரமாதமாகக் கொண்டாடி அவளை நேரில் பார்க்க அவள் வீட்டு வாசலுக்கே வந்துவிட்டது போலவும், என்ன என்னவோ கற்பனையில் ஆழ்ந்துவிட்டாள். சுவாமி தலைக்கு நிழல் அவளால்தான் ஏற்படப்போகிறது. அவள் அண்ணு குடும்பத்திற்கு ஒரு குறையும் வரும்படி சுவாமி விட மாட்டார் என்று நிச்சயித்தாள்.

அவளுக்கு இருந்த சந்தோஷத்தில், "ஏண்டா, சாமிக்குச் செஞ்சா புண்ணியந்தானே? அவர் பதிலுக்கு நன்னுப் பாத்துப்பாரோன்னோ?" என்று அண்ணுவின் நாலு வயசுள்ள கடைசிப் பையனிடம் சொல்லிக் கொஞ்சுவாள். அன்று இரவு அவள் தூங்கும்பொழுதுகூட இவ்வளவு நாளும் வராத அவள் தாய் கனவில் வந்து சந்தோஷத்தோடு அவளைப் பார்த்துப் புன்முறுவல் பூப்பதுபோல் இருந்தது அவளுக்கு. முப்பது வருஷங்களுக்கு முன் சிறுமியான அவளிடம் அவள் தாய் விரும்பிச் சொன்னதை இப்பொழுது அவள் அப்படியே நடத்தப் போகும்போது தாயின் ஆத்மா களிப்புருமல் என்ன செய்யும்?

மறுநாள் அம்மாஞ்சி வந்தபொழுது அவனிடத்திலும் தன் எண்ணத்தை அவள் தெரிவித்தாள். "உன் தர்ம சிந்தை ரொம்பவும் உயர்வானது. வெகு நல்ல காரியந் தான். இருந்தாலும், 'முழுப் பணத்தையும் கொடுத்து விடவேண்டுமா?' என்றுதான் யோசிக்கிறேன்" என்ருன்.

"கோவில் பூர்த்தியாகக் கணக்காக அந்தத் தொகை தானே வேண்டியிருக்காம்?" என்ருள் மீனுக்ஷி.

"கணக்கெல்லாம் சுப்பையர் சொல்லுகிறதுதானே? உண்மையை யார் கண்டது? பாதி சாமிக்கு, பாதி அவர் குடும்பத்துக்கு!" என்ருன் அம்மாஞ்சி.

"அதென்னமா நாம் சொல்லுகிறது? நல்ல காரியம் செய்கிறவர்களை இவ்விதம் தூஷிப்பது கெட்ட வழக்கம்" என்று மீனாக்ஷி அம்மாஞ்சியைக் கடிந்துகொண்டாள்.

"நான் காரணம் இல்லாமலா சொல்லுகிறேன்? ஊருக்கெல்லாம் தெரிந்த ரகசியந்தான். உனக்குத்தான் தெரியாது. இந்த அபவாதத்தினால்தான் பணங்கூட முன் போல இப்பொழுது அவருக்கு வசூலாகமாட்டேன் என்கிறது. அவர் குடும்பம் இருந்த வறுமை நிலை நாமெல்லாம் அறியாததா? இப்பொழுது இந்தக் கோவில் வேலை ஆரம்பித்த பிறகு அவர் வீட்டில் லக்ஷ்மி தாண்டவமாடுகிறாளே. வீட்டு ஸ்திரீகள் பொன்னும் புடைவையுமாக ஜமாய்க்கிறார்கள். தேன் எடுப்பவன் புறங்கையை நக்காமல் இருப்பானா? பணத்தில் புழங்கும்பொழுது வீட்டிற்கும் கொஞ்சம் எடுத்துக்கொள்வது சகஜந்தானே? யாருக்காவது கணக்கு ஒப்பிக்க வேண்டுமா; அதில்லை பாரு?"

இப்படி அவன் சொல்லும்பொழுது, சுப்பையரின் பேத்தியைச் சர்வாபரண பூஷிதையாகச் சரிகைச் சேலையும் அரையுமாக, சுவாமி சந்நிதியில் அடிக்கடி பார்ப்பது அவள் நினைவிற்கு வந்தது. அடுத்தாற்போல் அதே வயசுடைய தன் தமையன் மகளுக்கு அதில் கால்வாசி நகைகளோ புடைவைகளோ இல்லையே என்று நினைக்கவும், அம்மாஞ்சி சொல்வது சரியாக இருக்குமோ என்று அவளுக்குச் சந்தேகம் உதித்தது. சிரமப்படும் அண்ணா குடும்பத்திற்குக் கொடுக்காமல், பிறர் பணத்தில் சௌகரியமாக வாழும் மற்றொரு குடும்பத்திற்கு இன்னும் பணம் உதவுவதாக முடியுமோ அவள் செய்யப்போகிற தர்ம காரியம்? வெகு அழகு! அவள் மூளை குழம்பியது; ஒன்றும் சொல்லத் தோன்றாமல் தயங்கினாள்.

அந்தச் சமயத்தில், "அத்தை, உனக்குக் கடுதாசு" என்று சொல்லி அவள் மருமகள் ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்தாள். "யாரு எனக்கு எழுதறவா?" என்று சொல்லிக்கொண்டே அவள் அதைப் பிரித்துக் கீழே கையெழுத்தைப் பார்க்கவும், "எங்க மச்சினர்" என்று அதிசயத்தோடு சொன்னாள்.

அவள் முழுவதும் படிக்கும் மட்டும் பேசாமல் இருந்த அம்மாஞ்சி பிறகு, "என்ன எழுதியிருக்கிறான்?" என்று கேட்டான்.

"ஒன்றும் இல்லை. நிலம் விற்றது தெரிந்திருக்கிறது. நல்ல விலைக்குப் போனதற்குச் சந்தோஷம் விசாரித்திருக்கிறார்" என்றாள்.

"போகிறது. எங்கே அதில் பங்குக்கு வந்துவிட்டானோ என்று பார்த்தேன்" என்றான் அம்மாஞ்சி.

"இத்தனை காலம் திரும்பிப் பாராமல் இருந்துவிட்டு அப்படிக்கூட ஒருத்தர் வருவாரா?" என்றாள் மீனாக்ஷி.

"ஏன் மாட்டான்? அன்று அவன் தம்பியின் உயிர் போய்க்கொண் டிருந்தபோது அவன் பேரில் வந்த போலீஸ் வாரண்டைக் கண்டு, எங்கே தன்னை என்ன பாதித்துவிடுமோ என்று விலகியவன்தானே அவன்?" என்றான் ஆத்திரத்துடன்.

"போலீஸா? வாரண்டா? அது என்ன?" என்று கேட்டாள் மீனாக்ஷி. பிறகுதான் இவ்வளவு நாளும் அவளுக்குத் தெரியக் கூடாதென்று அவள் தமையன் வைத்திருந்த ஒரு ரகசியத்தை ஆத்திரத்தில் தான் நினைவில்லாமல் சொல்லிவிட்டது அவனுக்குத் தெரிந்தது. இனி விளக்கிச் சொல்லாவிட்டால் மீனாக்ஷி கேட்பாளா? இருபது வருஷத்திற்கு முந்தி நடந்து மறந்துபோன விஷயத்தை இப்பொழுது சொல்லும்படி ஆயிற்று.

அவள் கணவன் சினிமா 'நக்ஷத்திரம்' ஒருத்தியிடம் மோகங்கொண்டு அவள் இருப்பிடம் தேடிப் போனான். அங்கு அதுபோலவே வந்திருந்த மற்றோர் ஆளோடு கலகம் மூண்டு சண்டைபோட நேர்ந்தது. அதனால்தான் அன்று அவன் காயச்சலோடு ஜன்னி பிறந்து வீடு வந்தான். அந்த ஆள் இவன் தன்னை அடித்துக் காயப் படுத்திவிட்டதாகக் 'கேஸ்' போட்டுவிட்டான். இவன் வீட்டில் நினைவில்லாமல் கிடக்கிறான். அந்தச் சமயத்தில் இவன் பேரில் 'வாரண்ட்' வந்து நிற்கிறது. பிறகு என்ன? கிருஷ்ணமூர்த்தி நிலைமையைச் சமாளித்துப் பணம் கொடுத்துச் சமாதானம் செய்தான்.

"அப்பொழுது நானும் கூட இருந்தேன். அதில் சம்பந்தம் வைத்துக்கொள்ளக் கூடாதென்று இந்த மனிதன் தூர விலகியே இருந்தான். அவ்வளவு நல்ல மனசு அவனுடையது" என்ருன் அம்மாஞ்சி.

"எனக்கு ஏன் இவ்வளவு நாளும் இத்தனை விவரமும் தெரியவில்லை?" என்று கேட்டாள் மீனுக்ஷி.

"உனக்குத் தெரிந்தால், அவன் அகால மரணத்தால் ஏற்படும் வருத்தத்திற்கு மேலாக அவன் கெட்ட நடத்தைக்கு அவமானம் தாங்காது உன் இருதயமே வெடித்து விடுமென்று பயந்து அவன் ரகசியமாக எல்லாம் செய்தான். பின்னுடியும் ரகசியமாகவே வைத்திருந்தான். நான் இன்று அசட்டுத்தனமாய் வெளியிட்டுவிட்டேன். இருபது வருஷம் கழித்து இதற்காக நீ வருந்த மாட்டாயென்று நம்புகிறேன். வருந்தவும் கூடாது" என்ருன்.

சென்று போனதை நினைத்து அவள் மனசு வருந்தவில்லை. அண்ணுவின் அன்பை நினைத்துத்தான் உருகிவிட்டது. அவன் அந்தச் சமயத்தில் செய்த உபகாரம் பெரிதல்ல; கணவனின் நடத்தை அவள் இருதயத்தைப் பிளந்து மீளா வருத்தத்தில் ஆழ்த்திவிடும் என்பதற்காக அவன் ரகசியத்தைக் காப்பாற்றியதை நினைக்க நினைக்க நன்றி மேலிட்டு உணர்ச்சி பொங்கியது.

அவள் இந்தக் கோவிலைக் கட்டி முடிக்கப் பணம் உதவ நினைத்தாள். அவன் ஒரு கோயில் இடியாமல் காப்பாற்றினுன். வெளிக்கோயிலை யாரும் பண உதவியால் கட்ட முடியும். மனக் கோயிலேயோ? அது இடிந்து போனுல், அதைச் சரிபண்ணுவது சாத்தியமா? இப்பொழுது அவள் கணவன் விஷயம், அவளுக்குப் பிரமாதமாகப் படவில்லை. புதிதாய் அப்பொழுது அந்த இள வயசில் கேட்டிருந்தால் அவளால் தாங்கக் கூடியதா? தெய்வமே அவள் தமையன் உருவில் தோன்றி அவளைப் பொறுக்க முடியாத மனக் கஷ்டத்தினின்றும் அப்பொழுது காப்பாற்றி யிருக்கிறது. கோவில்தெய்வம் இதைவிட என்ன செய்துவிட முடியும்?

இருபது வருஷத்தில் ஒரு நாள்கூட ஒரு சந்தர்ப்

பத்தில் அவன் அதைப்பற்றி ஒரு வார்த்தை சொன்ன தில்லையே? அவனே மறந்து போயிருக்கிறான், நிச்சயம்! அவள் அதற்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறாள்? அவனுக்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறபொழுது அவ னுக்கு இல்லாமல் தெய்வத்திற்கு என்று நினைத்து வேறொரு குடும்பத்திற்குப் பணம் கொடுப்பதையா அவள் செய்வது? தெய்வமேயன்றோ அதற்குக் கோபித்துக் கொள்ளும்! கோவிலுக்கு ஏதோ சிறு தொகை கொடுத்து விட்டு, மீதத்தை அண்ணா காலடியில் அவள் சமர்ப்பிப் பாள். அவளுக்குத் தெய்வம் அவன் தான்.

அதை அம்மாஞ்சியிடம் சொன்னபோது அவன், "உன் இஷ்டம். ஆனால் பழைய சமாசாரத்தை நான் வெளியிட்டதாகக் கிருஷ்ணமூர்த்தியிடம் சொல்லாதே. அவன் என்னிடம் அப்பொழுது சத்தியம் வாங்கிக்கொண் டிருக்கிறான். ஏதோ ஆத்திரத்தில் வாய் தவறிவிட்டது" என்று சொல்லிச் சென்றான்.

அவன் வாய் தவறினதே நன்மை என்று மீனாக்ஷி நினைத்தாள். இல்லாவிட்டால் பெரும் தவறன்றோ அவள் செய்ய இருந்தாள்? அதற்குக் கடவுள்கூட அவளை மன்னித்திருக்க மாட்டார். நன்றி மறப்பது அவர் விரும் பக் கூடியதல்ல. பணத்திற்குத் தமையன் தான் உரியவன்.

இவ்விதம் தீர்மானித்த பொழுது அவள் பணத்தோடு கூடவே தனக்கு வரவிருந்த கீர்த்தியையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தாள். அவளுக்கே அது தியாக மென்று தெரியாது. ஒரு புறம் அன்பே உருக்கொண்ட தமையன்; இன்னொரு புறம் எல்லாம் வல்ல கடவுள் என்றல்லவா நிலைமை ஏற்பட்டிருக்கிறது? தமையனுக் குச் செய்வதில் கடமை இருக்கலாம்; புகழ் இல்லை. கடவுளுக்கு இருக்க நிழல் அவளால் என்றாலோ, அதில் அவளுக்குக் கிட்டும் புண்ணியம் அளவிடக் கூடியதா? உலகில் ஏற்படப்போகும் கீர்த்திக்குத்தான் ஓர் எல்லை உண்டா?

ஆனால் என்ன? மெல்ல எண்ணிப் பார்த்தாள். இருதயம் புண்பட்டுத் துடிதுடிக்காமல் ஒரு சமயம் காப்பாற்றிய தமையனை எண்ணும்போது, "ஆம், அவன் தெய்வத்திற்குமேல்" என்ற முடிவுக்கு வந்தாள்.

முடிக்காத கடிதம்

"அக்கா, உனக்குக் கடிதம் வந்திருக்கிறது. எழுத்தைப் பார்த்தால் அத்திம்பேரென்று நினைக்கிறேன்" என்று சொல்லி அவள் தம்பி கோபு ஒரு கடிதத்தை அவள் பேரில் போட்டான். அவள் அப்போது தான் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண் டிருந்தாள்.

"அத்திம்பேரா? எனக்கா?" என்று எழுந்து உட்கார்ந்து கடிதத்தைக் கையில் எடுத்தாள் பார்வதி. அவள் குரலில் ஆச்சரியம் தொனித்தது. கல்யாணம் கழிந்து இந்த ஆறு வருஷங்களில் இதுவரையும் அவள் கணவன் அவளுக்குக் கடிதம் எழுதியதே இல்லை. முன் பிரசவத்தின் பொழுது குழந்தைக்கு ஆண்டு நிறைவோடுதான் அவள் கணவர் வீடு சென்ருள். "சிறிசு, அவ்விடத்தில் பெரியவர்கள் யாரும் இல்லை. குழந்தையைத் தனியே வைத்துக்கொண்டு தவிக்க வேண்டும்" என்று சொல்லி அவள் தாய் அனுப்பவில்லை. அவள் கணவரும் அதை ஆக்ஷேபித்து ஒன்றும் சொல்லவில்லை. தனியாக அவளுக்குக் கடிதம் எதுவும் எழுதவில்லை. அவளும் கவலையற்றுப் பிறந்தகத்தில் இருக்கவேண்டிய நாட்களுக்கு மேலாகவே இருந்துவிட்டுச் சென்ருள். எப்பொழுதாவது அவள் கணவரிடமிருந்து க்ஷேம சமாசாரம் விசாரித்துக் கடிதம் வருவதுண்டு. அவளுக்கல்ல—அவள் தந்தைக்கு. அதை அவள் தகப்பனர் வாசித்துச் சொல்லும் பொழுதுகூட அவள் அவ்வளவாகக் கவனிக்கமாட்டாள். அவளுக்குக் கணவரிடத்தில் அவ்வளவு அலக்ஷ்ய புத்தி இருந்ததாக எண்ணவேண்டாம். ஒருவிதமான கூச்சம்; சங்கோசம்; பிறந்த வீட்டாரெதிரில், கணவரிடத்தில் தனக்கு இருக்கும் பிரேமை, அவர் க்ஷேமத்தில் தனக்கு இருக்கும் கவலை, இவைகளைக் காண்பிப்பதா? 'வயசு சென்ற கணவனிடத்தில் ஆசையைப் பார்!' என்று அவர்கள் பரிகாசமாக நினைத்தால்...?

இப்பொழுதுகூட அவள் தம்பி கோபு, "என்ன, அத்திம்பேருக்குச் சிறுபிள்ளைத்தனம் திரும்பிவிட்டது போல் இருக்கிறதே! கடிதம் எழுதக் கிளம்பிவிட்டார்" என்று சொன்னதும் கடிதத்தைப் பிரித்துப் பார்க்க அவளுக்கு இருந்த ஆவல் சட்டென்று தணிந்துவிட்டது; அவமானங்கூட உண்டாயிற்று என்று சொல்லலாம்.

இவ்வளவு நாளும் இல்லாமல் கடிதம் எழுதுவா னேன்? ஏதோ காரணம் இருக்கவேண்டும். அதை அறிய ஓர் ஆவல் உண்டாயிற்று; மறுகணம் பிறர் பரிகாசத்தை நினைத்தவுடன் அது அடங்கியது.

* * *

பார்வதி நல்ல அழகி. பெயருக்கேற்ப ஸாக்ஷாத் அவ்வம்பிகையின் ஸௌந்தர்யத்தோடுதான் அவள் அழகையும் ஒப்பிட வேண்டும். துவண்டு விழும் கொடி போன்ற சரீரமும், பொன் போன்ற சிவந்த மேனியும், கறுத்துச் சுருண்டு தொங்கும் அடர்ந்த கூந்தலும், களை பொருந்திய முகமும் அவளை 'அதிக சுந்தரி' என்று சொல்லும்படிதான் இருந்தன. ஆனால் அழகு மட்டும் இருந்தால் போதுமா? பணமும் அன்றோ முக்கியமாகக் கருதப்படுகிறது இக்காலத்தில்?

நாலைந்து பெண்களும் நாலைந்து பிள்ளைகளும் கொண்ட பெரிய குடும்பம் படைத்த அவள் தகப்பனார் சொற்பக் குடித்தனக்காரர். அதுவும் முன் நான்கு பெண்களுக்கு விவாகம் நடத்திப் பிள்ளைகளையும் படிக்க வைத்து மிகவும் கைசளைத்திருந்தார். இவ்வளவு காலமாக அலைந்து திரிந்து வரன் தேடியதில் அலுப்பு ஏற்பட்டு விட்டது. "இன்னும் ஒரு பெண்ணுக்கு வரன் தேடியாக வேண்டுமே! இந்தத் தொல்லைக்கு முடிவே இல்லையா?" என்று அவர் சோர்ந்திருக்கும் சமயம், அவர் மனைவிக்கு ஒன்று விட்ட சகோதரர் ஒருவருக்கு மனைவி இறந்து விட்டாள். அவர் இரண்டாந்தாரமாகப் பார்வதியைக் கொடுக்கும்படி கேட்டிருந்தார். நல்ல சொத்துடையவர். மூத்த சம்சாரம் குழந்தைகளின்றியே இறந்துபோய் விட்டாள். நல்ல மனிதர். உயர்ந்த குடும்பம். வீட்டில் தம்மைச் சேர்ந்த மனிதர்கள் யாரும் இல்லை என்பதற்

காகவே மறுவிவாகம் செய்துகொள்ள எண்ணினர். வயசுதான் கொஞ்சம் அதிகம். அதைப்பற்றிச் சிறிது யோசித்தார் பார்வதியின் தந்தை. ஆனல் அவர் மனைவி அதற்கேற்ற சமாதானம் சொல்லிவிட்டாள். “யாவும் சேர்ந்து கிடைக்குமா?” என்று அவள் சொன்னதும் அவர் அலுப்பும் சேர்ந்து அவருடைய முயற்சியை அந்தப் பக்கமாகத் தள்ளின.

பார்வதிக்குச் சம்மதந்தான? அதை யார் கேட்டது? பெண்களைக் கேட்டு நடத்தும் வழக்கம் சிறிது காலத்துக்கு முன்வரையும் நம் ஹிந்துக் குடும்பங்களில் ஏது? தாய் தந்தையர்களாகப் பார்த்துச் செய்வதுதானே பரம்பரை வழக்கம்?

ஒரு கிராமத்தில் வயசு வந்த பெண்ணை வைத்துக் கொண்டு காலம் தள்ளுவது லேசான காரியமா? ஊரார் அபவாதம் கொஞ்சமா? அதிலிருந்து நீங்குவோம் என்ற சந்தோஷத்தில் மூழ்கினள் பார்வதியின் தாய். அவள் தகப்பனரோ, ‘பகவான்தாம் நம்முடைய கஷ்ட காலத்தை அறிந்து இந்த வரனை அனுப்பியிருக்கிறர். எல்லாம் அனுகூலமாக இருக்கின்றன. இல்லாவிட்டால் நம்முடைய குதிகால் தேய மறுபடியும் யாத்திரையைத் தொடங்கவேண்டி யிருக்குமே? பணத்திற்கு எங்கே போவது?’ என்று தம்முடைய பழைய கஷ்டங்களை மீட்டும் அனுபவியாமல் விடுதலை பெற்ற மகிழ்ச்சியில் இருந்தார். ‘எல்லாம் அனுகூலமாகவே இருக்கின்றன’ என்று அவர் நினைத்தது, முக்கியமாக அவருடைய மனைவியின் சம்மதத்தை எண்ணித்தான். அந்த ‘எல்லாம்’ என்பதில் பார்வதியின் சம்மதம் மட்டும் அடங்கி இருக்கவில்லை.

ஆனல் அவளுக்கு வெறுப்பா? அதுவும் இல்லை. தனக்கென்று சிறப்பான உணர்ச்சி ஒன்று அவளிடம் அரும்பவில்லை. ‘அப்பா சொல்கிறர்; அம்மா திருப்தி அடைகிறள்; உடன் பிறந்தவர்களுக்கும் சம்மதம். இது நமக்கும் சம்மதமாகத்தான் இருக்க வேண்டும்’ என்று நினைத்தது அவள் உள்ளம். அவள் அப்படி நினைக்கத் தான் பழகி யிருந்தாள். அந்தப் பழக்கத்திற்கு முன் அவள் அழகு, இளமை, காதல் புரிவது எல்லாம் அழுந்

திக் கிடந்தன. அவற்றைப் பற்றிய நினைவு அவர்களுக்கு இல்லை. அவளுக்கு இருந்ததா, இல்லையா?

ஆனி மாதக் கடைசி; ஆகவே யாவும் வெகு சீக்கிரமே ஏற்பாடாகிவிட்டன. கல்யாண முகூர்த்தமும் வைத்தாயிற்று.

கல்யாணத்திற்கு முதல் நாள் நிச்சயதார்த்தத்திற்காகப் பார்வதியை அவள் தமக்கை அலங்கரித்துக்கொண்டிருந்தாள். புதுப் புடைவையும் ஆபரணங்களும் பார்வதியின் இயல்பான அழகுக்கு ஒரு புதுப் பொலிவை உண்டாக்கின. அலங்காரம் செய்துவிட்டுப் பார்வதியைப் பார்த்தாள். அவளுடைய அழகு இணையற்றதாகி விளங்குவதை உணர்ந்த பொழுது அவள் தமக்கைக்கு என்னவோ தோற்றியது; உணர்ச்சி பொங்கியது; அவளால் அடக்க முடியவில்லை. "என்ன இருந்தாலும் நம் பார்வதியின் அழகிற்கு இப்படிப் புருஷன் அமைய வேண்டாம். இளையாளாக வாழ்க்கைப்படாமல் இருக்கலாம்" என்ற வார்த்தைகள் அவளை அறியாமலேயே அவள் வாயிலிருந்து வந்தன.

அவை பார்வதியின் உள்ளத்திலே போய்த்தைத்தன. அழகு என்ற வார்த்தையும், இளையாள் என்ற வார்த்தையும் ஒன்றுக்கு ஒன்று பொருத்தமற்றவை என்பதை அப்பொழுதுதான் ஒருவாறு உணர்ந்தாள். அழகு ஒரு பெரிய பாக்கியம், இளையாள் பதவி பெரிய அவமானம். அழகைப் பலி கொடுப்பதற்கு அந்தப் பதவி படைக்கப் பட்டிருக்கிறது - இந்த எண்ணங்களிலே உண்டான வேதனை அவள் முகத்திலே அலையாடியது.

இரண்டாந்தாரம்—இந்த விஷயம் அவளுக்குத் தெரியாதா? - நன்ருகத் தெரியும். தன் கணவருக்கு நாற்பத்தைந்து வயசு என்பதும் தெரியும். ஆனால் அந்த விஷயங்களை அவள் தடைகளாக நினைக்கவில்லை! இரண்டாந்தாரமாக இருந்தால் என்ன? அவளுடைய சகோதரிகளில் ஒருத்தியே இரண்டாந் தாரமாக வாழ்க்கைப்பட்டுச் சௌக்கியமாக இருக்கிருள். இரண்டாந் தாரமாக வாழ்க்கைப்பட்டவர்கள் கணவன்மாரைக் கைக்குள் போட்டுக்கொண்டு வீட்டுக்கு ராணியாகக்

குடும்ப ராஜ்யத்தை நடத்தும் கதைகளை அனுபவசாலி களான கிழவிகள் பார்வதியின் காதில் படும்படி அவள் தாயிடம் சொல்லுவதை அவள் கேட்டிருக்கிறாள். இத னால் அவளுக்கு ஒரு குறையும் தோன்றவில்லை.

ஆனால், இப்போதோ, அவள் தமக்கை சொன்ன வார்த்தைகள் இருதயத்திலிருந்து பிறந்தவை. அவை பார்வதியை ஒரு கலக்குக் கலக்கிவிட்டன.

நிச்சயதார்த்தத்திற்கு மாப்பிள்ளை பெண் வீட்டிற்கு வரும் வழக்கமில்லை. மறுநாள் மாலை மாற்றும்பொழுது தான் பார்வதி முதல் முதல் தன் கணவனைப் பார்த்தாள். அவர் தோற்றம் அவள் மனத்தை வருத்தத்தில் ஆழ்த்தி யது. அத்தோற்றத்தில் கவர்ச்சி இல்லை; பாதி வழுக்கை விழுந்த தலை, மாநிற மேனி, சற்றுத் தொந்தி விழுந்த தேகம் - இவை யாவும் அவருடைய இயல்பான வயசைச் சற்று அதிகமாகவே காட்டின. அவர் தோற்றத்தில் கம்பீரம் இருந்தது. ஆனால் அது பார்வதியின் உள் ளத்தில் ஏமாற்றத்தைத்தான் உண்டாக்கியது. அவரைக் கடைக்கண்ணால் பார்க்கும் பொழுதெல்லாம், முதல் நாள் தன் தமக்கை சொன்ன வார்த்தைகள் அவள் காதில் ஒலித்தன.

தாலி கட்டி முடிந்தவுடன் தம்பதிகள் யாவரையும் நமஸ்கரித்தார்கள்; பார்வதியின் தமக்கை புருஷரை மாப்பிள்ளை நமஸ்காரம் செய்யப் போனார். அப்போது அவர் விலகிக்கொண்டே, "நான் உங்களைவிடச் சிறியவ னாகத்தான் இருப்பேன். என்னை நமஸ்காரம் செய்ய வேண்டாம்" என்றார். இந்த வார்த்தைகள் பார்வதி யின் மனத்தில் எரிந்த வேதனைத் தீயில் நெய்யை விட்டன. தன் தமக்கை தன்னை விடப் பெரியவள். ஆனால் அவள் கணவரோ தன் கணவரை விடச் சிறியவர்—அதாவது தன் புருஷர் அவரை விடப் பெரியவர். இந்தக் கணக்கை எண்ணிப் பார்க்கையில் அவள் தலை சுழன்றது. முதல் நாள் தமக்கை ஓர் அம்பை எய்தாள்; அந்தப் புண்ணின்மேல் தமக்கையின் புருஷர் மற்றோர் அம்பை எய்துவிட்டார்.

வாடிய முகத்தோடு பார்வதி உள்ளே சென்று

மாலையைக் கழற்றினாள். பக்கத்திலே நின்ற அவள் சித்தி, "பாவம்! பார்வதியின் அதிருஷ்டம் அவ்வளவு தான். என்ன செய்யறது." என்று அங்கலாய்த்தாள். அதற்குள் அனுபவம் முதிர்ந்த ஒரு பாட்டி, "அவளுக் கென்னடி குறைச்சல்? அவள்தான் எல்லாரையும்விட ஓசத்தியா இருக்கப் போறாள்" என்று உச்சஸ்தாயியில் சொல்லி அந்தக் குரலை அடக்கினாள். ஆனாலும் சித்தி யின் பேச்சுத்தான் பார்வதிக்குக் கேட்டது. பாட்டியின் பேச்சு அவள் காதில் ஏறவில்லை.

அவளுக்குத் துக்கம் தாங்கவில்லை. இதுவரையில் உள்ளுக்குள் குமுறிக்கொண் டிருந்த வருத்தம் கண்ணீர் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது. தன் கதி இப்படியாயிற்றே என்ற துக்கம் ஒரு பக்கம். பிறர் பரிகாசம் செய்கிறார்களே என்ற அவமானம் ஒரு பக்கம். அவர்கள்மேல் ரோஷம் ஒரு பக்கம்.

இப்படி இரண்டு நாட்களில் அடுத்தடுத்து நிகழ்ந்த மூன்று நிகழ்ச்சிகள் அவள் உள்ளத்திலே பதிந்து அங் குள்ள ஆசையைத் துடைத்தன; உணர்ச்சியைப் போக் கின; மென்மையை நீக்கி ஒரு கடின ஸ்வபாவத்தைப் புகுத்தின. உலகம் உத்தியோகசாலை யாகிவிட்டது. தன் தாய்தகப்பனாரிடம் சிறிது வெறுப்புங்கூட உண்டா யிற்று. கல்யாணத்தில் ஊஞ்சலென்றும் நலங்கென்றும் சொல்லி உட்கார அவள் சம்மதிக்கவில்லை. அவைகள் எல்லாம் தன் துரதிருஷ்டத்தை விளம்பரப் படுத்தும் என்ற எண்ணம் அவளுக்கு. அவள் கணவரும் அவை யெல்லாம் வேண்டாமென்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். அதிலே ஒருவித ஆறுதல் உண்டாயிற்று பார்வதிக்கு.

அதுமுதல் பார்வதி மாறிவிட்டாள். யாருடனும் அவள் மனம்விட்டுப் பேசுவதில்லை. துக்கமோ, சுகமோ அவளுக்குள்ளே அடங்கிக் கிடக்கத் தொடங்கியது.

* * * *

கல்யாணம் கழித்துப் புக்ககம் சென்று வசிக்க லானாள். துணைக்காக அவள் பாட்டியை அவளுடன்

அனுப்பினார்கள். அந்தப் பாட்டி வயது சென்றவள்; அதோடு காதும் செவிடு. அவளுடன் என்ன அந்தரங்கங்களைப் பேச முடியும்?

அவள் வாழ்க்கை நடத்தத் தொடங்கினாள். கணவரிடத்தில் மரியாதையும் பக்தியும் இருந்தன. இவை அவளுடைய பிறந்தகத்தில் கற்றுக்கொண்டவை. கணவனைத் தெய்வமாகக் கொண்டாட வேண்டும் என்ற போதனையின் பயனாக எழுந்தவை. ஆனால் பிறர் சொல்லிக் கொடுக்காமல் இயற்கையூற்றாக எழும் பிரேமை—காதல் அவளுக்கு உண்டாகவில்லை. இருதயத்தில் அந்த ஊற்றுக் கண்கள் அடைந்துவிட்டன. ஆகவே அவள் கணவர் அவளுக்குத் தெய்வந்தான்; காதலர் அல்ல. அவருக்கு அடங்கிச் சுச்ரூஷை செய்யக் கடமைப்பட்டவள் அவள்; அவரோடு சமமாக இருந்து அளவளாவும் உரிமை, இன்பம் அவளுக்கு இல்லை. இல்லற வாழ்க்கை அந்த அளவில்தான் அவளுக்கு அமைந்திருந்தது.

எல்லாப் பெண்களையும் போல் அவள் தன் கணவருடன் தாராளமாகப் பேசுவதில்லை. நாலுபேர் இருக்கும் பொழுது அவர் எதிரேகூட வருவதில்லை. சிறிது நேரம் அவருடன் சிரித்துப் பேசினால், "வயது சென்ற கணவருடன் என்ன பேச்சு வேண்டியிருக்கிறது!" என்று வேலைக்காரர் முதல் யாவரும் இகழ்வார்களே என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது. கூடியவரையில் அவர் கண்களில் படாமல் இருப்பதை அவள் விரும்பினாள். பெரும்பாலும் உள்ளுக்குள்ளே இருந்து ஏதாவது வேலை செய்துகொண்டே இருப்பாள். அவளுடைய கலகலப்பான பேச்சு இருந்த இடம் தெரியாமல் அடங்கியது. செயல்களிலும் அடங்கியே நின்றாள். அடக்கமே அவள் ஸ்வரூபமாகிவிட்டது.

பிறந்தகம் வந்த சமயங்களிலும் தான் எல்லாரோடும் சமமாக இருக்கும் பாக்கியம் பெற்றவளல்ல என்ற நினைவு அவளை உறுத்திக்கொண்டே இருக்கும். அதனால் அவள் எல்லாரோடும் சகஜமாகப் பேசிப் பழகுவதில்லை. அவளிடத்தில் ஏற்பட்ட மாறுதலை யாரும் கவனிக்கவில்லை. தாயோ பெரியவள்; அவளுக்குப் பல வேலைத் தொல்லைகள். சகோதரிகள் தங்கள் குடும்பத்தில் கலந்து

வாழ்பவர்கள். சகோதரர்களோ புருஷர்கள்; அவர்கள் பெண் உள்ளத்தை எங்கே அறிந்துகொள்ளப் போகிறார்கள்? அதுவும் அவர்கள் உத்தியோகம் ஏற்று வெளியூர்களில் வசிப்பவர்கள். பார்வதியைப்பற்றிச் சிந்திக்க அவர்களுக்கு அவகாசம் ஏது? இவ்வாறு, பலருடன் பிறந்தும் அவள் தனியுலகிலேயே சஞ்சரிக்கலானாள்.

* * *

இந்தத் தடவை அவள் பிரசவித்து ஒரு மாதந்தான் ஆகிறது. என்றைக்கும் இல்லாத அதிசயமாய் அவள் கணவர் அவளுக்கே நேரில் கடிதம் எழுதியிருக்கிறார். அவள் மனத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. கடிதத்தை வாங்கினாள். நாலுபுறமும் பார்த்துவிட்டு அதைப் படிக்கத் தொடங்கினாள். புருஷருடன் குடித்தனம் செய்த பழைய மனைவியானாலும் அந்தக் கடிதம் அவரிடமிருந்து பெற்ற முதற் கடிதந்தானே? சரியானபடி அமைந்த காதலன் காதலியராக இருந்தால் அந்தக் கடிதம் ஆயிரம் இன்ப ஊற்றுக்களை ஒரு கணத்தில் எழுப்பியிருக்கும். பார்வதியின் அதிருஷ்டந்தான் அப்படி அமையவில்லையே! கடிதம் என்னவோ புதியது; இதற்குமுன் இல்லாத வழக்கம். ஆனால் அது அவள்பால் இன்ப உணர்ச்சியை உண்டாக்கவில்லை; அதிக நாணத்தையும், யாராவது கண்டு ஏளனம் செய்யப் போகிறார்களே என்ற பயத்தையுமே அளித்தது.

தக்க பருவத்தில் அமைந்த பொருள்கள் அவளுக்குக் கிடைக்கவில்லை. எல்லாம் தாமதமாகவே கிடைத்தன. நாற்பத்தைந்து வயதுடைய புருஷர் கிடைத்தார்; அவரிடம் காதல் புரிய வகையில்லை. கல்யாணமாகி இவ்வளவு வருஷம் கழித்து நேரே அவளுக்குக் கடிதம் வந்தது. அதைக் கொண்டு இன்ப மாளிகைகள் நிருமிக்க இடமில்லை.

கடிதத்தை அவள் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது அவள் தாய் சட்டென்று அந்த அறையில் நுழைந்தாள்.

"யார் கடிதாசு?" என்ற அவள் கேள்விக்குப் பதில் சொல்வதற்குள் பார்வதிக்குப் போதும் போதுமென்றாகி

விட்டது. அவள் கணவர் அவளுக்கு நேரே கடிதம் எழுதினரென்பது தாய்க்கு எதிர்பாராத விஷயமாக இருந்தது.

"உங்காத்துக்காரரா? என்ன விசேஷம்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் தாய்.

"அவருக்கு உடம்பு சரியாக இல்லையாம். பாலசந்திரனைப் பார்க்க வேண்டும்போல் இருக்கிறதாம்" என்று சங்கோசத்துடன் பதில் வந்தது.

இதில் என்ன புதுமை இருக்கிறது? பார்வதியின் தாய், "உன்னை வரச் சொல்லுகிறாராக்கும்? ரொம்ப அழகுதான்! இளையாள் மோகம் கிழவர்களுக்கு என்பது சரியாகத்தான் இருக்கிறது. பிரசவமாகி ஒரு மாதம் ஆகவில்லை. அதற்குள் என்ன அவசரம்? நீ இல்லாமல் முடியவில்லையாக்கும்? நன்னாயிருக்கு! நாலு பேர் கேட்டால் சிரிப்பார்கள்" என்று படபடவென்று சொல்லிக் கொண்டு போனாள்.

'ஏனடா சொன்னோம்!' என்று ஆகிவிட்டது அந்தப் பேதைப் பெண்ணுக்கு. மேலே அவளுக்கு வார்த்தை வரவில்லை. அவமானமும் துக்கமும் சூழ்ந்துகொண்டன.

அவள் எல்லாரையும் போலிருந்தால் அந்தக் கடிதத்துக்கு எவ்வளவு மதிப்பு இருந்திருக்கும்? அப்போது அவளை வரச்சொல்லி அவள் புருஷர் எழுதினால் சொந்தத் தாயே பரிகசிக்கும் நிலை ஏற்பட்டிருக்குமா? கிழவன் மோகம் என்று தூக்கி எறிந்து பேசிய பேச்சு அந்தப் பெண்ணின் மனத்தைச் சுட்டது அந்தத் தாய்க்குத் தெரியவில்லையா? கிழவனைக் கணவனுக்கியது யார் பிசகு? கிழவனானால் என்ன? தன் மனைவியையும் குழந்தையையும் பார்க்கும் உரிமை போய்விடுமா? அவர்கள் மேல் ஆசை வைப்பது அதர்மமான காரியமா? என்ன உலகம் இது!

பார்வதியின் துக்கமயமான எண்ணங்கள் உள்ளுக்குள்ளே குமுறிக்கொண்டு சுழன்றன. வெளியே வரவில்லை.

* * * *

பார்வதிக்கு முதலில் தன் கணவரிடத்தில் கோபம் இருந்தது. அவருடைய முயற்சியினுல்தானே தான் அவருக்கு மனைவியாக நேர்ந்தது என்ற எண்ணத்திலே பிறந்தது அந்தக் கோபம். நாளடைவில் அந்தக் கோபம் மாறத் தொடங்கியது. அவரைத் தன் காதலர், கணவர் என்று இப்போது நினைப்பதில்லை. தன் அருமைக் குழந்தை பாலசந்திரனுடைய தந்தை என்ற நினைவினுல் அவர்பால் ஒரு பக்தி ஏற்பட்டது. அந்தக் குழந்தையிடம் அவருக்கு இருந்த கரையற்ற அன்பைக் காண அவர் பால் ஒரு விதமான மரியாதையும் கௌரவ எண்ணமும் தோன்றின.

அவர் சாது. 'இவளை மணந்ததனுல் ஓர் அழகிய இள நங்கையின் வாழ்வில் இவள் பெறவேண்டிய இன்பத்தைப் பெறவொட்டாமல் தடுத்துவிட்டோம். இது தவறு' என்று நினைந்து பச்சாத்தாபப் படுபவரைப் போல நடந்துகொண்டார்.

மணமான புதிதில் அவரைத் தனிமையில் சந்தித்த போது எந்த உணர்ச்சியும் இல்லாத அவள் தன் துரதிருஷ்டத்தை நினைந்து விம்மி விம்மி அழுதாள். அந்தக் காலங்களில் அவர் சிறிதளவுகூடக் கோபிக்கவில்லை. அந்த அழுகைப் பாஷையைப் புரிந்துகொண்டவர் போல மௌனமாகவே இருந்தார். அவளைச் சமாதானம் செய்யவும் முயலவில்லை. அந்தச் சமாதானம் அவளுடைய துயரத்திற்கு எல்லை கோலச் சக்தி அற்றதென்று அவருக்குத் தெரியுமோ என்னவோ! அவர் அப்படி ஒன்றும் செய்யாமல் இருந்ததே அவளுக்குப் பெரிய ஆறுதலை அளித்தது.

பார்வதிக்கு அவருடைய நடத்தையில் இருந்த பெருந்தன்மை அப்போதெல்லாம் தெரியவில்லை; இப்பொழுது தெரிந்தது.

அவள் கணவரிடம் சென்று வசிக்க ஆரம்பித்து இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பிறகே பாலசந்திரன் பிறந்தான். குழந்தை தந்தையிடம் தனி அன்பு காட்டினுன். அவர் பிரேமையும் அவனிடம் அலாதியாகவே தான் இருந்தது. அதிலிருந்தே பார்வதியின் உள்ளமும்

அவர்பால் வெறுப்பு நீங்கி ஒருவித மரியாதை கலந்த அன்பு கொள்ளத் தொடங்கியது. ஆனால் அதை அவள் எப்போதாவது வெளிக்காட்டி யிருப்பாளா? அதுதான் அவளால் முடிகிற காரியம் அல்லவே!

* * * *

இப்பொழுது இந்தக் கடிதம் ஒரு பரபரப்பையே உண்டுபண்ணியது. அவருக்கே ஆவல் அதிகரித்துத் தான் அதை எழுதியிருக்கிறார். அவர் எந்த உணர்ச்சி யையும் அடக்கக்கூடியவர் என்பதை அவருடன் பழகிய சில வருஷங்களில் அவள் தெரிந்துகொண் டிருந்தாள்.

"எனக்கு இரண்டு நாளாய்ச் சொற்பக் காய்ச்சலாக இருக்கிறது; காய்ச்சல் கொஞ்சந்தான். பலவீனம் மட்டும் அதிகமாய்த்தான் தோன்றுகிறது. பாலசந்திர னைப் பார்க்க மட்டும் ஆவல் அதிகமாக இருக்கிறது. உன்னால் இப்போது வர முடியுமா?" என்று எழுதியிருந் தது அந்தக் கடிதத்தில்.

வெகு சாதாரணமான சொற்கள். அவற்றுள் எவ் வளவு ஏக்கமும் ஆவலும் அடங்கி இருக்கின்றன என் பதைப் பார்வதி தெரிந்துகொண்டாள். அவள் மனம் அலக்ஷ்யமாயில்லை. உடனே புறப்பட்டுப் போகவேண்டும் என்று இருந்தது. ஆனால் தன் எண்ணத்தை எப்படிச் சொல்லி நிறைவேற்றிக் கொள்ளுவாள்?

தகப்பனார் சாப்பிடும் பொழுது தாய் அவரிடம் பார் வதிக்குக் கடிதம் வந்திருப்பதைச் சொன்னாள். "இப் போது அறுப்புக் காலமல்லவா? யார் கொண்டுபோய் விடுவார்கள்? கோபு எனக்கு ஒத்தாசைக்கு இருக்க வேண்டும். வேறு யாரும் ஊரில் இல்லை. நான் எழுது கிறேன் அவனுக்கு" என்றார் அவள் தந்தை.

"அப்படியும் பிரசவித்து ஒரு மாதம் ஆகவில்லை. அதற்குள் அலைச்சல் பார்வதி உடம்புக்குத்தான் ஆகுமா?" என்றாள் தாய்.

"ஆமாம், அதுவும் வாஸ்தவமே. அவன் எனக்கு எழுதாமல் அவளுக்கு ஏன் எழுதினான்?" என்று வியப் போடு தாமே கூறிக்கொண்டார் தந்தை.

"என்னவோ, பால்யம் திரும்பியிருக்கிறதாக்கும்" என்ருள் தாய்.

இந்தச் சம்பாஷணையைக் கேட்ட பிறகு பார்வதிக்குப் போவதைப்பற்றிப் பேசவே மனம் வரவில்லை. அவர் விரும்புவது நியாயம் என்று வெட்கத்தை விட்டு அவள் எப்படிச் சொல்லுவாள்? தாய்க்கே பரிகாசம் தோன்று கிறது. கடிதத்திற்குப் பதிலாவது போடுவோ மென்ருல் அவள் தம்பி ஏளனம் செய்வான். 'என்ன, காதல் கடிதமா?' என்பான். எல்லாரிடமும் சொல்லி வேடிக்கை செய்வான். அவள் பிராணனே போய்விடும்.

இவ்விதமான போராட்டத்திலேயே இரண்டு நாட் கள் போய்விட்டன. அவள் தந்தை எழுதிய கடிதத்திற் குப் பதிலையே காணவில்லை. அவள் சஞ்சலப்படத் தொடங்கினுள். என்றுமில்லாமல் வந்த அந்தக் கடிதம் உள்ளுக்குள் வேலை செய்துகொண்டே இருந்தது. மனத் தைத் திடப்படுத்திக்கொண்டு யாருக்கும் தெரியாமல் அன்று பதில் எழுதிப் போடுவது என்று நினைத்தாள். வேலைக்காரியிடம் ரகசியத்தில் ஒன்றரை அணுத் தலை வாங்கிவரச் சொன்னுள். அவள், "ஏதுக்கம்மா?" என்று கேட்டபொழுதுகூடக் குறும்புத்தனமாகவே பார்வதிக் குப் பட்டது. "ஏதுக்கானுல் என்ன? வாங்கிவா" என்று அதட்டினுள்.

யாவரும் உணவருந்தி மத்தியான்னம் சிறிது சிரம பரிகாரமாகத் தூங்கும் பொழுது கடிதத்தை எழுதுவது என்று தீர்மானித்தாள்.

தகப்பனுர் சாப்பிட்டுவிட்டுக் காமரா உள்ளில் போய்ப் படுத்துவிட்டார். தாயும் கூடத்தில் புடைவைத் தலைப்பை விரித்துப் படுத்துக்கொண்டாள். கோபுவும் சிநேகிதன் வீட்டிற்கோ வேறு எங்கேயோ சென்றிருந் தான். அவள் குழந்தைகள் இருவரும் தூங்கினுர்கள். அவள் கடுதாசியும் பென்சிலும் எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

பார்வதி அநேக நாவல்கள் வாசித்திருக்கிருள். அவ ளுக்கு அதுதான் பொழுதுபோக்கு, கணவன் வீட்டில் கூட. அவைகளிலிருந்து அவள் காதலி காதலனை விளிக்

கும் எவ்வளவோ ஆசைச் சொற்களைத் தெரிந்துகொண்டாள். தெரிந்திருந்தென்ன? இப்பொழுது அவளுக்கு அவைகளில் ஒன்றும் உதவாது. வெகு சாதாரணமாகவே, 'க்ஷேமம், நமஸ்காரம்' என்று தொடங்கினாள் கடிதத்தை. கடைசியில் பதிலாவது எழுதுகிறேமென்ற எண்ணமே அவளுக்குச் சிறிது மனச் சமாதானத்தைக் கொடுத்தது. தனக்கு அவர்பேரில் ஏற்பட்டிருக்கும் பெருமதிப்பை வெளியிட நினைத்தாள். நேரில் அதைச் சொல்வது அவளுக்குச் சாத்தியமல்ல.

பாதிக் கடிதங்கூட எழுதியிருக்க மாட்டாள். அதற்குள் வாயில் கதவை யாரோ இடித்தார்கள். "யாரது? பாரு" என்று அவள் தந்தை உள்ளிருந்தே அரைத் தூக்கத்தில் கூறினார். பார்வதி கடிதத்தை வைத்துவிட்டு எழுந்து சென்றாள். வாயிலில் தந்திச் சேவகன் ஒருவன் நின்றான். "இதுதானா ஜகதீசையர் வீடு?" என்று கையிலிருந்த கவரின் விலாசத்தைப் பார்த்துக்கொண்டே கேட்டான். "ஆமாம்" என்று கூறிக் கையெழுத்துச் செய்து தந்தியை வாங்கிக்கொண்டு சென்றாள் பார்வதி.

தந்திக்காரன் போய்விட்டான். தெருவில் தூங்கிக்கொண்டிருந்த நாய்கள் சில குரைத்து அவன் சைக்கிளைச் சிறிது தூரம் துரத்திவிட்டுத் திரும்பின. அந்தச் சத்தத்தைக் கேட்டு அரைத் தூக்கத்திலிருந்த அண்டை அயல் வீட்டார் வாயிலில் வந்து பார்த்து, ஜகதீசையரகத்துக்குத் தந்தி என்று தெரிந்துகொண்டு, என்ன விசேஷமென்று விசாரிப்போமா வேண்டாமா என்ற சந்தேகத்தில் மறுபடியும் போய்ப் படுத்துக் கொள்ளாமல் நின்றார்கள்.

பார்வதி தந்தையிடம் தந்தியைக் கொடுத்தாள். தந்தி எதுவாக இருக்குமென்று அறிய ஏனோ அவள் மனம் துடித்தது. பெஜவாடாவில் இருந்த அவள் தமையன் மனைவி பிரசவித்திருக்கலாம். இன்னும் எவ்வளவோ இருக்கலாம். கிராமாந்தரமாக இருந்தாலும் பல ஊர்களில் பெண்களும் பிள்ளைகளும் வசிப்பதால் தந்தி வருவது அப்படி அபூர்வ சம்பவமல்ல. இருப்பினும்

தந்தை பிரித்துப் பார்ப்பதற்குள் அவள் மனம் துடியாய்த் துடித்தது. அதற்கு ஏற்றாற்போல் அவரும் தந்தியைப் படித்தார். "இதென்ன? 'கைலாசத்திற்கு ஜன்னி பிறந்திருக்கிறது. சுய நினைவில்லை. உடனே வருக' என்று அடித்திருக்கிறதே" என்றார் கலவரத்துடன். பார்வதிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பிரமை பிடித்து நின்றாள். தந்தி சமாசாரம் கேட்ட தாய், "பார்வதி தலையில் என்ன எழுதியிருக்கிறதோ தெரியவில்லையே! இளையாளாகத்தான் வாழ்க்கைப்பட்டாள். பொன்னும் புடைவையுமாக உடுத்துத் தாலியைக் கட்டிக்கொண்டிருக்கலாகாதா?" என்று அங்கலாய்க்கத் தொடங்கி விட்டாள். சமாசாரம் நெடுகிலும் பரவிவிட்டது. அண்டை அயலார், "ஒன்றும் இராது" என்று ஆளுக்கு ஒரு சமாதானம் சொல்லிச் சென்றனர்.

பார்வதி, அவள் தாய், தந்தை மூவரும் குழந்தைகளுடன் கிளம்பிவிட்டார்கள். சாமான்களுடன் பாதி எழுதின கடிதத்தையும் எடுத்துச் சென்றாள் பார்வதி. அவருக்கு உடம்பு சௌகர்யமானவுடன் பார்ப்பார் அல்லவா?

அவர்கள் சென்ற பொழுது கைலாசத்திற்குச் சுய நினைவு இல்லாமல்தான் இருந்தது. பக்கத்து ஊர்ச் சர்க்கார் ஆஸ்பத்திரி டாக்டர் வந்து பார்த்து, "இன்னும் சில விநாடிதாம் உயிருடன் இருப்பார்" என்று சொல்லி விட்டார். 'ஏதோ விஷஜுரம், சரியான வைத்தியமில்லாமல் இவ்வாறு நேர்ந்தது' என்பது அவர் அபிப்பிராயம்.

கூடத்தில் ஒரு பெஞ்சியில் கைலாசமையர் படுத்திருந்தார். லேசாகச் சுவாசம் வந்துகொண்டிருந்தது. மிராசுதார் ஆகையால் காரியஸ்தன் முதலானவர்களும் ஊர் ஜனங்களும் அவரைச் சூழ்ந்து நின்றனர்.

இவர்களைக் காணவும் அவர்கள் சிறிது வழிவிட்டு விலகினர். "கைலாசம், கைலாசம்" என்று அவர் முகத்திற்கு நேராகக் குனிந்து கூப்பிட்டார் பார்வதியின் தந்தை. கைலாசத்திடமிருந்து ஒரு பதிலும் இல்லை. மூச்சுமட்டும் வந்ததே தவிர இவ்வுலக சிந்தையே அவரை விட்டுப் போய்விட்டதென்று தெரிந்தது. "ஐயோ!

அம்மா, பார்வதி! இப்படி வந்துவிட்டதே உனக்கு!" என்று தந்தை வருந்தினார். பார்வதிக்கு 'ஹோ'வென்று கதற வேண்டும்போல் இருந்தது.

தனக்கு அவரிடத்தில் ஏற்பட்டிருக்கும் அன்பை வெளியிட அவள் இப்பொழுதுதானே நினைத்தாள். அவர் அதைத் தெரிந்துகொள்ளாமல் போகிறாரே. அவளுக்குத் துக்கம் பொறுக்க முடியாதுபோல் இருந்தது. குழந்தை பாலசந்திரன் அவ்வளவு பேரையும் பார்த்துப் பிரமித்து நின்றவன் தந்தை படுத்திருப்பதைக் கிட்ட நெருங்கிப் பார்க்கவும், யாவரையும் மறந்து, 'அப்பா' என்று மழலைச் சொற்களால் கூவிக்கொண்டு அவர் படுத்திருந்த பெஞ்சியை நோக்கித் தாவினான். பக்கத்தில் நின்ற சிலர் அவர்மேல் விழ விடாமல் அவனைப் பிடித்துத் தூக்கிக் கொண்டனர். குழந்தையின் குரல் கேட்டவரைப் போலக் கைலாசத்தின் உடல் ஒரு குலுங்குக் குலுங்கிற்று. கண்களை விழித்து மலர நோக்கினார். மறுகணம் அவர் பிராணன் போய்விட்டது. பார்வதியையும் பாலசந்திரனையும் அவர் தெரிந்துகொள்ளாமலேயே போய்விட்டார்.

பார்வதியின் மனம் பிளந்துவிடும்போல் இருந்தது. வாய்விட்டுக் கதறி அவர்மேல் விழுந்து புரண்டு அழ நினைத்தாள். இவ்வளவு பேர் முன்னிலையிலா? அந்தப் பாழும் சங்கோசம் இப்பொழுதும் அவளை விடவில்லை. இனி யார் எது நினைத்தால் அவளுக்கு என்ன? அவள் கணவர், அவள் அருமை மகன் பாலசந்திரனின் பிரியமான தந்தை போய்விட்டார். அவள் கைம்பெண்ணாகி விட்டாள். பாலசந்திரன் குழந்தைப் பருவத்திலேயே தந்தையின் ஆதரவை இழந்துவிட்டான். அவள் பேதை மனம் கதறிப் புலம்பத் தூண்டியது. ஆனால் அவள் என்னவோ அப்படிச் செய்யவில்லை. இவ்வளவு காலமாக மன எழுச்சிகளை அடக்கிப் பழக்கப்பட்ட அவளுக்கு அது சாத்தியமாகவில்லை. கண்ணீர் சொரிந்து ஸ்தம்பித்து நிற்கத்தான் அவளால் முடிந்தது.

அவளைப் பார்த்து யாவரும் அங்கலாய்த்தனர். அவள் இளவயசும் சௌந்தரியமும் அனைவர் உள்ளத்தையும் மிகவும் வருத்தின.

இப்படியாகப் பார்வதியின் வாழ்க்கையே முடிந்து விட்டது. "இவ்வளவு அதிகமாவதற்கு முன்பே ஏன் எங்களுக்குத் தெரிவிக்கவில்லை?" என்று பார்வதியின் தந்தை பிறகு சாவகாசமாகக் காரியஸ்தன் முதலானவர்களை வெகுவாகக் கோபித்துக் கொண்டார். அதற்கு அவர்கள் முதல் நாள் வரை அவர் சாதாரணமாகவே இருந்ததாகவும், அவர் கடிதத்திற்குக்கூடத் தாமே பதில் எழுதுவதாகச் சொன்னதாகவும், நேற்றுக் காலையில்கூட அவ்விடமிருந்து இன்னும் ஏதாவது கடிதம் வந்ததா என்று விசாரித்துக்கொண் டிருந்ததாகவும், இரவிலிருந்துதான் திடீரென்று இம் மாறுதல் ஏற்பட்டதென்றும், பொழுது விடிந்து தந்தி ஆபீஸ் திறந்தவுடன் தந்தி கொடுத்துவிட்டதாகவும் வெகு பணிவாகச் சொன்னார்கள்.

'எந்தக் கடிதத்தை அவர் எதிர்பார்த்தார்? நாம் பாதி எழுதி வைத்திருக்கும் கடிதத்தையா?' என்று பார்வதி எண்ணினாள். ஆம்! அந்தக் கடிதத்தையும் அவர் பார்க்கவில்லை; ஊரிலிருந்து ஆவலாக வந்த அவளையும் பார்க்கவில்லை. கடிதம் முடியவில்லை; அதற்குள் அவள் மங்கல வாழ்வு முடிந்துவிட்டது.

அதிலும் ஒரு லாபம்

'ஆபீசுக்கு நேரமாகிவிட்டதே; இவ்வளவு நாழிகை பேசியிருந்துவிட்டோமே' என்கிற அவசரம் சுந்தரேசனுக்கு. வேகமாக ஸ்நான அறைக்குள் நுழைந்தான். வெந்நீர் மொள்ள அண்டாவில் செம்பை விடவும் அதில் தண்ணீர் கொஞ்சந்தான் இருந்ததாகையால் நிதானம் தவறிச் செம்பு, சத்தத்துடன் அண்டாவுக்குள் விழுந்தது. "அவசரத்துக்கு இந்த வீட்டில் ஒன்றும் சரியாக இராது" என்று முணுமுணுத்துக்கொண்டவன், "வெந்நீரைச் சரிபார்த்து வைக்கக் கூடாதா?" என்று கடிந்துகொள்வதற்கோ, "இப்பொழுது இதைக் கவனி" என்று மனைவிக்கு உத்தரவிடுவதற்கோ இன்று மனமில்லை.

நேற்று இருவருக்கும் சண்டை பலமாகிப் பேச்சு வார்த்தைகள் இல்லையே. 'இதை எளிதில் விட்டுவிடக் கூடாது. போனால் போகிறதென்று பார்த்தால் வர வரத் தலைக்குமேல் ஏறுகிறது. கொஞ்சம் பயம் வரும்படி நடந்துகொள்ளவேண்டும்' என்று சுந்தரேசன் தீர்மானித்திருந்தான். அதன் பலன்தான் இது.

இரண்டு குடம் தண்ணீர் மொண்டு அண்டாவில் கொட்டினான். அவசரத்தில் வெளியிலெல்லாம் தண்ணீர் சிதறிவிட்டது. புகைந்து எரிந்துகொண்டிருந்த அடுப்பு அணைந்து ஒரே மட்டாய்ப் புகைய ஆரம்பித்தது. "அட இழவே" என்று பக்கத்தில் கிடந்த விசிறியைக்கொண்டு விசிறி எரியவிட முயன்றான்; பயன்படவில்லை. அவசரத்துக்கு அடுப்பு என்ன செய்யும்? ஐப்பசி மாச மழையில் நனைந்த விறகல்லவா? 'சொய்'யென்று ஓசையிட்டுக்கொண்டிருந்தது. குனிந்து ஊதிப் பார்த்தான். புகை கண்ணை அவித்ததேயொழியப் பலனில்லை. மனைவியை அப்பொழுதும் கூப்பிட மனம் வரவில்லை. கோபத்தோடு

பச்சைத் தண்ணீரை மொண்டு விட்டுக்கொண்டு ஸ்நானம் செய்துவிட்டு அவசரமாகச் சாப்பிட உட்கார்ந்தான்.

இவ்வளவையும் அவன் மனைவி சுந்தரி கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். 'அவ்வளவு கோபமா? இருக்கட்டுமே' என்று பேசாமல் இருந்துவிட்டாள். அவள் மனத்திலும், 'நாம் தாழ்ந்துபோய்க் கௌரவத்தைக் கெடுத்துக் கொள்வதா?' என்ற எண்ணம். 'இந்தத் தடவை அவருக்காயிற்று, நமக்காயிற்று; பார்த்துவிடுகிறது' என்ற தீர்மானத்துடன் இருந்தாள். 'இத்தனை நாள் நடுங்கி நடுங்கி நடந்ததற்கு என்ன கிரீடம் வைத்து விட்டார்? திண்டாடினால்தான் கொஞ்சமாவது அருமை தெரியவரும்.'

சுந்தரேசன் அவளை நிமிர்ந்து பாராமலே சாப்பிட்டு விட்டு எழுந்து ஆபீசுக்குச் சென்றான். 'வேண்டாம், வேணும் என்று சொல்வதற்குக்கூட வாயில் கொழுக் கட்டையா என்ன? அடே அப்பா, கோபமே! என்ன தான் அப்படிக் கொலைபாதகத் தொழில் செய்துவிட் டேனோ, தெரியவில்லை. இவர் பெண்ணையும் பிள்ளையையும் கிணற்றில் தூக்கிப் போட்டுவிட்டேனா? நன்றாயிருக் கிறது!' என்று எண்ணமிட்டாள் சுந்தரி.

'நான் சாதாரணமாகச் சொன்னதற்கு இத்தனை சண்டையா? "ஆபீசிலிருந்து வரும்பொழுது ராமநாதையரைப் பார்த்துவிட்டு வாருங்கள்" என்றேன். நேற்றுக் கூடச் சரஸ்வதி என்னிடம், "நாம் இருவரும் ஒன்றாக வளர்ந்து ஒன்றாக வாசித்துத் தோழிகளாக இருப்பதற்கு, நம் கணவர்களும் ஏன் சிநேகிதர்களாக இருக்கக்கூடாது?" என்றாள். நான், 'எங்காத்தில் அவரை உன் கணவரை வந்து பார்க்கச் சொல்லுகிறேன்' என்று சொன்னேன். இந்த விஷயத்தை இவரிடம் சொன்னேன். இதில் என்ன தவறு? அதற்கு எவ்வளவெல்லாம் சொன்னார்! அவர் பெரிய ஆபீசராம்; இவரை மதிக்க மாட்டாராம்! ஏதோ தயைக்கு வந்திருப்பதாக நினைத்துக்கொள்ளுவாராம்! "நமது சிநேகம் அவனுக்கு எதற்கு? சிநேகத்தை விரும்புகிறவனாயிருந்தால் இத்தனை நாளாக நம்மை வந்து பார்க் காமல் இருப்பானா?" என்கிறார். இருந்தாலும், நல்ல

சிநேகிதமே இவருக்கு ஒரு நாளும் பிடிப்பதில்லை. இவருக்குக் கீழ்ப்பட்டு இவரிடம் பல்லைக் காட்டித் தலையைத் தடவிக் காசு பறிக்கிறார்களே, அவர்களே இவருக்குச் சரி. இதைச் சொல்லிவிட்டேன். வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே! 'வீடு வீடாக எச்சில் இலை நாய்போல் நுழைந்து பார்க்க என்னால் முடியாது' என்று கர்ஜித்தார்.

'என்றுமே தாம் பிடித்த முயலுக்கு மூன்றே காலென்று சாதித்துப் பிடிவாதம் செய்யும் குணம் இவரிடம் அதிகம். இப்பொழுது வர வரக் கோபம் வேறு மூக்கிற்கு மேல் வருகிறது. இவரை அவசியமில்லாமல் தாழ்ந்து போகும்படி நான்தான் சொல்லுவேனா? இது ஏன் இவருக்குத் தோன்றவில்லை? ஆபீசர்களின் ராங்கியும் பெருமையும் நானும் கொஞ்சம் தெரிந்துகொண்டு தான் இருக்கிறேன். அவர்களாவது ஒரு மாதிரி இருக்க நியாயமுண்டு; பல பேருடன் பழக வேண்டியவர்கள் அல்லவா? ஆனால் அவர்கள் மனைவிகள் தாங்கள் பிறவியிலேயே கௌரவத்தோடு உதித்து வந்திருப்பதாகத்தான் நினைக்கிறார்கள். சரஸ்வதி மாத்திரம் அப்பேர்ப்பட்டவள் அல்ல. அவள் எனக்கு இன்று நேற்றுச் சிநேகமா? அவள் புருஷரும் நல்ல மனுஷரென்றே எல்லோரும் சொல்லுகிறார்கள். இல்லை; ஒரு தரம் இவர் அவரிடம் போய் வந்தால் என்ன, குடியா முழுகிப் போய்விடும்? நமக்கு மனசுக்குப் பிடித்தால்தானே சிநேகம் செய்து கொள்ளப் போகிறோம்?'

இந்த மாதிரி நடந்ததையும் நடக்காததையும் நினைத்து நினைத்து அவளுக்குச் சாப்பாடுகூடச் செல்லவில்லை. "இவர் குணம் தெரியாமல் சரஸ்வதியிடம், 'நாளை இவரை உங்காத்துக்காரரை வந்து பார்க்கச் சொல்லுகிறேன்' என்று தைரியமாகச் சொல்லிவிட்டேனே!" என்று தவித்தாள்.

சுந்தரேசன் குழந்தைபோல் ஒரு வார்த்தையையும் காதில் ஏற்காமல் பிடிவாதம் செய்வானென்று அவள் கண்டாளா? 'புருஷர்கள் பாடு; அவர்கள் எப்படியோ போகட்டும் என்று சொல்லாமற் போனேனே; இப்பொ

ழுது அவள் தன் கணவரிடம் இவர் வருவார் என்பதைச் சொல்லியிருக்க மாட்டாளா? இவர் வராததைக் கண்டு அவருக்கு என்ன தோன்றும்? தம்மை வந்து பார்க்க இவருக்கு மனமில்லை என்றுதானே கருதுவார்? இதிலிருந்து தம் மனைவி என்னிடம் வருவது போவதுகூட அவருக்குப் பிடிக்காமல் போய்விட்டால்? ஐயோ! அவர்கள் இவ்வளவு நாள் வெளியூர்களிலெல்லாம் இருந்தார்களே; இப்பொழுது இங்கே எதற்கு வந்தார்கள்? எல்லாம் என் துரதிருஷ்டந்தான்' என்று சுந்தரிக்குத் தோன்றிற்று. இப்படியா நேரவேண்டும் என்று அவள் தனக்குத் தானே அங்கலாய்த்தாள்.

இனிமேல் சரஸ்வதிக்கும் தனக்கும் இடையே உள்ள சிநேகம் வரவரக் குறைந்து வருவது போன்ற தோற்றம் அவளுக்கு உண்டாயிற்று. அடுத்த முறை கிளப்பில் இருவரும் சந்திக்கிறார்கள். சரஸ்வதி ஏதோ ஒரு விதமாகப் பார்க்கிறாள். சுந்தரி ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிறாள். பேச வாய் வரவில்லை. பெரிய குற்றத்தைச் செய்த குற்றவாளியைப் போல விழிக்கிறாள். அதற்கு அடுத்த தடவை சரஸ்வதி அவளைக் கடைக்கண்ணால் பார்த்தபடியே போய்விடுகிறாள். சுந்தரிக்கு மனத்தில் ஒரு நடுக்கம் ஏற்படுகிறது. நாளடைவில் அவ்விருவரும் ஒருவரை ஒருவர் பார்ப்பதே நின்று போய்விடுகிறது. இப்படியெல்லாம் நடப்பதாக அவள் கற்பனை செய்தாள்.

இந்தச் சிந்தனையில் அவளுக்கு வீட்டுக் காரியமே ஓடவில்லை. அவள் மகன் பாலசந்திரன் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்தான். அவன் வரும்போது அவனுக்கு டிபனும் காபியும் தினந்தோறும் தயாராக இருக்கும். இன்று ஓர் ஏற்பாட்டையும் காணவில்லை. "அம்மா, உடம்பு சரியில்லையா?" என்றான்.

"இல்லையே அப்பா; ஏன்?" என்றாள் சுந்தரி, தன் நினைவு வந்தவளாய்.

"பின்னே ஏன் எனக்கு ஒன்றும் இல்லை? எனக்குப் பசிக்கிறதே."

"இதோ செய்து கொடுக்கிறேன்" என்று சொல்லி அவனுக்குக் காபி பலகாரம் செய்யத் தொடங்கினாள்

சுந்தரி, இந்தச் சமயத்தில் சுந்தரேசன் என்றும் இல்லாத படி சீக்கிரம் ஆபீசிலிருந்து வருவதை அவள் பார்த்தாள். 'ஏன்?' ஒரு நிமிஷந்தான் இந்தச் சந்தேகம். உடனே அவள் மனம் தெளிந்துவிட்டது. 'ஓகோ, இவர் அவர்கள் வீட்டுக்குப் போய்வருகிருரோ என்று தப்பித் தவறிக்கூட நான் சந்தேகித்துவிடக் கூடாதென்று வழக்கத்தைவிட இவ்வளவு சடுதியில் வீடு திரும்பி இருக்கிருர்' என்று தீர்மானித்தாள். அவ்வளவுதான். ஏற்கனவே இருந்த கோபம் பன்மடங்காயிற்று. சுந்தரேசன் சட்டையைக் கழற்ற உள்ளே சென்றவன் திரும்பி வெளி வராததையும் அவள் கவனிக்கவில்லை.

"அம்மா, அப்பாவுக்குத் தலை வலிக்கிறதாம்" என்று சொல்லிக்கொண்டு வந்தான் பாலசந்திரன்.

"பின்னே என்ன போ" என்று சொல்லிப் பேசாமல் இருந்துவிட்டாள். சும்மாத் தன்னை மிரட்டும் வார்த்தை அது என்றே அவள் கருதினுள். அவனிடம் சென்று உடம்பு என்னவென்று பார்க்கவோ, காபியாவது சாப்பிடுகிருஞ என்று கேட்கவோ அவள் முயலவில்லை. அவன் இருமுவதும் தும்முவதும் காதில் விழுந்தபொழுது கூட, 'பச்சைத் தண்ணீரில் என்றுமில்லாமல் முழுகினதால், ஜலதோஷம் பிடித்திருக்கிறது. என்ன வேண்டாத கோபம்!' என்றுதான் எண்ணினுளே தவிரச் சிறிதுகூட 'என்னவோ?' என்று கவலை கொள்ளவில்லை.

இரவு சுந்தரேசன் சாப்பாடு வேண்டாமென்று சொல்லிவிட்டான். "கஞ்சியாவது வைத்துத் தரட்டுமா?" என்று பிள்ளையைக் கொண்டு கேட்கச் சொன்னுள். சுந்தரேசன் அதுவும் வேண்டாமென்று சொல்லிவிட்டான். 'உடம்பு பளுவாயிருக்கும் பொழுது பட்டினி நல்லதுதான்' என்று சுந்தரி நினைத்தாள்.

இரவு அவளுக்கு நல்ல தூக்கம் என்னவோ வரவில்லை. சுந்தரேசன் அடிக்கடி கட்டிலில் புரளுவதும் முனகுவதுமாக இருந்தான். அவளுக்குக் கவலையும் வேதனையும் உண்டாயின. 'ஒருவேளை காய்ச்சல் பலமாக வந்துவிட்டதா என்ன?' என்று நினைத்தாள். எழுந்து சென்று தொட்டுப் பார்க்க அவள் கோபம்

இடங் கொடுக்கவில்லை. பொழுது விடியட்டும் என்று இருந்தாள். இரவு முழுவதும் சரியான தூக்கம் இல்லாமையால் விடியற்காலை சிறிது கண்ணயர்ந்துவிட்டாள்.

அவள் எழுந்திருந்த பொழுது நன்ருக விடிந்துவிட்டது. ஆபீசுக்கும் பள்ளிக்கூடத்துக்கும் நேரமாகிவிடுமே என்கிற பரபரப்பில் எல்லாவற்றையும் மறந்துவிட்டுக் காரியத்தில் முனைந்தாள். மணி ஏழுக்கு மேலாகியும் சுந்தரேசன் எழுந்து வரவில்லை. பாலசந்திரனிடம், "அப்பா ஏன் இன்னும் எழுந்திருக்கவில்லை? பார்; காபி சாப்பிட வேண்டாமா? கேள்" என்ருள்.

பாலசந்திரன் திரும்பி வந்து, "அப்பாவுக்கு ஜுரம் அடிக்கிறது. கோடியாத்து டாக்டர் மாமாவைக் கூப்பிடச் சொல்லுகிருர். போய்க் கூப்பிட்டு வருகிறேன்" என்று சொல்லி வெளியில் ஓடினன்.

டாக்டர் வந்து பார்த்து, "நல்ல ஜுரம் அடிக்கிறது. ஜலதோஷம்; மார்பிலும் கொஞ்சம் கபம் இருக்கிறது. படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டாம். ஆகாரம் கஞ்சியே சாப்பிடட்டும்" என்று சொல்லி மருந்து கொடுத்துப் போனர்.

சுந்தரிக்கு இப்போது கோபமெல்லாம் இருந்த இடந் தெரியாமல் போய்விட்டது. கவலை அவள் உள்ளத்திற் குடிகொண்டது. சரஸ்வதி, அவள் புருஷர், அவர்கள் சிநேகம் ஒன்றும் இப்பொழுது அவளுக்குப் பெரிதன்று. கணவனுக்கு மருந்து கொடுப்பது, சரியான வேளைக்கு ஆகாரங்கள் கொடுப்பது முதலியவற்றை அவளல்லாமல் வேறு யார் செய்வார்கள்?

ஒரு வாரம் சுந்தரேசனுக்குப் பலத்த காய்ச்சல் அடித்தது. செயலற்றுக் கிடந்தான். டாக்டர் வந்து பார்ப்பதும் மருந்து கொடுப்பதுமாக இருந்தார். சுந்தரி வீட்டுக் காரியத்திலும் கணவன் சுச்ரூஷையிலும் தன்னையே மறந்தாள். நடு நடுவில், "ஐயோ! என்ன அசட்டுக் கோபம்! இப்பொழுது குடி முழுகி விடும்போல் இருக்கிறதே, ஈச்வரா! என்னை மன்னித்துவிடு. என்

ளையே நான் வெறுக்கும்படி செய்துவிடாதே" என்று சுவாமியைத் தியானிப்பாள்.

என்றும் இல்லாமல் பச்சைத் தண்ணீரில் ஸ்நானம் செய்தது, புகையில் அவிந்தது எல்லாமாகச் சேர்ந்து இப்பொழுது நிமோனியா ஜுரத்தைக் கொண்டு வந்து விட்டன. அவளுக்கு அந்த ஜுரத்தைப் பற்றி எண்ணும் போதே அச்சம் உண்டாயிற்று.

'பாவி! என்ன புத்திக் கோளாறு! அற்பக் காரியத்துக்கு இவ்வளவா? அவர் என்னதான் பிசகு பண்ணிவிட்டார்? உத்தியோகஸ்தர்கள் எல்லாரிடமும் சகஜமாகப் பழகிக்கொள்ளுகிறவர்களா? எனக்குத்தான் இது ஒரு பிரமாதமாகத் தோன்றுவானேன்! சரஸ்வதியினுடைய சிநேகம் வாழ்விற்கே இன்றியமையாததா? பகவானே! சிறு பிழைக்குக் கடுமையாகத் தண்டித்து விடாதே" என்று வேண்டிக்கொண்டாள். அவள் வயிறு பகீரென்றது. "டாக்டர் என்ன சொல்லுவாரோ!" என்று ஒவ்வொரு நாளும் ஆவலாக எதிர்பார்ப்பாள்.

ஒரு வாரம் கழிந்தது. சுந்தரேசனுக்குப் படிப்படியாகக் குணம் கண்டது. முதல் நாலு நாளைக்கு டாக்டர் அவனை யாரும் பார்க்கக் கூடாது என்று சொல்லியிருந்தார். பிறகு இப்பொழுது விசாரிக்க வருகிறவர்களிடம் அதிகச் சிரமப்படுத்திக் கொள்ளாமல் அவன் ஒன்றிரண்டு வார்த்தைகள் பதில் சொல்லி அனுப்பி வந்தான்.

சரஸ்வதி விசாரிக்க வந்தாள். முதலில் அவள் வந்த சில தினங்களில் சுந்தரிக்கு நின்று பதில் சொல்லக்கூட நேரமில்லை. சுந்தரிதான் தன்னையே மறந்திருந்தாளே! இதைக் கண்டுகொண்ட சரஸ்வதியும் அவளுக்கு வீண் தொந்தரவு கொடுக்காமல் இருக்க வேண்டித் தன் கணவரையே விசாரித்து வரும்படி சொல்லி யிருந்தாள். அவரும் ஆபீசுக்குப் போகும் பொழுதோ திரும்பி வரும் பொழுதோ தினந்தவறுமல் வீட்டு வாசலில் விளையாடும் பாலசந்திரனையோ வேறு யாராவது இருந்தால் அவர்களையோ சமாசாரம் விசாரித்துப் போவார். இது சுந்தரிக்குத் தெரியாது. அவள் இப்பொழுது யார் வந்தாலென்ன போனுலென்ன என்று இருந்தாள்.

இன்றும் வழக்கம் போல் ராமநாதையர் ஆபீசிலிருந்து திரும்பி வரும்பொழுது விசாரித்துப் போக வந்தார். "இப்பொழுதுதான் அப்பாவிடம் எல்லோரும் பேசிப் போகிருர்களே" என்று சொன்ன பாலசந்திரன், "மாமா, வாருங்கள். உள்ளே வந்து அப்பாவைப் பார்க்கலாமே" என்று வற்புறுத்திக் காரை விட்டு அவர் இறங்கும்படி செய்தான். அவரை அழைத்துக்கொண்டு சுந்தரேசன் இருந்த அறையில் நுழையும்பொழுது அங்கு வாயிற்படியில் சுந்தரியைக் காணவும் பாலசந்திரன், "அம்மா, மாமா தினம் வாசலில் இருந்தபடியே விசாரித்துப் போகிருர். அப்பாதான் இப்பொழுது எல்லோரையும் பார்க்கிருரே; அதற்காக நான் இவரை உள்ளே அழைத்து வந்தேன்!" என்று கூறிக்கொண்டே, சுந்தரி திகைப்பு நீங்கிப் பதில் சொல்லுமுன் சுந்தரேசன் அறைக்குள் அவருடன் நுழைந்தான்.

சுந்தரேசனுக்கு அவரைப் பார்த்தவுடனே இன்னுரென்று தெரிந்துவிட்டது. "மிஸ்டர் ராமநாதன், வாருங்கள், உட்காருங்கள்" என்ருன் சிறிது பரபரப்புடன். அவர் அங்கே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார். தேக ஸ்திதியைப் பற்றி அவனைச் சிறிது விசாரித்துவிட்டு, "நான் போய் வருகிறேன். உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்; அலட்டிக் கொள்ளாதீர்கள்" என்ருர். பிறகு தங்கள் பின்னேடு உள்ளே நுழைந்த சுந்தரியிடம், "இன்று நான் இவரை நேரில் பார்த்தேனென்று சொன்ன பிறகுதான் சரஸ்வதி கவலை நீங்கிச் சந்தோஷம் கொள்வாள். இந்தப் பத்து நாளாக அவளுக்கு ஒரே கவலை" என்ருர்.

"சரஸ்வதியைப் பார்க்க வேண்டும். கட்டாயம் வரச் சொல்லுங்கள்" என்று முணுமுணுத்தாள் சுந்தரி.

அவர் விடை பெற்றுக்கொண்டு சென்ருர். சுந்தரேசனுக்கு உள்ளுக்குள்ளே என்னவோ செய்தது. அவன் இந்த நிகழ்ச்சியை எள்ளளவும் எதிர்பார்க்கவில்லை. அவனுடைய சிந்தனை பின்னுலே சென்று தனக்கும் சுந்தரிக்கும் நடந்த வாக்குவாதங்களையும் பேசாமல் இருந்த காலத்தையும் வெந்நீர் அண்டாவின் முன் முணுமுணுத்த

படியே நின்று பச்சை ஜலத்தை விட்டுக்கொண்டதை யும், ஜுரம் வந்ததையும் இதுவரையில் வரிசையாக நடந்தவற்றையும் எண்ணிப் பார்த்தது.

சுந்தரேசன் மனைவியைப் பக்கத்தில் அழைத்தான். அவன் கோபமெல்லாம் தலைவலியும் ஜுரமும் வந்த அன்றே போய்விட்டது. கோபத்தின் விளைவாக இவ் வளவு சிரமத்துக்கும் கவலைக்கும் அவளை ஆளாக்கியதற் காக அவன் தன்னைத்தானே நொந்துகொண்டான். அடிக்கடி, "கவலைப்படாதே, வருந்தாதே" என்றெல் லாம் இந்தப் பத்து நாளாக அவளுக்கு ஆறுதல் சொல்லு வான். அவள் ஒவ்வொன்று செய்யும் பொழுதும் அன் பும் வருத்தமும் ததும்பப் பேசுவான்.

இப்பொழுது அவளைத் தன்னிடம் அழைத்தது அத் தகைய ஒன்றுக்கும் அல்ல; அது வேறு விஷயம். ஆபீசர் களைப்பற்றித் தான்கொண்ட எண்ணம் முழுவதும் பிசகு என்பதை ஒப்புக்கொள்ளவே, ராமநாதையர் வந்து போனதிலிருந்து அவரைப் பற்றி இவன் மனம் முற்றும் மாறிவிட்டது. 'என்ன தங்கமான மனுஷர்? இவரைப் பார்த்து வரவா நாம் இவ்வளவு சண்டை சச்சரவு செய் தோம்? இவருடைய சிநேகம் பெருமையல்லவா அளிக் கும்?' என்று எண்ணினான்.

"சுந்தரி, என்னைப்போல் முட்டாள் எங்கே உண்டு? இவரைப் போன்றவரைப் பார்க்க உன்னோடு சண்டை யிட்டேனே!" என்றான்.

"இதற்காகவா கூப்பிட்டீர்கள்? என்னவோ என்று பார்த்தேன். நீங்கள் சொன்னதிலும் ஒன்றும் தப்பித மில்லை. என்னவோ இவரை விதிக்கு விரோதம் என்று தான் சொல்ல வேண்டும்" என்றாள்.

"என்ன இருப்பினும் பார்க்காமலே அபிப்பிராயம் கொள்வது பிசகல்லவா? நீ சொன்னதும் அதுதானே? அது தெரியாமல் நான் நடந்தது சுத்தப் பைத்தியக்காரத் தனம்! அதற்காகத்தான் இவ்வளவும் அநுபவித்தேன் போல் இருக்கிறது. வேண்டும் எனக்கு. ஆனால் நீ எனக் காகக் கஷ்டப்பட்டதை நினைத்தால்தான் வருத்தம்

தாங்க முடியவில்லை. நான் கஷ்டப்பட்டது நியாயம்; உனக்கு எதற்கு இந்தச் சிரமம்?''

"எல்லாம் வேளை. வீணாய் அலட்டிக் கொள்ளாதீர்கள்'' என்றாள் சுந்தரி. அவள் மனம் அப்போது அடைந்த நிம்மதியும் சந்தோஷமும் தான் பட்ட சிரமத்திற்கு மேற்பட்ட கூலியாகவே அவளுக்குத் தோன்றின. அவள் கணவன் தான் செய்த பிழையை ஒப்புக்கொள்வதென்றால் அது சாமானியமா?

மனக்குரங்கு

ராமசந்திரன் கையில் கடிதம் இருந்தது. அதைப் படித்து வரும்போது அவனுடைய முகத்தில் கொஞ்சங் கொஞ்சமாகப் பயத்தின் அறிகுறியும் கவலையின் நிழலும் படர்ந்தன. படர்ந்த பின் அவை மீண்டும் கலையத் தொடங்கின. கடிதத்தை முடித்து, அவன் ஒரு பெருமூச்சு விட்டபொழுது, பெரும் புயல் அடித்து ஓய்ந்தது போல் ஆயிற்று அவன் மனம்.

அவன் தாய் எழுதியிருந்த கடிதம் அது. அதில் அவன் தமக்கை சாவித்திரி தவறிக் கிணற்றில் விழுந்துவிட்டாள் என்றும், அகஸ்மாத்தாக அவர்கள் வீட்டிற்கு வந்திருந்த அவன் மாமா கிணற்றில் குதித்து அவளைக் காப்பாற்றினார் என்றும் கடிதம் சொல்லியது. விஷயம் சுருக்கமாக இருந்தாலும், ஒரு பெரும் புயலைக் கிளப்புவதற்கு அது போதுமானதாக இருந்தது.

ராமசந்திரன் பெருமூச்சு விட்டபோது அவனுக்கு இருந்ததெல்லாம் ஓரே ஓர் உணர்ச்சிதான். "இந்த மட்டும் சாவித்திரி பிழைத்தாளே, பிழைக்கும்படி பகவான் அருள் செய்தாரே!" என்று கடவுளிடத்தில் நன்றியறிவு ஏற்பட்டது.

தன் மனத்துக்குள் அந்த விபத்தை அவன் கற்பனை செய்துகொண்டிருந்தான். மனம் ஒருவாறு சமாதானம் அடைந்திருந்தாலும் கடிதம் முதலில் ஒரு கலக்குக் கலக்கி விட்டதல்லவா? அதன் விளைவு இன்னும் முற்றும் நீங்கின பாடில்லை. அப்போது சிவராமன் வந்து அவன் மன எழுச்சிகளை முற்றும் வேறு வழியில் திருப்பிவிட்டான். சிவராமன் ராமசந்திரனோடு பி. ஏ. வகுப்பில் படிப்பவன். ஹாஸ்டலில் இருவரும் ஒரே அறையில் இருப்பவர்கள். மனஸ்தத்துவ சாஸ்திரத்தில் நிபுணனென்று சிவராமன் சொல்லிக்கொள்வான்; ராமசந்திரன் போன்ற நண்பர்களும் அதை ஆமோதிப்பார்கள்.

அவனோடு சேர்ந்து இவ்விஷயங்களை விவாதிக்க ராம சந்திரனுக்கு ஆசை அதிகம். அவனுக்கும் சொந்தத்தில் கொஞ்சம் கற்பனைசக்தி உண்டு. இப்போது கடித சமாசாரம் தெரியவுமே சிவராமன், "சாவித்திரி தவறி விழுந்தாளென்று நிச்சயமாகத் தெரியுமா?" என்று ஒரு கேள்வியைக் கேட்டான். பலத்த சந்தேகம் ராமசந்திரன் மனத்தில் கிளம்பிவிட்டது. "பின் எதுவாயிருக்கும்?" என்கிற சர்ச்சையில் அவன் மனம் அலைபாயத் தொடங்கிவிட்டது. "தவறி விழுவதானால், கிணற்றின் கைபிடிச்சுவர் மிகவும் தாழ்வாக இருக்கவேண்டுமே?" என்றான் சிவராமன்.

"அதுதான் இல்லை, சுவர் உயரம் மார்புமட்டுமாவது இருக்கும்; அதற்குக் குறையாது."

"அப்படியானால் தவறி எப்படி விழுகிறது!"

"தண்ணீர் எடுக்கக் கிணற்றண்டை போனவள் மயக்கம் போட்டு விழுந்துவிட்டாளாம். 'ஹிஸ்டீரியா' என்று டாக்டர் சொல்லுவதாக அம்மா எழுதியிருக்கிறாள்."

'ஹிஸ்டீரியா' வியாதி உள்ளவர்கள் உயிருக்கு ஆபத்து வரக்கூடியது எதையும் செய்யமாட்டார்களென்று சிவராமன் என்ன சொல்லுகிறது? ராமசந்திரன் முதல் உதவிக்காக வைத்திருக்கிற சிறு வைத்தியப் புத்தகத்தில்கூடப் படித்திருக்கிறான். பலவீனத்தினால் மயக்கம் போட்டு விழுந்தால் கிணற்றுக்கு வெளியேதான் விழ நியாயம் உண்டு. இடுப்பளவு கைபிடிச்சுவருள்ள கிணற்றுக்குள் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாலொழிய அதற்குள்ளே விழ இடமில்லையே! - இப்படி ஒவ்வொன்றாகக் காரணங்களையும், சந்தர்ப்பங்களையும், எடுத்துச் சொல்லி அவர்கள் விவாதித்து, ஒவ்வொன்றாக விலக்கினார்கள்,

"சாவித்திரி சந்தோஷமாகத்தானே இருந்தாள்?" என்று நடுவில் சிவராமன் ஒரு கேள்வியைப் போட்டான். அந்தக் கேள்வி எதற்காக? அவன் என்ன நினைக்கிறான்? ஒருவேளை சாவித்திரி தற்கொலை செய்துகொள்ள நினைத்தாளென்று அவனுடைய ஊகம் சொல்லுகிறதோ? ராம

சந்திரன் இருதயம் ஒரு நிமிஷம் அடித்துக்கொள்வதே நின்றது. மறுநிமிஷம் அவ்வளவுக்கு அவ்வளவு வேகமாய் அடித்துக்கொண்டு உடம்பு முழுவதும் குபீரென்று வேர்வை ஆறுகக் கொட்டிவிட்டது.

"ஔசீ, அதற்குக் காரணம் வேண்டாமா? என்ன, கண்டபடி பிதற்றுகிருயே!" என்று தன்னையும் சேர்த்துச் சொல்லிக்கொள்வதுபோலச் சிவராமனைக் கடிந்து கொண்டான்.

சிவராமனும், இம்மாதிரியான சந்தேகங்களைக் கிளப்பும்படியாகத் தான் பேசியது பிசகென்று உணர்ந்து பேச்சை மாற்றிக்கொண்டான். ஆனால் மனிதனுடைய மனம் அப்படி லேசில் அடங்கிவிடக் கூடியதா? ஒரு சிறு துரும்பை ஆதாரமாகக் கொண்டு அது செய்கிற வேலைதான் எவ்வளவு? பிறகு தனிமையில் இருந்த நேரமெல்லாம் ராமசந்திரன் அதைப்பற்றியே எண்ணித் தவிக்கலானான்.

சாவித்திரியும் அவள் கணவனும் ஒற்றுமையாகவும் இன்பமாகவும் வாழ்ந்தார்களா? இந்தக் கேள்வி இது வரையிலும் அவன் மனத்திலே எழுவதற்குக்கடுகளவுகூட இடமில்லை. வீட்டில் அவள் அம்மாவோ அண்ணுவோ அப்படிச் சந்தேகங்கொள்ள இடமே ஏற்படவில்லை என்பது நிச்சயம். இதை ராமசந்திரன் நன்கு அறிவான்.

கணவன் நல்ல இளமையில், எடுத்ததும் முந்நூறு ரூபாய் சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகத்தில் சிம்லாவில் இருக்கிருனென்ருல், அங்கே சந்தோஷக் குறைவை யார்தாம் எதிர்பார்ப்பார்கள்? அதுவும், சாவித்திரியின் முழுச் சம்மதத்தின் பேரிலேயே அவனுக்கு விவாகம் நடந்தது. அப்போது அவள் அறியாச் சிறு பெண் அல்ல. அவளுக்குப் பதினெட்டு வயசு நடந்துகொண்டிருந்தது.

தந்தை உயிரோடு இருந்தவரையிலும் அவர் தம் பெண் கல்யாணத்தைப்பற்றிச் சிந்திக்கவே இல்லை. சென்னைப் பெண்கள் கலாசாலையில் அவளைச் சேர்த்துப் படிக்க விடவேண்டும் என்பதுதான் அவர் விருப்பம். இது விஷ

யத்தில் அவருக்கும் அவர் மனைவிக்கும் பலத்த அபிப் பிராய பேதம் ஏற்பட்டதால் அது நிறைவேருமலே இருந்தது. தனியாக வெளியூரில் வயசு வந்த பெண்ணை விடுவதற்கு அவள் சம்மதிக்கவில்லை. 'ஸ்கூல் பைனல்' பரீக்ஷை கொடுத்துவிட்டுச் சாவித்திரி வீட்டிலேயே இருந் தாள். திடீரென்று தந்தை இறந்துபோகவே, பிறகு ஒரு நிமிஷமும் பெண்ணைக் கல்யாணமில்லாமல் வைத்துக் கொள்ளத் தாய் சம்மதிக்கவில்லை.

சாவித்திரியின் அதிருஷ்டம் நல்ல வரனுய்க் கிடைத் தான். அதில் அவளுக்கு இருந்த சந்தோஷம் ராமசந்திர னுக்கு நன்ருகத் தெரியும். அவளுக்கும் ராமசந்திர னுக்கும் ஒன்றரை வயசுதான் வித்தியாசம். இந்தச் சொற்ப வயசு வித்தியாசத்தினுலோ என்னவோ, அவர் கள் இருவருக்குள்ளும் அன்பு அதிகமாக இருந்தது. ஐந்தாறு வயசு மூத்தவனுன அவர்கள் தமையனைத் தனி என்றுதான் சொல்லவேண்டும்.

ராமசந்திரன் மனத்தில் இவ்விஷயங்களெல்லாம் ஓடின. அவனுக்குத் தெரிந்தவரையில் சாவித்திரிக்கு மன வருத்தம் ஒன்றும் ஏற்படவில்லை; ஏற்பட்டால் அவனை அறியாமல் இருக்க முடியாது. சாவித்திரிக்கு ஏதாவது மன வருத்தம் இருந்தால் அவனிடம் சொல்லாமல் இருப் பாளா? ஒருபோதும் மாட்டாள். பேருக்குச் சாவித்திரி மூத்தவள். ஆனுலும், ராமசந்திரன்தான் அவளைவிடப் பெரியவன் போல நடந்துகொள்வான். சிறு வயசிலிருந்து விளையாட்டுக்களில்கூட அவன் சொற்படிதான் நடப் பாள். அப்படி இருக்கிறவள் உயிரை வெறுக்கக் கூடிய மனவருத்தம் இருந்தால், அவனிடம் தெரிவிக் காமல் இருக்கமாட்டாள் என்பது நிச்சயம்.

ஆனுல் அவள் கல்யாணமான பிறகு, இந்த இரண் டரை வருஷ காலமாக அவர்கள் இருவரும் அதிகமாகச் சேர்ந்தே இருக்கவில்லை. அவன் காலேஜ் படிப்புக்காகச் சென்னை வந்துவிட்டான். அவள், கணவன் வீடு போய்விட்டாள். கல்யாணத்தின்போது ஆறு மாதம் கழித்து அழைத்துப் போவதாக அவள் கணவன் சொல்லி யிருந்தான். ஒரு மாதமானவுடனே அவளைக் கொண்டு

வந்து விடும்படி கடிதத்தின்மேல் கடிதம் போட்டு வரு வித்துக்கொண்டான். இப்போது அந்த நிகழ்ச்சி வேறு விதமான ரூபத்தில் வந்து புகுந்தது. அதோடு அந்தச் சமயத்தில், "சொன்ன சொற்படி நடக்கமாட்டான் போலி ருக்கிறதே. இதுதான் முன்பின் தெரியாத இடத்துச் சம்பந்தத்தின் பலன். நல்லவர்கள், கெட்டவர்கள் என்பது கூடத் தெரிகிறதில்லை" என்று அம்மா வருந்தினதும் நினைவுக்கு வந்தது. அது மட்டுமா? சாவித்திரிக்கு முதல் பிரசவமாகி மூன்றும் மாதத்தில் அவளையும் குழந்தை யையும் பார்க்கவந்த அவள் கணவன் அவளை உடன் அழைத்துப் போவேனென்று பிடிவாதம் பிடித்து அழைத் துச் சென்றானே!

சாவித்திரி குழந்தையுடன் ஊருக்குப் போன அன்று அவர்கள் வீடு இருந்த காட்சி அவன் மனக்கண்முன் அப்படியே வந்தது. "இப்படித்தான் நீக்குப்போக்குத் தெரியாமல் ஒருவன் நடப்பானோ! உத்தியோகம் செய்து விட்டால் போதுமா?" என்று அவன் மாமாவும் அம் மாமியும் பேசி அம்மாவின் வருத்தத்தை அதிகப்படுத்தி னார்கள். "ஒரு மாதம் கழித்து நான் படிக்கப் போகுமுன் கொண்டுவந்து விடுகிறேன்" என்று ராமசந்திரன் சொன்னதற்கு அத்திம்பேர் ஒப்புக்கொள்ளவில்லை. "சிறு குழந்தையையும் அவளையும் அழைத்துக்கொண்டு அவ்வளவு தொலைவு தனியே பிரயாணம் செய்ய உன்னால் முடியாது; அதுவும் இந்த யுத்த காலத்தில்" என்று சொல்லிவிட்டார். சாவித்திரிகூட, "எப்படிடா சின்னக் குழந்தையை அம்மா இல்லாமல் என்னால் தனியாக அந்தத் தூரதேசத்தில் வைத்துக்கொண் டிருக்க முடியும்?" என்று ராமசந்திரனிடம் சொல்லிக் கவலைப் பட்டாள். இவ்வளவுக்கும் அண்ணா பேசாமல்தான் இருந்தான்.

இன்று இந்த நிகழ்ச்சிகளை நினைத்தபோது ராம சந்திரனுக்குக் கோபம் பொங்கி வந்தது. "பெரியவனா யிருந்தும் ஒரு வார்த்தை சொல்லாமல் இருக்கிறானே, 'நான் எப்படியாவது ஆபீசில் லீவு கேட்டு அழைத்து வருகிறேன். பிரசவித்த உடம்பு கொஞ்சம் தேறட்டும்' என்று சொல்லக் கூடாதா?" என்று அவர்கள் தாய்

அவனிடம் சொல்லிச் சொல்லி வருந்தினாள். அண்ணாவின் வேலை பாங்கி வேலைதான். லீவு கிடைக்காமல் போய் விடாது. ஆனால் அவன் எப்போதுமே ஒரு மாதிரிதான். ஒன்றிலும் அதிகமாகப் பட்டுக்கொள்ள மாட்டான். அதுவும் அவனை எதிர்பார்க்கும் சமயத்தில் மூக்கை உடைப்பதுபோலச் செய்வது அவன் வழக்கம். அண்ணா இருக்கும்பொழுது சிறுவனான ராமசந்திரன் சொல்லுக்கு மதிப்பு ஏது?

சாவித்திரியை அவள் கணவன் அழைத்துப் போனான். ஆறு மாதத்திற்கெல்லாம் அவள் மறுபடியும் கர்ப்பம் தரித்தாள். உடம்பு பலஹீனம் ஏற்படுவதற்கு நியாயம் இருக்கிறது. ஆனால், உயிரை எதற்காக மாய்த்துக் கொள்ளவேண்டும்? அந்த மாதிரி அவளுக்குச் சங்கடம் இருப்பதற்குச் சிறிதும் இடமில்லையே.

இந்தச் சமயத்தில் அவன் சமீபத்தில் படித்த புத்தகமொன்று நினைவிற்கு வந்து மனத்தைச் சிறிது கலக்கியது. அது ஸ்திரீ புருஷர்களின் சரீர சம்பந்தமான இச்சைகளைப் பற்றின புத்தகம். ஆண் பெண் இருவரில் ஒருவருடைய அசாதாரண வேட்கையினால் மற்றொருவருக்கு ஏற்பட்ட பொறுக்க முடியாத கஷ்டத்தைப்பற்றி அதில் விரிவாக வர்ணித்திருந்தது. ஏதோ ஜோடனைக் கதை; உண்மை வாழ்க்கையில் நடக்கக்கூடியதல்ல என்றுதான் ராமசந்திரன் அதைப் படித்துக்கொண்டிருந்தபொழுது நினைத்தான். இப்பொழுது சாவித்திரியைப்பற்றிய நினைவோடு அந்தப் புத்தகத்தில் இருந்த செய்திகளும் பக்கத்தில் நின்றன. அதில் கூறியவை ஏன் உண்மையாக இருக்கக் கூடாது? சாவித்திரியின் செய்கை அதற்கு உதாரணமாக இருப்பதில் என்ன தவறு? - இந்தச் சந்தேகம் எங்கிருந்தோ அவனையும் அறியாமல் உதித்தது. மிகுந்த சந்தோஷத்தில் தொடங்கிய வாழ்க்கைகூட ஒன்றிரண்டு பிரசவத்திற்குப் பிறகு துன்பத்தில் முடிந்ததாக அதில் சொல்லப்பட்டிருந்தது. அப்படி ஏதாவது இருந்தால் சாவித்திரி அதை எப்படி யாரிடம் சொல்லுவாள்? பிரசவித்த பலஹீனமான உடம்புடன் சாவித்திரி அவன் அகக் கண்முன்னே நின்றாள். அவளுக்கருகில் ஆரோக்கியமான திடகாத்திரத்தோடு அவள் கணவன் நின்றான். மாறி

மாறிக் காட்சியளித்த இருவரிடையே ஏன் அந்த மாதிரி ஒரு சிக்கல் இருக்கக்கூடாது? இந்தக் கேள்வி அவனைப் பொறுக்க முடியாத வேதனைக்கு உள்ளாக்கியது. 'வெளியிலே நாம் கண்ணாரப் பார்ப்பதை நம்பக்கூடாது. உள்ளே, மனத்துக்குள்ளே மனிதர்கள் நேர் விரோதமாக இருக்கிறார்கள்' என்ற தத்துவம் அவன் சந்தேகத்துக்குத் துணை செய்தது.

அத்திம்பேர் கிறிஸ்துமஸ் லீவுக்கு வரப்போவதாக அம்மா எழுதியிருந்தாள். முதலில், சாவித்திரி பிரசவித்து நான்கு மாதங்கள் ஆகிறபடியால் அழைத்துப்போவதாக இருந்தாராம். இப்பொழுது இந்தச் சமாசாரத்தை அண்ணா அவருக்கு எழுதியிருக்கிறானாம். முக்கியமாக ஓய்வு வேண்டுமென்று டாக்டர் சொல்லுகிறாராம். அதனால் அவர் அழைத்துப் போகமாட்டாரென்று நினைப்பதாக அம்மா கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள். அவர் வரப்போவதற்கும் சாவித்திரி கிணற்றில் விழுந்ததற்கும் சம்பந்தம் ஏதாவது இருக்குமோ? இவ்விதம் நினைக்கவுமே, ஏதோ ஆபத்தான விஷயத்தில் நுழைவதாக அவனுக்குத் தோன்றிற்று. கண்டபடி மனத்தை அலையவிடக் கூடாது என்று தீர்மானித்தான். இன்னும் ஒரு வாரத்தில் அவனே கிறிஸ்துமஸ் விடுமுறைக்கு ஊர் போகப் போகிறான். சாவித்திரியோடு மனம்விட்டுப் பேசவேண்டும். ஏதாவது சிறிது சந்தேகம் தான் நினைத்தபடியே தோன்றினாலும், தக்க பரிகாரம் செய்யவேண்டும். சாவித்திரியைத் தங்கள் வீட்டிலேயே என்றும் வைத்துக்கொள்ளும்படி நேர்ந்தால், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை, அண்ணா செய்யாவிட்டால்கூடத் தான் செய்யவேண்டும். இன்னுமா சிறு பிள்ளை? பட்டணத்தில் தனியே ஹாஸ்டலில் வசித்ததில் அவனுக்கு நல்ல தைரியம் ஏற்பட்டிருக்கிறது.

இப்படி ஒரு வகையான முடிவுக்கு வந்த பிறகுதான் அவனுக்குத் தன் நினைவு வந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை; காலேஜ் இல்லை; பாதிப் பகலைப் படிக்காமல் கண்டபடி யோசனையில் அலையவிட்டது அசட்டுத்தனம் என்று எண்ணினான்.

சிவராமன் வேண்டுமென்றே நம்மைத் தனியே விட்

டுப் போயிருக்கிறன். இருக்கட்டுமே, நாமும் எங்காவது வெளியில் போய் வந்தால் போகிறது. உடனே தன் மாமாவின் பெண்ணும் அவள் அகமுடையானும் மயிலாப்பூரில் வசிப்பது அவன் நினைவிற்கு வந்தது. அவன் மாமா மாப்பிள்ளை ஒரு டாக்டர். டாக்டர் போர்டு தொங்கவிட்டுச் சில வருஷங்கள் ஆனாலும், வரும்படி அதிகம் இல்லாதவன். ராமசந்திரனோடு அவனுக்குப்பேச அவகாசம் நிறைய இருக்கும். 'நாம் படித்த அந்தப் புத்தகத்தைப்பற்றி டாக்டரான அவன் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டால் என்ன?' இந்த எண்ணம் தோன்றினதுதான் தாமதம்; அவன் உடனே மயிலாப்பூரை நோக்கிச் சென்றான்.

சாவித்திரி கிணற்றில் விழுந்தது, காப்பாற்றப்பட்டது எல்லாம் அவர்களுக்கும் முன்பே தெரிந்திருந்தன. அவனுடைய மாமா தம் பெண்ணுக்கு எல்லாவற்றையும் எழுதியிருந்தார். ராமசந்திரனைக் காணவுமே அவன் மாமா பெண், "சாவித்திரி பிழைத்தது புனர்ஜன்மமாமே! நல்ல வேளை! அப்பா அங்கிருந்தது நல்லதாய்ப் போச்சு" என்றாள்.

"ஆமாம்" என்றான் ராமசந்திரன். அந்தப் பேச்சைத் தொடர்ந்து பேச அவன் விரும்பவில்லை. சாவித்திரிக்கு நல்ல வரன் கிடைத்ததில் அவன் அம்மாமிக்கு, ஏன் அவன் அம்மங்காளுக்குக்கூடப் பொறுமை இருந்ததென்பது அவனுக்குத் தெரியும். 'ஏதோ ரொம்ப இரங்குவது போலத்தான் நடிக்கிறாள்!' என்று நினைத்துக் கொண்டான்.

"இந்தப் பக்கமே வருகிறதில்லையே! உட்காரு; புதுப் பால் வந்திருக்கு; நல்லதாய்க் காபி கொண்டுவருகிறேன். சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்று எழுந்து உள்ளே சென்றாள். அதுதான் சமயமென்று தான் நினைத்து வந்த பேச்சை மாமா மாப்பிள்ளையுடன் தொடங்கினான் ராமசந்திரன். பிறகு பேச்சு ஸ்வாரஸ்யத்தில் மாமா பெண் காபி கொண்டு வைத்ததையும், தானே அதை எடுத்து அருந்தினதையுங்கூட அவன் தெரிந்து கொள்ளவில்லை. மணி ஏழு அடித்த பிறகுதான் ஹாஸ்ட

லுக்கு நாழிகையானது தெரிந்து விடைபெற்றுச் சென்றான்.

ஒரு மணி நேரம் டாக்டரோடு செய்த சம்பாஷணையில் அவன் தெரிந்துகொண்டது அதிகம் இல்லை. "வைத்தியப் புத்தகத்தை எல்லாம் கதைப் புத்தகமாக அடித்துச் சமூகத் தொண்டிற்குப் பதில் சமூகக் கெடுதல்களைச் செய்கிறார்கள். ஜனங்களுக்கு அரைகுறை அறிவினால் கெடுதியும், வைத்தியத் தொழிலுக்குப் பெருத்த அபகாரமுமே ஏற்படுகின்றன" என்று அவன் வெகு ஆத்திரத்தோடு பேசினான். தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணிய விஷயத்தில் அவன் சந்தேகம் தீரவே இல்லை.

ஹாஸ்டலுக்கு வந்தபின், இந்த விஷயத்தைப்பற்றிச் சிந்தனை செய்யவே கூடாது என்று சங்கற்பம் செய்துகொண்டான். ஆகவே, ஊருக்குப் போகும் வரையில் சிவராமனோடு இது விஷயமாகப் பேசவே இல்லை. அடியோடு மறந்துவிட வேண்டுமென்றே ராமசந்திரன் பேசாதிருந்தான்.

டாக்டரோடு விவாதித்ததில் தனக்கு உண்டான சந்தேகத்தை வேறிடத்திலும் பரவ இடம் கொடுத்திருப்போமோ என்று அவன் சிறிதும் சிந்திக்கவில்லை. ஆனால் அவன் மாமா பெண், "என்ன, ராமுவோடு பேச்சுப் பலமாயிருந்ததே? என்னை நீங்கள் இருவரும் கவனிக்கவே இல்லையே?" என்று கணவனைக் கேட்ட பொழுது, "சிறு பிள்ளைகள் படிக்கக்கூடாத புத்தகத்தைப் படித்துவிட்டு ஏதேதோ நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த மூளைக் குழப்பத்தில், சாவித்திரிகூடத் தவறித்தான் விழுந்தாளோ, வேறு ஏதாவது காரணம் இருக்குமோ என்று இவனுக்குச் சந்தேகம் போலிருக்கிறது" என்று அவன் சொன்னதிலிருந்து அவள் ஒருவாறு இவன் சந்தேகத்தை ஊகித்திருந்தாளென்று தெரிந்தது. அவள் சும்மா இருப்பாளா? மறுநாளே ஊரிலிருந்த தன் தாய்க்கு எழுதின கடிதத்தில் அது மாதிரி நினைக்க இடமுண்டா என்று கேட்டதோடு நில்லாமல், ராமு சந்தேகிக்கிறானென்றும் எழுதிவைத்தாள். அவள் அம்மாவுக்கு நாத்தனாரிடத்தில் என்றுமே பொறாமை உள்ளூறப் புகைந்து

கொண்டிருந்தது. நம் மாப்பிள்ளை அவ்வளவு பரீக்ஷைகளையும் கொடுத்துவிட்டு, வரும்படி இல்லாமல் திண்டாடும்பொழுது, நாத்தனாருக்கு மட்டும் சர்க்கார் உத்தியோகத்தில் நல்ல மாப்பிள்ளை கிடைத்துவிட்டானே என்கிற பொருமை. 'மீனாவைவிடச் சாவித்திரி என்ன விதத்தில் மேல்?' என்று அவள் நினைத்து நினைத்துப் புழுங்கிக்கொண்டிருந்தாள்.

தன் பெண் எழுதிய கடிதம் அவள் பொருமை உள்ளத்தில் விசித்திரமான விளைவை உண்டாக்கியது. 'ஏன் இந்தச் சந்தேகம் உண்மையாய் இருக்கக் கூடாது?' என்று தான் அவள் கூசாமல் நினைத்தாள். 'ராமுவுக்கே சந்தேகம் என்றால் இருக்கத்தான் இருக்கும்' என்று நிச்சயித்தாள். தன்னிடம் சாவித்திரியைப்பற்றி விசாரிக்க வந்தவர்களிடமெல்லாம், "என்னவோ, ஏதோ, யார் கண்டா?" என்கிற பாணியில் பேசினாள். வைக்கோல் போருக்கு வேண்டுவதெல்லாம் ஒரு பொறி நெருப்புத்தானே? நல்ல சொல் பரவுவது கஷ்டமாயிருக்கலாம்; அபவாதத்திற்குக் கேட்பானேன்? விஷயத்தைக் குறிப்பாகக் கேள்விப்பட்ட அவர்கள் பந்துக்கள், தெரிந்தவர்கள், யாரும் தங்களுக்குத் தோன்றினபடி பேசி அவரவர்கள் மனம்போல் ஜோடனை செய்துகொண்டார்கள். சாதாரண மனிதர்களுக்கும் கற்பனை உணர்ச்சி இல்லையா? கவிகளுக்கும் எழுத்தாளர்களுக்குந்தான் இது சொந்தமா என்ன?

கடைசியாக ராமசந்திரன் ஊர் போனபோது, அம்மாவுக்கும் அண்ணாவுக்கும், பிறகு சாவித்திரிக்குங் கூட விஷயம் எட்டி, மிகுந்த வருத்தத்தைக் கொடுத்திருந்தது. சாவித்திரி இருந்த பலஹீன நிலைமையில் அவளால் அதைத் தாங்கவே முடியவில்லை. என்றைக்கும் அவளுக்கு அந்தரங்கமானவன் ராமசந்திரன். அவனைக் காணவும் அவள் தாங்காமல் கண்ணீர்விட்டுப் புலம்பிவிட்டாள். "என் வாழ்வைக் கண்டு யாருக்குப் பொருமை தாங்கவில்லையோ தெரியவில்லை. இந்த மாதிரி அபாண்டமான பழியைக் கட்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள்" என்றாள். "ஐயோ ராமு, உங்கள் அத்திம்பேரைப்போல அன்புள்ள கணவர் உலகில் உண்டா? என் காலில் கல் உறுத்தச் சகிக்கமாட்டாரே. அவர் கொடுமை தாங்காமல்

நான் பிராணனை விடப் பார்த்ததாக ஊரெல்லாம் சொல்லுகிறுர்களாமே?" என்று அவள் சொல்லி அழுத போது ராமசந்திரனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அம்மாதிரி நினைத்தவர்களில் தானும் ஒருவனுயிற்றே என்று நினைத்தபோது பிராணனையே விட்டுவிட வேண்டும்போல் இருந்தது. அவள் என்ன நினைத்திருந்தாள்? இங்கே விஷயம் எப்படி இருக்கிறது? இங்கு இப்படி இருப்பதை அறிந்து அவனறியாமலே அவனுக்குப் பெருமூச்சு மேலும் மேலும் எழுந்தது. தான் கொண்ட சந்தேகத்திற்குச் சிறிதும் இடமில்லை என்பதை அறிந்தபோது அவனுக்குப் பெரிய ஆறுதல் ஏற்பட்டது. "உண்மை வேறுக இருக்கும்பொழுது ஊரார் எதைச் சொன்னுல் நமக்கென்ன? சூரியனைப் பார்த்து நாய் குரைப்பதுபோன்றது அவர்கள் செய்கை" என்று தேற்றினுன். தன் சந்தேகம் தெளிந்ததில் உண்டான திருப்தியிலே அவன் பேசினுன். அந்தப் பெண்மை யுள்ளத்தில் அடாப் பழியினுல் எழுந்த புயலைச் சிந்தித்துப் பார்க்க அவன் முன்வரவில்லை. "நாளைக்கு உன் அத்திம்பேர் வருகிறுரே. அவர் காதில் இது விழுந்தால் அவர் எவ்வளவு வருந்துவார்?" என்று சொல்லி அவள் மறுபடியும் அழுதாள்.

"அவருக்குத் தெரியும்படி விடக்கூடாது. நீ அவரிடம் சொல்லி வருந்தாதே" என்று சாவித்திரிக்குப் புத்திமதி சொன்னுன். அவள் உடம்பு மெலிந்து பலஹீனமாக இருப்பதைப்பார்த்தபோது அவனுக்குச் சகிக்கவே இல்லை. "உடம்பு ஏன் இப்படிப் போயிற்று?" என்று அங்கலாய்த்தான். "உடம்புதானே இன்னும் தேறவில்லை? பலஹீனம் ரொம்ப அதிகம். அதனுல்தான் ஜலம் எடுக்கப் போனவளுக்கு மயக்கம் வந்து சமாளித்துக் கொள்ளத் தெரியாமல், கயிற்றைப் பிடிக்கப்போய்க் கிணற்றுக்குள்ளேயே சாய்ந்துவிட்டேன்" என்றுள்.

"எங்காவது, சமாளித்துக் கொள்வதற்காகத் தொங்கும் கயிற்றைப் பிடிப்பார்களா?" என்று ராமசந்திரன் கேட்டான்.

"இல்லாவிட்டால் இவ்வளவு அபக்கியாதியை எப்

படிச் சம்பாதித்துக் கொள்ளுகிறது!" என்றாள் சாவித்திரி அங்கலாய்ப்போடு.

இந்தச் சிறிய சமாசாரம் தெரியாமல், தெரிந்து கொள்ளவும் முயலாமல், குருட்டு யோசனையில் அவன் என்ன பாடுபட்டுப் போனான்! சிவராமன்தான் இவ்வளவுக்கும் காரணம். மனஸ்தத்துவமென்று சொல்வதெல்லாம் பிதற்றல்! அவனிடத்தில் இப்பொழுது ராமசந்திரனுக்குப் பொறுக்க முடியாத கோபம் வந்தது. 'மனஸ்தத்துவ ஆராய்ச்சியாவது! மண்ணாங்கட்டியாவது!' என்று வைதான்.

பட்டணம் போய் முதலாவதாக அதை மறக்கும்படி அவனுக்குச் சொல்லவேண்டும். 'இல்லாவிட்டால் உனக்கும் எனக்கும் இனி முகாலோபனம் இல்லையென்று சொல்லி விடவேண்டும்' என்று தீர்மானித்துக்கொண்டான்.

சாவித்திரி வரையில் விஷயம் எட்டும்படியாக விட்டதற்கு அம்மாவை ராமசந்திரன் கோபித்துக்கொண்டான். "நான் சொல்லாமல்தான் இருந்தேன். உங்க அம்மாமி இருக்காளே. அவள்தான் சாவித்திரியிடம் நேரில் அங்கலாய்க்க ஆரம்பித்துவிட்டாள். ஊரார் சொல்லிக் கொள்வதையெல்லாம் முடிந்துகொண்டு வந்து சொன்னாள். என்ன பண்ணுகிறது?" என்று அவன் தாய் சொன்னதை அவன் ஒப்புக்கொள்ளவில்லை.

"அம்மாமி அப்படிப் பேசுவாளென்று தெரிந்தால் அவளைச் சாவித்திரியிடம் அணுகவே விட்டிருக்கக் கூடாது!"

"போடா, நீ என்னமோ சொல்லுகிறாய்! ஊர் அபவாதத்துக்கே அம்மாமிதான் காரணமென்று எனக்குச் சந்தேகம். அதற்கு என்ன பண்ணுகிறது? அதையெல்லாம் நம்மால் தடுக்க முடியாது. காதில் போட்டுக் கொள்ளாமல் இருந்தால் எல்லாம் தானே ஓய்ந்துவிடும்" என்று அவன் அண்ணா மத்தியஸ்தத்துக்கு வந்தான். "ஊர் அபவாதத்திற்கே அம்மாமிதான் காரணம்" என்பதைக் கேட்கவுமே ராமசந்திரனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

“அம்மாமிதான் காரணமானல் பேசாமலா இருக்கிறது? அவளைச் சண்டைப்பிடித்துத் தீர்க்கவேண்டாமா? எதையுமா பொறுத்துப்போவது? எதற்கும் ஓர் அளவு இல்லையா?” அவனுக்குக் கோபம் தாங்காமல் வந்தது. “நீ வேதாந்தி. தர்மபுத்திரர் அவதாரம். பொறுத்துக்கொண்டு சும்மா இருப்பாய். என்னல் முடியாது. நான் போய்க் கேட்டுவிட்டு வருகிறேன் பார்” என்று ஆத்திரத்துடன் கூறிக் கிளம்பினன்.

“இந்தா அவசரப்படாதே” என்று அவன் தமையன் அவனை அமர்த்தினன். “இவைகளையெல்லாம் கேட்கப் போனல் விபரீதத்தில் முடியும். நமக்கு உண்மை தெரியாது. ஏதோ ஊகந்தான். சாவித்திரிக்குக் கல்யாணமானதிலிருந்து அவர்களுக்குப் பொருமை. அவ்வப்பொழுது ஏதேதோ சொல்லுகிருர்கள். எத்தனை நாளைக்கு இதெல்லாம்? தானே ஓயவேண்டியதுதான். பந்துக்களுக்குள் கண்டபடி பேச்சுக்கு இடம் வைத்துக்கொள்ளக் கூடாது” என்று கண்டிப்பாகக் கூறினன்.

ஆனல் ராமசந்திரனல் சும்மா இருக்க முடியவில்லை. சாப்பாடான பிறகு சகஜமாகப் போகிறதுபோல மாமா வீட்டிற்குப் போனன். அம்மாமியோடு பேசினன். பேச்சுக்கு நடுவில், சாதாரணமாகக் கேட்பதுபோல, “மாமி, நீங்கள் சாவித்திரியைப்பற்றி நினைத்துக்கொண்டதே தப்பு. அதற்குமேல், அதை ஊர் அறியும்படி விடலாமா?” என்று அங்கலாய்த்தவண்ணம் கேட்டான். அம்மாமி லேசுப்பட்டவளா? சும்மா இருந்துவிடுவாளா? “விளையாட்டுப்போல் என்னவோ என்மேல் பழி போடுகிருயே. ஐயோ, அப்பா, நான் என்னத்தைக் கண்டேன்! தேமேன்னு இருக்கேன். என்னைச் சந்தியில் இழுக்காதே. நீதான் என்னமோ சந்தேகப்படுகிருப்போல இருக்குன்னு மீனு எழுதினுள். அதைக்கூட, ‘அசட்டுப் பிள்ளை’ என்று நான் காதில் போட்டுக்கொள்ளவில்லை” என்று ஒரு போடு போட்டாள்.

ராமசந்திரனுக்கு இடி இடித்துக் காலடியில் விழுந்த அதிர்ச்சி ஏற்பட்டது. சேற்றில் கல்லை எறிந்து சேறு முழுவதும் தன் பேரிலேயே தெறித்திருப்பதைக் கண்

டான். அந்த நிமிஷத்தில் அவனுக்கு யாரைக் கோபிப்ப தென்றே தெரியவில்லை. என்ன அபவாதம்! அவன் ஆத்திரம் இருந்த இடம் தெரியாமல் மங்கியது. பேசாமல் வீடு வந்தான்.

தன்னைத் தானே அவன் வெறுத்தான். இவ்வளவு வீண் பழிக்கும் தானே வித்து என்பதை எண்ணியபோது அவன் உடல் நடுங்கிற்று. முதல் முதலாகத் தமையனிடத்தில் அவனுக்கு மதிப்பு ஏற்பட்டது. 'அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பதற்கேற்ப அவன் நடந்துகொண்டிருக் கிறான். அவன் அன்புள்ள சாவித்திரியின் வருத்தம் முழு வதற்கும் அவனே காரணமாயிருக்கிறான். அவனைவிடக் குற்றவாளி உலகில் வேறு யார்? - இந்தச் சிந்தனையில் மூழ்கியிருந்த அவன் மனம் புண்பட்டு வருந்திற்று. சாவித் திரியின் குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டுவதில்தான் அவனுக்குச் சிறிது ஆறுதல் ஏற்பட்டது.

மறுநாள் அவனுடைய அத்திம்பேர் வந்தார். அவ ரைக் காணவுமே சாவித்திரி கொஞ்சம் உத்ஸாகம் கொண் டாள். அவர் இருந்த பத்து நாட்களும் சந்தோஷமாகவே கழிந்தன. ராமசந்திரனால்கூட வருந்திக்கொண் டிருக்க முடியவில்லை. சாவித்திரியின் சந்தோஷம் அவனையும் தன்னை மறந்து சிறிது சந்தோஷமாயிருக்கச் செய்தது. அவன் அத்திம்பேர் ஊருக்குப் புறப்படும் பொழுது சாவித்திரியும் அவரோடு போவேனென்று பிடிவாதம் பிடித்தாள். அவள் கணவன் சொல்லிப் பார்த்தான்; மற்றவர்களும் சொன்னார்கள். யார் சொல்லியும் அவள் கேட்கவில்லை. 'இங்கிருந்தாலே என் உடம்பு தேறுது' என்று சாதித்துவிட்டாள். ராமசந்திரன் ஏதேதோ நடத்தப் போவதாக வந்தவன், அவரவர்கள் மனம்போல நடந்துகொள்ளட்டும் என்று பேசாமல் இருந்து விட்டான். இது விஷயத்தில் அண்ணாவைப் பின்பற்றச் சந் தேகமற நிச்சயித்துவிட்டான். சாவித்திரியோடு அவன் தாயும் போவதென்று ஏற்பாடாயிற்று. சாவித்திரியின் பயணத்தை நிறுத்திவிட எண்ணிவந்த அவன், அம்மாவுக் கும் சேர்த்து மூட்டை கட்டினான்! எல்லோரும் ஒன்றாகப் பட்டணம் வந்து, பிறகு சாவித்திரி, அவள் கணவன், அம்மா மூவரும் சிம்லா சென்றார்கள்.

ஒரு நாள் அவர்களை ஒருங்கே பார்த்த சிவராமன், "உன் அத்திம்பேர் உன் தமக்கையிடத்தில் உயிராய் இருப்பார்போல் இருக்கிறதடா!" என்றான்.

"உன் மனஸ்தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியால் கண்டு பிடித்தயோ? இதைப் பார்: அதைப்பற்றிப் பேசுவதா யிருந்தால் உனக்கும் எனக்கும் சிநேகம் நின்று போன தென்று தெரிந்துகொள். அதனால் எனக்கு ஏற்பட்ட கஷ்டமும் அவமானமும் ஜன்ம ஜன்மத்துக்கும் போதும்" என்றான் ராமசந்திரன் ஆத்திரத்துடன்.

"நீயாகக் கற்பித்துக்கொண்டு கஷ்டப்பட்டதற்கு யார் என்ன செய்கிறது? நான்மட்டும் உன் அத்திம் பேரையோ அக்காவையோ முன்பே பார்த்திருந்தேனானால் உன் சந்தேகத்தை அடியோடு தொலைத்திருக்கமாட் டேனா!" என்று ஒரே அடியாக அடித்தான் சிவராமன். மன இயல்பைப்பற்றிப் படித்தவனோ இல்லையோ? உலக இயல்பை அவன் தெரிந்துகொள்ளவில்லையே!

பாட்டியின் அபிமானம்

1

சாம்பசிவம் ஒரு பெரிய மிராசுதார். கிராமத்தில் பாதிக்குமேல் அவருடையது. பொன் விளையும் பூமி யென்றால் அவர் நிலங்களுக்கே தகும். இருபோகம் விளைந்து இரண்டு பங்கு வரும்படி இவ்வளவு இருந்தும் சாம்பசிவத்துக்கு மனச் சந்துஷ்டி மட்டும் இல்லை. காரணம், அத்தனை சொத்தையும் ஆள ஒரே ஒரு பிள்ளைக் குழந்தை இல்லாத குறைதான்.

ராமேசுவரம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்கள் போய் எத்தனையோ சாந்திகள் செய்து பார்த்தாய்விட்டது. சாம்பசிவத்தின் தாயார், 'என் சாம்பசிவத்துக்கு ஒரு குழந்தை பிறந்து பார்ப்பேனா?' என்று சதா சர்வதா அதே கவலையாக இருந்துவந்தாள். பாவம்! ஒரு பேரனில்லாத குறையையாவது பொறுத்துக் கொண்டிருக்கலாம்போல் இருந்தது; ஆஸ்தி பாஸ்திகளைத் தாயாதிகள் கொண்டுபோய் விடுவார்களே என்பதை எண்ணிப் பார்த்தபோது அவளால் சகிக்க முடியவில்லை. அவள் தன் நாட்டுப்பெண் சாரதாம்பாள்மீது பிராணனாயிருந்தாள். தன் பிள்ளையும் அகமுடையாளிடம் மிகவும் ஆசையா யிருப்பதையும் அவள் அறிவாள். இருந்தாலும் பேரன் வேண்டுமென்ற ஏக்கத்தால் பிள்ளைக்கு இரண்டாவது கல்யாணமாவது செய்து பார்க்கலாமா என்று கூட அவள் சில சமயம் எண்ணியதுண்டு.

கடைசியில் தெய்வம் தாயாதிகள் பங்கில் இல்லை என்று தெரிந்தது. சாரதாம்பாள் கர்ப்பவதியானாள். அவள் பிரசவிக்கும் வரையில் அது பெண்ணாயிருக்குமோ பிள்ளையாயிருக்குமோ என்று பாட்டி கவலைப்பட்டது அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும். நல்ல வேளையாகச் சாரதாம்பாளுக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்தது. சாம்ப

சிவத்துக்கும் அவர் தாய்க்கும் உண்டான சந்தோஷத்தைச் சொல்ல வேண்டுமா? குழந்தைக்கு ராஜகோபாலன் என்று பெயரிட்டாள் பாட்டி.. அவள் இப்பொழுது பாட்டியாய் விட்டதால் நாமும் அப்படியே அவளை அழைப்போம். தொட்டிலிடுவது முதல் ஆண்டு நிறைவு வரையில் ஒவ்வொரு விசேஷமும் தடபுடலாக நடந்ததென்று சொல்லவேண்டியதில்லை. "அடியம்மா! குழந்தை ஆண்டு நிறைவின்போது, பாட்டுக்கச்சேரி என்ன, மேளக்கச்சேரி என்ன, சதிர்க் கச்சேரி என்ன—அது பாட்டிலே ஓயாமல் நடந்துண்டே இருந்துது. நான் சும்மா இருந்தேங்கிறயா? ஸகஸ்ர போஜனத்துக்கு ஏற்பாடு பண்ணி அத்தனை பிராமணுளுடைய ஆசீர்வாதமும் குழந்தைக்குக் கிட்டும்படி செய்தேன்" என்று பாட்டி அடிக்கடி பெருமையாகக் கூறிக்கொள்வது வழக்கம். மொத்தத்தில் சொத்துக்கு வார்சு ஒருவன் ஏற்பட்டு விட்டான் என்பதே அவளது மட்டிலடங்கா மகிழ்ச்சிக்குக் காரணம்.

ராஜகோபாலனைப் பார்த்துக்கொள்வதே பாட்டியின் முக்கிய வேலையாகப் போய்விட்டது. அவளுக்கு அவன்மீதிருந்த பாசம் இவ்வளவு அவ்வளவு என்றில்லை. சொத்து முழுவதையும் அவன் ஒருவனே ஏகபோகமாய் அனுபவிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாள் பாட்டி. சொத்தைப் பங்கிடும்படியாக இன்னொரு பேரன் பிறக்க வேண்டுமென்று அவள் விரும்பவில்லை. முன்னெல்லாம் சாரதாம்பாளுக்குக் குழந்தை வேண்டுமென்று தெய்வங்களை வரங்கேட்டு வந்தது போக, இப்பொழுது இன்னொரு பிள்ளை பிறக்க வேண்டாம் என்றுகூடப் பிரார்த்தித்துக் கொள்ளத் தொடங்கினுள். எல்லாம் ராஜகோபாலன் மீதிருந்த கங்குகரையற்ற ஆசைதான்!

இரண்டு வருடத்திற்கெல்லாம் சாரதாம்பாள் மறுபடியும் கர்ப்பவதியானுள். பாட்டிக்கு அது கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஆனுல் அதற்காக அவள் என்ன செய்ய முடியும்? 'பெண்ணுய்ப் பிறக்கட்டுமே? அதனுலே சொத்தைப் பாகம் செய்யவேண்டியதில்லை. அவனுக்கும் விளையாட ஒத்தாசையா யிருக்கவும் ஒரு தங்கை வேண்டாமா?' என எண்ணிச் சமாதானம் செய்துகொண்டாள்.

ஆனால் எல்லாம் நம் எண்ணப்படியே நடக்குமா? சாரதாம்பாளுக்கு இப்பொழுதும் ஓர் ஆண் குழந்தையே பிறந்தது. பாட்டியைப்போலவன்றித் தன் இரு குழந்தை களிடமும் பாரபக்ஷமற்ற அன்பைச் செலுத்தக்கூடிய தாய், பிரசவித்த பதினைன்றும் நாளே இறந்துபோனாள். சாம்பசிவம் மட்டற்ற துக்கம் அடைந்தார். அவர் தம் தாயாரிடம், "அம்மா! நீதான் இனிமேல் இந்தக் குழந்தைகளுக்கு. எனக்கோ ஒன்றும் தெரியாது. இவர் களை வளர்ப்பது உன் பொறுப்பு" என்று சொல்லிக் கண்ணீர் உகுத்தார். அவர் அவ்விதம் சொன்னது மட்டு மன்றி அப்படியே நடக்கவும் நடந்தார். என்றுமே குடும்ப விஷயங்களில் அதிகப் பற்றில்லாத அவர், தம் நாயகி யைப் பறிகொடுத்த பிறகு ஒரு யோகி போலவே நடந்து கொள்ளலானார்.

2

பாட்டி தன்னுடைய இரண்டு பேரன்மார்களையும் மிகவும் செல்வமாகவே வளர்த்துவந்தாள் என்றாலும், அவன் பிறந்ததிலிருந்தே சின்னவனிடத்தில் அவளுக்குத் தன்னை அறியாமல் ஒருவித வெறுப்பு ஏற்பட்டிருந்தது. அவன் ராஜுவின் சொத்துக்குப் பங்காளியாக முளைத்த தும் தவிரத் தாயையும் உருட்டிவிட்டான் அல்லவா? அவனாலன்றோ ராஜுவும் தாயிழந்தவன் ஆனான்? நடே சுவைப் (இளையவனுக்கு நடராஜன் என்று பெயரிட்டு இவ்விதம் அழைத்தார்கள்) பார்க்கும் போதெல்லாம் பாட்டிக்கு இத்தகைய எண்ணங்கள் தோன்றும். வீட் டில் எதுவும் ராஜகோபாலனுக்குத்தான் முதலில். அவன் இஷ்டப்பட்டோ, வேண்டாமென்றோ கொடுப்பதுதான் நடேசுவுக்கு.

ஒரு சமயம் நடேசு பாட்டியிடம், "ஏன் பாட்டி! மாமா பட்டணத்திலேயிருந்து பொம்மை வாங்கிண்டு வருவாளோன்னோ?" என்று கேட்டான்.

"எல்லாம் நேக்குத்தான்; ஒனக்கொண்ணும் கிடை யாது போ!" என்று ராஜு சொன்னான்.

“அங்கே நிறைய இருக்கும். எனக்குந்தான் வாங்கிண்டு வருவா.”

“எல்லாத்தையும் நான் எடுத்துண்டுடுவேன். அப்பறந்தான் ஒனக்குக் கொடுப்பேன்.”

“பாரு பாட்டி, ராஜு சொல்றதெ” என்று நடேசு புகார் செய்தான். குழந்தைகளின் சம்பாஷணையைக் கவனித்துக்கொண் டிருந்த பாட்டி, “நடேசு! அவனோடே என்ன தகராறு? அவன் உனக்குப் பெரியவன்; அவன் கொடுக்கிறதை வாங்கிண்டு பேசாதிரு” என்று நடேசுவை அடக்கினாள்.

மாமா ஊரிலிருந்து வந்தபோது ஒரு மோட்டார் வண்டி வாங்கி வந்திருந்தார். அதில் ஏறி உட்கார்ந்து தோட்டத்தைச் சுற்றிவர நடேசு எவ்வளவோ ஆசைப்பட்டான். ஆனால் அவனைக் கவனிப்பார் யார்? ராஜு ஓட்டி ஓட்டி அலுத்துப்போய் வண்டியும் முக்கால்வாசி ஒடிந்த பிறகுதான் அது அவனுக்குக் கிடைத்தது. ராஜுவுக்குப் பின் பிறந்ததால் எதுவும் அவனுக்குப் பின்தான் நடேசுவுக்கு என்று ஒருவரும் சொல்லாமலே நடந்து வந்தது.

இருவரையும் சேர்ந்தாற்போலே பள்ளிக்கூடத்தில் படிக்கவைத்தார்கள். ஆனால் நடேசுதான் கெட்டிக்காரன் என்று பெயர்வாங்கினான். தன் பாட்டி கொடுத்த அதிகமான செல்லத்தில் மூழ்கி இருந்ததனாலேயோ என்னவோ ராஜு படிப்பில் அவ்வளவு சூடிகையாய் இல்லை. அவன் கொஞ்சம் சிரமப்பட்டுப் படித்தாலும் பாட்டி உடம்புக்காகாது என்று தடுத்துவிடுவாள்.

நாளடைவில் சகோதரர்கள் இருவரும் காலேஜில் சேர்ந்து பி. ஏ. பரீக்ஷைக்குப் படித்தார்கள். பரீக்ஷையில் நடேசு ராஜதானிக்கே முதலாகத் தேறினான். ராஜுவுக்குப் ‘பெயில்’ ஆகிவிட்டது. ராஜுவுக்குத் தேறுதிருக்கும்போது, நடேசு உலகத்திலேயே முதலாவதாகத் தேறியிருந்தால்கூடப் பாட்டிக்குச் சந்தோஷம் எங்கேயிருந்து வரப்போகிறது? வீட்டில் ஒருவரும் அதிகச் சந்தோஷத்தைக் காண்பிக்காததால் நடேசுவும் தன் வெற்றியின் பெருமையை அவ்வளவாக அறிந்துகொள்ளவில்லை.

நடேசு மேல்படிப்புக்காகச் சீமைக்குப் போக ஆசைப்பட்டான். அதைப்பற்றி அவன் தன் தந்தையிடம் பிரஸ்தாபித்தபோது, "நம் ஆசார விவகாரங்களைக் கெடுத்துக் கொண்டு என்ன படிப்பும் உத்தியோகமும் வேண்டியிருக்கின்றன?" என்றார் சாம்பசிவம்.

"என்னதான் பணம் இருந்தாலும் ஒரு பெரிய உத்தியோகத்திலிருந்தால் பெருமைதானே. எனக்கு இரண்டாவதாகப் பாஸ் பண்ணின சுந்தரராஜன்கூடப் போகப் போகிறான். நானும் போய்வருகிறேன். நான் சில பேரைப் போல அங்கே கெட்டுப்போய் வருவேன் என்று நீங்கள் பயப்படவேண்டாம். நான் எவ்வளவு ஒழுங்காக இருந்து விட்டு வருகிறேன் பாருங்கள்" என்று நடேசு தந்தைக்குச் சமாதானமாகும்படி கூறினான். சாம்பசிவமும் அவன் சீமை போவதற்கு ஒருவாறு சம்மதித்தார்.

ஆனால் விஷயம் பாட்டியின் காதுக்கு எட்டியதும் அவன் பட்ட சிரமமெல்லாம் வீணாயிற்று. தன் வயது காலத்தில் குழந்தையைத் தூரதேசம் அனுப்பிவிட்டுத் தன்னால் கவலைப்பட்டுக்கொண்டு இருக்க முடியாதென்று ஒரேயடியாய்ச் சாதித்தாள் பாட்டி. விசாரமும் கவலையும் ஒருபுறம் இருக்க, பணச் செலவு வேறு என்று நினைத்த பொழுது பாட்டிக்குச் சீமைப்படிப்புப் பிடிக்கவே இல்லை.

"பாட்டி! இரண்டு வருஷம் கொட்டைப்பாக்காக ஓடிவிடும். நான் உனக்கு வாரத்துக்கு ஒரு கடிதம் போடுகிறேன். நீ கவலைப் படும்படி நடந்துகொள்ளவே மாட்டேன். பணச்செலவு என்று பயப்படவேண்டாம். என்னோடு படித்த சுந்தரராஜன் போகிறானென்றால் பார்த்துக் கொள்ளேன். அவனென்ன பணக்காரனா? அப்படிச் செலவழிகிற பணத்தைப்போல் நூறு பங்கு நான் உத்தியோகம் பண்ணிச் சம்பாதிப்பேன். ஏன் பாட்டி! நான் சீமை போய்ப் பாஸ் பண்ணிவிட்டு வந்தால் உனக்குப் பெருமை இல்லையா?" என்று நடேசு பாட்டிக்குப் பல வாறாக எடுத்துக் கூறி அவள் அனுமதியை வேண்டினான்.

பாட்டிக்கும் அவன் போய்விட்டுத்தான் வரட்டுமே என்று தோன்றியது. ஆனால் அதே சமயத்தில் ராஜுவிடம் அவளுக்கிருந்த அலாதி அபிமானம் அவளை எச்

சரித்தது. 'குழந்தை ராஜு இப்பொழுதே உத்ஸாக மில்லாமல் இருக்கிருன். நடேசு சீமைக்குப்போய்த் தேருமல் வந்தாலும் ராஜு, 'தம்பி தேறவில்லேயே' என்று வருத்தப்படுவான். தேறிவிட்டு வந்தாலும், 'நாம் மட்டும் ஒன்றுமில்லாமல் இருக்கிருேமே' என்று எண்ணிக் கஷ்டப் படுவான்' என்று எண்ணிஞள். உடனே, "நடேசு! நான் கிழவி. இன்றைக்கோ நாளைக்கோ என்றிருக்கிறேன். உன்னை அவ்வளவு தூரத்துக்கு அனுப்பிவிட்டு என்ஞல் ஒரு நிமிஷங்கூட இருக்க முடியாது' என்று கூறிஞள்.

சாம்பசிவம் எப்பொழுதும் தாயார் இஷ்டத்துக்கு விரோதமாக எதுவும் செய்வதில்லை. ஆகையால் நடேசு சீமை போவதற்கு அவர் சம்மதிக்கவில்லை. அவன் கனவெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. அவர்கள் சொல்லை மீறிச் சீமை செல்ல அவனுக்கு ஆசையாய் இருப்பினும், குழந்தைமுதல் கீழ்ப்படிந்தே நடந்து வழக்கமுள்ள ஒருவனுக்கு அவ்வளவு தீர்மானமும் தைரியமும் எங்கிருந்து வரும்?

3

மேற்படி சம்பவங்கள் நடந்து நான்கு வருஷங்கள் ஆயின. சாம்பசிவம் இறந்துவிட்டார், ராஜுவும் நடேசுவும் தங்கள் கிராமத்தில் நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நடேசுவுக்குக் கிராம வாழ்க்கையும் பயிர்ச் செலவு வேலையும் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ராஜதானிக்கெல்லாம் முதலாகத் தேறியதஞல் என்ன பயன் என்று எண்ணி அவன் வருத்தப்பட்டான். ஏதோ ஒரு விதமாக அவன் ஊரில் காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தான்.

ஒரு சமயம் அந்த ஊருக்கு ஜில்லா அஸிஸ்டெண்ட் கலெக்டர் விஜயம் செய்வதாயிருந்தார். மிராசுதார்கள் தங்களால் கிஸ்தித் தொகையில் பாதிகூடச் செலுத்த முடியாமல் இருப்பதைப் பற்றிச் சர்க்காருக்கு மனுச் செய்து கொண் டிருந்தார்கள். கிராமவாசிகளின் நிலைமையை நேரில் விசாரித்து அறிந்து வருவதற்காக அந்த உத்தியோகஸ்தர் அனுப்பப்பட்டிருந்தார். கிராமத்தார் நடேசு

வையே துரையிடம் தங்கள் குறைகளைப் பற்றி எடுத்துச் சொல்ல ஏற்பாடு செய்திருந்தனர்.

துரை ஊருக்கு வந்துவிட்டார். அவரைப் பார்த்ததும் நடேசு ஆச்சரியத்தால் பிரமித்துப் போனுன். துரை வேறு யாரும் இல்லை. அவனுடன் காலேஜில் படித்த சுந்தர ராஜன்தான். இப்பொழுது என். எஸ். ராஜனுக விளங்கினுன். நண்பர்களுக்குள் கடிதப் போக்குவரத்து நின்றிருந்தமையால் நடேசுவுக்குச் சுந்தரராஜன் ஐ. ஸி. எஸ். பாஸ்செய்து உத்தியோகமேற்ற விவரம் தெரியாது. அதிகார ஹோதாவில் வந்திருந்த சுந்தரராஜனுக்கு ஏற்பட்டிருக்கும் பெருமையைக் கண்டு மனம் குன்றினுன். அவன் தன்னை லக்ஷயம் செய்து பேசுவானே மாட்டானே என்று எண்ணிக்கொண் டிருந்தபோது சுந்தரராஜன், "நடேசு! என்னை மறந்து விட்டாயா?" என்று கேட்டுக் கொண்டே கைகுலுக்கினுன். பிறகு நண்பர்கள் இருவரும் சகஜமாக வெகு நேரம் பேசிக்கொண் டிருந்தனர்.

சுந்தரராஜன் அன்றே ஊரை விட்டுப் போய்விட்டான். நடேசு அவனைப்பற்றியே எண்ணி மனம் புண்ணுயிருந்தான். இரவு படுக்கையில் படுத்தபின்பும் அவனுக்கு அதே நினைவாக இருந்தது. அதிக வயதானதனுல் தூக்கம் பிடிக்காமல் புரண்டுகொண் டிருந்த பாட்டியைப் 'பாட்டி!' என்று அழைத்தான்.

"என்ன அப்பா, நடேசு?"

"இன்று ஊரெல்லாம் அமர்க்களப்பட்டு எதிர்கொண் டழைத்தோமே, கலெக்டர், அவன் யார் தெரியுமா?"

"தெரியாதே."

"என்னேடு படித்தானே அந்தச் சுந்தரராஜன் தான்."

"சுந்தரமா?" என்ருள் பாட்டி ஆச்சரியத்துடன்.

"ஆமாம். ஆயிரம் ரூபாய் மாதச் சம்பளம் வாங்குகிறுன். நானும் அவனுடன் போய்ப் பாஸ் செய்து வந்திருந்தால், ஆயிரம் ரூபாய் இப்பொழுது சம்பளம் வாங்கலாமல்லவா பாட்டி?" பாட்டியிடமிருந்து இதற்குப் பதில் இல்லை.

"பாட்டி, நீதானே பிடிவாதமாகக் கூடாதென்று தடுத்தாய். நான் போயிருந்தால்?"

இதற்கும் பதிலில்லை. பாட்டி ஒரே மௌனத்தில் இருந்தாள். அவன் மன நிலையை இப்பொழுதாயினும் உணர்ந்து பச்சாத்தாபப் பட்டாளோ என்னவோ! ஆனால் பாட்டி தூங்கிவிட்டாளென்று கருதி நடேசு மீண்டும் கேட்கவில்லை. தன் அதிருஷ்டக் குறைவிற்காகப் பிறரை நோகும் சுபாவம் அவனிடம் இல்லை. நடேசு இரவெல்லாம் யோசனை செய்து பார்த்தான். தன் சிநேகிதன் கலெக்டர் என். எஸ். ராஜன் சொன்னதுபோல் நிலங்கள் சாகுபடி செய்யும் விதத்தை அறிந்துவரத் தான் அமெரிக்கா சென்றால் என்ன? அங்கு ஒரே அளவு பூமிக்கு நம்முடையதை விடப் பத்து மடங்கு அல்லவா வரும்படி கிடைக்கிறதாம்! "உன்னைப்போல் படித்த மிராசுதார்தான் போக வேண்டும். உனக்கு மட்டுமன்றி உன் தேசத்திற்கே உபகாரம் செய்தவன் ஆவாய்" என்று அவன் சொன்னது காதிலேயே ஒலித்துக்கொண் டிருந்தது. பணத்திற்கு ஆக்ஷேபம் செய்ய இப்பொழுது தந்தைகூட இல்லை. கடைசியில் அமெரிக்கா போவதென்று தீர்மானித்தான். புறப்படும் வரையில் தான் போவதைப் பற்றி எவருக்கும் தெரிவிக்கக் கூடாதென்று எண்ணினான். பிரயாண ஏற்பாடுகளெல்லாம் ரகசியமாகவே செய்து வந்தான்.

புறப்படும் தினத்தன்று பாட்டியிடம் விஷயத்தைத் தெரிவித்தான். பாட்டி அவன் போவதற்குத் தடையொன்றும் சொல்லவில்லை. நாம் சொல்லி அவன் கேட்கப் போவதும் இல்லை. நம்மால் அவனுக்கு வருத்தமும் வேண்டாம் என்று நினைத்தாள்போலும்.

அவன் அன்று மாலை புறப்படவேண்டும். மூட்டை முடிச்சுகள் கட்டி யாவும் சித்தமாயின. சில நண்பர்களைப் பார்த்து வர வெளியே சென்று திரும்பினான். அவன் வந்த போது வீட்டுவாசலில் ஒரே கூட்டமாகக் கூடியிருப்பதைக் கண்டு ஒன்றும் தோன்றாமல் எல்லோரையும் விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான். அங்கே கூடத்தில் ஒரு படுக்கையில் பாட்டி ஒரு மாதிரியாகப் படுத்திருப்பதைக்

கண்டான் நடேசு. கைகால் பதற கண்களில் நீர் பெருக ராஜுவை நோக்கி, "பாட்டிக்கு என்ன?" என்று கேட்டான்.

வைத்தியர் நாடிப் பரீக்ஷை செய்வதை நிறுத்திவிட்டு நடேசு பக்கம் திரும்பினார். "திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டது. தாங்கவில்லை. வயசும் ஆய்விட்டதோன்னோ?" என்று சொல்லித் தலையை அசைத்தார்.

நடேசுவுக்குத் தான் கேட்பது நிஜம் என்று நம்பக் கூடவில்லை. சிறிது நேரம் அவன் திகைத்து நின்றான். தன் பாட்டி சாகக்கூடும் என்கிற எண்ணமே அவன் மனத்தில் இதுவரையில் தோன்றியதில்லை. "பாட்டி போய்விட்டாள்; எனக்கு நீயும், உனக்கு நானுந்தான் இவ்வுலகில்" என்று ராஜு கதறிக்கொண்டே நடேசுவைக் கட்டிக்கொண்டு அழுத பின்பே நடேசுவுக்குத் தன் நினைவு வந்தது. பாட்டி நிஜமாகவே இறந்துவிட்டாள் என்பதை உணர்ந்தான். அப்பொழுது கடிகாரத்தில் மணி ஆறு அடித்தது. அதே சமயந்தான் அவன் புறப்பட இருந்ததும். "பாட்டி, நான் போகக்கூடாதென்பதற்காகவா இந்த உபாயம் தேடினாய்? நீ சொல்வதைக் கேட்க மாட்டேன் என்கிற பயமா?" என்று புலம்பினான்.

பாட்டிக்கு நடேசுமேல் ஆசை இல்லாமல் இல்லை. ஆனால் அவன் எந்த விதத்தில் உயர்வாக வந்தாலும் பட்டிக்காட்டில் மிராசுதாராய் உட்கார்ந்திருக்கும் ராஜு மனவேதனைப் படமாட்டானா? அத்தகைய நிலைமை ஏற்படுவது பாட்டிக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. இப்பொழுது நடேசுவோ அவனையும் மீறிச் செல்வதாயிருந்தான். அந்தச் சந்தர்ப்பத்தில்தான் அவள் ராஜுமீது வைத்திருந்த தனி அபிமானம் தன்னையும் அறியாமல் அவளை உயிர்விடச் செய்தது போலும்!

வெற்றி யாருக்கு?

அம்மா எதற்காக ஒரு நிலை கொள்ளாமல் உள்ளுக்கும் வாசலுக்கும் நடந்துகொண் டிருக்கிறாள் என்பது பத்மினிக்கு நன்கு தெரியும். ஏனெனில் அதே மன நிலையைத்தான் அவளும் கொண்டிருந்தாள். அவளுக்கிருந்த சங்கோசம், வெட்கம் இரண்டுந்தாம் தந்தையின் வருகையை எதிர்பார்த்து ஒருவிதப் பரபரப்பையும் வெளிக்காட்டாது அவளைத் தடுத்து நிறுத்தின. காலையில் அவளைப் பார்த்துச் சென்றிருந்தான் ரகுராமன். அதன் பலனை அறிந்து வரத்தான் அவள் தந்தை சென்றிருந்தார். "கச்சேரியிலிருந்து வரும்பொழுது அவன் வீட்டுக்குப் போய் வருகிறேன்" என்று அவர் சொல்லிச் சென்றார். அவர் என்ன செய்தி கொண்டுவருவாரோ என்ற சந்தேகத்தால் பத்மினியும் அவள் தாயும் அவர் வருகையை எதிர்பார்த்து அவ்விதம் தவித்தார்கள்.

ரகுராமன் அவளை மணம்புரியச் சம்மதிக்க வேண்டும் என்பது அவர்கள் இருவர் மனத்திலும் ஒன்றாக எழுந்த ஆசை. அதற்கு மாறான பதில் வராதிருக்க வேண்டுமே என்பது இருவருடைய மனமார்ந்த கோரிக்கையும். தாய்க்கு, 'அவன் ஹானர்ஸில் விஞ்ஞான சாஸ்திரத்தில் ராஜதானிக்கே முதலாவதாகத் தேர்ச்சி பெற்றுப் பரிசும் வாங்கியிருக்கிறான். ரொம்ப ரொம்பக் கெட்டிக்காரன். அந்தத் துறையிலேயே இன்னும் ஆராய்ச்சிகள் செய்து வருகிறான். அதில் முன்னுக்கு வந்து புகழடைவான் என்று எல்லோரும் சொல்கிறார்கள். சொத்துக்கும் குறைவில்லை. ஜாதகப் பொருத்தம் வேறு நன்கு அமைந்திருக்கிறது. அதோடு அண்ணன், தம்பி, அக்கா, தங்கை என்ற பிச்சுப் பிடுங்கலும் இல்லை. ஒருகால் அவர் விருப்பப்படி வரதக்ஷிணை இல்லாமல்கூட விவாகம் நடக்கலாம். பெண்ணுக்குப் புக்ககத்தில் பிடுங்கல் இல்லை. நமக்கும் சம்பந்திகளைச் சமாளிப்பது கஷ்டமாக இராது. எப்படியாவது

அவன் சம்மதித்து விவாகம் நடந்தால் தேவலை' என்று இருந்தது.

பத்மினி அவ்வளவு தூரம் ஒன்றும் யோசிக்கவில்லை. அடிக்கடி அவளுடைய ஒன்றுவிட்ட மாமா கோபாலன் ரகுராமனைப் புகழக் கேட்டதாலோ என்னவோ அவனைப் பார்த்தது முதல் அவன் தன்னை மணக்க விரும்பவேண்டும் என்பதாக அவளையும் அறியாமல் ஓர் ஆசை அவள் உள்ளத்தைப் பற்றிக்கொண்டது. ஏதோ சில நிமிஷந்தான் அவள் அவன் முன்னிலையில் உட்கார்ந்திருந்தாள். ஒரே ஒரு தடவைதான் அவர்கள் கண்கள் சந்தித்தன. ஆனாலும் என்ன? அதற்குள் அவனைக் கணவனாக அடைந்தால் தன் வாழ்க்கை இன்பமுறும் என்பதாக அவளுக்குள் ஏதோ சொல்லிற்று.

அவன்தான் அவளை முதல் முதல் பெண்பார்க்க வந்தவன் என்பது இல்லை. இதற்கு முன்னும் சிலர் வந்திருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் அவர்கள் பதிலை எதிர்பார்த்து அவள் கவலை கொண்டதே இல்லை. கல்யாணத்தைப்பற்றி அவளுக்கு எந்த விதமான உணர்ச்சியும் இல்லை. கணவனை அடைந்து வாழ்க்கை நடத்துவதிலும் கன்னிகையாகவே படித்துக்கொண்டு காலம் தள்ளுவதிலும் அவள் அதிக வித்தியாசம் இருப்பதாக நினைக்கவில்லை. ஆனால் இன்று அவள் மனம் மாறியிருந்தது. ரகுராமனின் பதிலை ஆவலாய் எதிர்பார்த்தது. 'அது சாதகமான பதிலாக இருக்கவேண்டுமே ஈச்வரா!' என்றுகூட வேண்டிக்கொண்டது. சாதகமாக இருக்கும் என்று அவளுக்குள் ஏதோ ஒன்று தைரியம் ஊட்டியது. அவள் மாமா கோபாலன் ரகுராமனைப்பற்றி உயர்வாகச் சொல்லியிருக்கிறான் அல்லவா? ஆனால் தந்தை நேரில் வந்தபொழுது அவர் முகத்தில்—ஏன் அவர் நடையிலேகூட இருந்த தளர்ச்சி ஒரு நொடியில் அந்தத் தைரியத்தைப் போக்கடித்தது.

அவரை வாயிலிலேயே எதிர்கொண்ட அவள் தாய், "என்ன, போன காரியம் காயா பழமா?" என்று அவசரத்துடன் கேட்டாள்.

"இரு, எல்லாம் சொல்லுகிறேன்" என்று சாவதான

மாகச் சட்டைகளைக் களைந்து வைத்துவிட்டுக் கூடத்து விசிப்பலகையில் வந்து உட்கார்ந்தார் தந்தை. "பெண் பிடித்தது என்றுனு?" என்று மறுபடியும் தாய் ஆரம் பித்தாள். அவளுக்கு அவர் வாயிலிருந்து பதிலை வர வழைக்க ஆத்திரம். அதற்கு மேற்பட்டதாக இருந்தது பத்மினியினுடைய ஆவல். ஆனால் அதைக் காட்டிக் கொள்ள வெட்கிக் கூடத்துக்கு அடுத்த அறையில் இருந்த வாறே, அப்பா என்ன சொல்லப் போகிறார் என்பதை ஆவலாய்க் கவனித்துக்கொண் டிருந்தாள். "பெண் பிடிக் காமல் என்ன? பத்மினியைப் போல அழகும் குணமு மாகப் பெண் கிடைத்துவிடுவார்களா?'' என்று அவர் சொல்லும்போதே, "வேறு என்ன ஆக்ஷேபம்?" என் றாள் அவர் மனைவி.

"எல்லாம் எதிர் ஜாமீன் சங்கதிதான்."

"அப்படி அவனே கேட்கிறானு?"

"அவன் கேட்கவில்லை. அவன் அம்மா கேட்கிறாளாம். மகனுக்கு எதிர் ஜாமீன் கொடுத்துப் பெண்ணைக் கொடுத் தார்கள் என்று இருந்தால்தான் அவளுக்குச் சந்தோஷ மாம். அவளைத் திருப்திசெய்ய அவன் கடமைப்பட் டிருக் கிறானும். போதுமா? என்ன என்னவோ நியாயம் அவன் சொல்கிறான். நானும் விடாது வரதக்ஷிணை வாங்குவதி லுள்ள இழிவைச் சொன்னேன். விவாகம் என்பது ஆண் பெண் இருவருக்கும் ஒன்று. அதில் ஒருவர் மற்றொரு வருக்குப் பணம் கொடுப்பது அழகல்ல. வரன் பணம் வாங்குவது தன்னையே விலை கூறிக்கொள்ளும் மாதிரித் தான் இருக்கும் என்றெல்லாம் எடுத்துக் காண்பித்தேன். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டான். ஆனால் அம்மா மனசுக்கு விரோதமாக நடக்க முடியாது என்று பிடிவாத மாகச் சொல்கிறான். என்ன பண்ணுகிறது?"

"இவன் சொன்னு இவம்மா கேட்க மாட்டாளா?"

"கேட்கலாம். இருந்தாலும் அவள் ஆசையை எதற் காக அடக்கவேணும் என்பது அவன் கக்ஷி."

"பார்த்தேளா? எதிர் ஜாமீன் இல்லாமலே இந்த நாளிலே கல்யாணமில்லே. பணக்காரன், ஏழை, படிச் சவன், படிக்காதவன் எல்லாரும் இதிலே ஒண்ணுதான்.

நான்தான் அடிச்சுக்கறேனே; உங்கள் சங்கற்பத்தை யெல்லாம் மூட்டை கட்டி வையுங்கோ. ஏதோ நம்ப சக்திக்குத் தகுந்தது கொடுத்துக் கல்யாணம் பண்ணுங்கோ. சீராச் செஞ்சால் என்ன, பணமாக் கொடுத்தால் என்ன?'' என்று அவள் அவரை வேண்டும் பாவனையில் ஆரம்பித்தாள்.

"அதென்னமா இரண்டும் ஒண்ணாப் போகும்? சீர், நானாக என் பெண்ணுக்கு விருப்பத்தின் பேரில் செய்வது. வரதக்ஷிணை இவர்களாக என்னிடம் வழிப்பறி போலப் பிடுங்கி வாங்குவது. அதுக்கு நான் சம்மதிக்க மாட்டேன். எங்கப்பாவுக்கு நடக்கலையா? எனக்கு மட்டும் நடக்காமலா போயிடும்? இதையும் பார்ப்போமே.''

"உங்கப்பா காலமும் இந்தக் காலமும் ஒண்ணா? உலகம் தெரியாமல் பேசறேளே. அப்போ பெரிய மனுஷாளே வேறயா இருந்தா. அவா லக்ஷ்யமும் காரியமும் வேறாயிருந்தன. இப்போ எல்லாம் மாறிப் போயிடுத்தே. எதிர் ஜாமீன் உதவாதுன்னு உங்கப்பா மேடையேறிப் பிரசங்கம் செய்தார். அதுபோலவே செய்தும் காட்டினார். ஊரிலும் அவரைப்போல் இருக்க நாலுபேர் ஆசைப் பட்டா. இப்போ அவர் அந்தஸ்து நமக்கு இருக்கா? பெரிய மனுஷாள் முன் போல இருக்காளா? ரெண்டுமில்லே. எல்லாரும் அந்தஸ்துக்குத் தகுந்தது வாங்கறா. அதுதான் இப்போ மதிப்பு. என்னமோ இந்தப் பிள்ளை எல்லாத்திலேயும் தேவலை. என்ன கேட்கிறானோ பேசாமே கொடுத்து நிச்சயம் பண்ணுங்கோ. இது வரையும் நீங்க பாத்த வரன்களில் எவன் வரதக்ஷிணை இல்லாமே பண்ணிக்கத் தயாராக இருந்தான்? இனிமே மட்டும் யார் வரப்போறான்? பத்மினிக்கு வயசாயிண்டு போறது. கல்யாணம் பண்ணாத பாவம் உங்களையும் என்னையுந்தான் சேரும். எனக்கு ராத்தூக்கமே போயிடுத்து.''

"சரி, நீ பெரிய அங்கலாய்ப்பின் பிரசங்கத்தை ஆரம்பிச்சுடுவே. என்னாலே கேட்டுக்கொண்டிருக்க முடியாது. ஒண்ணும் குடி முழுகிப் போயிடலே. 'இவனுக்குப் பெரியவாளைக் காணோமே பேரம் பேச!' என்று பார்த்தேன். தானே பேசுகிறேன் என்கிறான். நாளே

மாறிப் போயிடுத்து. நாங்களெல்லாம் கல்யாணம் இன்னுலே பேச வெட்கப்படுவோம். வெட்கந்தான் படலேன்னு லேவாதேவிக் காரியமான்னு அடிக்கிருன்கள்? என்ன ஆனுல் என்ன? 'எதிர் ஜாமீன் கொடுக்கிறதில்லே' என்கிற எங்க குடும்ப வழக்கத்தை நான் மாத்தப்போறதில்லே. கல்யாணம் நடக்காமலா போகும்? இவளுக்கு ஒரு புருஷன் எங்கேயாவது முன்பே பிறந்திருப்பான். இனிமேல் பிறக்கப் போகிறதில்லே. பார்ப்போம்'' என்ருர் பிடிவாதமாக.

'இந்த அசட்டுப் பிடிவாதத்திற்கு என்ன பண்ணுகிறது? நல்ல வரன்களெல்லாம் போய்விடுமே!' என்று பத்மினியின் தாய் வருந்திப் பெருமூச்சு விட்டாள். இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண் டிருந்த பத்மினிக்கு, 'உலகம் பலவிதம் என்பது பொய், ஒரே விதந்தான்' என்று தோன்றிற்று. இந்த வரதக்ஷிணை சம்பந்தப்பட்ட மட்டிலாவது ஒன்றுதான் என்று நிச்சயித்தாள். அவள் இதுவரையிலும் தந்தை கக்ஷிதான். தாயும் அவள் மாமா கோபாலனும் எதிர்த்து வாதாடும் போதெல்லாம் அவள் தன் தந்தை பக்கம் பலமாக வாதித்திருக்கிருள். "பெண்கள் என்ன கொள்ளாச் சரக்கா, அவர்களையும் கொடுத்துப் பணமும் கொடுப்பதற்கு? விவாகத்தினுல் விளையும் நன்மையைப் போக்கி வியாபாரமாக அடித்துவிடுகிறதா? அப்பா சொல்லுவது சரிதான். அதனுல் எனக்குக் கல்யாணமே இல்லாவிட்டாலும் பாதகமில்லை'' என்று ரோசத்தோடு பேசியிருக்கிருள். அப்படித் தீர்மானமாக நினைத்த அவள் மனங்கூட, 'அப்பா கொஞ்சம் விட்டுக்கொடுத்தால் என்ன?' என்று சிறிது சிறிதாக இப்பொழுது நினைக்கத் தொடங்கிற்று என்ருல் அதற்கு என்ன சொல்லுகிறது? அந்த மாறுதலுக்குக் காரணம் அவளுக்கு ரகுராமனைப் பார்த்ததுமே ஏற்பட்ட காதல் தான்.

பத்மினியின் இந்த மனநிலைக்குக் காரணமான ரகுராமன் வாஸ்தவத்தில் என்னவா யிருந்தான்? பத்மினியினிடத்தில் அவன் உணர்ச்சிகள் எவ்விதம் இருந்தன? அவள் அழகும் அடக்கமும் ஒரு நொடியில் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளத்தான் கொண்டன. அவ

ளைப் பார்க்க வந்தபொழுது விவாகத்தைப்பற்றின எண்ணம் அவன் மனத்தை விட்டு வெகு தூரத்தில் இருந்தது. விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த அவன், 'கல்யாணத்துக்கு இப்பொழுது என்ன அவசரம்?' என்று நினைத்திருந்தான். தன் தாய்க்காகவும் கலாசாலை நண்பன் கோபாலனுக்காகவுந்தான் அவன் பெண்பார்க்கச் சம்மதித்தான். அவனுக்கு வரும் பெண்களில் பிடித்த பெண்ணைப் பார்த்து நிச்சயமாவது செய்து வைத்துக் கொள்ள வேண்டுமென்பது தாயின் விருப்பம். அப்புறம் தகுந்த இடங்களிலிருந்து பெண்கள் வராவிட்டால் என்ன செய்வது? ஒரு மகனைப் பெற்ற தாய்க்குத் தெரியும், நல்ல நாட்டுப் பெண்ணாக வருவதைப் பற்றின விசாரம்! அவன் தோழன் கோபாலன், "எங்கள் பத்மினியை மட்டும் பார். பிறகு உன் இருதயம் உன் வசம் இராது" என்று வீறுப்புப் பேசியிருந்தான். அவர்கள் இருவருக்காகவுமே அவன் பத்மினியைப் பார்க்கச் சென்றான்.

அவன் திரும்பி வந்தபொழுது அவன் தாய், "என்னடாப்பா, பெண் பிடித்ததா?" என்று கேட்டாள். "அம்மா! நீதான் நாட்டுப்பெண் வரவேண்டுமென்று ஆசைப்பட்டுத் தவிக்கிறாயே. உன் விருப்பத்தை நிறைவேற்றிவிடுகிறது." என்று விளையாட்டாகத் தன் சம்மதத்தைத் தெரிவித்தான்.

பத்மினியின் தந்தை சபேசையரின் கொள்கைதான் அதற்கு இடையூறாக நின்றது. அவன் தாய் வரதக்ஷிணை இல்லாமல் கல்யாணத்திற்குச் சம்மதிக்கவில்லை. அவளுக்கு அதில் ஒரு பெருமை; உலக மதிப்பில் ஒரு படி ஏறுவதாக எண்ணம். ஒவ்வொருவர் அவள் மகனுக்கு ஐயாயிரம் எதிர் ஜாமீன் கொடுத்துச் சீர்செய்யவும் தயாராக இருந்தார்கள். பத்மினியின் தந்தைக்காக வேண்டி அவள் தொகையை மூவாயிரமாகக் குறைத்துக் கொள்ளச் சம்மதித்தாள். ஏனெனில் ரகுராமன் மனத்தில் பத்மினி இடம் பெற்றிருப்பது அவளுக்குத் தெரிந்து விட்டதல்லவா? ஆனால் சபேசையர் வரதக்ஷிணை என்று ஒற்றை ரூபாயும் கொடுப்பதாக இல்லையே! அது அல்லவோ அவர் சங்கற்பம்? இந்த முரண்பாட்டுக்கு என்ன பண்ணுகிறது?

ரகுராமன் தன் தாயிடம் வாதித்துச் சம்மதிக்கச் செய்ய இஷ்டப்படவில்லை, அவளுடைய விருப்பம் அர்த்த மற்றதாக இருந்தாலும் அதை நடத்திவைப்பது அவன் கடமையெனக் கருதினுன். இளவயசிலேயே தந்தையை இழந்த அவனுக்குத் தந்தையும் தாயுமாக அவள் இருந் திருக்கிருள். யாருடைய உதவியுமின்றி எவ்வளவோ வகை யான போராட்டத்துக்கு இடையே அவனை முன்னுக்குக் கொண்டுவந்திருக்கிருள். 'கைம்பெண் வளர்த்த பிள்ளை' என்று அவன் வீண் போய்விடாமல் எல்லோரும் மதிக் கும்படியான படிப்புப் படிக்கும்படி செய்தது அவள் திறமைதான். எவ்வளவு நாள் அவள் சிறு பள்ளிக்கூடப் பரீக்ஷைக் காலங்களில்கூட விடிவதற்குமுன் அவனைத் தூக்கத்தினின்றும் எழுப்பிப் படிக்கவைத்துத் தானும் தூங்காமல் துணை இருந்திருக்கிருள். அவன் படிப்பில் அவள் காட்டின சிரத்தையால்தான் அவன் படித்து இவ் வளவு தூரம் முன்னுக்கு வர முடிந்தது. இவைகளை எண்ணும்பொழுது அவளுடைய விருப்பம் எதுவாக இருந்தாலும் கேள்வியேயின்றி நிறைவேற்றுவது தன் கடமை என்று அவனுக்குத் தோன்றிற்று. பிதாவின் சொல்லைப் பரிபாலனம் செய்த ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி யின் மன நிலையை ஒத்திருந்தது, அவன் மனசு அப் பொழுது. சபேசையரின் கொள்கை உயர்வாக இருக்கலாம். அதை நடத்திவைக்க அவன் கடமைப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அவர் பலவாருக எடுத்துச் சொன்ன பிறகும் அவன் சம்மதிக்கவில்லை. நியாயம் தெரிந்தவனுக இருக் கிருனே, கபடமின்றிப் பேசுகிருனே என்று எண்ணினுர், அவர். தம் தந்தை அவருடைய ஆறு பிள்ளைகளுக்கும் நாலு பெண்களுக்கும் ஒரு காசு எதிர் ஜாமீன் கொடா மலும் ஒரு காசு வாங்காமலும் மணம் முடித்த பெருமை யையும், தாமும் என்ன வந்தாலும் அதையே பின்பற்று வதாக இருப்பதையும் சொல்லி அது உயர்ந்த எண்ணம் என்பதையும் வற்புறுத்திக் காண்பித்தார். அவன் அவர் பேச்சைக் கவனித்துக் கேட்டாலும் அதன்படி நடக்கச் சம்மதிக்கவில்லை.

"தாயாருடன் கலந்து யோசித்துச் சொல்லுங்கள். எவ்வளவு வேண்டுமென்ருலும் சீராகச் செய்கிறேன்.

எதிர் ஜாமீன் கொடுப்பதுதான் எங்கள் குடும்பத்தில் வழக்கமில்லை" என்று சொல்லி ஏமாற்றத்துடன் வீடு வந்தார். 'அதைப்பற்றி யோசிக்க என்ன இருக்கிறது? கல்யாணம் இல்லை' என்றுதான் ரகுராமன் நினைத்தான். ஆனால் பத்மினியின் உருவம் மட்டும் அவன் மனத்தை விட்டு அகலாதுபோல் இருந்தது. அவனுக்கு ஏற்பட்டிருப்பது என்ன? கண்டதும் காதலா? கோபாலன் சொன்னதுபோல் அவன் இருதயத்தைப் பத்மினியிடம் இழந்துவிட்டானா?

எதுவாக இருந்தாலும் அவன் எதைக் கடமை என்று நினைத்தானோ அதிலிருந்து மாறுவதாக இல்லை. சபேசையரும் தம் சங்கற்பத்தை விடுவதாக இல்லை. பெண்ணின் விருப்பம், கால மாறுதல், இரண்டையும் அவர் பொருட்படுத்தவே இல்லை. இவ்விதம் கல்யாணப் பேச்சே நின்று போகும் சமயத்தில்தான் சமய சஞ்சீவியாகக் கோபாலன் அதில் தலையிட்டான். கடல் கடந்து சீதையை ராமனிடம் சேர்க்க உதவிய ஹநுமான்போல் பத்மினியை ரகுராமனிடம் சேர்க்கத் தீர்மானித்தான். அதில் அவனுக்கு இரண்டு உத்தேசங்கள் நிறைவேறுவனவாக இருந்தன. பத்மினியும் ரகுராமனும் ஒருவருக்காகவே மற்றவர் பிறப்பிக்கப் பட்டவர்கள்போல அழகும் குணமும் ஒருங்கே அமையப் பெற்று இருந்தார்கள். ரகுராமன் அவன் தோழன். பத்மினி அவன் தமக்கை மகள். அவர்களைச் சேர்த்து வைப்பது பலவிதத்திலும் அவனுக்குச் சந்தோஷமான செயல். மற்றொரு பெரிய திருப்தி, அவன் அத்திம்பேர் சபேசையரின் அசட்டுப் பிடிவாதத்தைத் தோல்வியுறச் செய்வதுதான். வரதக்ஷிணை இல்லாமல் கல்யாணம் செய்வதுபற்றி அவர்கள் இருவருக்கும் அடிக்கடி பலத்த விவாதங்கள் நடப்பதுண்டு. அப்பொழுதெல்லாம், "அத்திம்பேரே, எதிர் ஜாமீன் இல்லாமல் விவாகம் என்பது இந்த நாளில் இல்லை" என்று கோபாலன் சாதிப்பான். "நீ மஹா பெரியவன். உனக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. போடா போ!" என்பார் அவர்.

"இது தெரிவதற்குப் பெரியவனாக இருக்கவேண்டுமா? உலக அநுபவம் வேண்டும்; அவ்வளவுதானே?"

"உனக்கு ரொம்ப அநுபவம். எத்தனை பெண்ணுக்கும் பிள்ளைக்கும் கல்யாணம் பண்ணியிருக்கே?"

"அப்படியல்ல அத்திம்பேரே, சில பேருக்குத் தங்களைச் சுற்றி நடப்பதிலிருந்தே எல்லாம் தெரிந்து விடும். சில பேர் கற்பனை உலகிலேயே இருப்பார்கள். உலகத்தில் என்ன நடக்கிறது என்கிற உலக ஞானமே அவர்களுக்கு எத்தனை வயசானாலும் ஏற்படாது."

"நீ அப்படி எல்லாந்தெரிந்தவன். நான் ஒன்றும் தெரியாதவன். அதுதானே உன் எண்ணம்? இருக்கட்டும். நான் எதிர் ஜாமீன் இல்லாமலே பத்மினிக்குக் கல்யாணம் பண்ணிக் காண்பிக்கிறேன். அதற்குமேல் என்ன? எங்கப்பாவுக்கு நாலு மாப்பிள்ளைகள் கிடைத்தார்கள். எனக்கு ஒருவன் கிடைக்காமல் போகிறானா? அதையும் பார்ப்போம்."

இப்படி அவர் பிடிவாதமாகச் சாதிக்கும் பொழுது அவர் அசட்டுத்தனத்துக்கு நல்ல நீதி கற்பிக்க வேண்டுமென்றுகூடக் கோபாலனுக்குத் தோன்றுவது உண்டு. இப்பொழுது இதற்குத் தக்க சந்தர்ப்பம் வாய்த்திருப்பதைக் கண்டான்.

பத்மினிக்கும் ரகுராமனுக்கும் விவாகம் நிறைவேறியது. கல்யாணம் நடந்தபொழுது தான் விரும்பிய கணவனை அடைந்த பத்மினியின் சந்தோஷத்திற்கு மேலாகவே அவள் தந்தை சபேசையர் ஆனந்தம் கொண்டார். நல்ல மாப்பிள்ளை. அதோடு வரதக்ஷிணை இல்லாமலே கல்யாணம் நடந்தது. அவர் சங்கற்பம் நிறைவேறியது. இவ்வளவு மேன்மையாக அது நிறைவேறுமென்று அவர் கனவில்கூட நினைக்கவில்லை. எதிர் ஜாமீன் கொடுக்காமல் தங்கள் குடும்பக் கௌரவத்தைக் காப்பாற்றத் தன் அருமை மகளைத் தாழ்ந்தவன் எவனுக்காவது கொடுக்கவேண்டி வருமோ என்று உள்ளூறக் கவலைப்பட்டு அவர் உருகிக்கொண் டிருந்தார். கொள்கையைக் கடைப்பிடிக்கச் சோதனையாகத் தியாகம் செய்ய நேர்ந்துவிட்டால், தியாகத்தில் இவர் மட்டுமா, ஒரு பாவமும் அறியாத இவர் மகளன்றோ அதற்குப் பலியாக வேண்டும்? இதை எண்ணும்பொழுது இப்பொழுது

நடந்திருப்பதற்கு அவர் எவ்வளவுதான் சந்தோஷப் படக்கூடாது? அதோடு கல்யாணமான ஒரு மாதத்தில் ரகுராமனின் விஞ்ஞான ஆராய்ச்சியில் அவன் கண்டு பிடித்து எழுதின ஒரு புது விஷயத்திற்கு அவனுக்குப் பாராட்டோடு, மூவாயிரம் ரூபாய் பரிசும் பட்டமும் வேறு கிடைத்தன. விஞ்ஞான சாஸ்திரத்தில் ஏற்கனவே கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் உண்மைகளுக்கு மேலே புதிதாக ஒரு சிறு விஷயமானாலும் அதற்கு மதிப்பு அதிகமல்லவா? அந்தத் துறையிலிருக்கும் பெரியவர்கள் அதைப் பெரிது படுத்தி ரகுராமனை வெகுவாகப் புகழ்ந்தார்கள். இது ரகுராமனே எதிர்பாராத விஷயம்.

இப்பொழுது மாப்பிள்ளையின் பெருமையைச் சபே சையர் எல்லோரிடமும் கீதமாகப் பாடாமல் என்ன செய்வார்? அவர் பெருமைப் பேச்சில் அவன் எதிர் ஜாமீன் வாங்காத உயர்வும் கலந்துதான் இருந்தது. "இவ்வளவு யோக்கியதை உள்ளவன் எதிர் ஜாமீன் எவ்வளவு கேட்டாலும் யாரும் கொடுக்கத் தயாராக இருப்பார்கள். அப்படி இருக்க அவன் ஒன்றும் வாங்கா தது எவ்வளவு பெருந்தன்மை?" என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.

ஒரு சமயம் அவரும் கோபாலன் முதலியவர்களும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது சபேசையர், மாப்பிள்ளை யிடம், "மாப்பிள்ளை, உமக்கு மூன்று ஆயிரம் அல்ல; மூன்று கோடி கொடுக்கலாம். நீங்கள் அவ்வளவு உயர்ந்த வர்கள். ஏதோ என் கொள்கை; அது மூடத்தனமாக இருந்தாலும் அதற்கு ஒப்புக்கொண்டு நடத்தினீரே; நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்; எங்கள் குடும்ப கௌரவத்தையே காப்பாற்றிவிட்டீர்" என்று உவகை பொங்கக் கூறி ரகுராமனைப் புகழ்ந்தார். இம் மாதிரியான சந்தர்ப்பத்தைத்தான் கோபாலன் எதிர் பார்த்துக் காத்திருந்தான். ரகுராமன் இந்தப் பாராட் டைச் சும்மாக் கேட்டுக்கொண்டிருக்கமாட்டான். அவன் வெகு நேர்மையான நடத்தையும் குணமும் பொருந்தி யவன். விஷயத்தைச் சொல்லிவிடுவான். ஒருகால் அவன் சொல்லத் தவறினால் சமயத்தை உபயோகித்துக்கொண்டு

தானே சொல்லிவிடுகிறது. ஆகையால் எப்படியும் அவன் அத்திம்பேருக்கு எதிராக வெற்றிமாலை சூடும் நேரம் கிட்டிவிட்டது. அவரைப் பார்த்து மார்தட்டப் போகிருன். அவர் கோபம் கொள்ளலாம். அதனுல் என்ன? அவர் தோல்வி தோல்விதானே? அது மாருதல்லவா?—மேற்கொண்டு நடக்கப்போவதை எதிர்பார்த்து இப்படிச் சந்தோஷப்பட்டான் கோபாலன்.

அவன் நினைத்தது தவருகவில்லை. சபேசையர் உண்மையில் உள்ளம் உருகித் தனிமையில் வேறு தன்னைப் புகழ்வதை ரகுராமனுல் ஏற்றுக்கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. ஏற்கனவே ஒவ்வொருவரிடமும் அவன் எதிர் ஜாமீன் வாங்காத உயர்வை அவர் போற்றிப் புகழும்பொழுது அவன் மனச்சாக்ஷி அவனைக் குறை கூறிக்கொண்டிருந்தது. அந்தப் புகழுக்குத் தான் சிறிதும் உரியவனல்லவே என்று வருந்திஞன். அதோடுகூட இப்பொழுது கோபாலன் வெற்றிக் கோஷம் செய்யத் தயாராக இருப்பதையும் உணர்ந்தான். 'அவன் முன்பு அவரை மனம் குன்றித் தலை குனியச் செய்வதா? கூடாது' என்று தீர்மானித்துக்கொண்டான். அதற்காக அவன் ரகசியத்தை வெளிவிடாமல் மறைக்க முடியவில்லை.

உண்மையை அவன் நாணத்தோடு எடுத்துச் சொன்னபோது சபேசையர் திடுக்கிட்டுப் போனுர். அவரும் நாணமடைந்தார். உண்மை இதுதான்.

கோபாலன் ஒரு தந்திரம் செய்ய எண்ணிஞன். ரகசியத்தில் எதிர் ஜாமீன் கொடுத்துக் காரியத்தை முடித்துப் பின்னுல் அவரை ஏசிக் காண்பிக்க ஆசை கொண்டான். ரகுராமன் தோழனுக இருந்தது அதற்கு நல்லதாயிற்று. 'தகுந்த வரனெல்லாம் தட்டிப் போகிறதே' என்று கவலைப்பட்ட தமக்கையிடம் ரகசியத்தில், "அத்திம்பேர் காரியம் நடத்துவாரென்று தோன்றவில்லை. அவரை நம்பிக்கொண்டிருந்தால் நல்ல வரனெல்லாம் போய்விடும். நான் சொல்லுகிறேன் கேள். உன்னிடம் ஏதாவது பணம் இருந்தால் கொடு. நான் அவருக்குத் தெரியாமல் இந்தப் பிள்ளையை நிச்சயம் செய்து வருகிறேன்" என்ருன்.

"நான் மூவாயிரத்துக்கு எங்கே போக!" என்று அவள் கவலைப்பட்ட பொழுது, "உன்னிடம் உபயோகப் படாத நகைகள்கூட இல்லையா? அவசரத்துக்கு வைத்துப் பணம் வாங்கினால் பின்னடி எப்படியாவது மீட்டுக் கொள்ளுகிறது" என்று யோசனை கூறினான்.

"எனக்குக் கல்யாணத்திற்கு மாமனார் போட்ட அரைப்பவுன் மாலைதான் இருக்கிறது. இந்த நாள் பவுன் விலைக்கு மூவாயிரத்துக்கு மேலேயே பெறும். ஆனால் இந்த ரகசியத்துக்கெல்லாம் அந்தப் பிள்ளை ஒத்து வரவேண்டாமா? உங்கள் அத்திம்பேருக்குத் தெரிந்து விட்டால் அவர் என்ன கோபித்துக் கொள்வாரோ? எனக்கு நினைக்கவே பயமாக இருக்கிறதே" என்று அவள் சந்தேகித்தாள்.

"அவன் ஒப்புக்கொள்வதையும் அத்திம்பேருக்குத் தெரியாமல் இருப்பதையும் நான் பார்த்துக்கொள்ளு கிறேன். இல்லை, அப்படிப் பின்னடித் தெரிஞ்சூட்டாத் தான் என்ன பண்ணுவார்? கல்யாணமான மாப் பிள்ளையை ஏற்றுக்கொள்ளாமல் விட்டுவிடுவாரா? இத் தனை காலம் கூடவாழ்ந்த மனைவியைத்தான் தள்ளி விடுவாரா? நீ ஒன்றுக்கும் பயப்படாதே: நான் இருக் கிறேன் எல்லாவற்றுக்கும்" என்று அவளுக்குத் தைரியம் சொல்லிக் காரியத்தை நடத்தத் தொடங்கினான். 'நம் நண்பன்தானே? நாம் சொன்னால் கேட்கமாட்டானா?' என்ற நம்பிக்கை அவனுக்கு. "அத்திம்பேரே, உங்கள் இஷ்டப்படியே எதிர் ஜாமீன் இல்லாமலே இந்த வரனை முடித்துத் தருகிறேன்" என்று அவருக்குச் சமாதானம் வேறு கூறினான்.

ரகுராமனை ஒப்புக்கொள்ளச் செய்வது சிறிது சிரம மாகத்தான் இருந்தது. இந்த மாதிரி ரகசியத்திற்கு அவன் மனம் இடங் கொடுக்கவில்லை. தாயையும் திருப்திசெய்து பத்மினியையும் மணம் புரிய வேறு வழி இல்லையே என்று தான் அவன் கடைசியில் ஒருவாறு ஒப்புக்கொண்டான்.

"அப்பொழுது அம்மாவின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் கடமைப்பட்டவனாக அவ்விதம் நடந்தேன். இப்பொழுது நீங்கள் என் தந்தை ஸ்தானத்தை அடைந்

திருக்கிறீர்கள். உங்கள் கொள்கையையும் நிறைவேற்ற ஒருவாறு எனக்கு இப்பொழுது கடமை ஏற்பட்டு விட்டது. எனக்குப் பரிசாகக் கிடைத்த மூவாயிரம் இருக்கிறது. அது என் சொந்தப் பணம் அல்லவா? அதை என் இஷ்டம்போல் உபயோகிக்க எனக்கு உரிமை இருக்கிறது. அதைக் கொடுத்துக் கடமையை நிறைவேற்றுகிறேன். இந்தப் பணத்திலிருந்து நீங்கள் எதிர் ஜாமீன் கொடுக்கவில்லை என்று செய்துவிடுகிறேன்'' என்றான் ரகுராமன்.

சொன்னதோடு நில்லாமல் மூவாயிரத்துக்கு அவனுக்குக் கிடைத்த செக்கையும் அவர் முன் வைத்தான். சபேசையர் திக்பிரமை கொண்டார். தாம் கேட்டதும் காண்பதும் கனவா நனவா என்று அவருக்குச் சிறிது நேரம் புரியவே இல்லை. அவர் பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்; இல்லை. அது கிடக்கட்டும். அவன் அவர் மாப்பிள்ளையான பிறகு பணமா பெரிது? அவனுடைய இந்த மேலான செய்கை அவருக்குப் பின்னும் சந்தோஷத்தை யல்லவா கொடுத்துவிட்டது? மாப்பிள்ளை தம்மை ஏமாற்றினதாகக் கோபம் கொள்வதற்கு மாறாக அவனுடைய இந்த உயர்ந்த குணத்திற்கு இரட்டிப்பு ஆனந்தம் கொண்டார்.

தந்திரமோ மந்திரமோ கல்யாணம் முடிந்துவிட்டது. சபேசையர் சங்கற்பம் பூர்ண வெற்றி பெற்றதா? ரகுராமன் கடமை உணர்ச்சி வென்றதா? கோபாலன் தந்திரம் வென்றதா? யாருக்கு வெற்றி?—இதில் சந்தேகம் என்ன? பத்மினிதான் நிச்சயமாக வென்றாள்.

பச்சை மோதிரம்

கங்காதர ஐயருக்கும் அவர் சம்பந்தி சத்தியவானுக்கும் மனஸ்தாபம் என்பது ஊர் அறிந்த விஷயம் ஆகி விட்டது. அதுபற்றிப் பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டனர். கங்காதர ஐயரும் அவர் வீட்டாருந்தான் சண்டைக்கு மூல காரணம் என்பது சிலர் அபிப்பிராயம். அல்ல, சத்தியவானும் அவர் மனைவி சாவித்திரியுந்தான் என்று சிலர் சந்தேகமறத் தீர்மானித்தார்கள். எப்படியாயினும் கங்காதர ஐயர் வெகு நல்ல மனிதர். சத்தியவானோ—? அவரை 'அப்பாவி' என்றுதான் சொல்ல வேண்டும். பதற்றமாகக்கூட ஒரு வார்த்தையும் பேசத் தெரியாது; அப்படி இருக்கும்பொழுது அவர்களுக்குள் மனஸ்தாபம் எழுவானேன்? அவர்களின் ஸ்ஹதர்மிணிகளே அதற்குக் காரணம் என்றுதான் நாம் ஒருவாறு ஊகிக்கவேண்டும். ஆனால் அவர்களையும் பொல்லாதவர்கள் என்று சொல்லுவதற்கு இல்லை. சிநேகிதர்களுக்கும் உறவினர்களுக்கும் மிகவும் வேண்டியவர்களே. ஆனால் இது சம்பந்தி மனப்பான்மை; இந்த விஷயத்தில் நல்லவர்கள் கெட்டவர்கள் என்கிற வித்தியாசம் ஏது?

கல்யாணத்திலிருந்து சத்தியவானின் மனைவி சாவித்திரி, தாங்கள் சீர்வகைகளில் மாப்பிள்ளை வீட்டாருக்கு அதிகமாகவே செய்ததாகவும், அவர்கள் பதிலுக்குச் செய்த மரியாதைகள் அதற்குக் கொஞ்சமும் தகுந்தவை அல்ல என்றும் எண்ணினாள். அதைப்பற்றி அவள் தான் வாய் திறக்கவே இல்லை என்று சொல்லிக்கொண்டாலும் அது கங்காதர ஐயர் மனைவி கௌரியின் காதுக்கு எவ்விதமோ எட்டித்தான் இருந்தது. மனத்திலுள்ளதைத் துளியும் வெளிக்காட்டாமல் இருக்கும் சக்தி சாவித்திரிக்கு இருந்திருக்க முடியுமா? கௌரியோ, பிள்ளையைப் பெற்றவள்; அவளுக்கு மரியாதைகள் எவ்வளவு செய்யினும் அதிகமாக ஒரு பொழுதும் ஆகிவிடாது. மனஸ்

தாபம் வராமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்புப் பெண் வீட்டாருடையது என்கிற கொள்கைகள் உள்ளவள். இவ்விதம் நினைப்பவள் சாவித்திரியின் குறைகளைத் தீர்க்க முன்வருவாளா? அதற்கு முற்றும் மாறாக, 'சாவித்திரி இம்மாதிரி எவ்விதம் நினைக்கலாம்?' என்றுதான் கோபம் கொண்டாள்.

சாவித்திரியோ, 'இக்காலத்தில் பெண்வீட்டார் என்கிற தாழ்வு உண்டோ' என்னும் எண்ணங் கொண்டவள். இருவரும் இம்மாதிரி மனப்பான்மை கொண்டிருக்கும் பொழுது கல்யாணம் சிறு சிறு சச்சரவுகள் கூட இல்லாமல் நடைபெறுவதை எதிர்பார்க்க இடம் ஏது?

இன்னும் ஒரு வருஷம் பாக்கி இருக்கும் 'ஹானர்ஸ்' படிப்பைப் பூர்த்தி செய்யப் பட்டணம் போகவேண்டியவன் மாப்பிள்ளை. அவன் புறப்பட இன்னும் சில தினங்களே இருந்தன. 'அதற்குள் ஆறும் மாதம்* செய்து விட்டால் பின்பு தீபாவளிக்கு ஒரு நாள் லீவு எடுத்துக் கொண்டு வந்தாலும் போதும்.' இவ்விதம் சாவித்திரி கணவருடன் கலந்து ஆலோசித்து ஆறும் மாதத்திற்கு ஏற்பாடுகள் செய்தாள்.

மாப்பிள்ளைக்குப் பச்சைக் கல் மோதிரம் செய்து போடவேண்டுமென்று சாவித்திரி சொன்னபொழுது சத்தியவானுக்கு அவ்வளவாகச் சம்மதமில்லை. "பச்சைக் கல் விலையும் அதிகம்; அதற்கு மதிப்பும் இல்லை" என்று அவர் ஆக்ஷேபித்தார். ஆனால் சாவித்திரி நினைத்தால் விடுவாளா? "மாப்பிள்ளையின் சிவந்த விரலுக்கு நன்றாயிருக்கும்; தவிரக் கல்யாணத்தின்போது வைர மோதிரம் கொடுத்திருக்கிறது" என்று அவள் வாதித்தாள். இப்படி அவள் பிடிவாதத்தின்பேரில் ரூபாய் ஐந்நூறு கொடுத்துப் பச்சைக் கல் வாங்கி மோதிரமும் செய்து போட்டாகி விட்டது. சாவித்திரி எண்ணினது மிகவும் பொருத்தமே.

---

*ஆறும் மாதமென்பது கல்யாணம் கழித்த மறுநாள்கூட நடத்தலாம். அதற்குச் சீர்வகைகள்தாம் முக்கியமே தவிர ஆறு மாதம் ஆக வேண்டும் என்பதல்ல.

மாப்பிள்ளையின் வெண்டைப் பிஞ்சு போன்ற நீண்ட சிவந்த விரலில் அது வெகு சோபிதமாகத்தான் இருந்தது.

மோதிரத்தைக் கண்டபோது கௌரிக்கு, 'உபயோகமுள்ளது ஏதாவது செய்யமாட்டார்களா? பச்சைக் கல் மோதிரம் ஒரு நகையா? அதுவும் ஒருவன் எத்தனை மோதிரங்கள் போட்டுக்கொள்வான், செட்டிப் பிள்ளைகள் போல!' என்று பட்டது. உடனே, "இதென்ன சீர் என்று செய்திருக்கிறீர்கள்?" என்று பதற்றமாய்க் கேட்டாள். இந்தக் கேள்வியைச் சாவித்திரி எதிர்பார்க்கவே இல்லை. 'இப்படி ஒன்றும் அறியாதவள் ஒருத்தி இருப்பாளோ' என்று நினைத்தாள். 'நமது கௌரவத்தையும், நம் பெண்ணின் அருமையையும் அறிந்திருக்கிறாளா,பச்சையின் உயர்வும் அழகும் தெரிந்துகொள்வதற்கு?' என்று கருதினாள். "மிகவும் உயர்ந்தது; ராஜக்கிருகத்தில் இருக்கக் கூடியது. ரூபாய் ஐந்நூறல்லவோ கொடுத்து வாங்கி இருக்கிறது?" என்று பெருமை தொனிக்க எடுத்துச்சொன்னாள். அவள் பெருமையைக் கேட்கக் கௌரிக்குச் சகிக்கவில்லை. அதுவும் தனக்கு ஒன்றும் தெரியாதென்று மட்டம் தட்டுவதாக உணர்ந்தாள். "இவ்வளவு பணத்தை வீண் செய்வார்களா? உபயோகத்திற்கு ஏற்றதாய் எவ்வளவோ செய்யலாமே! என்ன இருந்தாலும் பச்சைக்கல் இரவில் வெறும் இடமாகத்தான் தோன்றும். சொல்வியென்ன? ராஜாவின் ராசி அது. மதுரை மீனாக்ஷிபோல் மரகதச் சாயையாகப் பெண்டாட்டிதான் கிடைத்தாளென்றால், பச்சை மோதிரமும் கிடைத்து விட்டது" என்று ஒரே வார்த்தையில் சாவித்திரியை அடக்க எண்ணிக் கூறிவிட்டாள் கௌரி.

'பெண்ணைக் கறுப்பென்று சொல்லிக் காண்பிக்கிறாள்!' சாவித்திரிக்குத் தாங்கவே இல்லை. கோபமும் ஆத்திரமும் அவளை மீறி வந்தன. என்ன பேசுகிறோம் என்பதை மறந்தே போனாள். "அவளத்தனை அழகாக எல்லாப் பெண்களும் இருந்தால் போதும். சிவப்பு இருந்தால் போதுமா! முகத்தில் பவிஷு வேண்டாமா?" என்று சம்பந்தி அம்மாளையே சுட்டிக்காட்டுவது போலச் சொன்னாள். கௌரி இச்சொல்லைப் பொறுப்பது எப்படி?

வேண்டுமென்றே விருந்திற்கு அழைத்து அவமதித்ததாக நினைத்தாள். சாப்பிடாமலே வீடு சென்ருள். கங்காதர ஐயருக்கோ, அவர் மகன் ராஜகோபாலனுக்கோ விஷயங்கள் விளங்கவே இல்லை. சமாசாரம் தெரிந்த பிறகும் செய்யும் வகை இன்னதென்று புலப்படவில்லை. பாவம், சத்தியவான் யாதும் அறியாமல் தவித்தார். சாவித்திரியோ அழுதுகொண்டிருப்பது தவிர விஷயத்தை விளங்க வைக்க முன் வரவில்லை. வந்திருந்த பந்துக்களே கடைசியில் இங்கிரண்டு அங்கிரண்டு பேசி ஆரும் மாதத்தை முடித்து வைத்தார்கள் என்று சொல்லவேண்டும். சச்சரவு என்ருல் பேசி விருத்திசெய்து வேடிக்கை பார்ப்பதில் அவர்களுக்கு அளவற்ற சந்தோஷமே. இருந்தாலும் இன்று காரியம் முடிந்து சாப்பாடும் நடந்தாக வேண்டுமே! கௌரி ஊர்ச் சிரிப்புக்கு இடம் கொடுக்கக் கூடாதென்று அன்று கோபம் தணிந்தவள் போல் காண்பித்துக்கொண்டாலும், பிறகு சம்பந்தி வீட்டை மிதிப்பதில்லை என்கிற தீர்மானம் கொண்டவள் போல் பேசினுள். "அவரும் அவர் பிள்ளையும் போய் உறவு கொண்டாடிக் கொள்ளட்டும்" என்று வெறுப்பாய்க் கூறினுள்.

மாப்பிள்ளை நாளைக்குத்தான் பட்டணம் போகப் போகிருர் என்று சாவித்திரி நினைத்திருந்தாள். அப்படித்தான் அன்றே சொன்னுர்கள். சந்தியாகாலம்; பூஜை அறையில் விளக்கேற்றிவைக்கச் சாவித்திரி சென்ருள். மாடி வராந்தாவில் தெருவில் போவோரையும் வருவோரையும் வேடிக்கை பார்த்து நின்றிருந்த அவள் பெண் லக்ஷ்மி வேகமாக ஓடிவந்து சாவித்திரியிடம் தன் கணவன் ஊருக்குப் போகிருற்போல் இருக்கிறது என்பதைத் தெரிவித்தாள். பெண்ணின் துடிதுடிப்பையும் அவள் சொல்லும்பொழுது அவளிடம் ததும்பும் வெட்கத்தையும் கண்ட சாவித்திரி, 'அதற்குள் என்ன பிரேமை? தொடர்ந்து கவலையுங்கூட' என்று நினைத்துப் புன்சிரிப்புக் கொண்டாள். "மாப்பிள்ளையாக இராது; நாளைக்குத்தானே நல்ல நாள் பார்த்திருக்கிருர்கள்?" என்ருள் சிரித்துக்கொண்டே.

அதெப்படி இல்லாமல் இருக்கும்? லக்ஷ்மிதான் நேரில் கண்ணுல் பார்த்தாளே. முதலில் அவளும் கவனிக்க

வில்லைதான். ஆனால் வண்டி வீட்டைத் தாண்டுகிற சமயம் அவள் தற்செயலாகப் பார்த்துவிட்டாள். ஒரு நிமிஷம் அவளுக்கு வெட்கத்தால் ஒன்றும் தோன்றவில்லை; பிறகுதான் அவன் ஊருக்குப் போகிறானென்பது மனத்தில்பட்டுத் தாயிடம் ஓடிவந்தாள். "இல்லை, அம்மா; பெட்டி படுக்கைகள் இருப்பதைப் பார்த்தேன்" என்று வற்புறுத்திச் சொன்னாள். சாவித்திரிக்கு யோசனை வந்து விட்டது. 'ஒருகால் இருக்குமோ? நமக்கு ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே. சொல்ல வேண்டுமென்பது என்ன? சம்பந்தி அம்மாள் கோபத்தைக் காண்பிக்கும் விதம் இதுவாயிருந்தால்!' சாவித்திரிக்கு வயிறு பகீரென்றது. "ஐயோ! கௌரி வெகு கொடியவள்போல் இருக்கிறதே. தெரியாமல் பெண்ணைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டேனே" என்று அங்கலாய்க்கத் தொடங்கினாள். பிறகு அவளுக்கு ஒரு காரியத்திலும் மனம் செல்லவே இல்லை. கணவர் வெளியிலிருந்து வந்ததும் முதற் காரியமாக விசாரித்துவரச் செய்தாள். அவரும் அவ்விதமே செய்து, 'மாப்பிள்ளை பட்டணம் போனது வாஸ்தவந்தான்; திடீரென்று நிச்சயம் செய்து புறப்பட்டதால் வந்து சொல்லிக்கொள்ள முடியவில்லை' என்று சம்பந்தி சொன்னதாகக் கூறினார். ஆனால் கௌரி வேண்டுமென்று செய்ததுதான் இது என்று சாவித்திரிக்குத் தெரியும். "கிளியை வளர்த்துப் பூனையிடம் கொடுப்பதுபோல் செய்துவிட்டீர்களே!" என்று கணவரிடம் சொல்லி அழுதாள். "பச்சைக்கல் மோதிரந்தான் இவ்வளவிற்கும் காரணம். அது வேண்டாமென்று அப்பொழுதே சொன்னேனே" என்று அவர் சொல்லிக் காண்பிப்பாரா! பச்சைப் புண்ணில் கோல் இட்டது போலல்லவா இருக்கும்? 'பிள்ளையின் மனத்தையும் கலைத்துவிடுவாளோ என்னவோ? கௌரி இப்படிப்பட்ட ராக்ஷசியா? எனக்குத் தெரியாமற்போயிற்றே. தாய் தான் சொன்னாலும் இந்தக் காலத்தில் ஒரு பிள்ளை தட்டாமல் கேட்பானோ? எல்லாம் நம் அதிருஷ்டம்' என்று சாவித்திரி ஏங்கியே போனாள்.

ராஜகோபாலன், ஆறும் மாதத்தன்று தாய்க்கும் மாமியாருக்கும் நடந்த வாக்குவாதத்தில், கண்கலங்கி

நின்றிருந்த மனைவியை அன்பு வார்த்தைகளால் தேற்றத் துடித்துக்கொண்டிருந்ததையும், எவ்வளவோ சாமர்த்திய மாக முயன்றும் முடியாமல்தான் அவ்விதம் மனைவியைப் பார்க்காமல் பட்டணம் சென்றான் என்பதையும் சாவித்திரி அறிந்திருந்தால் அவள் மனம் எவ்வளவோ சமா தானம் அடைந்திருக்கும். ஆனால் அதை அவள் அறிய வகை ஏது?

சாவித்திரியும் சத்தியவானும் சம்பந்திகளைச் சமா தானம் செய்ய முயன்றதெல்லாம் நெருப்பை அணைக்கக் காற்று உதவுகிற ரீதியில்தான் பலன் அளித்தது. சத்திய வானுக்குச் சாமர்த்தியம் போதாது. சாவித்திரியோ பொறுமை சிறிதும் அற்றவள். அப்படி இருக்கப் புயற் காற்று வேகத்தில் மனஸ்தாபம் விருத்தி அடைவதில் ஆச்சரியம் ஏது?

தொடர்ந்து வந்த பண்டிகைகள் ஒன்றுக்கும் நாட்டுப் பெண்ணைக் கௌரி வீட்டிற்கு அழைக்கவே இல்லை. கேட் கிறவர்களுக்கு ஏதேதோ காரணம் கூறிவந்தாள். வர லக்ஷ்மி விரதத்திற்குக்கூட நாட்டுப் பெண்ணைச் சுபமாய் அழைத்துப் பூஜை எடுக்காதது சாவித்திரிக்கு மிகுந்த கவலையையும் வருத்தத்தையும் கொடுத்தது. நம் ஹிந்து ஜாதியில் அது வெகு முக்கியமான பூஜையல்லவா? சாவித்திரி வலுவிலே தாழ்ந்து சென்று கேட்டதற்குக் கூட, "லக்ஷ்மி பெரியவளான பிறகு தானே எடுத்துக் கொள்ளட்டும்" என்று விட்டேற்றியாகப் பதில் சொன் னாள் கௌரி. கோபத்தில் அவ்விதம் பேசுகிறாளென்பது சாவித்திரிக்கு நன்கு தெரிந்தது. "உடனொத்த குழந்தைகளுக்குக் கல்யாணங்கூடச் செய்யாமல் ஆனந்த மாகப் பள்ளிக்கூடம் போகவிட்டிருக்கிறார்கள். நாம் கல்யாணத்தைச் செய்து குழந்தைக்குக் கவலையை வரு வித்து வைத்திருக்கிறோமே. 'மக்களுக்குச் சத்துரு மாதா பிதா' என்னும் வசனம் நமக்குத்தான் பொருந்தும்" என்று சாவித்திரி வருந்தினாள்.

தீபாவளி வருகிறதே என்கிற விசாரம் அவளுக்கு ஒரு மாதம் முந்தியே வந்துவிட்டது. அதற்குக் கௌரி என்ன கூத்துக் கட்டி அடிப்பாளோ? பிள்ளையை வரவழைக்

காமலே இருந்தாலும் இருப்பாள். அவர்கள் வரும்படி சொன்னால்தானே அவன் வர முடியும்? ஏற்கனவே ஊர் வம்பு தாங்கவில்லை. தீபாவளிக்கு மாப்பிள்ளை பட்டணத்தில் இருந்துகொண்டே வராவிட்டால் பெண்ணைத் தள்ளிவைத்து விட்டதாகக்கூடச் சொல்லத் தொடங்குவார்கள். மானம் அவமானம் என்பது அவர்களுக்கு இல்லையா என்றால் அவர்கள் எல்லாவற்றையும் துடைத்து விட்டிருக்கிறார்களே. சம்பந்திப் பிராமணரும் மனைவி மனம்போல் நடக்கிறாரே தவிரப் பெரிய மனுஷத்தனமே காணோம்' என்று பல பல நினைத்துத் தவித்தாள் சாவித்திரி. "இப்படி நாம் பொறுத்துப் போவதில் என்ன பிரயோஜனம்? நீங்கள் தாம் சம்பந்திப் பிராமணரிடம் சென்று எல்லாவற்றையும் எடுத்துக் கூறினால் என்ன? அவளிடந்தான் வாய் திறக்க முடியவில்லை. தப்பாக எடுத்துக்கொள்கிறாள். அவரும் அப்படியே இருப்பாரா? நாம் வருந்துவதும் அவர்களுக்குக் கொஞ்சம் தெரியட்டுமே. அப்போதாவது மனத்தில் படுமோ என்னவோ?" என்று சாவித்திரி கணவரிடம் கூறினாள். சத்தியவானுக்கும் அது சரியென்றே பட்டது. தம் ஆசைகளையும், வருத்தங்களையும் எடுத்து உரைப்பதில் தவறு ஏற்படக்கூடுமென்று அவருக்குச் சிறிதும் தோன்றவில்லை. கங்காதர ஐயரிடம் சென்று தம் மனைவி மிகவும் வருத்தப்படுகிறாள் என்பதை எடுத்துச் சொன்னார். தீபாவளியாவது மனஸ்தாபம் இல்லாமல் சந்தோஷமாய் நடக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தாம் வெகு உருக்கமாகவும் சாமர்த்தியமாகவும் பேசியதாகவே எண்ணிக்கொண்டு அவர் வீடு வந்து சேர்ந்தார்.

கங்காதர ஐயர் அதைக் கேட்டுக்கொண்டிருந்தபொழுது அவ்வளவு தப்பாக நினைக்கவில்லை. ஆனால் அதைக் கெளரி கேட்டாளோ இல்லையோ, அவளுக்குக் கோபம் தாங்கவே இல்லை. "நன்றாய்க் கேட்டுக்கொண்டிருந்தீர்கள்! 'குதிரை தூக்கிப் போட்டதுமல்லாமல் குழியும் பறித்ததாம்' என்பதற்கு ஏற்பச் சொன்னதும் சொல்லிவிட்டு என்பேரில் திரும்புகிறாளே. நல்ல கெட்டிக்காரப் பிராம்மணர். பெண்டாட்டிக்காகப் பரிந்துபேசி

யிருக்கிறார். நீங்களும் கேட்டு வந்தீர்கள். நம் மனைவியின் மேல் தூஷணை என்பதுகூட அறியாமல் இருந்திருக்கிறீர்களே? புருஷனும் மனைவியும் லேசில்லை!'' என்று கோபமாய் அடுக்கினாள். இதுவரையிலும் தீபாவளிக்குப் பிள்ளை வரவேண்டியதுதான் என்று நினைத்திருந்தவள், இப்பொழுது தீபாவளிக்கு ராஜா எதற்காக வருவது என்று நினைத்தாள். அப்படியே அவன் மாமனார் மாமியார் இருவருடைய பொல்லாத்தனங்களையும் எடுத்துக் கூறித் தீபாவளிக்கு வருவது சரியல்ல என்று பிள்ளைக்குக் கடிதமும் எழுதினாள்.

சாவித்திரிக்கும் இவ்விஷயம் எட்டிற்று. சாவித்திரி அறியாமல் இருக்கவேண்டுமென்பது கௌரியின் நோக்கம் அல்லவே! அவள் முன்னாடியே அறிந்து கஷ்டப்படாவிட்டால் கௌரி கோபித்துக்கொள்வதில்தான் பிரயோஜனம் என்ன? சாவித்திரி புழுவாகத் துடித்தாள். 'சமரசம் செய்யப் போய், இவ்விதம் 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட' சங்கதியாக முடிந்துவிட்டதே! இனி என்னதான் செய்வது!' ஐயோ ஈசுவரா! இக்குழந்தை தலையிலும் எங்கள் தலையிலும் நீ என்னதான் எழுதி இருக்கிறாயோ தெரியவில்லையே!' என்று ஏங்கிப் புலம்பினாள். 'இனித் தெய்வந்தான் கதி. மனிதர்களால் ஆகும் காரியமல்ல இது' என்று அவளுக்குப் பட்டுவிட்டது. ஸதா பகவானை வேண்டத் தொடங்கினாள். ஜபதபங்களும் கோவிலுமாகவே இருந்தாள். கணவரிடம் சொல்லிப் புலம்பக்கூட அவளால் முடியவில்லை. அவர் சொல்லும் சமாதானங்கள் அவளுக்குத் தெம்பை ஊட்டவில்லை. மனக் கஷ்டப்பட்டுத் துன்புறுவது தவிர வேறு வழியே இல்லாமற் போய்விட்டது. இருதயம் ஒடிந்துகொண்டிருக்கும்பொழுது பேச்சு எங்கிருந்து வரும்? அவள் மௌனமான துக்கம் குழந்தை லக்ஷ்மியையும் பாதிக்கத்தான் செய்தது. அவள் சிரிப்பற்று உலாவி வந்தாள். அதைக் காணச் சாவித்திரி இன்னும் துக்கத்தால் க்ஷீணித்தே போனாள். தங்கள் கஷ்டத்தைக் காட்டிலும் மக்கள் கஷ்டம் தாங்க முடியாததல்லவா?

தீபாவளிக்கு இன்னும் ஒரு வாரங்கூட இல்லை. கங்காதர ஐயரிடமிருந்து ஆள் ஒருவன் சம்பந்திகளை உடனே

வரும்படி சொன்னதாகச் சொல்லிச் சென்ருன். என்ன விசேஷம்? சாவித்திரிக்கும் சத்தியவானுக்கும் ஒன்றுமே தோன்றவில்லை. வந்த ஆளை விசாரித்ததற்கு அவன் ஏதோ பட்டணத்திலிருந்து கடிதம் வந்ததாக மட்டும் சொன்னுன். சாவித்திரியும் சத்தியவானும் பறந்து ஓடி வந்தபொழுது கங்காதர ஐயர் சத்தியவானை வரவேற்றுக் கடிதம் ஒன்றைக் கொடுத்தார். சாவித்திரியும் கௌரி யின் வரவேற்பில் ஏதோ மாறுதல் இருப்பதை உணர்ந் தாள். சத்தியவான் படித்த கடிதம் பின்வருமாறு:

"க்ஷேமம்,

கங்காதர ஐயர் அவர்களுக்கு அநேக கோடி நமஸ் காரம் செய்து ராஜாவின் சிநேகிதன் சந்திரன் எழுதிக் கொண்டதாவது; க்ஷேமம். க்ஷேமத்திற்கு எழுதப் பிரார்த் திக்கின்றேன். நேற்று உங்கள் மகனுக்கு வரவிருந்த ஆபத்து நீங்கள் ஏதோ ஜன்மாந்தரத்தில் செய்த தவத் திஞல்தான் விலகிற்று என்னலாம். நானும் அவனும் இரவு எட்டு மணிக்குக் கடற்கரையிலிருந்து திரும்பி வந்துகொண் டிருந்தோம். விளக்கணைப்புக் காலமாகை யால் ஜாக்கிரதையாகப் போய்க்கொண் டிருந்தும் எதிர்ச் சாரிக்கு மாறும் சமயம் கார் ஒன்று வந்த வேகத்தில் எங் களை யமனுலகுதான் அனுப்பியிருக்கவேண்டும். ஆனல் தெய்வாதீனமாக, உங்கள் மகன் விரலில் அணிந்திருந்த பச்சை மோதிரமே எங்களைக் காப்பாற்றியது என்பதைப் பிறகு காரின் டிரைவர் சொல்லத் தெரிந்து ஆச்சரியம் கொண்டோம்.

இருட்டில் அவனுக்கு ஆட்கள் தெரியாமல் இருக்கும் பொழுது காரின் மங்கல் வெளிச்சம் பட்டு ராஜாவின் விர லில் அணிந்திருந்த பச்சைக்கல் திடீரென ஒளி வீசினதைக் கண்டிருக்கிருன். உடனே 'பிரேக்' போட்டும் வேகமாய் வந்த காரணத்திஞல் எங்களுக்கு வெகு சமீபம் வந்துதான் நின்றது. அந்த அதிர்ச்சியில் ராஜா விழுந்துவிட்டான். ஆனல் காயம் ஒன்றும் இல்லை. கவலைப்படவேண்டாம். காரின் சொந்தக்காரரே எங்களை ஹாஸ்டலில் கொண்டு விட்டுச் சென்ருர். அவர் ஒரு ரத்தின வியாபாரியாம். ரத்தினப் பரீக்ஷைகள் நன்கு தெரிந்தவராம். ராஜாவின்

விரல் மோதிரத்தைக் கண்டு நல்ல அதிருஷ்டப்பச்சை என்று கொண்டாடினுர். 'அது உள்ள இடத்தில் அஷ்டை சுவரியமும் பொங்குமாம். இன்று அது உயிர்போவதி னின்று உங்களையும், உங்களைக் கொல்லும் மஹாபாபத்தி னின்று என்னையும் காப்பாற்றிவிட்டது' என்று புகழ்ந் தார். எதுவானுலும் ராஜா சொல்வதுபோல் எங்கள் உயிரை நேற்று அதுதான் காப்பாற்றி இருக்கிறது. என்னவோ எல்லாம் ஈசன் செயல்.

அவனுக்காகத்தான் இதை உங்களுக்கு எழுது கிறேன். அவனுக்கு இன்னும் சிறிது அதிர்ச்சி இருக்கத் தான் இருக்கிறது. எல்லாம் நாளைத்தினம் சரியாகிவிடு மென்று டாக்டரைக் கேட்டதில் சொன்னுர். ஒன்றும் கவலை வேண்டாம். வேணும் அநேக கோடி நமஸ்காரம்.

இப்படிக்கு,
சந்திரன்.''

இந்தக் கடிதம் எல்லாவற்றையும் மாற்றிவிட்ட தென்று நாம் சொல்லவும் வேண்டுமோ? கௌரியின் கோபமெல்லாம் எங்கேயோ பறந்து போய்விட்டது. 'அச்சானியம்போல் என்ன காரியம் செய்ய இருந்தேன்!' என்று தவித்தாள். ''தலைத் தீபாவளி கூடாது என்று நினைப்பேனு? பாவி, எனக்குப் புத்தி எங்கோதான் சென் றிருக்கவேண்டும். சாவித்திரிக்காகவா? என் பிள்ளைக்காக வன்ருே?'' என்று மேலும் மேலும் நியாயங்கள் தோன் றத் தொடங்கின. 'யார் செய்த புண்ணியமோ, குழந்தை பிழைத்தான்; வீண் மனஸ்தாபங்கள் வேண்டாம். காரி யத்தை நன்ருய் நடத்தவேண்டும்' என்று தீர்மானம் கொண்டாள். அன்றே கணவரைப் புறப்பட்டுச் சென்று நேரில் மகனைப் பார்த்து அழைத்துவரச் சொன்னுள். அவன் வரும் வரையிலும் அவனைப் பார்க்காமல் எப்படி இருப்போமென்று இருந்தது அவளுக்கு.

சாவித்திரியோ எத்தனை தாழ்ந்து போகவும் இப் பொழுது தயார். குருடன் வேண்டுவது கண்தானே? இப்பொழுது அவள் வேண்டுவதும் மாப்பிள்ளையின் க்ஷமந்தானே?

பிறகு தீபாவளி விமரிசையைப் பற்றிச் சொல்லத் தேவையே இல்லை. சாவித்திரி செய்யும் எந்தச் சீரையும் கௌரி குறை கூறுவதாக இல்லை. அவள் எந்தப் பச்சைக் கல் மோதிரத்தைத் தூஷித்தாளோ அதையே பூஜையில் வைத்துப் பூஜிக்கத் தயாராக இருக்கும்பொழுது ஏன் குறை கூறுவாள்?

சாவித்திரியின் ஆனந்தத்திற்கு இணையே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். தான் வேண்டின தெய் வங்களே மாப்பிள்ளையை ஆபத்திலிருந்து காப்பாற்றித் தீபாவளிக்கும் கொண்டுவந்து சேர்த்து யாவும் சுபமாக முடியச் செய்திருக்கின்றன என்று சந்தோஷித்தாள்.

ராஜாவும் அவன் சிநேகிதன் சந்திரனுமே அத்தெய் வங்களாக இருக்கலாம் என்பதை யார் கண்டது! தீபா வளிக்கு வரவேண்டாமென்று கௌரியிடமிருந்து கடிதம் வந்தது முதல், அந்தச் சாக்கில் மனைவியைப் பார்க்கத் தான் கொண்டிருந்த ஆவல் வீணாகிவிட்டதே என்று ராஜா வருந்தினதென்னவோ உண்மையே. அதைத் தீர்க் கும் உபாயத்தை அவனும் அவன் சிநேகிதன் சந்திரனு மாக மூளை குழம்ப யோசித்ததும் அதைவிட உண்மையே. அதன் விளைவுதான் இவ்வளவும் என்று தீர்மானமாகச் சொல்ல நாம் யார்?

ராமுவின் தீர்மானம்

அன்று வெள்ளிக்கிழமை. ராமு வால்மீகி ராமாயணம் கேட்டுவிட்டுப் 'பஸ்ஸில்' வீடு திரும்பிக்கொண்டிருந்தான். இப்பொழுது சில மாதங்களாய்த்தான் வாரம் ஒரு நாள் தொடர்ந்து நடந்துவரும் ராமாயணக் கதையை அவன் கேட்டுவருகிருன். அது அவனுக்கு ஒரு விதத்தில் ஆறுதல் அளித்து வந்தது என்று சொல்லவேண்டும். முதலாவது, அவனுக்கு யந்திரம்போல் ஆபீசில் உழைப்பதோடு வாழ்நாட்களைக் கடத்திவிட மனமில்லை. கலா ரசிகர்களின் மத்தியிலே தானும் ஒருவனுக விளங்க வேண்டுமென்று அவனுக்குச் சொல்ல முடியாத ஆசை. அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சௌகரியம் அவனுடைய வாழ்க்கையில் அமையவில்லை. அதனுல் அவனுக்கு மிக வருத்தம். நெடுநாளாக இருந்த அந்த ஆசையை இப்பொழுது ராமாயணம் கேட்பதன் மூலம் ஓரளவு நிறைவேற்றுகிருேமென்ற திருப்தி அவன் மனத்தில் உண்டாயிற்று. அதுவும், ராமாயணம் சொல்லுகிற சதாசிவ ஐயர் மிகவும் படித்தவர். பல பாஷைகளிலுள்ள பல காவியங்களை ரசமறிந்து படித்தவர்; விஷயங்களை வெகு அழகாக எடுத்து விளக்குபவர்.

இரண்டாவது விஷயந்தான் மிகவும் முக்கியமானது. அவனுடைய குடும்பத்தொல்லைகளுக்கு நடுவில், அது அவனுக்குப் பெரிய மனச்சாந்தியை அளித்தது. அவன் குடும்பத்தில் அவன் தாய், அவன் தம்பி, அவன் மனைவி, அவன் ஆக இந்த நான்கே பேர்கள். ஆனுல், அதிலுள்ள சண்டை சச்சரவுகளோ ஆயிரம். இப்படி வேறு எங்கும் இருக்க முடியாதென்றே அவன் நினைத்தான். அவர்கள் தினசரி வாழ்க்கையில் ஒத்துழையாமை என்னும் கொள்கையை உண்மையிலே கடைப்பிடிக்கத் தீர்மானித்தவர்களாகவே தோன்றினுர்கள். அவன் ஆபீசிலிருந்து அலுத்து வீடு வந்தால், ஏதாவது சண்டை சச்சரவு அவ

னுக்காகக் காத்திருக்கும். தாயும் மனைவியும் தனித்தனியே முறையிடுவார்கள். அவன் அதைத் தீர்த்து வைக்காததற்காக அவன் பேரிலேயே அவர்களுக்குக் கோபம் உண்டாகும். அவனுக்கென்ன, நீதிபதி உத்தியோகமா கொடுத்திருக்கிறார்கள்; அவன் கூறும் தீர்ப்பை அப்படியே ஏற்றுக்கொள்ள? அப்படியில்லாமல், ஒருவர் பக்கம் பேசினால் இன்னொருவருக்குத் தாங்க முடியாத கோபம் உண்டாகும். அதன் பலன் சாப்பாடுகூட அவனுக்குச் சரியாகக் கிடைக்காததுதான்.

அவன் தம்பி சமாசாரமோ, எல்லாவற்றுக்கும் மேலானது. அவனுக்கு வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. தப்பிக் கிடைத்த வேலையையும் சரியாகப் பார்க்கத் தெரியவில்லை. அவன் அந்த ஆத்திரத்தில் தாறுமாறாக நடந்து, ராமுவுக்குச் சொல்ல முடியாத தொந்தரவுகள் கொடுத்து வந்தான். பல சமயங்களில் ராமுவையே அவன் குற்றம் சாட்டவும் தொடங்கினான். இந்தக் குடும்ப மாகாத்மியத்தை ஒரு வழியாகச் சரிப்படுத்தலாமென்று ராமு எவ்வளவோ முயன்று பார்த்தான். ஒன்றும் சரிப்படவில்லை. விரோதமான பலனே உண்டாயிற்று. வீணில் வாக்குவாதம், கக்ஷிப் பிரதிகக்ஷி. இம்மாதிரியேதான் முடிந்தது. அவன் தாயும் பல சமயம் அவன் தம்பியின் கக்ஷியில் பேசும்பொழுதுதான் அவனுக்கு வெளிப்படையாகச் சோர்வு தோன்றும்.

இப்பொழுது ராமாயணத்தைக் கேட்கக் கேட்க ராமனுடைய தியாகத்திலிருந்து ஒரு நீதியைத் தான் கற்றுக்கொண்டுவிட்டதாக அவன் நினைத்தான். ஒருவரிடத்திலும் ஒன்றையும் எதிர்பாராமல், எதையும் பொறுத்துக்கொண்டுபோவது என்கிற தீர்மானம் கொண்டான். ராமன் செய்த தியாகம் சாமான்யமானதா? மறு வார்த்தை கூறாமல் சிறிய தாயின் வார்த்தையைச் சிரமேற்கொண்டு பெரிய ராஜ்யத்தைத் துறந்து, காட்டுக்குச் சென்றானே! அந்தத் தியாகம் அனைவர் உள்ளத்தையும் ராமன்பால் ஈடுபடுத்திவிட்டதல்லவா! கடைசியில் எந்தப் பரதனை உத்தேசித்து இவ்வளவும் நடந்ததோ அவனே ராமன் கக்ஷியில் சேர்ந்துவிட்டான்! அதுபோலவே தன் சுயநலமற்ற தன்மையால் இனிமேல்

தன் வீட்டாரைத் தன் வழிக்குத் திருப்பக் கூடுமென்றும், பிறகாவது மன நிம்மதி ஏற்படலாமென்றும் நம்பினான். பொறுமையைக் கைக்கொண்டு நடக்கத் தீர்மானித்தான். தன் தொல்லைகளைத் தீர்த்துக்கொள்ளப் புது வழி கண்டு பிடித்துவிட்டதாக அவனுக்குச் சிறிது சந்தோஷங்கூட ஏற்பட்டது.

அவன் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டியபோது மணி எட்டடிக்கச் சில நிமிஷங்களே இருந்தன. வழக்கத்தைவிட இன்று கதை கொஞ்சம் கூடவே நடந்துவிட்டது. அவனைப் பசி ஒரு புறமும் களைப்பு ஒரு புறமும் துன்புறுத்தின. வீட்டுக் கதவு சார்த்தியிருந்தது. சாதாரணமான நாட்களில் அவனுக்கு அந்த நிலையில் கோபம் உண்டாகியிருக்கும். கதவைத் தட்டினான்; திறக்கவில்லை. ஓங்கித் தட்டிக் கூப்பிட்டான். வளைகள் குலுங்கும் சப்தத்தால் தன் மனைவி வருகிறாளென்று தெரிந்தது. அவள் தாழ்ப்பாளை நீக்கி விட்டுக் கதவைத் திறக்காமலே போய் விட்டாள். கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே சென்றவன், கூடத்தில் பார்த்தான். அவளைக் காணவில்லை. அவள் தன் அறைக்குள் சென்றுவிட்டாளென்று தோன்றிற்று.

அம்மா இருக்கிறாளோ என்று பார்த்தான். அவளையும் காணவில்லை. தன் மனைவி வீட்டில் தனியாக இருக்கும்போது தன்முன் வராமலும் பேசாமலும் இருக்கிறாள். தன் பேரிலேயே அவளுக்குக் கோபம்போலும்! இப்படி நினைக்கவும், காலை ஒன்பதரை மணிக்கு அவசர அவசரமாகச் சாப்பிட்டுச் சென்ற அவன் அவளுக்குக் கோபம் வர என்னதான் செய்திருப்பான் என்கிற எண்ணம் உண்டாயிற்று. எப்பொழுதும்போலானால், இதற்கு மனைவியின்பேரில் அவனுக்குக் கோபந்தான் வந்திருக்கும். பகல் இரண்டு மணிக்கு ஒரு வாய் காபி சாப்பிட்டவன் அவன். பசியாக இருக்கும்போது கோபம் வருவது யாருக்கும் சகஜந்தானே! ஆனால் இன்று 'கோபத்திற்கு இடம் கொடுப்பதில்லை, பொறுமையோடு இருப்பது' என்கிற தீர்மானத்திலல்லவா இருக்கிறான்? அவன் முன்பிருந்த ராமு அல்லவே இப்பொழுது? ராம

னுடைய கல்யாண குணங்களில் ஈடுபட்டு அவ்வுதாரண புருஷனைப் பின்பற்ற நிச்சயித்த ராமசாமி அல்லவா!

சாவதானமாகச் சட்டைகளைக் கழற்றி வைத்து விட்டு மனைவி இருக்கும் இடம் சென்றான். "அம்மா எங்கே? நீ மட்டுமா இருக்கிறாய்?" என்று அவன் கேட்டதற்கு ஒரு விம்மல்தான் பதில் வந்தது. 'இது என்ன இது? அழுகிறாளா என்ன? சமாதானம் செய்ய வேண்டுமா என்ன?' அவனுக்கு இருந்த களைப்பில் அதொன்றும் முடியாதென்று தோன்றிற்று. அவனைப் பசியும் களைப்பும் மிதமிஞ்சி அலைத்தன.

இருப்பினும், "சீதே, என்ன நடந்துவிட்டது?" என்று ஒருவாறு சமாளித்துக்கொண்டுதான் கேட்டான்.

"நான் எக்கேடு கெட்டுப் போனால் உங்களுக்கு என்ன அக்கறை?" என்று விம்மலுக்கு நடுவில் வெடுக்கென்று ஒரு பதில் வந்தது. பெயரென்னவோ அவன் மனைவிக்கும் சீதைதான். ஆனால் கணவனுடன் நடந்துகொள்ளும் விதத்தில்தான் ராமாயணத்திலுள்ள சீதைக்கும் இவளுக்கும் வித்தியாசம்!

அவள் வருத்தம், கோபம், இவைகளுக்குக் காரணம்: அன்று வெள்ளிக்கிழமை. முதல் நாள் வாங்கின உமா ராணிப் புடைவையை உடுத்துக்கொண்டு கோவிலுக்குப் போக வேண்டுமென்று அவளுக்கு ஆசை. அது நடக்கவில்லை. மாமியார் அவளை வீட்டில் காவல் வைத்துவிட்டுக் கோவிலுக்குப் போய்விட்டாள். அவன் தன் இஷ்டம் போல் கவலையற்றுக் கதையோ இன்னொன்றோ கேட்டு விட்டு, நேரம் பொறுத்து வீடு வருகிறான். இவள் மட்டும் வீட்டில் கிடந்து சாகிறாள்.

இவ்விதம் அவன் பேரிலேயே குற்றம் சாட்டினாள். அவனுக்கு எப்படித்தான் இருக்கும்? 'ஏதடா, காலையில் சாப்பிட்டுப்போன புருஷன் இவ்வளவு நாழிகை கழித்து வந்திருக்கிறானே, பசியாக இருக்குமே?' என்கிற விசாரம் இல்லை. முதல் நாள் வாங்கின அந்த அருமையான உமா ராணிப் புடைவையை உடுத்துக்கொண்டு கோவிலுக்குப் போனால்தானா? அதை இப்போது உடுத்துக்கொண்டு முகமலர்ச்சியோடு அவனை வரவேற்கக் கூடாதா?

அவன் தன் மனத்தில் இதை எண்ணினுன். அந்த எண்ணத்தோடு கலந்து மரவுரி தரித்த ராமனும் அவனருகில் நிற்கும் சீதையும் அந்த உள்ளத்திலே நின்ருர்கள்.

காட்டுக்குப் போகிறேன் என்ற ராமனிடம் சீதை என்ன சொன்னுள்? "நானும் உங்களோடு வருகிறேன்" என்று மாத்திரந்தான் சொன்னுள். ராமன் ராஜ்யத்தை ஆண்டாலும், காட்டிலே மரவுரி தரித்துத் திரிந்தாலும் அவளுக்கு ஒன்றும் கவலை இல்லை. அவனை விட்டுப் பிரியாமலிருக்கும் பாக்கியம் ஒன்றுதான் அவள் விரும்பினுள். அப்படிக்கின்றி, "நீ ஆண்பிள்ளையாக இருந்து, இப்படி வெட்கங் கெட்டுப்போய் வனவாசத்தை ஏற்று வந்தாயே" என்று இடித்துக் காட்டியிருந்தால் ராமன் பாடும் சங்கடமாகத்தான் முடிந்திருக்கும். பிதாவின் சத்திய வாக்கை நிறைவேற்றி வைக்கும் தீர்மானம் அப்பொழுது எப்படி முடிந்திருக்குமோ!

ராமு பெருமூச்சு விட்டான். மனைவியைச் சமாதானம் செய்ய முயன்ருன். அதொன்றும் சுலபமான காரியமாக இல்லை. இதற்கிடையில், அவன் தாய், கோவில் சென்றிருந்தவள், திரும்பி வந்து சேர்ந்தாள். வரும் பொழுதே அவன் நேரம் பொறுத்து வீடு வந்ததைத்தான் குறைகூறத் தொடங்கினுள். அவளுக்கு ஜன்மம் மாறி விட்டது. போகிற வழிக்குப் புண்ணியம் தேடிக்கொள்ளக் கோவிலுக்குச் சென்று 'ஹர ஹர' வென்று கன்னத்தில் போட்டு வரவேண்டாமா? காலமெல்லாம் வீட்டில் உழைத்துக்கொண் டிருக்க முடியுமா? அவன் வீட்டே நினைவில்லாமல் நேரம் பொறுத்து வந்தால் அவள் எப்படிக் கோவிலுக்குப் போக முடியும்? அவன் மனைவி சிறிசு. அவளைத் தனியாக விட்டுப்போக முடியவில்லை. இப்படியாக அவள் புகார் சொல்லத் தொடங்கினுள்.

உழைப்பது இவனு, அவர்களா? இவன்தான் அவ்வளவுக்கும் கடமைப்பட்டிருக்கிருன் போலும்! 'சாப்பிட்டாயா?' என்று அவன் தாய் ஒரு வார்த்தை விசாரிக்கவில்லை. தன் குறைகளைக் கூறத் தொடங்கிவிட்டாள். ராமன் தாய் கோசலையானுல் மகன் பசித்திருக்கும்

பொழுது இவ்விதமாக நடந்து கொள்வாளா? சீ! அவனுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. 'இப்படிப்பட்டவர்கள் மத்தியில் ராமனைக் கடைப்பிடித்து நடப்பதென்பது சாத்தியமே இல்லை. கைகேசியின் குணமுள்ளவர்களே தன்னைச் சுற்றியிருந்த எல்லோரும். ஒரு கைகேசியாலே அவ்வளவு நேர்ந்துவிட்டது ராமாயணத்தில். இவர்கள்போல் இருந்தால் இன்னும் எப்படியோ?' என்று நினைத்தான்.

அவன் தம்பி கோபு வீட்டில் சாப்பிட்டுவிட்டுச் சும்மா இருப்பவன்; காவல் இருக்கக் கூடாதா?' என்று மனத்துக்குள் நினைத்தானே தவிர, வாய்விட்டுச் சொல்லவில்லை. அவன் சங்கற்பம் அதைத் தடுத்தது. "எதையும் பொறுத்துக்கொண்டு போகவேண்டும்" என்ற விரதத்தை என்ன தடை வந்தாலும் கடைப்பிடிக்கத் தீர்மானித்திருக்கிருனே.

கோபுவைப்பற்றி இவன் சொல்லவேண்டிய அவசியமே இல்லாமல் செய்துவிட்டாள் அவன் தாய். "கோபு வீட்டிலேயே இருக்கிறதில்லை. அப்படி இருந்தாலும் அவனிடம் ஒன்றும் சொல்வதற்கில்லை. எதைச் சொன்னுலும் தனக்கு வேலையில்லாததனுல் எல்லோரும் இளப்பமாய்த் தன்னை நடத்துவதாக நினைத்துச் சண்டைக்கு வந்துவிடுகிருன்."

இப்படி அவள் சொல்லி வாய்மூடு முன், கோபுவே வந்துவிட்டான். தன்னைப்பற்றி வீட்டில் எல்லோரும் சேர்ந்து வம்பளப்பதாக நினைத்துக்கொண்டான். அவனுக்கு அம்மா என்ன சமாதானம் சொல்லியும் அவன் அடங்கவில்லை.

"என்னைக் கண்டால் இந்த வீட்டில் ஒருவருக்காவது பிடிக்கிறதில்லை. என்னுடைய அம்மாவே என்னைப்பற்றி இப்படி ராமுவிடம் கோள் சொல்ல ஆரம்பித்துவிட்டால், நான் என்ன செய்கிறது? ராமுவுக்கு என்னிடம் உள்ள பிரியந்தான் தெரிந்திருக்கிறது. ஏதோ எறிந்ததைத் தின்னும் நாய் என்று என்னை நினைத்துக்கொண்டிருக்கிருன். இந்த லக்ஷணத்தில், இவள் வேறு சொல்லிக்கொடுக்கிருள்."

அவன் மேலும் மேலும் சொல்லிக்கொண்டே போனான்.

"இந்த அசட்டுப் பிள்ளைக்கு யார் சமாதானம் சொல்லுகிறது ?" என்று அவன் தாய் அலுத்துப் போய்ச் சொன்னாள்.

"ஆமாம், நான் அசடுதான். கையாலாகாதவன்தான். மூத்தபிள்ளைதான் உனக்கு ஒசத்தி. அற்ப உத்தியோகத்துக்காகத்தானே இவ்வளவு பிரமாதப்படுத்துகிறாய்? எனக்கும் கிடைத்தால் உத்தியோகம் பார்க்க மாட்டேனோ? இன்னும் நன்றாகவே பார்ப்பேன்" என்றான்.

அவன் பேசும் பேச்சுக்கு முடிவே இராதென்று தோன்றிற்று. எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த ராமுவுக்கு ஒரே கலக்கமாக இருந்தது. பசியும் களைப்பும் அவன் கோபத்தைத் தூண்டின. ராமாயணத்தையும் நினைத்துக்கொண்டான். எதிரிலிருக்கும் இவனும் சகோதரன், பரதனும் சகோதரன். பரதன் தன் சகோதரன் தனக்குச் சிம்மாதனத்தைத் தந்துவிட்டுப் போய்விட்டானே என்று எவ்வளவு அங்கலாய்த்தான்! இந்தக் கோபு அவன் ஸ்தானத்தில் இருந்தால் என்ன செய்திருப்பான்? ஒரு குதி குதித்துக்கொண்டு சிம்மாசனத்தில் ஏறி உட்கார்ந்திருப்பான். ராமன் ஒழிந்துபோனான் என்ற சந்தோஷத்தினால் தலைகால் தெரியாமல் குதித்திருப்பான்.

இப்படி ஒரு தம்பி இருந்தால் அந்த ராமன் பேசாமல் இருப்பானா, தியாகந்தான் செய்வானா ?

இப்படி ராமு இந்த உலகத்திற்கும் ராமாயண உலகத்திற்குமாக ஊசலாடிக்கொண்டிருந்தான். அவன் தம்பி இதுவரையில் தாயைப் பார்த்துப் பேசி வந்தவன், இப்போது ராமுவையே நேராகத் தாக்க ஆரம்பித்தான்; "என்னைத் தூஷித்துவிட்டு நல்லவன்போல் வாயை மூடிக்கொண்டிருக்கிறாயே. நானும் பொறுத்துப் பொறுத்துத்தான் பார்க்கிறேன். நேரிலே சொல்ல யோக்கியதை இல்லாமல் கோள் சொல்லுகிறாயே. நீ ஆண்பிள்ளையானால் முகத்துக்கு நேரே சொல்லலாமே! கோழை!

இதைக் காட்டிலும் அற்பத்தனம் வேறு இல்லை.''—அவன் வசைமாரி நிற்கவே இல்லை.

ராமு எவ்வளவுதான் பொறுப்பான்? அவனும் மனிதன் தானே!'' நேற்று வரையிலும் கோபத்திற்கு இடம் கொடுத்தவன். இந்த நிமிஷத்தில் பசியினாலும் அலுப்பினாலும் பலஹீனமடைந்தவன். எவ்வளவு நாழிகை பொறுமையாக இருப்பான்? அதுகாறும் அடக்கி வைத்திருந்த கோபம் வெடிகுண்டைப்போல் வெடித்தது. "சீ! நாயைப் போலக் குரைக்காதே. உன்னைப்பற்றி இங்கே யாரும் பேசவில்லை. வாயை மூடு'' என்று சொல்லவே, கோபு அதிகக் கோபங்கொண்டு உதடுகள் துடிக்க, "நாயென்று சொல்லுகிறாய்?'' என்று ராமுவை அடிப்பவன் போல் கிட்ட நெருங்கி முறைத்துப் பார்த்தான். ராமுவின் ஆத்திரம் உச்ச நிலையை அடைந்தது. கோபு வாகாய் நீட்டின கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விட்டான்.

'பளீர்' என்ற சப்தம் கேட்டது. அதுவரையும் ராமனாக இருந்த அவன், பழைய ராமு ஆகிவிட்டான்.

காணுமற்போன காதோலை

லட்சுமிக்குத் தெரியும், அவள் கணவனிடமிருந்து எவ்வித ஒத்தாசையும் கிடைக்காதென்று. இருந்தாலும் பெட்டியில் நகையைக் காணும் என்றதும் அவனிடம் ஓடிச் செய்தி தெரிவிப்பது தவிர அவளுக்கு வேறொன்றும் செய்யத் தெரியவில்லை.

"ஐயோ, நகைப் பெட்டியில் இருந்த அம்மாவின் காதோலையைக் காணுமே" என்றாள் தவிப்புடன்.

மேஜையின் அருகில் புத்தகம் ஒன்றில் ஆழ்ந்திருந்த அவள் கணவன் பத்மநாபன், அவள் சொல்லுவது இன்னதென்று விளங்காதவனாய் அவளை நிமிர்ந்து நோக்கினான். அவன் கவனம் முழுவதும் புத்தகத்தில் இருந்தது.

"பெட்டிக்குள் எல்லாம் இருக்கிறதே. ஓலையை மட்டும் காணுமே" என்று மேலும் லட்சுமி தவித்தாள்.

"இந்தா, எதைக் காணும்? சற்று விளங்கச் சொல்லு" என்றான் பத்மநாபன், அப்பொழுதுதான் புத்தக உலகினின்றும் வெளிவந்தவனாய்.

"அதுதானா உங்கம்மாவின் காதோலை. உங்கப்பா சாகுமுன் கொடுத்த நகைப்பெட்டியில் இருந்தது. 'பெட்டியைப் பத்மாவிடம் கொடு' என்று அவர் சொல்லவில்லையா? 'அவம்மா நகைகளெல்லாம் அதில் இருக்கின்றன. அவளுக்காக அப்படியே வைத்திருக்கிறேன். இப்பொழுது அவளால் வர முடியவில்லை. ஆகையால் அவளிடம் நேரில்கொடுக்க முடியவில்லை. நீ கொடுத்துவிடு' என்று என்னிடம் நம்பிக்கையாகக் கொடுத்தாரே. நானும் 'ஆஹா' என்று வாங்கி வைத்துக்கொண்டேனே. இப்பொழுது அதில் முக்கியமாகக் காதோலையைக் காணுமே. யார் எடுத்திருப்பா? எப்படிப் போயிருக்கும்?' என்று லட்சுமி அங்கலாய்த்தாள்.

"ஒன்றும் போயிராது. நன்ருய்த் தேடிப் பாரு" என்ருன் பத்மநாபன்.

"எத்தனை தரம் தேடிப் பார்க்கிறது? ஐயோ, எனக்கு வேர்த்துக் கொட்டுகிறது. தலையே சுற்றுகிறது."

"எங்கே, பெட்டியைக் கொண்டுவா, நான் பார்க்கிறேன்."

"நீங்க பார்த்தா மட்டும் அகப்பட்டுடுமா? அதுலே இருந்தால்தானே! அறை அறையாகக் கைவிட்டு ஒவ்வொன்ருகக் கீழே எடுத்து வைத்துக் கவிழ்த்துக்கூடப் பார்த்துவிட்டேன். காணலையே."

"இதில்தான் இருந்ததா? நிச்சயமாகத் தெரியுமா?"

"நகைப் பெட்டியிலே இல்லாமல் வேறே தனியா இருக்குமா?"

"நீ பார்த்தாயா?"

"'வெல்வெட் பையில் போட்டு வைத்திருக்கிறேன்' என்று அப்பா சொன்னது நன்ருய் நினைவிருக்கிறதே."

"நீ பார்த்தாயா என்ருல், வேறு ஏதோ சொல்லுகிருயே."

"என்னைக் கேள்வி கேட்காதீங்கோ. மனுஷ்யாள் சாகிற வருத்தத்திலே எல்லாம் சரியாக யாருக்கு நினைவிருக்கிறது? என்னவோ பார்த்த மாதிரிதான் தோன்றுகிறது."

"அப்போ எங்கும் போகாது."

"அப்படிச் சொன்ன ஆயிடுத்தா? இப்போப் பெட்டியிலே இல்லை. பத்மா வருகிறதாகக் கடிதாசு வந்திருக்கு. அவள் வந்து நகைகளைக் கேட்டா என்ன பண்ணுகிறது?"

"வீண் கவலைப்படாதே. நன்ருகத் தேடிப்பாரு; இருக்கும். நானும் பார்க்கிறேன். பெட்டியைக் கொண்டு வா. எங்கும் போய்விடாது" என்ருன் பத்மநாபன் அவளைச் சமாதானப்படுத்திக்கொண்டு.

லட்சுமி பெட்டியை எடுத்து வந்தாள். அது மரத்

திறலான சிறு கைப்பெட்டி. இருவருமாக அதன் அறைகளைத் துழாவி ஒவ்வொன்ருக எடுத்துப் பார்த்துப் பார்த்துத் தேடினர்கள். அகப்படவில்லை.

சின்னத் திருகாணி முதல் லட்சுமி சொன்னதுபோலப் "பொடிபொட்டுக்'கூட அதது வைத்தபடி கிடந்தது. எண்ணெய் மெழுகேறிய திருமங்கிலியச் சரடு அப்படியே இருந்தது. யாராவது பெட்டியைத் திறந்து தொட்டுப் பார்த்திருந்தால்தானே? அன்று அவள் மாமியார் அற்பாயுசில் இறந்துபோன துக்கத்தில் அவள் நகைகளைக் காண மனம் சகியாமல் வைத்துப் பூட்டினது. பிறகு இன்று வரையிலும் பெட்டி திறக்கப்படவே இல்லை. பெண்ணுக்குப் புதிதாக நகைகள் செய்யும்பொழுது அதில் எதையாவது எடுத்து மாற்றிச் செய்து போடலாமென்று லட்சுமியின் மாமனர் நினைக்கவில்லை. பிள்ளையின் மனைவிக்குக் கல்யாணப் பரிசாகக்கூட அதில் ஒன்றையும் அவர் கொடுக்கவில்லை. அவைகளைப் பொக்கிஷமாக மறைத்துவைத்துப் பூட்டிவிட்டார். அவர் மனைவிக்காகத் துக்கம் காத்தது அது. அவர் சாகும்வரையும் அந்தப் பெட்டியைக் கண்ணுல்கூட யாரும் கண்டதில்லை.

தான் இறப்பது நிச்சயம் என்று தெரிந்தபின்புதான் அவர் அதை லட்சுமியிடம் ஒப்பித்துப் பெண்ணிடம் கொடுக்கச் சொன்னர். பிள்ளை பத்மநாபனிடம் கொடுத்திருக்கலாம். ஏனே அவர் அவ்விதம் செய்யவில்லை. ஒரு வேளை லட்சுமி நினைத்ததுபோல அவன் ஜாக்கிரதைக் குறைவை அவரும் உணர்ந்திருந்ததுதான் காரணம் போலும்.

யுத்தத்தில் பர்மா போன புதிது. சிட்டகாங்கில் மிலிடெரி டாக்டராக இருந்தான் பத்மாவின் கணவன். அவளும் அவனுடன் இருந்தாள். அவனுக்கு லீவு கிடைக்கவில்லை. அவளால் தனியே வருவது சாத்தியமாகவில்லை. ஆகையால் தந்தைக்கும் பெண்ணுக்கும் கடைசி முகமுழி இல்லாமல் போய்விட்டது. இப்பொழுது சண்டை முடிந்துவிட்டது. ஆறுமாத ரஜா கிடைத்திருக்கிறது. இன்னும் ஒரு மாதத்தில் வருவதாகப் பத்மா எழுதியிருக்கிருள்.

அந்தக் கடிதந்தான் லட்சுமியை நகைப் பெட்டியைச் சோதிக்கத் தூண்டிற்று. நாத்தனுர் வந்து அவளிடம் பெட்டியைக் கொடுத்து விடுமுன், சரிபார்க்க எண்ணித் திறந்து பார்த்தாள். அதன் பேரில்தான் காதோலை அதில் இல்லை என்பதைக் கண்டுபிடித்தாள். ஓலை ஒன்றும் விலைபெற்ற சீமைக் கமலமல்ல. வெறும் சிவப்புத்தான். இருந்தாலும் காணுமல் போவதென்ருல் சரியா!

லட்சுமிக்கு ஒன்றும் ஓடவில்லை. "அப்பாதாம் ஏதோ செய்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் எங்கே போகும்?" என்று ஒரே வார்த்தையில் அதைப்பற்றின கவலையைத் தீர்த்துவிட்டுப் பத்மநாபன் பேசாதிருந்தான். அதற்குமேல் செய்யக்கூடியது இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை.

லட்சுமிக்கு 'அதெப்படிப் பேசாதிருப்பது?' என்று கணவனிடம் கோபம் கோபமாய் வந்தது. 'ஏதாவது செய்ய வேண்டாமா? யாரிடமாவது சொல்ல வேண்டாமா? ஒன்றும் செய்யாமலா இருப்பது! அதைப்பற்றிப் பேசிஞலாவது அவளுக்குச் சிறிது சமாதானமாக இருக்கும்போல இருந்தது. அதுகூட அவன் செய்யத் தயாராக இல்லை. "சதா கொட்டியளப்பதில் என்ன பிரயோஜனம்?" என்று சொல்லிவிட்டான். அவள் மாமனுரே ஏதாவது செய்திருப்பாரென்று அவன் நினைத்ததை அவள் ஒரு நிமிஷங்கூட ஆமோதிக்கவில்லை. வெல்வெட் பையில் போட்டு வைத்திருக்கிறேனென்று அவர் சொன்னது அவள் காதிலேயே இன்னும் ஒலித்துக்கொண் டிருக்கிறது. அந்தப் பையையே காணேமே. உடலை மயானத்துக்குக் கொண்டுபோன பிறகு கழற்றிய ஒன்றிரண்டு நகைகளில் அதுவும் ஒன்று. மற்றதெல்லாம் அப்படியே இருக்க, அது மட்டும் எங்கே போகும்? கைப்பெட்டி மாமனுரிடமே இருந்திருக்கிறது. அதன் சாவி அவர் பூணுலை விட்டுப் பிரிந்ததே இல்லை. வேருருவர் தொடுவதற்கு வழி இல்லை. அப்படி இருக்க, மாயமாய் மறைந்திருக்கிறதே! பெட்டி விழுங்கிவிட்டதென்று கதை சொல்வார்களே. அது போலல்லவா இருக்கிறது விஷயம்! அவள் மாமனுர் அவள் கணவனைப்போல் சதா புத்தகத்தில் மூழ்கி மற்றக் காரியங்களில் அஜாக்கிரதையாக

இருப்பவர் அல்ல. மறதி என்பதே அவரிடம் இல்லை. அவசரப்பட்டு ஒரு காரியமும் செய்துவிட மாட்டார். அதை வைக்கவேண்டிய இடத்தில் வைத்து, செய்யவேண்டிய விதத்தில் செய்வார். அது எல்லோருக்கும் தெரியும்; அவரிடமிருந்து ஒரு நாளும் அது கெட்டுப்போயிராது. நிச்சயம். அவள் கைக்கு வந்தபின்தான் போயிருக்க வேண்டும். எப்பொழுது, எப்படிப் போயிருக்கும்? வெளித் திருடர்கள் செய்த வேலையில்லை; கன்னம் வைப்பதோ, இன்னொன்றோ நடக்கவில்லை. வேறு சாமானும் களவு போகவில்லை. வீட்டிலுள்ளவர்கள் கைவேலை தான்; சந்தேகமில்லை.

அவள் மூளை புத்தகங்களில் துப்புத் துலக்குபவர்களின் மூளைபோல வெகு வேகமாய் விஷயங்களை அலசி ஆராயத் தொடங்கிற்று. அவள் பட்டணம் வந்தபிறகு களவு போவது சாத்தியமில்லை. ஏனெனில் பட்டணத்து வீட்டில் 'பெட்டி பேழை'களுக்கென்று தனி அறை இருக்கிறது. அதில் வெகு ஜாக்கிரதையாகப் பூட்டின பெட்டியைப் பீரோவில் வைத்துப் பூட்டி, பிறகு அறையையும் பூட்டி மூன்று சாவிகளையும் சாவிக் கொத்தோடு சேர்த்து இடுப்பில் செருகி இருக்கிறாள். அவள் மறந்தும் அதை எங்கும் வைத்துவிட மாட்டாள். அவள் மறந்தாலும் அவள் கை மறக்காது. பின்? மாமனார் இறந்து காரியங்கள் நடந்த பிறகு ஒரு மாதம் அவர்கள் கிராமத்தில் தங்கினார்கள். அப்பொழுது ஒருகால் திருட்டுப் போயிருக்கக் கூடும். கிராமத்து வீட்டில் தனி அறையோ இன்னொன்றோ இல்லை. எல்லோருக்கும் பொதுவாகக் 'காமரா' அறை ஒன்றுதான். சாவுக்கு வந்த பந்துக்கள் எல்லாரும் அதில்தான் 'பெட்டி பேழைகள்' வைத்துக் கொண்டார்கள். அவளும் நகைப் பெட்டியைத் தன் பெட்டியோடு அந்த அறையில்தான் வைத்திருந்தாள். மாமனார் மாமியார் இரண்டு வழிப் பந்துக்களும் நிறைய வந்திருந்தார்கள். மாமனார் நகைப் பெட்டியை அவளிடம் கொடுத்தது எல்லாருக்கும் தெரியும். அதில் யாருக்காவது திருட்டுப் புத்தி ஏன் ஏற்பட்டிருக்கக் கூடாது? உணவுக்குக்கூடத் தாராளமாய் இல்லாத பந்துக்களும் அவர்களுக்கு வேண்டிய பேர் உண்டு.

ஆனால் ஒன்று. அத்தனை ஜனக் கூட்டத்தில் திருடுவதுதான் எப்படி? வீடு 'திமு திமு' என்று நெறியும் பொழுது, பிறர் பெட்டியை யாரும் அறியாமல், அதன் திறவுகோலுமின்றித் திறந்து எடுப்பது சாத்தியமா? ஒருவர் இல்லாவிட்டால் ஒருவர் கண்ணில் அகப்பட்டு விடாதா? தேர்ந்த திருடருக்கு ஒருகால் முடியலாம், மற்றவர்களுக்கு எளிதல்ல என்று நிச்சயித்தாள் லட்சுமி.

அவள் விஷயங்களைத் தெளிவு செய்துகொள்ளும் விதம் அவளுக்கே திருப்தியை அளித்தது. இந்த முறையில் திருட்டையே உண்மையில் கண்டுபிடித்துவிட்டால்? இந்த எண்ணம், மேலும் அதிலேயே சிந்திக்கச் சுறுசுறுப்பை உண்டுபண்ணிற்று.

கூட்டம் குறைந்த பிறகு வேண்டுமானால் எடுப்பது சாத்தியமாகலாம். அவர்கள் பட்டணம் வரும்வரையில் சிற்சில பந்துக்கள் பின் தங்கினதென்னவோ உண்மைதான். ஆனால் அவர்கள் மிகவும் நெருங்கின சுற்றத்தார்கள். மாமனாரின் தங்கை ஒருத்தி. அதாவது அவள் கணவனின் சொந்த அத்தை. அவளைத் திருடி என்று சொல்வதா? இல்லாவிட்டால் மாமியாரின் சகோதரி - இவர்களிடம் வெகு அன்பு கொண்ட சித்தி - அவளைச் சந்தேகிப்பதா? காலம் சிரமகாலம். யாரையும் நம்புவதற்கு இல்லை. சொந்தத் தாய்கூட மகளை நம்ப முடியாது.

'இது மாதிரி சொந்த மனுஷ்யர்களையே பற்றி எண்ணுவது பிசகு' என்று அவள் மனம் எச்சரிக்காமல் விடவில்லை. அவளும் அதைத் திருத்திக் கட்டுப்படுத்த முயன்றாள். ஆனால் அது கேட்காமல் பின்னேடு, 'அப்பொழுது சித்திப் பாட்டி அங்கிருந்தாளே, அவளைப்பற்றி என்ன?' என்றது. அவளைச் சந்தேகிப்பது அவ்வளவாகத் தவறாகவும் தோன்றவில்லை. காரணம், அவள் ஏழை என்பது மட்டுமல்ல. அவளுக்குக் கை கொஞ்சம் நீளமென்றும் கேள்விப்பட்டிருக்கிறாள். முன்பு எப்பொழுதோ அவள் கணவனும் நாத்தனாரும் சிறு குழந்தைகளாக இருந்த பொழுது ஒருவருடைய கையிலிருந்த தங்கக் காப்பு கொலுசு இரண்டும் களவு போய்விட்டனவாம். அப்பொழுது வீட்டிலிருந்த சித்திப் பாட்டி பேரில் சந்தேகம்

பலமாய் ஏற்பட்டதாம். களவு என்னவோ கண்டுபிடிக்கப்படவில்லை. அதற்காக விஷயம் இல்லை என்று ஆகிவிடுமா?

இவ்விதம் எண்ணமிடும் பொழுது சித்திப் பாட்டி தன் பேத்திக்குச் சிவப்புத் தோடு செய்திருப்பதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது. "கல்யாணத்துக்கு நிற்கிறது. காதுத் தோடுகூட இல்லாமலிருந்தால் என்னமா இருக்கும்! அதற்காகப் பண்ணினேன்!" என்று யாரோ அவள் சொந்தப் பேத்திக்கு நகைசெய்து போட்டதற்குக் காரணம் கேட்டதுபோலச் சொல்லிக்கொண்டாள். அவரவர்கள் குழந்தைகளுக்கு நகை செய்வதற்குப் பிறரிடம் காரணம் எதற்கு? பிறர் அதற்கான பணத்தைப் பற்றிச் சந்தேகியாமல் இருக்கவேண்டும். ஏதோ தீராத செலவு; சிரமப்பட்டுச் செய்துகொண்டார்கள் என்று நினைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான். அவள் பிள்ளைக்கு வெகு சொற்பச் சம்பளம். இப்பொழுது கொஞ்சம் உயர்ந்து இருப்பதாகச் சொன்னுள். அதற்குத் தகுந்தபடி விலைவாசி ஏறிக் கிடக்கிறது. நாலு குழந்தைகளை வைத்துக்கொண்டு குடித்தனம் நடத்த வேண்டாமா? எல்லாம் இந்த நகையை எடுத்துப் பிரித்துத்தான் தோடு செய்திருக்கிருள்; சந்தேகமில்லை. கைப்பெட்டியின் பூட்டென்ன சாமான்யந்தானே! எந்தச் சாவி போட்டுத் திறந்தாலும் திறந்துவிடுகிறது. மேலாக வெல்வெட் பை இருந்திருக்கும், எடுத்துவிட்டாள். இன்னும் எதையாவது எடுப்பதற்கு வெகு நேரம் துழாவிக் கொண் டிருக்கமுடியாமல் யாராவது பார்த்துவிடப் போகிருர்கள் என்கிற பயம் இருந்திருக்கும். அந்த ஒரு மாதத்தில் எத்தனையோ தரம் சித்தியுடனும் அத்தையுடனும் சித்திப் பாட்டியை வீட்டுக்குக் காவல் வைத்து விட்டுக் கோவிலென்றும் குளமென்றும் தான் போனது இப்பொழுது லட்சுமிக்கு நினைவு வந்தது. திருட வேண்டுமென்முல் அதைவிட நல்ல சந்தர்ப்பம் வேறு வேண்டுமா?

இனி, சித்திப் பாட்டியின் பேரில் சந்தேகம் ஊர்ஜிதம் கொள்ளத் தொடங்கிற்று என்பதைச் சொல்லவும் வேண்டுமா? திருட்டைக் கண்டு பிடித்துவிட்டதாகவே அவள் மனம் உள்ளுக்குள் சந்தோஷப்பட்டது. ஆனல்

அதை வெளிப்படுத்திப் பொருளைத் திரும்பப் பெறுவது எப்படி? அவள் கணவன் ஒரு தரம் தோட்டைக் கண்ணால் பார்த்தால் கண்டுபிடித்து விடக்கூடும். அவனுடைய அம்மா காதில் அதைச் சதா பார்த்திருப்பான் அல்லவா? அவன் அப்படியொன்றும் நினைவு தெரியாத குழந்தையல்ல. அவன் தாய் சாகும்பொழுது, பன்னிரண்டு வயசுக்கு மேற்பட்ட பையன்தான். நகை உருமாறியிருந்தாலும் சிவப்பை அடையாளம் கண்டுபிடித்துவிடலாமே! சித்திப் பாட்டியை எந்த விதத்திலாவது கடிதம் போட்டு வரவழைக்க வேண்டும். ஆனால் அவள் வரும்பொழுது தோட்டைக் கொண்டுவர மாட்டாளே. அதற்கு என்ன செய்கிறது? அவள் பேத்தியையும் கூடவே அழைத்து வரும்படி செய்யவேண்டும். வரன் பார்த்துத் தருவதாக ஆசை காட்டவேண்டும். சாமானைக் கண்ணால் பார்த்த பிறகு நேரிலேயே கேட்டுவிட வேண்டும். அப்பொழுது ஒப்புக்கொள்ளாமல் என்ன செய்வாள்?

ஆனால் ஒன்று: தப்பித்தவறி அவள் எடுத்திராமல் இருந்துவிட்டால், அப்புறம் அவள் வசைமாரிகளை யார் கேட்கிறது? ஜன்மத் துவேஷமாகிவிடுமே! ஆனால் தவறாக ஏன் போகிறது? அவளை விட்டால், வேறு யார் எடுத்திருக்கக்கூடும்?

இப்படி எவ்வளவோ யோசித்து அதற்கான வழி செய்யப் பத்மநாபனிடந்தான் சொல்லவேண்டி வந்தது. அவள் யோசனைகளை அவன் கேட்டபொழுது அவன் ஒரேயடியாய் அவ்விதம் ஒன்றும் இராதென்று மறுத்ததோடு அவளுக்கு ஏதோ மூளைக் கோளாறு என்றும் பரிகசித்தான்.

"லட்சுமி, இனிமேல் அந்த நகையை அடியோடு மறந்துவிடு. போனால் போகிறது. அதொன்றும் அப்படிப் பிரமாதமில்லை. வீணாக மூளையைக் குழப்பிக்கொள்ளாதே" என்றான்.

"நானொன்றும் காரணமின்றிக் குற்றம் கண்டு பிடிக்கவில்லை" என்று லட்சுமி கோபமாய்ச் சொன்னதற்குக்கூட, "உன் காரணம் என்ன? சித்திப் பாட்டி பேத்திக்குத் தோடு செய்திருப்பதுதானே? அப்படிப்

பார்த்தால் அத்தை பேரிலும் சித்தி பேரிலுங்கூட நீ சந்தேகிக்கலாம். அத்தை பெண்ணுக்கு ராக்கொடி செய் திருக்கிருள். சித்தி தனக்கே சிவப்பு வளையல் செய்து கொண்டிருக்கிருள். அதற்கென்ன சொல்லுகிருய்?" என் ருன் பரிகாசமாக. இடமிருந்தால் அவர்களையும் அவள் சந்தேகிக்கத் தயார்தான் என்பதை அவன் கண்டானு?

"ராக்கொடிக்கும் வளைக்கும் நிறையக் கற்கள் வேண்டுமே! இரண்டு ஓலைகள் போதுமா?" என்ருள் லட்சுமி. இந்தப் பதில் அவனைத் திடுக்கிடச் செய்தது. முடிந்தால் அவர்களையும் அவள் சந்தேகிப்பாள் என்பதை அது விளக்குகிறதல்லவா? இந்த விபரீதக் கற்பனைகளை அவள் மனத்தினின்றும் அடியோடு போக்க எண்ணி, "இதோ பார் லட்சுமி, பத்மா உன்பேரில் இப்பொழுது சந்தேகித்தால் எப்படி இருக்கும்? யோசித்துப் பார். அதுபோலல்லவா இருக்கிறது, நீ நம் உறவினர்களையே திருட்டுப்பட்டம் கட்டுவது. முதலில் நகையே கெட்டுப் போயிருக்குமென்று நான் நினைக்கவில்லை. அப்பாதாம் ஏதோ செய்திருக்கிருர், நிச்சயம். வீண் சந்தேகப்பட்டுச் சொந்த மனிதர்களின் மனஸ்தாபத்தைச் சம்பாதித்துக் கொள்ளாதே" என்று எச்சரித்தான் பத்மநாபன்.

அவன் அவ்விதம் அவள் மனத்தைத் தெளிய வைக்க எண்ணிப் பேசினது இன்னெரு விபரீதமான பலனைத் தான் அளித்தது.

'இதுவரையிலும் எனக்குத் தோன்ருமல் போயிற்றே. ஆமாம், பத்மா என்னைச் சந்தேகித்தால்........?' என்று நினைத்துக் கவலைப்படத் தொடங்கிவிட்டாள் லட்சுமி.

அது மாதிரி ஏன் நடக்காது என்றுதான் அவளுக்குத் தோன்றிற்று. பெட்டியோ அவளிடம் இருந்திருக்கிறது. நகையையோ காணும். இன்னும் என்ன வேண்டும்? சம்சயத்தைத் திடம் செய்வதேபோல் அவளுக்குச் சிவப்பு அட்டிகை வேறு புதிதாய் அவள் அம்மா செய்து போட் டிருக்கிருள். கேவலம் அவளிடம் நம்பிக்கைதான் சம்ச யத்தை விலக்க வேண்டுமே தவிர, சந்தேகிப்பதற்கு என் னவோ காரணம் பலமாய்த்தான் இருப்பதாக அவளுக்குப் பட்டது. நகை அகப்பட்டாலொழிய, பத்மா தன்னைத்

திருடி என்றுதான் நினைப்பாள். இந்த விபத்துக்கு என்ன செய்வது? லட்சுமிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. செய்வது இன்னதென்றும் தெரியவில்லை.

அவள்பேரில் சந்தேகம் ஏற்படக்கூடும் என்பது தெரிந்தும் பத்மநாபன் சும்மா இருக்கிறனே. திருட்டை வெளிப்படுத்த முயற்சி ஏதும் எடுத்துக்கொள்ளவில்லையே. அவனுக்கு எல்லாம் விளையாட்டாக இருக்கிறது. இது மாதிரி ஒரு புருஷன் கவலையற்று இருப்பதென்றல் லட்சுமிக்குக் கோபம் வராமல் என்ன செய்யும்? அவனேடு பேசக்கூட அவளுக்குப் பிடிக்கவில்லை. மனம் மட்டும் உள்ளூறத் தவித்தது.

ஆனல் அவள் கோபத்துக்காகவும் தவிப்புக்காகவும் நாட்கள் செல்லாமல் இருக்குமா? அவைகள் ஓடிவிட்டன. பத்மா கணவனுடனும் குழந்தையுடனும் வந்து சேர்ந்தாள். மூன்று வருஷம் பார்க்காது இருந்து பார்த்த சந்தோஷம் எல்லாருக்கும்; அளவளாவித் தீர்த்தார்கள். லட்சுமியும் தன்னை மறந்துதான் உத்ஸாகத்தில் இருந்தாள். பத்மாவைப் பார்த்தவுடனே அவளுக்கு இருந்த பயம் எங்கேயோ போயிற்று.

ஆனல் அந்த மறதி ஒன்றிரண்டு நாளைக்குத்தான். பிறகு சதா நகைப்பெட்டியின் நினைவு ஏற்பட்டு அவளைத் துன்புறுத்தத் தொடங்கிவிட்டது. விஷயத்தைப் பத்மாவிடம் சொல்லியாகவேண்டுமே. எப்படி, இப்பொழுது சொல்வது? அவளைத் திருடி என்று பத்மா சந்தேகிக்கத் தொடங்கினபின்பு அவர்கள் இருவரும் இப்பொழுதுபோல் களங்கமற்றுச் சந்தோஷமாக இருக்க முடியுமா? பத்மா அவளைத் தன் வாயால் திருடியென்று சொல்லமாட்டாள். இருந்தாலும் மனத்தில் நினைத்துக்கொள்ளாமல் இருப்பாளா? அவள் நிம்மதியைக் கலைக்க இதொன்று நேரிடவேண்டுமா? தந்தை இறக்கும்பொழுது பத்மா வர முடியாமல் ஏன் போகவேண்டும்? அதுதான் அப்படியென்றல் நகையை இவள் மாமனர் ஏன் அவளிடம் கொடுக்கவேண்டும்? பத்மாவே நேரில் நகையை வாங்கிக்கொண்டிருந்தால் இந்த நிலைமை வந்திராதே. தெய்வமே சூழ்ச்சி செய்துதான் அபவாதத்தைத் தன்பேரில் கொண்டு வைத்திருக்கிறது. இனி மீள வழி இல்லை என்று தோன்றிற்று லட்சுமிக்கு.

பத்மாவின் சந்தேகப் பார்வையை எதிர்பார்த்து அவள் மனம் துன்புற்றது. அவள் கண்முன் தன் சிவப்பு அட்டிகையை அணியவும் அவள் துணியவில்லை. அதிலுள்ள சிவப்புக் கற்கள் ஒருகால் ஓலையின் கற்கள்போலத் தோன்றினால்...? இவ்விதம் பலவாறு அவள் மனம் எண்ணமிட்டபோதிலும் விஷயத்தை வெளிப்படுத்தித் தானே தீரவேண்டும்? அதற்குப் பயந்து பின்வாங்கி என்ன செய்கிறது?

கடைசியில் பத்மா சமாசாரம் கேட்டுக்கொண்ட பொழுது பத்மநாபனைப் போலவே நகை திருட்டுப் போயிருக்கும் என்பதையே ஏற்றுக்கொள்ளவில்லை. 'அப்பா தாம் ஏதாவது செய்திருப்பார். இல்லாவிடில் எங்காவது வைத்திருப்பார்' என்று சொல்லிவிட்டாள். அவள் லட்சுமிபேரில் மட்டுமல்ல, மற்றப் பந்துக்கள் யார் பேரிலும் லட்சுமியின் காரணங்களைக் கேட்டபின்கூடச் சந்தேகப்படுவதாக இல்லை.

லட்சுமிக்கு இதில் திருப்தி சிறிதும் ஏற்படவில்லை. அவளைப்பற்றி அவள் தவருக எடுத்துக்கொள்ளவில்லை என்றால் போதுமா? எல்லாரைப் பற்றியும் அதே மனோபாவத்தில் இருக்கிறாளே! சித்திப் பாட்டியைப் பற்றின சந்தேகத்தை அவள் எடுத்துச் சொல்லியும் பத்மா காதில் போட்டுக்கொள்ளவில்லையே! இவ்விதம் இருப்பதில் திருட்டு, கண்டுபிடிக்கப்படாமலே யல்லவா போய்விடும்?

இதில் லட்சுமிக்கு மிகுந்த மனவருத்தம். ஏமாற்றமோ சொல்லி முடியாது.

பத்மா இருந்த ஆறு மாதமும் ஆறு நாட்கள் போலச் சென்றுவிட்டன. அவளைப் பார்த்துப்போக எல்லாப் பந்துக்களும் வந்துபோனார்கள். சித்திப் பாட்டியும் வந்திருந்தாள். எப்படியாவது சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ளவேண்டுமென்று லட்சுமி துடியாய்த் துடித்தாள். 'ஜாடைமாடை'யாக அதுபற்றி அவள் பேசினதை அந்தக் கிழவி புரிந்துகொள்ளாமலே இருந்தாள். அத்தனை சாமர்த்தியம் அவளுக்கு! தைரியமாக ஒளிவு மறைவின்றிக் கேட்டுவிடுவதென்று லட்சுமி தீர்மானித்தாள். ஆனால் அந்தத் தைரியம் அவளுக்குக் கட்டோடு வராமல்

போயிற்று. யாருடைய பலத்தைக்கொண்டு அவ்விதம் துணிந்து கேட்பது? அவள் கணவனோ நாத்தனாரோ அவள் கட்சியில் இல்லை. காரியம் பலிக்காததுடன் எதிராளி சண்டைக்கு வந்தால் சமாளித்துக்கொள்ளவாவது பக்க பலம் வேண்டாமா? இந்த மனப் போராட்டத்தின் நடுவில் சித்திப் பாட்டி என்னவோ ஊர்போய்ச் சேர்ந்து விட்டாள். ஒன்றையும் தெரிந்துகொண்டதாகவும் காண்பிக்கவில்லை.

பிறகு என்ன? பத்மா ஊர் திரும்பும் நாளும் நெருங்கிற்று. எல்லாச் சாமான்களையும் மூட்டை கட்டும் பொழுது நகைப்பெட்டியையும் சேர்த்துக்கட்ட அதையும் கொடுத்தாள் லட்சுமி. வெள்ளிக் கிண்ணி ஒன்று பத்மாவினுடையது. அதையும் கொடுத்துவிட நினைத்து எடுத்தாள். அவை இரண்டு கிண்ணங்கள்; ஜோடியாக அவள் கணவனுக்கும் பத்மாவுக்கும் குழந்தையாக இருக்கும்பொழுது செய்தவை. ஒன்றுக்குள் ஒன்று போட்டு வைத்திருந்தது. அதுவும் மாமனார் சாகும்பொழுது, 'ஒன்று உன் குழந்தைக்கு (அதாவது அவர் ஆசீர்வாதம் அது) இன்னொன்று பத்மாவின் குழந்தைக்கு' என்று சொல்லிக் கொடுத்தவைதாம். அவைகளை அப்படியே பீரோவில் வைத்திருந்தாள். அதில் மேல்கிண்ணியை எடுக்கவும் அடியில் என்ன அது...? லட்சுமிக்குத் தூக்கிவாரிப் போட்டது. கண்களையே நம்பமுடியவில்லை. அவள் மாமனார் சொன்ன வெல்வெட் பை அங்கே எப்படி வந்தது? கையிலெடுத்துப் பைக்குள் பார்த்தார்கள். மாமியாரின் காதோலை பத்திரமாய் அப்படியே அதில் இருக்கிறது!

லட்சுமிக்கு ஏற்பட்டது சந்தோஷமா? ஏமாற்றமா? அல்லது வருத்தமேதானா? மூன்றும் என்றுதான் சொல்லவேண்டும். நகை கெட்டுப் போகவில்லை. கிடைத்து விட்டது என்பதில் சந்தோஷம். அவள் மூளை வெகுவாய் வேலைசெய்து கண்டுபிடித்த திருட்டு இல்லாமலே போய் விட்டதில் ஏமாற்றம். எல்லாவற்றுக்கும் மேலாக, தன் கணவனுக்கும் நாத்தனாருக்கும் வாய்த்த - பிறரைச் சந்தேகியாத - நல்ல மனம் தனக்கு இல்லையே என்கிற மன வருத்தமுந்தான்.

மனம் மாறிற்று

"சுந்தரம், என்ன இருந்தாலும் உன் மாமனுர் சொல்வது ரொம்ப சரி. அவர் உயர்ந்த அந்தஸ்தில் பட்டணத்தில் இருக்கும்போது, நீ தனியாக வாடகைக்கு அறை எடுத்துக்கொண்டிருப்பது பிசகுதான். அவருக்கு நீ அருமையாக ஒரே மாப்பிள்ளை. நீ தனியாக இருப்பதென்ருல் அவருக்கு என்னமாய் இருக்கும்? ஊராருந்தான் என்ன நினைப்பார்கள்?'' என்ருள் அவன் தாய்.

"இல்லை அம்மா, எனக்கென்னவோ அது பிடிக்கவில்லை. ஒருத்தர் வீட்டில் எதற்காகப் போய் இருப்பது என்றுதான் தோன்றுகிறது. நெருங்கிப் பழகினுல் அலட்சியம் தோன்றிவிடும்.''

"மாமனுர் வீடு ஒருவர் வீடா! கூடவே இருந்தால் யாருக்கு அலட்சியம் ஏற்படும்? வெகு அழகு நீ பேசுவது. வேட்டகத்திற்குப் போகப் பிள்ளைகள் துடித்துக்கொண்டிருப்பார்கள். உன் தினுசு எதிலும் தனி. அது எதுவாலும், இவ்வளவு நாள் உன்னை ஹாஸ்டலில் விட்டுக் கண்ட சோறு உனக்கு ஒத்துக்கொள்ள வேணுமே என்று நானும் உன் அப்பாவும் பட்ட விசாரம் கொஞ்சமில்லை. எங்களுக்குப் பட்டணத்தில் குடித்தனம் போட வகையிருக்கிறதா? அதுவும் இல்லை. கண்டபடி பிள்ளையை விட்டுக் கவலையற்று இருப்பதற்கு ஒவ்வொருத்தரைப்போலப் பத்தெட்டுத்தான் நான் பெற்றேனு? அதுவும் இல்லை. 'ஏதோ பகவான் கொடுத்த பிச்சை, நமக்கு ஒரே பிள்ளை. ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்று. அவனையும் படிப்பு படிப்பு என்று இவர் இப்படிச் சோத்துக்கு அலைய விட்டுவிட்டாரே. நாம் இங்கே வேளா வேளைக்கு நல்ல சாப்பாடு சாப்பிடுகிருேமே என்று நான் பட்ட விசாரம் அந்தப் பகவானுக்குத்தான் தெரியும். ஏதோ நீ ஊருக்கே ஒசத்தியாகப் பாஸ் பண்ணின சந்தோஷம் எல்லாக் கஷ்டத்தையும் மறக்க வைத்

தது. பெரியவாள் புண்ணியத்தில் உனக்கு நல்ல இடத்தில் பெண் கிடைத்தது. மாமனாரும் உன்னை வருந்தி அழைக்கிறார். ஆட்சேபணை ஏதும் சொல்லாமல் போய் இரு. வெந்ததும் வேகாததும் சாப்பிட்டு எங்கே உன் உடம்பு கெட்டுப் போகிறதோ என்று நான் கவலைப் படாமல் இருப்பேன்" என்று அவன் தாய் ஒரு பெரிய பிரசங்கம் செய்து, "என்ன, நீங்கள் சொல்லுங்கள்" என்று தன் கணவனையும் அவனுக்குப் புத்தி சொல்லும் படி கேட்டாள். அவரும், அவள் சொல்லை முழுதும் ஆமோதித்ததோடு நில்லாமல், "உன் பிள்ளை போகவே அலாதி. அழகும் அந்தஸ்துமாகப் பெண்டாட்டி கிடைக்கும்போது கல்யாணம் செய்துகொள்ள இவனுக்குச் சிபாரிசு வேண்டியிருக்கவில்லையா? அதுபோலத்தான். போடா போ, அவர் அவ்வளவு வருந்தி அழைக்கும் பொழுது நம் மரியாதையை நாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டாமா? மாட்டேன் என்றால் நன்றாய் இருக்குமா? பேசாமல் போய் அவரோடு இருக்க வேண்டியதுதான்" என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார்.

பிள்ளைகள் வேட்டகத்திற்குப் போக ஆசைப்படுவதும் பெற்றோர் மறுப்பதுந்தான் உலகில் சகஜம். அது சுந்தரத்தின் விஷயத்தில் மட்டும் மாறி இருந்தது. அதற்குக் காரணம், பணக்காரர்களிடத்தில் அவனுக்கு ஏற்பட்டிருந்த காரணமற்ற வெறுப்புத்தான். 'அவர்கள், கர்வமும் ஆடம்பரமும் தலைக்கேறியவர்கள் என்பதாக அவர்களை ஒரு தனிப்பட்ட ஜாதியாராக விலக்கி வைத்திருந்தான். தான் பணக்காரன் அல்ல என்பதனால், அவர்களுக்குத் தன்னிடம் மதிப்பே இராது. கூடவே வசித்தால் பின்னும் இளப்பமாகிவிடுவோம்' என்று நினைத்துத்தான் மாமனாரோடு வசிக்க அவன் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால், அவன் பெற்றோர் அவ்வாறு நினைக்கவில்லை. இது அவனது மனக்கற்பனை என்று தள்ளிவிட்டார்கள். அவன் வேட்டகத்தில் இருந்தால், சாப்பாட்டு விஷயத்தில் அவனுக்குக் குறைவில்லை என்ற திருப்தி அவர்களுக்கு உண்டாகும். அந்தத் திருப்தியை அவர்கள் அடையும்படி செய்வது அவன் கடமை அல்லவா?

அவன் தகப்பனார் சொல்லிக் காண்பித்தது போல்,

இந்தக் கல்யாணத்திற்கே அவனுக்குப் பலத்த ஆட்சேபணை இருந்தது உண்மையே. 'மாகாணத்துக்கே முதலாவதாகத் தான் தேருவிட்டால் தனவந்தரான சந்திர சேகர சர்மா தனக்குப் பெண் கொடுக்க முன்வருவாரா?' என்பது அவன் சொன்ன ஆட்சேபங்களுள் ஒன்று. தனவந்தர் பெண்ணை மணப்பதனுல், சுதந்தரத்தை இழப்பதோடு, மனைவிக்கும் அடிமையாக வேண்டிவரும் என்பது மற்றென்று. இப்படியாகப் பல ஆட்சேபணைகள் அவனுக்குத் தோன்றின. ஆனுல் உலக அனுபவம் வாய்ந்த அவன் பெற்றோர் தங்களுக்குக் கிடைக்க இருக்கும் பாக்கியத்தை இழக்கச் சம்மதிக்கவில்லை. அதுவும், சந்திர சேகர சர்மாவைப் போன்ற கொழுத்த பணக்காரர் தங்கள் பிள்ளைக்குப் பெண் கொடுக்க வலிய வரும்போது, அதை மறுக்கும் தைரியம் அவர்களுக்கு எங்கிருந்து வரும்? ஆகவே, சுந்தரம் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வேண்டியவனுனன். பிறகு மனைவியின் அழகிய உருவம் அவனையும் அறியாமல் அவன் இருதயத்தில் இடம்பெற்று விட்டதென்பதை அவன் எங்கு ஒப்புக்கொள்ளப் போகிருன்?

அவன் பி. ஏ. ஆனர்ஸில் சம்ஸ்கிருதத்தில் மாகாணத்துக்கே முதலாவதாகத் தேர்ச்சி பெற்றிருந்தான். அவனுக்குப் 'புரொபஸர்' வேலையில் மிகுந்த ஆசை இருந்தது. உலகத் தொண்டைச் சேர்ந்த வேலை என்றே அதைக் கருதியிருந்தான்.

மாகாணத்துக்கே முதலாவதாகத் தேர்ச்சி பெற்றிருந்தும் 'புரொபஸர்' வேலை ஒன்றும் எளிதில் கிடைப்பதாக இல்லை. வேலை ஏதாவது கிடைக்கும் வரையில் அவன் சட்ட கலாசாலையில் சேர்ந்து படிப்பது என்று ஏற்பாடாயிற்று. அவன் மனைவி சுகன்யையின் காலேஜுப் படிப்பு இன்னும் முடியவில்லை. பலத்த விவாதத்துக்குப் பிறகு அவன் தன் மாமனுர் வீடு சென்று வசித்தான். ஆனுல் அங்கே சந்தோஷமாயிருக்க அவனுல் என்னவோ சாத்தியமாகவில்லை. 'இவர்கள் கண்களில் நாம் பல குறைகளை உடையவர்களாகத் தோன்றுகிருேம்' என்று மனம் கற்பித்தது. அந்தக் குறைகளைக் குறைகளாகவே அவன் நினைத்துக் கொண்டான். அவன் கல்யாணத்துக்கு முன் அந்தக்

குறைகள் ஒருபோதும் அவனுக்குத் தோன்றினதே இல்லை. இப்பொழுது மட்டும் தோன்றுவானேன்?

அவன் மாமனுர் சந்திரசேகர சர்மா அவன் மனம் இருந்த நிலையை ஒருவாறு சீக்கிரமே ஊகித்துக்கொண்டார். ஆனால் அவர் அதை மாற்ற நினைத்துச் செய்த வழி தான் சரியில்லாமல் போயிற்று. அவன் சந்தோஷம் அடையவேண்டும் என்றெண்ணி நிறையப் பொருள் செலவு செய்து அவர் அவனுக்குப் பரிசுகள் வாங்கி வழங்கினர். அது அவர், தம் பணப் பெருமையைத் தன்னிடம் காட்டுவதாக அவனுக்குத் தோன்றிற்று. அவற்றைப் பெற்றுக் கொள்ளவே அவன் மறுத்தான். அது அவர் மனத்தைப் பெரிதும் வருத்திற்று.

"பணக்காரப் பிள்ளைகள் கூடாதென்று பெண்ணைக் கொண்டுபோய் எங்கோ தள்ளினீர்களே! இப்பொழுது பாருங்கள். அவனுக்கு உங்கள் அன்பையே அறிந்து கொள்ள முடியவில்லை. நம் பெண்ணின் அருமையை மட்டும் எங்கே தெரிந்துகொள்ளப் போகிருன்?" என்று சொல்லி, அவர் மனைவி, பணக்கார மாப்பிள்ளையைத் தேடிப் பிடிக்காததற்கு அவரை இடித்துக் கூறி அவர் வேதனையை அதிகப்படுத்துவாள். 'ஒரு கெடுதலைத் தவிர்க்க எண்ணி இன்னென்றை ஏற்றுக்கொண்டுவிட்டோமே' என்று கவலை கொண்டார் அவர். பணக்காரப் பிள்ளைகளிடம் நவீன நாகரிக மோகத்தால் உண்டான கெட்ட பழக்கங்கள் அவருக்கு அடியோடு பிடிக்கவில்லை. தம்பதிகளின் சந்தோஷ வாழ்க்கைக்கே அவை கெடுதலாக முடியுமென்று நினைத்தார். ஏழைப் பிள்ளைகளிடத்தில் நல்லொழுக்கத்தை அதிகம் எதிர்பார்க்கலாம் என்பது அவர் எண்ணம். அந்த எண்ணத்திற்கு இணங்க, சுந்தரம் உத்தமமான பிள்ளையென்று ஹாஸ்டலில் பெயர் வாங்கியிருந்தான். வடமொழியில் மாகாணத்தில் முதலாகவும் தேர்ச்சி பெற்றிருந்தான். உத்தியோகத்துக்காக முக்கியமாக ஆங்கிலப் படிப்பே படித்த சர்மா இப்பொழுது சிறிது காலமாகத்தான் சம்ஸ்கிருத கிரந்தங்களிலுள்ள எவ்வளவோ அருமையான விஷயங்களைப் புதையல்போலக் கண்டு அனுபவித்து வந்தார். சம்ஸ்கிருத மோகத்தில் அவர் படித்த புத்தகங்களுக்கும் கேட்ட

கதைகளுக்கும் கணக்கே இல்லை. அப்படி அவர் மகா பாரதத்திலுள்ள சியவனோபாக்கியானம் என்னும் கதையைக் கேட்ட ஓர் இரவுதான் அவருக்கு ஒரு பெண் பிறந்தாள். அதிலிருந்து அக் குழந்தைக்குச் சுகன்யை என்ற பெயரே பொருந்துமென்று அவர் தீர்மானித்து விட்டார். அழகிய பெயர்களைத் தாங்கி நிற்கும் அவலட்சணமான பெண்களைப் போலல்லாமல், அப்பெயர் சுகன்யைக்கு முற்றும் பொருந்தியிருந்தது. அழகும் குணமும் ஒருங்கே அமையப் பெற்று விளங்கினாள் அவள். படிப்பிலும் அதிகப் புத்திசாலி என்று பள்ளியிலும் வீட்டிலும் பெயரெடுத்தாள். அவளுக்குப் பின் பிறந்த இரண்டு ஆண் குழந்தைகளும் குழந்தைப் பருவத்திலேயே இறந்துபோகவே, இவளும் ராஜகுமாரியாகிய சுகன்யையைப் போலவே, தாய்தந்தையருக்கு அருமையான ஒரே மகளாகிவிட்டாள்.

பெண்ணுக்கு வரன் தேடத்தான் தந்தை மிகவும் சிரமப்பட்டுப் போனார். சாதாரணமான பெண்ணைப் பெற்ற தந்தைகளே தம் பெண்ணை ஒருவனுக்கு மணம் முடித்துக் கொடுக்கக் கஷ்டப்படும்போது, சுகன்யை போலச் சகல குணமும் பொருந்திய பெண்ணைப் பெற்ற தந்தையைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

சுந்தரத்தைக் கண்டபோது சர்மா வெகு சீக்கிரமே ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். ஏன்? ஹாஸ்டலில் அவன் நன்னடக்கையும், சம்ஸ்கிருத மொழியில் அவனுக்கு இருந்த அறிவும் அவன் பணக்காரனாக இல்லாதிருந்ததுமே அதற்குக் காரணமாயின. பெண்கள் விரும்பும் பேரழகு அவ்வளவாக அவனுக்கு இல்லையே என்று அவர் சிறிது தயங்கினார். ஆனால், அவர் மகள் சுகன்யை, "அப்பா, புருஷர்களுக்கு அழகா முக்கியம்? படிப்பும் குணமுமல்லவா பெரிது?" என்று சமாதானம் கூறிவிட்டாள். 'டெஸ்டிமோனா ஒதெல்லோவை எதற்காக மணந்தாள்? ரூபத்திற்காக அல்லவே!' என்று அவள் மனம் தானே சொல்லிக்கொண்டது. இப்போது கலாசாலையில் ஷேக்ஸ்பிய நாடகங்களை அவள் கொஞ்சம் படிக்கிறாளல்லவா? அவளுக்கு இருந்த புத்தகப் படிப்பு மோகத்தில், தன் வாழ்க்கையையும் அதுபோலச் சித்திரித்துக்கொள்வதில்

அவளுக்கு மிகுந்த ஆசைதான். அப்படியும் அவள் பெரிய தியாகம் ஒன்றும் செய்துவிடவில்லை. அவளுக்கு வரும் கணவன் அதிக அழகில்லையே தவிர, ஒரே அவலட்சண மானவனல்ல. சுகன்யையின் தாய்க்கு மட்டும் மாப்பிள்ளை பணக்காரனல்ல என்பதில் சிறிது வருத்தமே தவிர, மற்றப்படி அவர்களுக்கு இந்தக் கல்யாணத்தில் முழுதும் சந்தோஷந்தான்.

இப்போது சுந்தரத்தின் போக்கு அவர்களுக்கு ஒன்றும் புரியாமல் இருந்தது. அவன் தன் மனைவியுடன் இக்காலத்து வாலிபர்களைப் போல வெளிப்படையாக அன்பு காட்டி நடந்துகொள்ளவில்லை. அது சுகன்யையின் பெற்றோரைப் பின்னும் கவலைக்குள்ளாக்கியது. பலர் முன்னிலையிலே புதுத் தம்பதிகள் சரசமாக நடந்துகொள்வதைத் தன் கணவன் விரும்பவில்லை என்பதைச் சுகன்யை விரைவில் கண்டுகொண்டாள். அப்படி நடந்துகொள்ளுவது அவளுக்கே பிடிக்காது. அவள் இதை அவனிடம் சொன்னபொழுது அவன் அவளை நம்பவில்லை. அதுதான் அவளுக்கு வருத்தத்தையும் வேதனையையும் அளித்தது. அவள் அவன் மனக் குறிப்பைத் தெரிந்துகொள்ளும் பொழுது, அவன் மட்டும் ஏன் அவள் வெளிப்படையாகச் சொல்லியும் நம்புவதாக இல்லை? இதற்குக் காரணம் என்ன என்று யோசித்தும் அவளுக்குப் புலப்படவில்லை.

தவிர, ஆடவர்களுக்கு அழகு முக்கியமல்ல என்று சுகன்யை பேச்சுவாக்கில் சொன்னதைச் சந்திரசேகர சர்மா தம் பெண்ணின் பெருமைக்கு எடுத்துக் காட்டென்று நினைக்கும்படி சுந்தரத்திடம் கூறிவிட்டார். கபடமற்ற அந்தச் சொற்கள் விபரீதப் பயனைத்தான் அளித்தன. சுகன்யை தன் கணவனும் தானும் இருக்கப் போவது பற்றிக் கற்பனையுலகில் கட்டியிருந்த இன்ப மாளிகைகளை அவை நொடியில் தகர்த்தெறிந்து விட்டன. அவனுக்கு அழகில்லை, பொருளுமில்லை. அவனை மணந்ததில் சுகன்யை மகத்தான தியாகம் செய்திருக்கிருள்; அல்லது தியாகம் செய்திருப்பதாக நினைக்கிருள். இவ்வாறு அவன் எண்ணினான். பிறகு கேட்க வேண்டுமா? சுந்தரத்துக்கு மனைவியின்பேரிலேயே பிசகுகள் தோன்ற ஆரம்பித்தன.

ஒரு நண்பர் வீட்டு விருந்திற்கு அவர்கள் எல்லோரும் சென்றனர். சுகன்யை மெல்லிய ஜார்ஜெட் புடைவை உடுத்துக்கொண்டு கிளம்பினுள். சுந்தரத்துக்கு அதைக் காணும்போதே வெறுப்பாக இருந்தது. அதைத் தெரிந்து கொண்ட சுகன்யை, வீடுவந்த பிறகு, அவனிடம், "உங்களுக்கு ஜார்ஜெட் புடைவை பிடிக்கவில்லையா? அப்படியானுல் இனி நான் அதை ஒருபோதும் கட்டிக்கொள்ளவில்லை" என்ருள். இந்த வார்த்தைகள் அவனைச் சந்தோஷப்படுத்துமென்று நம்பியே அவள் சொன்னுள். "எனக்காகத்தானு? அவ்வளவு மெல்லிய புடைவை உடுத்துவது பிசகென்று உனக்கே தோன்றவில்லையா?" என்று அவள் மேலேயே பாய்ந்தான். அந்தச் சொற்கள் அவள் கற்புணர்ச்சிக்கே ஒரு குற்றச்சாட்டாகப் பட்டன. அவளுக்குப் பொறுக்க முடியாத துக்கமும் கோபமும் பொங்கி வந்தன. ஆனுல், அவள் பேசாமலிருக்க முடிந்ததே தவிரத் தன் மனக் கசப்பை வெளியிட முடியவில்லை. அவள் கலாசாலையில் படிக்கும் நாகரிகப் பெண் தான். ஆனுலும், பெற்ருேர் அவளை வளர்த்திருந்த முறையினுல், கணவனை எதிர்த்துப் பேசுவது என்பது அவளுக்குச் சாத்தியமில்லை.

இப்படியே தினமும் ஏதாவது ஒரு சிறு வேற்றுமை அவர்களுக்குள் கிளம்பிக்கொண்டே இருந்தது. முதலில் சிறிதாக இருக்கும்; அதுவே பெரிதாகிவிடும். சுந்தரம் தனக்கு இது பிடிக்கவில்லை என்று முதலிலேயே சொல்லிவிட்டால், இந்த மாதிரிச் சங்கடம் நேர்வதற்கு இடமே இராது. அவனுடைய இஷ்டம்போல் நடப்பதைத்தான் சுகன்யை விரும்பினுள். அவனே முதலில் ஒன்றும் சொல்வதில்லை; எல்லாம் ஆன பிறகு குற்றம் கண்டு பிடித்துத் தன் வெறுப்பைக் காட்டுவதே அவனுக்கு வழக்கமாகப் போயிற்று. 'வேண்டுமென்று செய்த குற்றமல்லவே' என்று அவள் வருந்துவாள். 'இது குற்றமென்றே தெரியாத விஷயங்களில் இவருடைய மனத்துக்குள் புகுந்து அறிய முடியுமா?' என்று பொருமி அழும்பொழுது, அவன் அவள் செயலை நீலிச் செயலென்று எண்ணுவான். அதைக் குறிப்பாகவும் வெளியிடுவான். "உன் சிவந்த கண்களைக் கண்டு உன் பெற்

ரூர் நான் உன்னைத் துன்புறுத்துவதாக நினைத்துக் கொள்வார்கள்" என்று கோபிப்பான். அவள் என்ன செய்வாள், பாவம்! புத்தகங்களில்தான் ஸ்திரீகளின் கண்ணீரைப் புருஷர்கள் காணச் சகிக்க முடியாது போலும்!

அன்று அவள் கலாசாலையில் நாடகம் நடக்க இருந்தது. முன்னெல்லாம் அவள, கதாநாயகன், நாயகி வேஷத்துக்குக் குறைந்து நடித்ததில்லை; அவளுக்கு நடிப்பதில் அவ்வளவு விருப்பம். இப்போது அவள், தன் கணவனை உத்தேசித்து, அதில் கலந்துகொள்ளவே சம்மதிக்கவில்லை. அவன் மனந்தான் விபரீதமாய் இருக்கிறதே! தன் விருப்பையோ வெறுப்பையோ அவன் முன்கூட்டி வெளியிடுவதும் இல்லையே! அவள தோழிகள் உபாத்தியாயினிகள் வற்புறுத்தலின்பேரில், ஒரு சிறிய பாத்திரமாக நடிக்க அவள் இசையும்படி ஆயிற்று. நாடகம் பார்க்கத் தன் கணவனைத் தன்னோடு வரும்படி அவள் வற்புறுத்திக் கொண்டிருந்தாள். அவன் அதற்குக் கடைசி வரையில் யாதோர் ஆட்சேபமும் சொல்லவில்லை. அதனால் அவன் வருவானென்றே அவள் நம்பினாள். ஆனால், அன்று அவள் புறப்படுவதற்கு முன்பே, அவன் வேறெங்கோ செல்லத் தயாரானான். அதைக் கண்ட சுகன்யை, "நீங்கள் என்னுடன் வரவில்லையா?" என்று ஆவலாய்க் கேட்டாள். "இல்லை" என்று சுந்தரம் ஒரே வார்த்தையில் பதில் சொன்னான். "நீங்கள் வரப்போவதாக அல்லவோ நான் நினைத்திருக்கிறேன்? அப்படித்தான் கலாசாலையில் எல்லாரிடமும் சொல்லியும் இருக்கிறேன்" என்றாள். தனக்காக இல்லாவிட்டாலும், அவர்களிடம் தான் சொல்லியிருப்பதற்காகவாயினும் அவன் வரக்கூடாதா என்று அவள் நினைத்தாள் போலும். "அதற்காகவே தான் நான் வரவில்லை. உன் தோழிகள், உபாத்தியாயினிகள் இவர்கள் முன்னிலையில் உனக்கு அவமானத்தை உண்டுபண்ண நான் விரும்பவில்லை" என்றான்.

"அவமானமா? எதற்காக?" என்றாள் சுகன்யை ஆச்சரியத்துடன்.

"அழகோ பணமோ ஒன்றுமில்லாத என்னை மணந்

ததில், புராணகாலத்துச் சுகன்யை சியவனரை மணந் ததுபோல், நீயும் தியாகம் செய்திருக்கிறாய் அல்லவா? நம் இருவரையும் சேர்த்துப் பார்த்து உன் தியாகத்தை யும் அதனால் உனக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும் நினைத்து அவர்கள் வருந்த நான் விரும்பவில்லை'' என்று கடுமை யாகக் கூறி, அவள் பதிலுக்காகக் காத்திராமலே வெளி யில் சென்றுவிட்டான். அவன் மனக்கசப்பு அவ்வளவு அதிகமாக இருந்தது. தன் சொற்கள் அவளை எவ்வளவு தூரம் வருத்தும் என்பதை அவன் சிந்திக்கவே தயாராக இல்லை.

பாவம்! சுகன்யை, தாய்தந்தையருக்கு அருமை யான ஒரே மகள். கடுஞ் சொற்களைக் கேட்டறியாதவள். ஒருவர் கடிந்துகொள்ளும்படி அவள் நடந்துகொண்டதும் இல்லை. அவனிடத்தில் சரியாகவே நடக்க விரும்பினாள். அவ்விதம் இருக்க, இப்பொழுது அவன் கூறிய கடுஞ் சொற்கள் அவள் இருதயத்தைப் பிளக்காமல் என்ன செய்யும்?

அவனை மணந்ததே தியாகமா? யார் அவ்விதம் சொன்னது? அழகில்லை. படத்தில் எழுதிப் பார்க்கும் அழகு வேண்டுமென்று அவள் ஒருபோதும் ஆசைப்பட்ட தில்லையே! அவளுடைய பணமெல்லாம் அவனுடையதாக இருக்கும்பொழுது, அவனுக்குப் பொருளில்லை என்று எதற்காக நினைப்பது? அப்படியும் மனது துன்புறும் பொழுது பணம் ஒரு சிறிதும் உதவி செய்யக் காணோமே! தியாகம் என்ற நினைவு அவளுக்கு இல்லாவிட்டாலும், அவள் எவ்வளவோ பணிந்து நடந்துகொண்டும் அவன் புறக்கணிக்கிறானே. அதையும் அவள் பொறுத்துக் கொண்டு வருவதை ஏன் தியாகமென்று சொல்லக் கூடாது? அவள் நினைக்காவிட்டாலும், பார்ப்பவர்களுக் காவது அப்படித் தோன்றும்படி அவன் செய்கிறானே!

அவள் மனம் யோசனையில் ஆழ்ந்தது. ஆம், அவளை அவன் சுகன்யையோடு ஒப்பிட்டது ஓரளவுக்குப் பொருத்தமாய் இருந்தது. அவனும் அவள் தந்தையு மாகச் சேர்ந்து அவள் வாழ்க்கையைச் சுகன்யையின் வாழ்க்கையைப் போலச் சிறிது அமைத்துக்கொண்டுதான்

இருக்கிறார்கள். ஆனால், அசுவினி தேவர்கள் தோன்றி, சியவனருடைய உருவத்தை மாற்றினார்களே, இவன் மனத்தை மாற்ற எந்தத் தேவர்கள் தோன்றப் போகிறார்கள்? இவ்விதம் அவள் மனம் தவித்தது. அப்போது அவளுக்கு இருந்த மனவேதனையைச் சகித்துக்கொண்டு கலாசாலையில் சிரித்துப் பேச அவளால் முடியாதென்று அவளுக்குத் தோன்றிற்று. அவள் வேஷம் சிறியதே. ஆனாலும் அவள் மனம் இருந்த நிலையில் அதைக்கூட நடிக்க முடியாதென்றே கருதினாள். அவள் கலாசாலைக்கே போகாவிட்டால் திடீரென்று அவள் வராததற்குக் காரணம் கேட்பார்களே; அதைப்பற்றி அவள் கவலைப் படப் போவதில்லை. நாடகத்தில் அவளுக்குப் பதிலாக யாரையாவது வைத்து நடத்திக்கொள்ளட்டும். மன வருத்தத்தை மறைத்துக்கொண்டு பின்னும் துன்பத்தை வளர்த்துக்கொள்ள அவளால் முடியாது. 'தலைவலி' என்று அவள் அறையில் போய்ப் படுத்துக்கொண்டாள். இது தெரிந்ததும், அவள் தந்தை மிகவும் கவலையில் மூழ்கினார். காரணத்தை அவர் ஒருவாறு ஊகித்துத்தான் இருந்தார். ஆனாலும் அவர் அன்பாய்க் கேட்ட பல கேள்விகளுக்கு, "அப்பா, ஒன்றும் இல்லை. நான் சிறிது ஓய்வாக இருக்க விரும்புகிறேன்" என்று அவள் கூறி விடவே, அவர் சும்மா இருக்க வேண்டியதாயிற்று.

அவள் படுக்கையில் படுத்துக்கொண்டுதான் இருந்தாள். சரீரத்திற்கு ஓய்வுதான். ஆனால், மூளை மட்டும் ஓயாமல் வேலை செய்தது. 'அவர் மனத்தை மாற்றுவது எப்படி? அவரைக் குறைவாக நான் நினைக்கவில்லை என்பதை எந்தச் செய்கையால் அவருக்கு நிரூபிப்பேன்?' அவள் மூளை குழம்பிற்று. அவள் எவ்வளவு நேரம் அந்நிலையில் இருந்தாளோ அவளுக்கே தெரியாது. அறையில் ஏதோ காலடிச் சத்தம் கேட்டது; மின்சார விளக்கை யாரோ ஏற்றினார்கள். அவள் தலை நிமிர்ந்து பார்த்தாள். அவள் கணவன் வெளியிலிருந்து வந்து சட்டைகளைக் கழற்றிக்கொண் டிருந்தான்.

அவளைப் படுக்கையில் காணவே, அவன் திடுக்கிட்டான். அவள் கலாசாலை நாடகத்தில் இருப்பாளென்றல்லவோ அவன் நினைத்திருக்கிறான்? நாடகம் முடிந்து

அவள் வந்திருக்க நியாயமில்லை; மணி இப்பொழுதுதான் எட்டு ஆகிறது. அவள் போகவே இல்லையா? ஏன், அவனுக்காகவா? அவள் நாடகத்தில் எடுத்துக்கொண்ட வேஷம் என்ன ஆயிற்று? ஒரு நிமிஷம் விஷயம் ஒன்றும் புரியாமல் நின்றான். 'அவ்வளவும் மாய்மாலமா? என்று கோபம் கொண்டான். மறுகணமே, 'மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதையும் பொருட்படுத்தாமல் இவள் கலாசாலை போவதையே நிறுத்தும்படி அவ்வளவு ஆழத்தில் தைத்துவிட்டதா என் வார்த்தை? அட பிரமாதமே!' என்று தோன்றிற்று. நாளை தசரா விடுமுறைக்காக அவன் தன் சொந்த ஊருக்குப் போவதாய் இருக்கிறான். விடுமுறைக்குப் பிறகும் அங்கேயே தங்குவதாக உத்தேசித்தான். அழகிய இள மனைவியிடத்தில் அவனுக்கு அன்பும் ஒருபுறம் இருக்கத்தானே இருக்கிறது. அவளிடத்தில் மனஸ்தாபத்தோடு பிரிய அவனுக்கு மனமில்லை. கோபம் தானாகவே தணிந்தது. "நீ காலேஜுக்குப் போகவில்லையா?" என்று கேட்டான். அவன் குரலில் இருந்த சாந்தம் அவளுக்குச் சிறிது ஆறுதலைக் கொடுத்தது. 'தலைவலி' என்று அவள் சொன்ன காரணத்தை அவன் நம்பாவிட்டாலும் அதை ஒருவாறு ஏற்றுக்கொண்டவனைப்போல், "இப்பொழுது தேவலையா?" என்று கேட்டுக்கொண்டே, "நாடகத்தில் உன் வேஷத்திற்கு என்ன செய்தார்கள்?" என்றான். "நான் வர முடியாதென்பதைச் சொல்லி அனுப்பிவிட்டேன். யாரையாவது வைத்து நடத்தியிருப்பார்கள். அது அப்படி ஒரு முக்கிய வேஷமல்லவே. அந்தப் பாத்திரத்தை விலக்கிவிட்டு நடத்தினாலும் பாதகமில்லைதான்" என்று சாதாரணமாய் விடை அளித்தாள். சிறிது பொறுத்து அவர்கள் விசேஷம் ஏதும் நடக்காதவர்கள்போல் சாப்பிடச் சென்றனர். தந்தை அவள் தலைவலியைப் பற்றி மட்டும் விசாரித்து வேறொன்றும் காண்பித்துக் கொள்ளாதது அவளுக்கு ஒருவாறு ஆறுதல் அளித்தது.

மறுநாள் சுந்தரத்தின் தாயிடமிருந்து அவனுக்கு வந்த கடிதத்தில் சுகன்யையையும் அழைத்து வரும்படி அன்பாய் எழுதியிருந்தாள். சுகன்யை வருவாளா? சில நாளாவது கிராமத்தில் வசிக்க அவளால் முடியுமா?

சுந்தரம் அதை அவளிடம் சொல்லவே தயங்கினுன். ஆனால், சுகன்யைக்கு அது தெரிந்ததும் வருவதாகவே சொன்னாள். சற்றுச் சாந்தமாக இருந்த அவன் மனத்தை மறுபடியும் கிளப்பிவிட அவளுக்குப் பயமாகவே இருந்தது.

அவள் தந்தைக்கும் பெண்ணை அனுப்பி வைக்கும்படி சம்பந்தியிடமிருந்து மரியாதையாக ஒரு கடிதம் வைத்திருந்தது. தாய்தந்தையர்கள் தங்களுக்குள் பலத்த வாக்கு வாதத்துக்குப் பிறகு, சுகன்யையை அனுப்பச் சம்மதித்தனர். என்ன இருந்தாலும், பெண்கள் புக்ககத்தில் சிறிது நாளேனும் இருக்கத்தானே வேண்டும்?

கிராமவாசம் அவளுக்கு மிகவும் புதிது. பட்டண வாசத்துச் சௌகரியத்திலேயே பிறந்து வளர்ந்தவள். எந்த வேலையையும் ஆட்களை ஏவிச் செய்துகொள்ளும் பழக்கமுடையவள். தனக்கு வேண்டிய சிறுவேலையைத் தானுகச் செய்துகொள்ளுவதுகூட அவளுக்குச் சிரமமாக இருக்குமே என்று சுந்தரத்துக்குக் கவலையாக இருந்தது. கிணற்றடியிலும் ஆற்றங்கரையிலும் குளிப்பது அவளுக்குப் பழக்கமில்லை என்றெண்ணி அவளுக்காகப் பிரத்தியேக ஸ்நான அறை கட்டச் செய்தான். சதா அவளுக்குச் சௌகரியங்கள் செய்வதிலேயே அவன் மனம் சென்றுகொண்டிருந்தது. என்ன செய்தாலும், கிராமத்துச் சிறு வீட்டைப் பட்டணத்துப் பங்களாவாக மாற்றிவிட முடியுமா?

அவன் தாய்க்கு ஒத்தாசையாக அவள் ஏதாவது சிறு வேலை செய்வதைக் கண்டாலும், அவன் மனம் ஒரு பக்கம் சந்தோஷத்தையும் ஒரு பக்கம் கவலையையும் மேற்கொண்டது. அவள் சகஜமாய் நடந்துகொள்ளுகிறுள் என்பதில் சந்தோஷம். பழக்கமில்லாததால் அவளுக்குச் சிரமம் ஏற்படுமே என்பதில் கவலை.

ஒரு நாள் காலையில் அவன் காபி குடித்துக்கொண்டிருந்தபொழுது அவன் தாய் அருகில் வந்து உட்கார்ந்தாள். “சுந்தரம், என் மனம் நிரம்பியிருப்பதை உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வேன்?” என்று ஆரம்பித்தாள். “எதற்கு இந்தப் பூர்வ பீடிகை?” என்பதாகச்

சுந்தரம் அவளை நோக்கினான். அவன் தாய் சொல்லப் போவது தன் மனைவியைப் பற்றித்தான் என்பது அவனுக்கு உடனேயே தெரிந்தது. "சுகன்யை எனக்கு நாட்டுப் பெண்ணாய் வர நான் என்ன தவம் கிடந்தேனோ! அவளிடம் அடக்கம், மரியாதை, சமர்த்து எல்லாம் உருக்கொண்டிருக்கின்றன. பணமும் அழகுங்கூடக் கிடைத்துவிடும். இந்தக் குணம் கிடைக்காதப்பா" என்றாள். இந்த வார்த்தைகள் அவளுடைய இருதய பூர்வமாக வெளி வந்தன.

"அம்மா, உன் நாட்டுப் பெண் உனக்கு உயர்வாகத் தோன்றுகிறாள். அதில் என்ன அதிசயம்! உன்னுடைய பெருந்தன்மைதான் காரணம்" என்றான் சுந்தரம்.

"அப்படிச் சொல்லாதே! ஓரெழுத்துப் படித்து விட்டாலும் சரி, இரண்டு காசு இருந்தாலும் சரி, எல்லாம் தலைகீழாய் நிற்கிறார்கள். நம்மைக் கண்டு அவர்களுக்குப் பரிகாசமும் இளப்பமுந்தான். சுகன்யையைப் பார். கிராமத்திலேயே பிறந்து வளர்ந்தவள் போல் அல்லவா நடக்க ஆசைப்படுகிறாள்! நான் எது செய்யப் போனாலும், அவள், 'அம்மா அம்மா' என்று முந்திக் கொண்டு வந்துவிடுகிறாள். அவளைத் தடுத்து உட்கார வைப்பது கஷ்டமாகப் போய்விடுகிறது. என்னவோ அப்பா, நீ நல்ல அதிருஷ்டசாலி; ஆயிரங்காலம் நன்றாயிருக்கவேண்டும். அவ்வளவுதான் நான் விரும்புவது" என்று அவள் கண்களில் நீர் ததும்பச் சொன்ன போது, சுந்தரம் ஆனந்தசாகரத்தில் முழுகியே போனான்.

சுகன்யை பணக்காரப் பெருமையோ கர்வமோ சிறிதும் இல்லாமல் இருப்பதைக் கண்டு அண்டை அயல் வீட்டிலுள்ள பெண்களெல்லாம் அதிசயித்தார்கள். "குறை குடம் தளும்பும், நிறைகுடம் தளும்புமா? அவள் பிறக்கும்போதே செல்வத்தில் பிறந்து வளர்ந்தவள் அல்லவா?" என்று அவர்களே அதற்குக் காரணமும் கூறிக் கொண்டார்கள். அவள் மாமியாரிடம் அவர்கள் அவள் என்ன சாப்பிடுகிறாள் என்பதுமுதல் விசாரித்ததைப் பார்த்தால், அவள் தங்களைப்போல் சாதாரண உணவையேதான் அருந்துகிறாளோ என்றுகூட அவர்கள்

சந்தேகிப்பதுபோல இருந்தது. கிராமத்துக் குடியான வர்கள்கூட அவளைப் பார்க்க வந்து போனார்கள்!

"சின்ன அம்மாளைப் பார்க்க வந்தோம்" என்று அவர்கள் சுந்தரத்தின் தாயிடம் சொல்லும் பொழுது, "வாருங்கள். நன்றாய்ப் பாருங்கள்" என்பாள் அவள். சுகன்யையின் அழகையும் நாகரிகத் தோற்றத்தையும் கண்டு அதிசயித்து, "ராசாத்தியாட்டமல்ல இருக்காங்க! சின்ன ஐயரு படிப்புக்கும் புத்திக்கும் ஏற்ற பெஞ்சாதி தான். சாமி புண்ணியத்திலே நல்லாயிருக்கட்டும்" என்று அவர்கள் சொல்வதை அவன் அறையில் இருந்த வாறே கேட்டு மகிழ்வான்.

ஏற்கனவே அவன் படிப்பினால் கிராமத்தில் அவனுக்கு அசாத்திய மதிப்பு ஏற்பட்டிருந்தது. சுகன்யையை மனைவி யாகப் பெற்றதனால் அது பின்னும் அதிகரித்திருப்பதைக் கண்டான். கர்வமும் பெருமையும் பணக்காரர்கள் தலைக்கு ஏறியிருக்கும் என்பதாக முன்னமே அவன் தீர் மானமாக நினைத்திருந்தான். உலகமும் அப்படி நினைக் கிறது. இந்தக் கெடுதலான குணங்கள் அவன் மனைவி யிடத்தில் சிறிதும் இல்லை என்பதைக் கண்டு ஊராரும் அதிசயிக்கிறார்கள். அவனும் நேரிலே காண்கிறான். அவன் மனம் அன்பும் ஆனந்தமும் நிறைந்து பொங்கியது. முன்பு மனைவியிடம் தோன்றிக்கொண்டிருந்த குற்றங்க ளெல்லாம் எங்கோ ஓடி மறைந்தன.

அவர்களுடைய நிலையே இப்பொழுது மாறி இருக் கிறது. முன்பு அவள் வீட்டில் அவன் வசித்தான். இப்பொழுது அவன் வீட்டில் அவள் இருக்கிறாள். பட்டணத்தில் அவள் அந்தஸ்துக்கு அவன் குறைந்த வனாகத் தோற்றினான். இங்கே அப்படி அல்ல. அவன் கிராமத்தில் அவனுக்குச் செல்வாக்கு உண்டு, மதிப்பு உண்டு. பட்டணத்தில் அவள் பெற்றோர் அவளுக்காக உயிரையும் கொடுக்கத் தயார்; இவன் வேண்டுமென்பதே இல்லை. இங்கே இவன்தான் அவளுக்குச் சகலமும். அவன் ஆதரவு இருப்பதனாலேயே அவள் அந்தச் சிறு கிராமத்தில் இருக்க முடிகிறது. பட்டணத்தில் அவள் பணக்காரி. பணக்கார வழக்கங்கள், நாகரிக மோகம் இவற்றில் புரள்

பவளாகத் தோன்றினுள். செல்வராகிய சந்திரசேகர சர்மாவின் அருமைப் புத்திரியாக அங்கே இருந்தாள். இங்கே அவள் வெறும் சுகன்யை. அவளுடன் பிறந்த அழகும் குணமுமே இங்கே அவளோடு வந்திருக்கின்றன. அவற்றை அவன் கண்களுக்குத் தெரியவொட்டாமல் மறைத்த திரை இப்போது விலகிவிட்டது. மனிதனது செயற்கையின் கோணலினுல் மறையாத இயற்கைத் தேவி தன் இயல்பான எழிலுடன் விளங்கும் அந்தச் சிறிய ஊரில்தான் சுகன்யையின் இயற்கையான எழிலும் குண மும் சுந்தரத்தின் கண்களுக்குப் புலப்பட்டன. அவள் தன் இருதயபீடத்தில் சுந்தரத்தை வைத்துப் பூசிப்பதை அவன் தெளிவாக உணர்ந்தான். இடம் மாறியது. அவன் மனமும் மாறியது.

சுந்தரம் கிராமத்தின் அழகையெல்லாம் அவளுக்குக் காண்பிக்க ஆசைகொண்டு குளிர்ந்த மாஞ் சோலைகளிலும் தென்னஞ் சோலைகளிலும் அவளை உலாவ அழைத்துச் செல்வான். சாயங்காலங்களில் தெளிந்த நீரோடு கூடிய ஆற்று மணலில் உட்கார்ந்து நம் கவிகள் எவ்விதம் ஆங்கிலக் கவிகளைவிட இயற்கை வருணனையில் மேம் பட்டவர்கள் என்பதை உதாரணங்களோடு அவளுக்கு எடுத்துக் காண்பிப்பான். இம்மாதிரி நேரங்களில் பொழுதுபோவதே அவர்களுக்குத் தெரியாது. அவ னுடைய அறிவில் அவள் தன்னை முற்றும் மறந்து ஈடுபட்டுவிடுவாள். அவனும் அவள் விஷயங்களைக் கிர கிக்கும் வேகத்தைக் கண்டு மகிழ்ந்தே போவான். இப்படி யாக நாட்கள் சென்றதே அவர்களுக்குத் தெரியவில்லை.

சுகன்யை இப்பொழுது என்ன நினைக்கிறுள்? கிராம வாழ்க்கை அவளுக்குச் சுவர்க்க வாழ்க்கையாக மாறி யிருக்கிறதா? ஆம், அவள் கணவன் அதை அவளுக்கு அவ்விதந்தான் அமைத்துவிடுகிறுன். அவன் அன் பையும் அவன் தாய்தந்தையரும் கிராமத்தாரும் அவளி டத்தில் வைத்திருக்கும் அன்பையும் மரியாதையையும் கண்டு, தன்னைவிடப் பாக்கியசாலி யாருமில்லை என்று தான் அவள் நினைக்கும்படி இருந்தது. இயற்கை எழிலுக்கும் வஞ்சகமற்ற அன்புக்கும் உறைவிடம் கிராமம் என்ற சிறப்பு எல்லோருக்கும் பொதுவானது.

அந்தச் சிறப்பினுல் சுகன்யை இன்பத்தை அடைந்தது பெரிதல்ல. தன் கணவனது உள்ளத்தில் மறைந்திருந்த அன்பை வெளிப்படுத்தி அவனை மாற்றிய இடமாக அது அமைந்ததுதான் அதனுடைய தனிச் சிறப்பு.

மறுபடியும் பட்டணம் சென்ருல் அவன் மாறி விடுவானே என்று அவள் சிறிது பயந்ததற்குக் காரணமே இல்லாமல் போயிற்று. அவன் பிறகு மாறவே இல்லை. அவன்தான் சுகன்யையின் உள்ளத்தை உணர்ந்துவிட்டானே; ஒரு முறை இதழ் விரிந்த மலர் மறுபடியும் குவிந்து மொட்டாவது உண்டா?

காசி யாத்திரை

"அடியே, சம்பந்திகளிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. காசி யாத்திரை முடிந்து வருகிறார்களாம்" என்று வாசுதேவையர் கையில் கார்டுடன் மனைவியின் முன் காட்சியளித்தார்.

"போனால் திரும்பி வரமாட்டார்களா என்ன? அதிசயம் போலச் சொல்லுகிறீர்களே! நாம்தான் போகவில்லை. போயிருந்தால் நாமுந்தான் இப்பொழுது திரும்பியிருப்போம்" என்று அவர் மனைவி காமாட்சி மனத்தாங்கலுடன் மொழிந்தாள்.

"இப்பொழுது என்ன முழுகிவிட்டது? இனிமேல் போகக் கூடாதா?"

"ஆமாம்! கிடைத்த துணையை விட்டுவிட்டு இனிமேல் நாம் போகப் போகிறோம்! ஏன் அப்போது ஆக்ஷேபித்து ஒரே அடியாக மறுத்தீர்களாம்?"

"எங்கேயாவது வைகாசி ஆனி மாதங்களில் காசி யாத்திரை செய்வார்களா? அங்கெல்லாம் 115 டிகிரி வெயில் மண்டையைப் பிளக்கும். அவரவர்கள் இருக்கிற இடத்தில் சௌக்கியம் செய்துகொண்டு இருக்க வேண்டியது போகப் புது இடத்தில் அலைந்து திரியக்கூடிய காலமா அது?"

"இப்படித்தான் வெயிலானால் வெயில், குளிரானால் குளிர். உங்களுக்கென்று குளிரும் இல்லாமல் வெயிலும் இல்லாமல் ஒரு காலம் ஏற்பட்டு நாம் போகிறபோது பார்த்துக்கொள்வோம். அண்ணா போனபோது வருந்தி வருந்திக் கூப்பிட்டான். அப்பொழுது க்ஷேத்திராடனம் செய்தால் மார்கழிப் பனியால் குளிரில் விறைத்துத்தான் சாகவேண்டுமென்று சொல்லிவிட்டீர்கள். அவனோ குஞ்சு குழந்தைகளோடு போய்ச் சௌக்கியமாகத்தான்

திரும்பி வந்தான். 'தலைவலிகூட வரவில்லை' என்றான். நாம் இவ்விதம் மீனமேஷம் பார்த்துக் காரியம் நடத்துவதற்குள் உலகமே அஸ்தமித்துத்தான் போகும்" என்று காமாட்சி வேகமாக அடுக்கினாள்.

"என்னடி, கைக்காசைச் செலவழித்துக்கொண்டு ஊர் சுற்றுவது பிரமாதமான காரியமோ? நடக்காது போலப் பெரிதாய் அடுக்குகிறாயே!"

"உங்களுக்கு எதுதான் பிரமாதம்? இதுவரையில் என் இஷ்டத்துக்காக என்ன நடக்கிறது? நான் எதற்கு ஆசைப்பட்டிருக்கிறேன்? இரண்டும் இல்லை. எட்டரை மணி ஆபீசுக்குச் சமைத்துப் போடுவதும் அவசர அவசரமாகக் காரியம் செய்வதும் நித்தியம் ஒரு வியாதிக் குழந்தையுடன் இரண்டாம் பேரில்லாமல் போராடுவதும் இப்படியே என் காலம் போய்விட்டது."

இப்படி அவள் கூறவும் தாம் தம் குடும்பக் காரியங்களில் என்ன என்ன பங்கெடுத்துக்கொண் டிருக்கிறோம் என்ற நினைவு அவர் மனத்தில் தானாகவே உதித்தது. அவர் மனைவி சொல்வது போல் சதா ஒரு வியாதிக் குழந்தையுடன் அவள் மன்றாடுவாள். "அதன் உடம்பு என்ன? அது ஏன் அழுகிறது?" என்று பார்க்கக்கூட அவருக்கு நேரம் இராது. இரவில் பத்து மணி வரையிலும் ஆபீஸ் கட்டுகளைப் பார்த்து அலுத்து அவர் அயர்ந்து நித்திரை செய்யும்பொழுது குழந்தை கத்தித் தூக்கத்தைக் கலைக்கும். தூக்கத்திலும் விழிப்பிலும் மனைவி தொட்டில் ஆட்டுவதையோ மருந்தோ பாலோ குழந்தைக்குப் புகட்டுவதையோ அவர் பார்ப்பார். பிறகு பொழுது விடிந்து ஆபீஸ் போகும்பொழுது, "டாக்டரை வரச் சொல்லுங்கள்! குழந்தை ராத்திரி முழுவதும் கண் மூடவே இல்லை" என்று அவள் சொல்லும்போதுதான் அந்தக் குழந்தைக்கு உடம்பு குணமில்லை என்று தெரிந்துகொள்வார். அந்தப்படியே போகிற வழியில் டாக்டர் வீட்டில் இறங்கிச் சொல்லிவிட்டுப் போவார். அதற்கும் நேரமில்லை என்று தோன்றினால் பக்கத்து வீட்டுக் கோபாலனிடம் சொல்லியனுப்புவார்.

இம்மாதிரி சில நாட்கள் டாக்டர் வந்துபோவார். அப்

புறம் அக்குழந்தை டாக்டர் வரவேண்டிய அவசியம் இல்லாமலே தொல்லை மிகுந்த இவ்வுலகத்தை விட்டு நீங்கி விடும். பிறகு டாக்டர் வந்துபோன தடவைகளும் மருந்துகள் வாங்கின தடவைகளும் தெரியவரும். அவர் மனைவி மருந்து வாங்குவது முதலிய சகல வேலைகளையும் அடுத்தகத்துக் கோபாலனை விட்டே செய்துகொள்வாள். அவருக்குச் சிரமம் கொடுக்கக்கூடாது என்பது அவள் எண்ணம்.

காமாட்சி ஐந்தாறு குழந்தைகள் பெற்ருள்! ஆனல் வியாதிகளால் இறந்து போனதுபோக இப்பொழுது ஒரே பிள்ளை உயிருடன் இருக்கும் பாக்கியந்தான் பெற்றிருந்தாள். வீட்டுக் காரியங்கள் எல்லாவற்றிலும் வாசுதேவையர் மேற்கொள்ளும் பங்கு இவ்வளவுதான். கல்யாணமோ வேருென்ருே எதுவானுலும் சரி; அவர் ஆபீஸ் போகாமல் வீட்டிலிருந்த நாட்கள்கூட வெகு சொற்பமே. இந்த 'ஸெக்ரிடேரியட் ஆபீஸ்' குமாஸ்தா உத்தியோகம் அவரை இவ்விதம் அடிமைப்படுத்தி யந்திரமாகச் செய்து விட்டது. ஏதோ அவரது மேற்பார்வையின்றியே அவர் மகன் படித்து, பாங்கி ஒன்றில் முப்பத்தைந்து ரூபாய்ச் சம்பளத்தில் வேலைக்கு அமர்ந்திருந்தான். வாசுதேவையர் முப்பத்தைந்து ரூபாயிலேயே ஆரம்பித்தவரானுலும் படிப்படியாக உயர்ந்து முந்நூறு ரூபாய்ச் சம்பளத்தில் 'ரிடையர்' ஆனவர். அவருக்கு நூறு ரூபாய்க்குமேல் பென்ஷன் வந்தது. அதை வைத்துக்கொண்டு பிள்ளையோடு பட்டணத்தில் 'ஹாய்'யாக வசித்தார். வெகுநாள் இருந்து பழகின ஊரைவிட்டுக் கிராமத்துக்குப் போக அவருக்கு மனமில்லை: அப்படியும் கிராமத்தில் போய்த்தான் அவருக்கு என்ன தெரியும்?

தாய்தந்தையருக்கு வாசுதேவையர் ஒரே குமாரர். தினம் மகனை வேளைக்கு ஓர் அலங்காரம் செய்து பார்த்து ஆனந்திக்க அவர்களிடம் மிதமிஞ்சிய தனம் இல்லாவிட்டாலும் ஒரு வேலையும் செய்யவிடாமல் அருமையாக வளர்த்தார்கள். அவருக்கு அதிகம் ஒன்றும் தெரியாது; தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சிறுபிராயத்தில் தாய்தந்தையர் கவனித்துக்கொண்டார்கள்; பிறகு மனைவி ஏற்பட்டுவிட்டாள்.

"வாஸ்தவம், இவள் அடிக்கடி சொல்லிக் காண்பிப்பதுபோல் நமக்குக் காரிய நிர்வாகம் அவ்வளவாகப் போதாதுதான்!" என்று அவர் மனத்துக்குள் ஓர் எண்ணம் எழுந்தது. 'அதற்குக் காரணம் என்ன?' என்று அவர் இப்பொழுது சிந்திக்கத் தொடங்கினர். "இதுவரையில் நாம் குடும்பக் காரியங்களுக்குள் புகாமலே இருந்துவிட்டோம். உத்தியோக நினைவாகவே இருந்ததில் வேறு காரியங்களுக்கு அவகாசமே ஏற்படாமல் போய்விட்டது. பாவம், க்ஷேத்திராடனத்தில் அவளுக்கு ஆசை என்னவோ அதிகந்தான். எப்படியும் அவளை அழைத்துத்தான் போவது" என்கிற திடசங்கல்பத்தைச் செய்துகொண்டார்.

இப்பொழுதுதான் மனைவியின் மனம் அவருக்குக் கொஞ்சங் கொஞ்சமாகத் தெரிவதாகக்கூடத் தோன்றிற்று. முன்னெல்லாம் ஒருவர் மனநிலையைப் பற்றிச் சிந்திக்க அவருக்கு அவகாசமே கிடையாது. வேலைத் தொந்தரவு அவ்வளவு. இப்பொழுதுதான் அவருக்குத் தம்முடைய வீட்டு விவகாரங்களெல்லாம் கண்ணில் பட்டன. பேரன், பேத்திகள்கூட எங்கும் இல்லாத அழகும் சாமர்த்தியமும் பொருந்திய குழந்தைகளாகத் தோன்றினர்கள். இவ்வளவு நாட்களாக அவர் காதில் விழாத அவர்கள் பேச்சும் விளையாட்டும் அவரை ஒருங்கே ஆச்சரியமும் ஆனந்தமும் கொள்ளச் செய்தன. தம் குழந்தைகளும் இப்படித்தான் இருந்திருப்பார்களோ என்று அவர் நினைத்தார். அவர்கள் வியாதியோடு கிடந்ததுதான் அவர் மனக்கண்முன் சிறிதளவு வந்ததே தவிர, வேறு அழகிய செய்கை எதுவும் நினைவிற்கு வரவில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில்கூட ஆபீஸ் கட்டுகளுடன் தம் அறையில் அவர் உட்கார்ந்திருந்த பொழுது அவருக்குத் தொந்தரவாய் இராமல் இருக்க அவர் மனைவி குழந்தைகளை வீட்டில் விளையாடக்கூட விடமாட்டாள். 'அப்பா' என்று அக் குழந்தைகளுக்கு அவரிடம் ஒரு சுவாதீனமும் இல்லை. அயலாரிடம் போலவே அவைகளும் அவர் அருகில் வராமலே இருக்கும். அவைகளுக்கு நினைவு தெரிந்து தந்தையை அறிந்துகொள்ளுமுன் அவைகளின் காலந்தான் முடிந்துவிடுமே!

அவர் மனம் பச்சாத்தாபத்தால் இளகியே

போயிற்று. காசிப் பயணத்திற்கு வேண்டிய ஏற்பாட்டை அந்த நிமிஷமே செய்தால்தான் சிறிதாவது மனச் சமாதானம் ஏற்படுமென்று அவருக்குத் தோன்றியது. மத்தியான்னமே வீட்டு உபாத்தியாயரை அழைத்துச் சமீபத்தில் ஒரு நல்ல நாளாகப் பார்க்கும்படி சொன்னார். அவர், "இன்று சனிக்கிழமை. இன்றைக்கு ஆறுவது நாள் வியாழக்கிழமை நல்ல நாள்; காலையில் புறப்படலாம்; பரஸ்தானம் ஒன்றும் இல்லாமல் நேரே வீட்டிலிருந்தே புறப்படலாம்'' என்று சொல்லிப் போனார்.

திடீரென்று நாலு நாட்களில் புறப்பட வேண்டும் என்ற தீர்மானமானது அவளுக்குக் கொஞ்சம் படபடப்பை உண்டுபண்ணிற்று. "ஒருவரும் துணைக்கு வேண்டியதில்லை. ஊர் கூட்டுவதாயிருந்தால் காரியம் நடக்காது'' என்று ஐயர் தீர்மானமாகக் கூறியது அவளைத் திகைக்க வைத்துவிட்டது. வழியில் உள்ள ஸ்தலங்களைப்பற்றிப் பேசுவது, அடிக்கடி பலரிடம் சொல்வது, வேண்டியதைத் தயார் பண்ணுவது, இவ்வளவு ஆர்ப்பாட்டங்களுடனும் முன் ஏற்பாட்டுடனும் நடக்கவேண்டிய காரியம் அது. இப்போது திடீரென்று ஏதோ அடுத்த ஊருக்குப் போகிறது போலத் தீர்மானம் செய்தது அவளுக்குச் சற்றும் பாந்தமில்லாமல்தான் இருந்தது.

சாயங்காலம் தம் பிள்ளை வரவே வாசுதேவ ஐயர் தமது தீர்மானத்தை அவனிடம் சொன்னார். அவன் என்ன சொல்லப் போகிறான்? ஆனால் அவர் தம் ஆபீஸில் தம் கீழ் வேலை பார்த்த கோபால் ராவைப் பார்த்து வருவதாகக் கிளம்பியபோது மட்டும், "காலையில் பார்த்துக்கொள்ளலாமே அப்பா! நாளைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே? இப்போது இருட்டும் நேரமாகிவிட்டதே?'' என்றான்.

"இப்போது வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. இன்று சனிக்கிழமை; கோபால் ராவும் இப்போது ஆபீசிலிருந்து வந்திருப்பார். அவர் மைத்துனர்கள் இருவரில் பம்பாயில் ஒருவனும் டில்லியில் ஒருவனும் வேலையில் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கோபால்ராவை விட்டுக் கடிதம் எழுதச் சொன்னால் அங்கே போகும்போது

தங்குவதற்கு இடம் சௌகரியமாக இருக்கும்" என்று சொல்லி வாசுதேவையர் புறப்பட்டார்.

பாதி வழி போன பிறகுதான் கோபால்ராவ் வீடு மாற்றியிருக்கும் விஷயம் நினைவிற்கு வந்தது. 'அப்பொழுது அவரைச் சரியாய் விலாசம் கேட்டு வைத்துக் கொள்ளவில்லையே! இப்பொழுது வீட்டைக் கண்டு பிடித்தாகவேண்டுமே" என்று பெருத்த யோசனை எழுந்தது அவருக்கு.

'புரசைவாக்கத்தில் அவர் முன்பு இருந்த இடத்தில் விசாரித்துப் பார்க்கலாமே, அதுதான் சரி' என்று நினைத்துப் பஸ்ஸை விட்டு இறங்கி, கோபால்ராவ் முன்பு இருந்த வீட்டை நோக்கி நடந்தார்.

சூரியன் அஸ்தமித்துவிட்டது. விளக்கு வெளிச்சமும் அவ்வளவாகப் பிரகாசம் கொடுக்க முடியாத நேரம். வீட்டுப்படி ஏறவும் நாய் ஒன்று குரைத்துக்கொண்டு இவர்மேல் பாய வந்தது. பாவம்! தமக்கு ஏற்பட்ட கலவரத்தில் ரோட் ஓரம் இருந்த குப்பைத் தொட்டியில் மோதிக்கொள்ளும்படி - அதன் சமீபம் ஓடுகிறோம் என்பது கூடத் தெரியாது – வாசுதேவையர் ஓடினார். உடைந்த கண்ணாடித் துண்டு ஒன்று காலில் சுருக்கென்று தைத்ததையும் அவர் தெரிந்துகொள்ளவில்லை. நாய் தம்மைப் பின் தொடரவில்லை என்பதையும் அவர் பிறகுதான் உணர முடிந்தது.

சிறிது தூரம் ஓடின பிறகே ஓர் இடத்தில் நின்றார். மார்பு படபடத்தது. நிதானித்துக்கொண்டு, 'கால் வலிக்கக் காரணம் என்ன?' என்று பார்த்தார். கண்ணாடித் துண்டு பொத்திருந்தது தெரியவந்தது.

'நாளைக்குத்தான் கோபால்ராவைப் பார்த்துக் கொள்ளவேணும். ஆபீஸிலேயே வேண்டுமானாலும் பார்த்துக்கொள்ளலாம். இந்த 'வீடு தேடும்' வியாபாரமே வேண்டாம்' என்று நினைத்து உடனே வீடு திரும்பினார்.

'நடந்தது எதையும் நம் அகத்தில் சொல்லக்கூடாது. சொன்னால் அவன் உடனே, "நான்தான் காலையில் பார்த்

துக்கொள்ளலாம் என்று சொன்னேனே'' என்று ஆரம்பிப்பான். அவளோ இன்னும் ஏதாவது சொல்லத் தொடங்குவாள். அதற்கு இடங் கொடுக்கக்கூடாது' என்ற தீர்மானத்துடன் வீடு சென்றார்.

நடக்கும்போதுமட்டும் கால் ஊன்ற முடியாமல் வலிக்கத்தான் வலித்தது. வீட்டில் உள்ளவர்கள் தெரிந்து கொள்ளாமல் இருக்கவேண்டி வலியைப் பொறுத்துக் கொண்டு நொண்டுவது தெரியாமல் நடந்தார். காலையில் எல்லாம் சரியாகிவிடும் என்று அவர் நம்பினார்.

"கோபால்ராவிடம் சொன்னேளா? 'எழுதுகிறேன்' என்றாரா?'' என்று அவர் மனைவி கேட்டுவிட்டு அவர் பதிலைக்கூட நின்று கேட்டுக்கொள்ளாமல் தன் காரியத்தில் ஈடுபட்டுவிட்டாள். காசி, பிரயாகை முதலிய இடங்களுக்குச் சென்றால் 'போகிற வழி'க்கு என்ன என்ன தான தர்மங்கள் செய்யவேண்டும், என்ன என்ன ஊர்களை முக்கியமாகப் பார்க்கவேண்டும், மற்றும் என்ன என்ன தீர்த்தங்களில் ஒன்று விடாமல் ஸ்நானம் செய்து புண்ணிய மூட்டைகளைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்பனபோன்ற யாத்திரா மார்க்க விசேஷங்களையெல்லாம் பக்கத்தாத்துப் பாட்டியம்மாளிடம் விசாரித்துத் தெரிந்துகொண்டாள். பிறகு அதற்கு இங்கிருந்தே தயாரிக்க வேண்டிய சாமான்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தாள் காமாட்சி. பாட்டியம்மாள் வருஷக் கணக்கில் அங்கெல்லாம் யாத்திரை செய்து அதனால் பூகோள சாஸ்திரம் முழுவதும் தனக்குத் தெரிந்திருந்ததாகச் சொல்லிக்கொள்வாள். அங்கிருந்தவர்களும் அதை நம்பி ஏற்றுக்கொண் டிருந்தனர். ஆகையால் காமாட்சியும் அவளை விசாரிப்பதில் முனைந்திருந்தாள்.

வாசுதேவையர் குமாரனும் அவரை ஊன்றிக் கவனிக்கவில்லை. ஆகையால் அவரை ஒன்றும் விசேஷமாகக் கேட்கவில்லை.

காலையில் வாசுதேவையரால் எழுந்திருக்கவே முடியவில்லை. இனி ஒருவரிடமும் சொல்லாமல் இருப்பதென்பது சாத்தியமில்லை என்ற நிலை வந்துவிட்டது. வலி அசாத்தியமானதோடு காய்ச்சல் வேறு இருப்பதாகத்

தோற்றியது. இவ்விஷயம் காமாட்சிக்குத் தெரிந்த போது, "ஐயோ! என்ன இது!" என்று அவள் கதி கலங்கிப் போனாள். 'முதலில் இந்த அசட்டுப் பிராமணர் இப்படிப் பைத்தியக்காரத்தனமாக ஜுரத்தை வர வழைத்துக்கொண்டாரே! நாம் புறப்படுவதற்கு முன் குணமாக வேண்டுமே' என்று எண்ணினாள். அவர் கால் சௌக்கியத்தைக் காட்டிலும் அவளுக்குக் காசி யாத்திரை ஞாபகம் அதிகமாக இருந்தது.

டாக்டர் வந்து பார்த்தார். "கடுகளவு கண்ணாடித் துண்டு உள்ளுக்குள்ளே இருக்கவேண்டும். அதனால்தான் இவ்வளவு தொந்தரவு!" என்று சொல்லி அது பழுத்து வெளிவருவதற்கு மாவு வைத்துக் கட்டும்படி சொல்லி விட்டுப் போனார்.

வயசான தேகமாகையால் அவருக்கு வலி தாங்க முடியவில்லை.

"கண்ணாடியா? அது விஷமாச்சே! உள்ளே புரை ஓடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமே" என்று வந்தவர்கள் சிலர் சொன்னார்கள். வேறு சில அநுதாபி கள் அதோடு நிற்கவில்லை. இப்படிக் கண்ணாடித் துண்டு குத்திப் புண்பட்டவர்கள், நொண்டியானவர்கள், கால் வெட்டுப்பட்டவர்கள், உடலையே தியாகம் செய்தவர்கள் — இவர்களுடைய சரித்திரங்களைச் சொல்லி விஸ்தரித் தார்கள். அவர்களுடைய வார்த்தைகளால் காமாட்சி நிலைகலங்கிப்போனாள்.

நான்கு நாட்கள் டாக்டர் மருந்து போட்டார். அவர், 'பயம் வேண்டாம்' என்று சொன்னாலும் இருப்பவர்கள் பயமூட்டினர். "பழுத்துவிட்டது. நாளைக்கு ஆப ரேஷன் செய்யவேண்டும்" என்று சொன்னார் டாக்டர்.

காமாட்சிக்கு இப்போது காசியின் ஞாபகம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. அல்லும் பகலும் தன் கணவர் கால் சொஸ்தமாக வேண்டுமே என்ற கவலையிலே மூழ்கி யிருந்தாள்.

ஐந்தாவது நாள் காசி யாத்திரை புறப்படுவதற் காகக் குறிப்பிட்டிருந்த நாள். அந்த நல்ல நாளிலே எந்த

நல்ல வேளையிலே புறப்படுவதாக நிச்சயம் செய்திருந்தார்களோ அதே வேளையில் ஸ்ரீமான் வாசுதேவையருடைய காலில் டாக்டர் 'ஆபரேஷன்' செய்து கண்ணாடித் துண்டை வெளிப்படுத்தினார். டாக்டர் கட்டுக் கட்டிவிட்டு, உள்ளுக்கும் மருந்து கொடுத்தார். அதன் பிறகே ஐயருக்கு வலி நீங்கிக் காய்ச்சலும் குறையத் தொடங்கியது. அவர் கால் புண் ஆறவே காமாட்சியின் முகத்திலும் மலர்ச்சி உண்டாயிற்று.

காசி யாத்திரைக்கு வழி சொன்ன பாட்டி வந்தாள். "என்ன பாட்டி! நீங்களும் எவ்வளவோ சிரத்தையாக எல்லாம் எடுத்துச் சொன்னீர்கள்! எனக்கும் ஆசையாகத்தான் இருந்தது. எதற்கும் பிராப்தம் வேண்டாமா?" என்றாள் காமாட்சி.

"அசடே! காசி யாத்திரை போகாவிட்டால் போகிறது. உன் அகத்துக்காரர் இந்த மட்டும் தப்பிப் பிழைத்தாரே, அதே பெரிது" என்று ஆறுதல் சொன்னாள் பாட்டி.

காமாட்சியின் ஆவல் நிறைவேறவில்லை. தம்முடைய சாமர்த்தியத்தைக் காசி யாத்திரையில் காட்டவேண்டுமென்றிருந்த வாசுதேவையரின் ஆவலும் நிறைவேறவில்லை.

விருந்தனுபவம்

புறப்படும்பொழுதே அவள் கணவர் ‘அஸ்து’ என்று ஆக்ஷேபங்களைக் கிளப்பினர். “அம்மாஞ்சிகூட ஸிம்லாவுக்கு மாத்தலாகிப் போய்விட்டான். நீ யாராத்தில் போய்த் தங்குவாய்? சர்மா வீட்டார் ஒரு மாதிரி மனிதர்கள். உனக்குச் சரிப்பட்டு வருமா?” என்ருர்.

அவளென்ன, ஏதாவது சம்பந்திகள் உபசாரத்தை எதிர்பார்த்துப் போகிருளா? ஸங்கீத விழாவுக்கு அதிலும் முக்கியமாக அங்கு நடக்கப்போகும் சர்ச்சைகளுக்குப் போகவேண்டும். தனிச் சௌகரியம் ஒன்றையும் அவள் கோரவில்லை. தங்குவதற்கு ஓரிடம்; அவ்வளவு தான் அவள் கேட்பது.

இந்தத் தீர்மானத்தோடு சர்மாவின் மனைவிக்குத் தன் வரவைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதி முதல் நாளே போட்டுவிட்டு மறுநாள் பட்டணம் கிளம்பிவிட்டாள் ஜானகியம்மாள். அவள் தந்தை அவர் காலத்தில் பெரிய ஸங்கீத வித்துவான். அவர் தம் அருமையான ஒரே பெண்ணுக்கு மிகுந்த ஆசையுடன் சாஸ்திர ரீதியோடு ஸங்கீதத்தை நன்கு கற்பித்தார். வித்தை என்னவோ பூர்ணமாகத்தான் அவளுக்கு வந்தது. ஆனால் அதற்கு ஏற்ற குரலைத்தான் ஈசுவரன் அவளுக்கு அளிக்கவில்லை. ஸங்கீதத்தில் விஷயங்கள் எவ்வளவு தெரிந்தபோதிலும் அதை வெளிக்காட்டிச் சோபிக்கச் செய்யக் குரலன்ருே முக்கியமாக அமையவேண்டும்! இருப்பினும் அவளுக்கு ஏற்பட்டிருந்த ஞானமிகுதியால் ஒருவாறு சமாளித்து வந்தாள் என்றுதான் கூறவேண்டும். இப்பொழுது வயசு ஆனதில் அது பின்னும் கொஞ்சம் குறைந்து போயிற்று. அதை அவள் அறிந்திருந்தாளோ என்னவோ?

அவளுக்கு இருக்கும் வித்வத்துக்காக வேண்டி வருஷா

வருஷம் விழாவின் பொழுது நடக்கும் சர்ச்சைகளுக்கு அவளுக்கு அழைப்பு வருவதும் அவளும் சென்று தனக்குத் தெரிந்த விஷயங்களைச் சபையில் வித்துவான்களான பல ஆடவர்கள் முன்னிலையில் விவாதித்துக் கௌரவம் பெறுவதும் வழக்கமாக இருந்தது. ஒரு ஸ்திரீக்குத் தெரிந்திருப்பவைகளுக்கு மதிப்பு அதிகந்தானே. அதில் அவளுக்கு இருந்த பெருமை மற்ற ஸ்திரீகளை எல்லாம் சிறிது தாழ்வாகவே கருதச் செய்தது. எல்லாருடைய படிப்பும் பாட்டும் அரைகுறைதான். வித்துவான்களுக்குச் சரியாக விவாதிக்கும் அவள் சக்தி யாருக்கு உண்டு?

பெருமை கொள்வதென்னவோ நியாயமானதே. ஆனால் அதற்காக அவள் யார் ஸங்கீதத்தையும் காது கொடுத்துக் கேளாமலிருந்தது பெரும் தவருக இருந்தது. எதுவும் 'குப்பை' என்பது அவள் கேளாமலே கொண்ட தீர்மானம். அவள் பெண்கள் இருவருக்கும் பாட்டு லவலேசமும் வராததுடன் அதில் ஞானமும் ஏற்படாமல் போகவே இப்பொழுது எல்லோருமே ஒன்றும் தெரியாதவர்கள்தாம் என்பதாக ஜானகியம்மாள் சந்தேகமறத் தீர்மானித்துவிட்டாள். அப்படி அவள் தீர்மானித்தது அவளுக்கு மிகுந்த நன்மையாயிற்று. இல்லாவிடில் தன் தந்தைக்குப் பிறகு அவருடைய வித்தை அவ்வளவுக்கும் அவர் வம்சத்தில் ஒரு வார்சு இல்லாமல் போனதை நினைத்து அவள் மனம் உடைந்தே போயிருப்பாள்.

எழும்பூர் ஸ்டேஷனில் அவளுக்காகச் சர்மா வீட்டு வேலையாள்தான் காத்திருந்தான். வீட்டு மனிதரோ அவர் காரோ வரவில்லை. வாடகை மோட்டார் பேசி வீடுபோய்ச் சேர்ந்தாள் ஜானகி. இக்காலத்துப் 'பெட்ரோல்' நெருக்கடிக்கு அவள் கடிதப்படி வரத் தவறினல் எண்ணெய் வீணுகிவிடுமே என்கிற அவர்கள் சிக்கனம் அது. ஸ்டேஷன் சிற்றுண்டிச் சாலையில் காபி சாப்பிட்டதாகச் சொல்லவும், அவர்கள் மறுபடியும் தங்கள் வீட்டு நல்ல காபியைக் கொஞ்சம் கொடுத்து, உபசரிக்க முன் வரவில்லை. ஒவ்வொருவருக்குப் போல ஜானகியம்மாளுக்குக் காபி முக்கியமில்லை யாதலால் அவளும் அதைப் பொருட் படுத்தவில்லை. ஒவ்வொரு காரியத்திலிருந்தும் அவர்கள் மிகுந்த செட்டும்

கட்டுமான பேர்வழிகள் என்பது அவளுக்கு நன்கு தெரிந்தது. கணவர் எச்சரித்ததன் நோக்கமும் இதுதான் என்று கண்டுகொண்டாள். மரியாதைக்குக்கூடச் சர்ச்சைகள் நடக்கும் வேளைகளில் சபாவுக்குப் போக அவர்கள் மோட்டாரை அவளுக்குக் கொடுப்பதுபற்றிப் பேச்சே எடுக்கவில்லை.

அவர்கள் கொடுத்திருந்தால் மட்டும் ஜானகியம்மாள் அதை உபயோகப்படுத்திக்கொண்டிருப்பாளா? மாட்டாள். இப்பொழுதிருக்கும் 'பெட்ரோல்' அருமை அவள் அறியாததல்ல. அதுவும் தன் வருகையினால் அவர்களுக்குச் சிறிது சிரமம் கொடுக்கவும் அவள் விரும்பவில்லை. காசை எறிந்தால் வாடகை வண்டிகள் கிடைத்துவிட்டுப் போகின்றன என்பது அவள் சித்தாந்தம். ஒன்றையும் அவர்களிடம் அவள் எதிர்பாராததனால் அவளுக்கு ஏமாற்றமோ வருத்தமோ உண்டாவதற்கில்லை.

சர்மாவின் பெண் ஸரோஜா வெகு நன்றாகப் பாடுவதாக அவர்கள் வீட்டில் எல்லோருடைய அபிப்பிராயமும். நல்ல கச்சேரி கேட்கவேண்டியது அவளுக்கு முக்கியம் என்பதற்காகச் சர்மா பத்துநாள் கச்சேரிக்கும் தனக்கு, பெண்ணுக்கு, மனைவிக்கு மூன்று பேருக்கும் டிக்கெட்டுகள் வாங்கியிருந்தார். சாயங்காலம் மட்டும் எல்லாரும் தவறாமல் போய் வந்தார்கள். ராகங்களின் அபூர்வ சஞ்சாரங்கள் முதலியவைகளைப் பற்றி அவர்கள் துளிக்கூடச் சிரத்தை காண்பிக்கவே இல்லை. "பாடுகிறதாகச் சொல்லப்படும் பெண்ணே கவனிக்கவில்லையே" என்று ஜானகியம்மாள் அங்கலாய்த்தாள். ஏனெனில் அன்றன்று சர்ச்சையில் ஏதாவது விசேஷங்கள் அவள் சொல்ல நேர்ந்தால் அது செவிடன் காதில் சங்கு ஊதினதுபோல்தான் இருந்தது. 'சாஸ்திரம் தெரியாமல் என்ன ஸங்கீதம் வேண்டியிருக்கு? அதற்கு ஏற்ற ஞானந்தான் இருக்கும்" என்று நினைத்தாள்.

"அம்மா! ஸரோஜா பாட்டை நீங்கள் ஒரு நாள் கட்டாயம் கேட்கவேண்டும்" என்று கணவனும் மனைவியும் ஓயாமல் சொல்லிக்கொண்டிருந்து ஒரு நாள் காலை அதற்கு ஏற்பாடும் செய்தார்கள். சில சிநேகிதர்கள்,

சபாவிற்கு வந்திருக்கும் ஒன்றிரண்டு வித்துவான்கள், இப்படியாக ஏழெட்டுப் பேர்கள் கொண்ட ஒரு சிறு கூட்டம். ஜானகியம்மாள், 'ஸங்கீத விஷயம் ஒன்றும் தெரியாமல் இந்தப் பெண் என்ன பாடப் போகிறது?' என்று நினைத்தாள். தன்னைக் கட்டாயத்தின் பேரில் கேட்கவைப்பார்களே என்பது அவள் கவலை. "வயிறு நிரம்பும்படிகூட அவர்கள் வீட்டில் விருந்தினருக்குச் சாப்பாட்டு உபசரணை இல்லை. அதற்கு மேலாக இந்தப் பாட்டை வேறு கேட்க வேண்டுமே' என்பது அவள் விசாரம்.

ஆனால் அவளையும் அறியாமல் அவள் இரண்டுமணி தேசகாலமல்லவோ பாட்டைக் கேட்டிருக்கிறாள்! என்ன அதிசயம்! அந்தப் பெண்ணின் குரல் அவ்வளவு இனிமையாக இருந்தது. ஸ்வரங்கள் சுத்தம், வார்த்தைகள் சுத்தம், தான சுத்தம், யாவும் நன்கு பொருந்தியிருந்தன. சாஸ்திரம் என்பதாக ஒன்றைத் தனியாகக் கற்காமலே இவ்வளவும் அதில் அமைந்திருந்தது. வந்திருந்த வித்துவான்களும் 'ஸபாஷ்' என்றுதான் தலையாட்டினார்கள். சர்மாவுக்கும் அவர் மனைவிக்கும் பெருமையும் ஆனந்தமும் சொல்ல முடியாது. ஜானகியம்மாளுக்கு மட்டும், "உன்னுடைய சாஸ்திர அறிவு என்னத்திற்குப் பிரயோஜனம்! இதன் இனிமைக்கு ஈடாகுமா!" என்று தன்னையே ஏளனம் செய்வதுபோல் இருந்தது அது. இதற்குமுன் எந்தப் பெண் பாடுவதையாவது அவள் நிதானித்துக் கேட்டிருந்தாலல்லவா இந்த நாளில் ஸங்கீதக் கலை எல்லாரிடமும் எவ்வளவு விருத்தி பெற்றிருக்கிறதென்பது அவளுக்குத் தெரியவரும். அவள் 'கிணற்றுத் தவளையாக' இருந்ததை அவளே அறிந்திருந்தால் அன்றோ! 'யாருக்கும் எதுவும் தெரியாது' என்பதுதான் அவள் சித்தாந்தமாயிற்றே.

ஏதோ கட்டாயத்தின்பேரில் கேட்டது பிரமாதமாகத் தோன்றிவிட்டது. கவிதை எழுதுவதின் நியதிகளை உணராவிடினும், பிறவிக் கவிக்கு அந்த நியதிகள் தாமாகவே வரையறை செய்து கொள்வதுபோல அந்தப் பாட்டும் தனி இனிமையுடன் பிழை சிறிதும் இல்லாமல் அவள் செவிகளில் தொனித்தது. அவள் இருதயத்தைப் பாரமாய் ஒன்று அழுத்துவதாக உணர்ந்தாள். தன்

ஏகபோக உரிமையான சொத்தை யாரோ அயலார் அபகரித்துக் கொண்டதுபோல் அவள் மனம் பெரிதும் வருந்திற்று.

சர்மாவும் அவர் மனைவியும் விஷயமொன்றும் புரியாமல் தங்கள் பெண் பாடுகிருளென்கிற ஒரே மூட ஆனந்தத்தில் முழுகியிருப்பதைப் பார்க்கவும் ஜானகியம்மாளுக்கு வெறுப்புத் தாங்கவே இல்லை. 'நத்தை வயிற்றில் முத்து ஜனித்ததுபோல இந்த ஞானசூன்யங்களுக்கு இவ்வளவு ஞானோதயம் எவ்விதம் உதயமாயிற்று? சேற்றில் தாமரை மலர்வதுபோலவா?' என்று நினைத்தாள். அவர்கள் எதிரில் பெண்ணைச் சிலாகிப்பதுகூட அவளுக்குப் பிடிக்கவில்லை. அதில்லாமலே அவர்கள் ஜம்பம் தலை தாங்கவில்லையே! அப்படியும் அவள் புகழ்ச்சியை மதிக்கத்தான் அவர்களுக்குத் தெரியப்போகிறதா? வெறும் மூடாத்மாக்கள், லோபிகள். அதிகம் செலவழிந்துவிடும் என்கிற பயத்தில் வயிற்றுக்குக்கூட அளந்து கணக்குப் பார்த்துச் சாப்பிடுபவர்கள். சீ! ஜானகியம்மாளுக்கு உண்டான வெறுப்பிற்கும் கோபத்திற்கும் அளவே இல்லை. அவர்கள் வீட்டில் இன்னும் ஒரு வேளை உண்பதும் விஷம் அருந்துவதுபோல்தான் என்று அவளுக்குப்பட்டது. 'இந்த ஒரு வாரத்தை இந்த அல்பங்களுடன் எவ்விதம் கழித்தோம்' என்று தானே அதிசயித்தாள். அர்த்தமற்ற அவர்கள் ஜம்ப வார்த்தைகளைச் சகிப்பதென்பது இனிச் சாத்தியமே இல்லை.

இன்னும் இரண்டு நாள் வித்வத் சபை இருக்கிறதே; அதற்குள் ஊர் திரும்புவது எப்படி? ஆனால் அவளுக்கு அவைகளிலுள்ள ரசமே போய்விட்டது. அதன் முக்கியத்வம் எல்லாம் எங்கோ பறந்துசென்றது. ஊருக்குத் திரும்பியேவிட்டாள்.

அவள் அவ்விதம் திடீரென்று கிளம்பினது சர்மா வீட்டாருக்குத்தான் ஆச்சரியமாக இருந்ததென்ருல் வீட்டில் அவள் கணவர், பிள்ளை, பெண்கள் எல்லாருக்கும் ஆச்சரியந்தான். இதற்குமுன் ஒரு தடவையும் அவள் அவ்விதம் செய்ததே இல்லை.

"ஏன் இந்த அவசரம்?" என்று அவள் கணவர் கேட்டதற்கு, "ஐயோ, அந்த அல்பங்கள் வீட்டில் மனிதர்கள் இருப்பார்களோ? நீங்கள்தாம் நான் புறப்படும் பொழுதே சொன்னீர்களே. நான் கேட்காமல் போனது பிசகு" என்றுதான் ஜானகியம்மாள் தயங்காமல் பதில் சொன்னாள்.

சர்மா வீட்டார் தங்கள் பெண்ணுடைய பாட்டைக் கேட்டு ஏற்பட்ட பொறுமைதான் ஜானகியம்மாளைத் தங்கள் வீட்டில் இருக்கப் பிடிக்காமல் செய்துவிட்டதாகச் சொன்னார்களென்று அவள் காதுகளில் விழுந்தால் அதை அவள் ஒப்புக்கொண்டிருப்பாளா?

சாம்பசிவத்தின் அதிசயம்

1

மிராசுதார் சாம்பசிவம் புத்தகமும் கையுமாக உட்கார்ந்திருக்கும் கமலத்தைப் பார்த்தார். உடனே காலையில் அவர் பெண் தங்கம் சொன்ன வார்த்தைகள் நினைவிற்கு வந்து வேதனையைக் கொடுத்தன. "அப்பா, பேசாமல் இருக்கிறீர்களே! கமலத்திற்கு வரன் தேட வேண்டாமா? இந்த வருஷமும் கல்யாணம் பண்ணுவிட்டால் நன்றாயிருக்குமா?" என்றாள் கவலையுடன்.

கமலம் அவருடைய பேத்தி. நேற்றுத்தான் பிறந்தாள் போலிருக்கிறது. அதற்குள் பதினைந்து வருஷ காலம் ஓடிவிட்டது. அவள் நன்கு உயர்ந்து வளர்ந்திருந்தாள். அவளுக்குக் கணவன் தேடும் பொறுப்பு, சாம்பசிவத்தின் பேரில் விழுந்தது. கமலத்தின் தந்தை இறந்து இப்பொழுது பத்து வருஷத்திற்குமேல் ஆகிவிட்டது. ஒரே பெண்குழந்தையுடன் கைம்பெண்ணாகி வீடு வந்துவிட்டாள், சாம்பசிவத்தின் பெண் தங்கம். அப்பொழுதிருந்து சாம்பசிவமும் வேறு மனிதர் ஆகிவிட்டார். பெண்கள் கல்வியும் பெண்கள் சுதந்தரமுமே அவர் முக்கிய லட்சியங்களாகிவிட்டன.

தங்கத்துக்குச் சிறு வயசில் கல்யாணம் செய்ததில் அவருக்கோ அவர் பெண்ணுக்கோ துளிக்கூடச் சுகமில்லை. "அப்பா, சாம்பசிவம்! கன்னிகாதானம் செய்து கொடு. பிள்ளை பிறக்கட்டும்" என்று அவரைச் சதா தொந்தரவு செய்து, பத்து வயசுச் சிறுமி தங்கத்துக்கு மணம் முடிக்கும்படி செய்துவிட்டாள் அவருடைய தாய்.

அன்று ஆரம்பமான சம்பந்திச்சண்டை, தங்கம் கைம்பெண்ணாகி வீடு வந்த பிறகுதான் ஓய்ந்தது. சாம்பசிவம் ஒரு மிராசுதாரின் பிள்ளைக்குத்தான் பெண்ணைக் கொடுத்திருந்தார். அப்பொழுது பிள்ளைக்கு வயது பதி

ெனட்டு. ஏதோ படித்துக்கொண் டிருந்தான் பார்ப்ப தற்கு லக்ஷணமாக இருந்தான். இன்னும் என்ன வேண்டும்? கல்யாணமும் நிச்சயமாகிச் சுபமாக நடந்தேறிற்று. ஆனல் கல்யாணத்தின்பொழுதே சீர், செனத்தி, அவமரியாதை, மரியாதை என்பதாக மனஸ்தாபம் ஆரம்பமாயிற்று.

'கிடக்கிருர்கள்; பெண்ணைக் கொடுத்துவிட்டால் அடிமை என்பதாக எண்ணம் போலும்' என்று எதையும் காதில் போட்டுக்கொள்ளாமல் அலட்சியமாக இருந்தார் சாம்பசிவம். அவர் கொஞ்சம் சுயமரியாதையில் நம்பிக்கை உள்ளவர். 'நம்மைத் தாழ்த்திக்கொண்டு பிறரை எதற்காகப் பிரமாதமாக உபசரிப்பது?' என்று நினைப்பவர். இவர் அலட்சியம் காரணமாகப் பிள்ளையின் தந்தைக்கும் கோபம் விருத்தியாயிற்று.

இரண்டு மூன்று வருஷம் கழித்துப் பெண்ணின் சாந்திக் கல்யாணத்தின் பொழுது அவர்கள் சச்சரவு உச்ச நிலையை அடைந்தது. நேருக்கு நேராகவே சம்பந்திகளுக்குள் வார்த்தைகள் தடித்துவிட்டன. "பெண்ணைப் பெற்றவனுக்கு இவ்வளவு அகம்பாவமா?" என்ருர் பிள்ளையின் தந்தை. "பிள்ளையைப் பெற்றுவிட்டதனுல் இவன் உயர்ந்துவிட்டாஞ?" என்ருர் சாம்பசிவம். சாம்பசிவத்தின் கர்வத்தை அடக்க ஒரு வழி கண்டுபிடித்தார் அவருடைய சம்பந்தி. சாந்திக் கல்யாணமாகி வீடு வந்த நாட்டுப் பெண்ணைத் திரும்பித் தந்தை வீட்டுக்கு அனுப்பவில்லை. "அப்பா! அவர்கள் குழந்தையை அனுப்பாமலே இருக்கிருர்களே?" என்று அவர் தாய் அங்கலாய்த்தாள். "அம்மா, நீதானே பிள்ளைக்காகப் பெண்ணைத் தானம் செய்யச் சொன்னுய்? பிள்ளை பிறக்காவிட்டாலும் பெண்ணைத் தானம் செய்தாயிற்று. பிறகு என்ன!" என்பார்.

"ஐயோ; நான் அதற்காகவா சொன்னேன்? ரொம்ப அழகாயிருக்கு! ஏதாவது சமாதானம் சொல்லிக் குழந்தையை அழைத்து வாடாப்பா. என் கண்மணியைப் பாராமல் என்னல் இருக்க முடியவில்லை" என்று அவள் கண்ணீர்விட ஆரம்பித்தாள். "அம்மா, நல்ல வேலை

செய்தாய். பதினுயிரக் கணக்கில் செலவு செய்து பெண்ணைக் கொடுத்துவிட்டு மறுபடியும் நம் வீட்டில் அழைத்துச் சோறு போடுவதா? நீ சொல்வது சரியாக இல்லையே'' என்று பேச்சை வேடிக்கையாகத் திருப்பிவிடுவார் சாம்பசிவம். இப்படி அவர் சொன்னுரே தவிர, பெண்ணைக் காணுத துக்கம் உள்ளத்தில் பொங்கித் ததும்பிக்கொண் டிருந்தது.

பிறகு பிள்ளைப் பேற்றுக்குப் பெண் வந்ததுகூடப் பல பேர் மத்தியஸ்தத்திலும் சமாதானத்திலுந்தான் நடந்தது. இவர்கள் உறவுமுறை இந்நிலையில் இருக்கும் பொழுது பெண் புக்ககத்தில் சந்தோஷமாய் வாழ முடியுமா? அவளும் எவ்வளவோ சொற்களைக் கேட்டு மனம் புண்பட்டிருந்தாள். கணவனுடைய பலம் கொண்டு எதையும் லட்சியம் செய்யாமல் இருக்கும் காலம் வருவதற்குள் வாழ்வே முடிந்துவிட்டது.

இனிச் சம்பந்திகள் மனமொத்து இருக்கவேண்டிய அவசியம் இல்லாமலே போயிற்று. தம்முடைய துக்கத்தைவிடச் சாம்பசிவத்தின் துக்கம் அதிகமென்று உணர்ந்த சம்பந்தி, சாம்பசிவம் விரும்பியபடியே தங்கத்துடன் குழந்தை கமலத்தையும் இவரிடம் ஒப்பித்தார்.

ஆகையால் கமலத்திற்கு வரன் தேடும் விஷயத்தில் தம் மனம்போல் நடத்த முழுச் சுதந்தரமும் சாம்பசிவத்திற்கு இருந்தது. தங்கத்தைக் கொடுத்ததுபோல் சொற்பப் படிப்புப் படித்துக்கொண்டு பெற்றேருக்கு அடங்கியிருக்கும் சிறுபையனுக்கு அவர் கமலத்தைக் கொடுக்க விரும்பவில்லை. நன்ருகப் படித்து உத்தியோகமேற்றுச் சுயமே புத்தி தெரிந்து நடக்கும் பிள்ளைக்குத்தான் கொடுக்கவேண்டும். மேலும் அவன் ஸ்திரீகளைச் சமமாகப் பாவித்து நடத்துபவனுகவும் இருக்கவேண்டும். இது நிச்சயம். இவ்விதம் தமக்குள்ளே சங்கல்பம் செய்து கொண்டார் சாம்பசிவம்.

முதலிலிருந்தே இந்த எண்ணத்தோடு கிராமத்தை விட்டுத் திருச்சிக்கு வந்து குடித்தனம் நடத்தினர். பேத்தியைப் பள்ளிக்கூடத்தில் படிக்கவைத்தார். பெண்ணும்

தனியே மனம் புழுங்காமல் இருக்கவேண்டி ஓர் உபாத்தி யாயினியை நியமித்துக் கல்வி கற்பிக்கச் செய்தார். அவர் மனைவியின் காலமும் முடிந்துவிட்டது. பெண்ணின் வைதவ்யமே அவளுக்குத் தீராத வியாதியாக முடிந்தது. வயசு சென்ற அவருடைய தாய் மட்டும், "அவள் போகணுமா, நான் இருக்கணுமா?" என்று சொல்லிக்கொண்டு கூடத்தில் விசுபலகையோடு பலகையாகக் கிடந்தாள். ஆனால் கிழவிக்குப் புத்தி மாருட்டம் என்பது மட்டும் சிறிதும் இல்லை. "கமலத்துக்குக் கல்யாணம் பண்ணடா அப்பா" என்று அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டே வந்தாள். "ஆரம்பித்துவிட்டாயா, அம்மா? உன் விருப்பத்தின்படி அன்று தங்கத்துக்குக் கல்யாணம் நடத்திச் சுகமடைந்தாய் விட்டது. போதும்" என்பார் சாம்பசிவம். "ஏதோ நாம் கொடுத்துவைத்தது அவ்வளவு தான். அதற்கும் இதற்கும் என்ன?" என்று கிழவி சொல்வாள்.

2

இந்த வருஷம் கமலம் ஸ்கூல்பைனல் பரீட்சைக்குப் போகிருள். வயசு பதினைந்து நிரம்பிவிட்டது. பார்வைக்குச் செழித்து வளர்ந்திருக்கும் கொடி போல் தளதளப்பாய் வளர்ந்திருக்கிருள். இனி வரன் தேடவேண்டியதுதான் என்று சாம்பசிவம் நினைத்தார். அடிக்கடி அவர் பெண் தங்கம் அவருக்கு அதை நினைப்பு மூட்டத் தொடங்கினுள். கல்யாணமே இல்லாவிட்டால் என்ன என்று நினைக்கும் அளவுக்கு அவருக்கு அதில் வெறுப்பு ஏற்படவில்லை. 'நல்ல குடும்பங்களில் நன்கு படித்துப் புது நாகரிக எண்ணங்களுள்ள பிள்ளைகள் எவ்வளவோ பேர் இருப்பார்கள். "சிறிது பொறுத்திருந்தாவது அப்படிப்பட்ட பிள்ளையாண்டான் ஒருவனைத் தேடிப் பிடிக்க வேண்டும். அதுவரையில், இன்னும் சில வருஷம், கமலம் எப். ஏ., பி. ஏ., என்று படிக்கட்டுமே? அப்புறம் கல்யாணம் செய்துகொண்டால் என்ன?' என்று ஒவ்வொரு சமயம் உள்ளூற அவர் எண்ணுவதுண்டு. ஆனால், பெண் தங்கத்தைத் திருப்தி செய்ய அவர் கடமைப்

பட்டிருக்கிறுர். அவள் சிறிது காலமாகப் பெண் கல்யாணத்தைப் பற்றிக் கவலைப்படத் தொடங்கியிருந்தாள். "கணவன் இருந்தால் தந்தை தயவைத் தேடவேண்டி இருந்திருக்குமா?" என்று அவள் வருந்த இடம் கொடுக்கக்கூடாது, என்ற தீர்மானத்துடன் வரன் தேடத் தொடங்கினுர் சாம்பசிவம். அவர் அதிகம் தேடி அலைய வேண்டியிருக்கவில்லை. பட்டணத்தில் சேஷாத்திரி என்ற ஒரு வக்கீலுடைய மகன் மேல்நாடு சென்று கல்வி கற்று நாகபுரி காலேஜில் ஆங்கில ஆசிரியனுக இருந்தான். அவன் பெயர் வைத்தியநாதன். அதை அவன் எஸ். வி. நாதன் என்பதாகக் குறுக்கி வைத்துக்கொண்டிருந்தான். எல்லா விதத்திலும் அவன் தேவலை என்பதாகச் சாம்பசிவம் நினைத்தார். கல்யாணம் நிச்சயமாவதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்தார். எஸ். வி. நாதன் பெண் பார்க்க வந்தபோது அவன் நடை உடை யாவும் பெரும்பாலும் மேல்நாட்டைப் பின்பற்றினவையாக இருந்தன. தங்கம் மட்டும், "இவ்வளவு மேல்நாட்டு நாகரிகம் உள்ளவன் நம்மிடம் பெண் கொள்வானு? அப்படிச் செய்துகொண்டாலும் பிறகு சரிப்பட்டு வருமா?" என்று சந்தேகித்தாள். "இவன் நாகரிகமாகத்தான் இருக்கட்டுமே; கர்நாடகப் பேர் வழிக்குக் கல்யாணம் செய்துகொடுத்து என்ன சுகப் பட்டோம்?" என்றுர் சாம்பசிவம்.

"என்னை மணப்பதில் உனக்கு விருப்பந்தானே?" என்று நாதன் கேட்டபொழுது கமலம் தன் பெரிய கருவிழிகளால் அவனை ஒரு பார்வை பார்த்துக் கண்களைத் தாழ்த்தித் தலையைக் குனிந்து கொண்டாள். அவ்வளவுதான். அதையே அவள் சம்மதத்தைத் தெரிவிக்கும் பதிலாகக் கொண்டு தனக்கும் விருப்பம் என்பதைத் தெரிவித்துவிட்டான் நாதன். பிறகு, சாம்பசிவம் பெண்ணுடன் சேர்ந்து கமலத்தின் விருப்பத்தைத் தனியே விசாரித்த பொழுது, "உனக்கும் அம்மாவுக்கும் இஷ்டமானுல் எனக்கும் இஷ்டந்தான்" என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டாள் அவள். அந்தப் பதிலிலுள்ள அடக்கமும் சமர்த்தும் சாம்பசிவத்தை உணர்ச்சி வெள்ளத்தில் முழுகச் செய்தன. கமலத்துக்குத் தகுந்த

கணவனாக அவன் இருக்க வேண்டுமே என்று அவர் பகவானைப் பிரார்த்தித்தார்.

வக்கீல் சேஷாத்திரி பதினாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கேட்டது சாம்பசிவத்திற்கு ஆச்சரியத்தைக் கொடுக்க வில்லை ; ஆனால் நாதன் அதை ஆட்சேபிக்காததுதான் ஏமாற்றத்தைக் கொடுத்தது. 'தந்தை ஏதோ சீமைப் படிப்புக்குச் செலவு செய்த பணத்தை இந்தச் சாக்கில் வாங்கிவிடவேண்டுமென்று நினைக்கிறார் ; ஆனால் இவ்வளவு படித்த மகனுமா அதை மறுத்துக் கூறாமல் இருக்கிறான்? இவன் படித்த லட்சணம் இதுதானா?' என்று வியந்தார்.

ஆனால் அதற்காக இவ்வளவு தூரம் ஏற்பாடான கல்யாணம் நிற்குமா? யாவும் மேலே நடந்தன. வைதிகக் காரியம் ஒன்றிலும் தனக்கு நம்பிக்கை இல்லை என்று நாதன் சொல்லிவிட்டான். தாலி கட்டினானே தவிர மற்ற வைதிகக் காரியங்கள் ஒன்றும் செய்யவில்லை. இது சாம்பசிவத்துக்குத் தம்மையே அவமதிப்பது போல் இருந்தது. அவர் அழைப்புக்காக வந்திருந்த அவ்வளவு பெரிய மனிதர்கள் முன்னிலையில் மாப்பிள்ளை விசித்திர மாக நடந்துகொண்டது அவருக்கு மிகுந்த வருத்தத்தையும் அவமானத்தையும் கொடுத்தது.

"தனக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் வயசில் மூத்த நம்மையாவது கௌரவித்தானா?" என்று வருத்தப்பட்டார். என்ன ஆனால் என்ன? கல்யாணம் நடந்து விட்டது.

3

காலேஜ் விடுமுறை கழிந்து நாதன் ஊருக்குப் புறப்படும்பொழுது கமலத்தையும் உடன் அழைத்துப் போக வேண்டுமென்று சொன்னான். சாம்பசிவத்திற்கு இது பெரிய அதிர்ச்சியாக இருந்தது. "இன்னும் ஆறு மாதம் போகட்டுமே" என்றார். தங்கமோ, "அவள் குழந்தை; திடீரென்று அவ்வளவு தொலைவில் தனியே போய் எப்படி இருப்பாள்?" என்று கவலைப்படத் தொடங்கினாள். இதெல்லாம் மாப்பிள்ளையின் காதில் ஏறுவதாயில்லை.

அவன் இருக்கும்பொழுது தனி என்ன? கமலம் அவனோடு போவதையே விரும்புவதாகச் சொன்னாள். அவள் விருப்பத்தை அவர்களைவிட அவன் நன்கு அறிந்திருந்தது போலிருந்தது அவன் பேச்சு. படித்தவனாயிற்றே. சில வருஷம் கமலம் காலேஜில் சேர்ந்து படிப்பதை ஆட்சேபிக்க மாட்டான் என்று அவர் நினைத்திருந்தார். 'அதொன்றும் அவசியம் இல்லை' என்று மாப்பிள்ளை சொல்லிவிட்டதன் பொருள் அவருக்கு விளங்கவே இல்லை.

புருஷனுடன் ஊருக்குப் புறப்படுமுன் கமலம் கண் கலக்கத்துடன் தாத்தாவை நமஸ்கரித்தாள். அவளுக்குச் சகல நன்மைகளையும் கொடுக்கும்படி பகவானைப் பிரார்த்திப்பது தவிர வேறொன்றும் சாம்பசிவம் செய்யக் கூடவில்லை. அவர் சொல்லுக்கு மதிப்பு இருந்தால் அல்லவோ அவர் ஏதாவது நடத்த முடியும்? முன்பு பழைய நாகரிகத்தில் பெண்ணை இழந்தார். இப்பொழுது புது நாகரிகத்திலும் பேத்தியை இழக்க நேர்ந்துவிட்டது.

அந்தச் சம்பவத்தில் மாப்பிள்ளையின் தந்தையைக் குறை கூறினார். இப்பொழுது மாப்பிள்ளையேதான் அவரை அவமதிக்கிறான். பெரியவரான அவர் சொல்லுக்கு அற்ப வெளி மரியாதை காண்பிக்கக்கூட அவன் சிரமம் எடுத்துக்கொள்ளவில்லை. இதை நினைத்துப் பார்த்ததும் இன்னோர் எண்ணமும் திடீரென்று தோன்றி அவரைத் துடிக்கவைத்தது. 'ஐயோ! இவன் கமலத்தை எவ்விதம் நடத்துவானோ? அவனது மேல்நாட்டுத் தோரணையில் கமலம் மனுஷியாகத் தோன்றப் போகிறாளா? நமக்குப் பிறகு தங்கத்தின் கதி என்ன? கமலத்தை விட்டால் தங்கத்துக்கு வேறு திக்கில்லையே? தந்தையாகிய நானே அவளுக்கு இரு முறையும் கெடுதல் செய்துவிட்டேனே?' என்று நினைக்க நினைக்க அவருக்கு ராத்தூக்கம் இல்லாமல் போயிற்று. ஸ்திரீ சுதந்தரம் வேண்டுமென்றால் கல்யாணமே கூடாது போலும் என்று கருதினார்.

மாப்பிள்ளைக்கு இரண்டொரு கடிதங்கள் போட்டுப் பார்த்தார். அவன் அவைகளுக்கு உடனுக்குடன் பதில்

போடாதது அவரிடத்தில் அவனுக்கு இருந்த மரியாதைக் குறைவையே பின்னும் எடுத்துக் காண்பித்தது. கமலத்திடமிருந்து அவ்வப்போது வந்த கடிதங்களிலிருந்து க்ஷேம சமாசாரம் கேட்டு ஒருவாறு ஆறுதல் அடைந்து வந்தார்கள்.

முதலில் மாப்பிள்ளை, பிறகு மனைவி இவர்கள் இறந்தபொழுது இருந்ததை எல்லாம்விட இப்பொழுது சாம்பசிவம் மனம் குன்றியிருந்தார்.

"அப்பா, என்னால் உங்களுக்கு என்றும் கஷ்டமாய்ப் போய்விட்டது" என்று தங்கம் வருத்தத்துடன் ஒரு நாள் சொன்னாள். "அப்படி அல்ல அம்மா! நான் தான் உனக்குச் சத்துருவாகக் காரியம் செய்திருக்கிறேன்" என்று சாம்பசிவம் பதிலளித்தார்.

இதன் மத்தியில் தீபாவளிப் பண்டிகை வேறு நெருங்கிவிட்டது. "மாப்பிள்ளையும் கமலமும் வருகிறார்களா?" என்று கிழவி கேட்கத் தொடங்கிவிட்டாள். சாம்பசிவத்திற்கும் மாப்பிள்ளையை அழைக்க ஆசைதான். ஆனால் கடிதம் எழுதி அவமானப்படுவதற்கு அவர் மனம் கூசிற்று. கடைசியாக அவர் போட்ட கடிதத்திற்கு அவன் பதிலே போடவில்லை. தீபாவளிப் பண்டிகையில் அவனுக்கு நம்பிக்கை எங்கே இருக்கப்போகிறது? அவன்தான் மதப்பற்று இல்லாதவன் ஆயிற்றே!

தந்தையின் மனநிலையைத் தங்கம் அறியாதவள் அல்ல. அவர் வாய் விட்டுச் சொல்லாவிட்டாலும் அவள் ஊகித்துக்கொண்டாள். அவரை அநாவசியமாகப் புண்படுத்த அவள் விரும்பவில்லை. ஒரு புடைவையும் வேஷ்டியும் வாங்கிப் பெண்ணுக்கு அனுப்பிவிட்டுப் பேசாமல் இருந்து விடுவோம் என்பதாகத் தீர்மானித்துக்கொண்டாள். அதன்படியே செய்து, பின்வரும் கடிதத்தைப் பெண்ணுக்கு எழுதி அனுப்பி வைத்தாள் :

"குழந்தை! உன்னையும், உன் கணவரையும் இந்தத் தீபாவளியைச் சாக்கிட்டாவது பார்க்க வேண்டுமென்று எனக்கும் உன் தாத்தாவுக்கும் எவ்வளவோ ஆசையாக இருக்கிறது. பாட்டிக்குக்கூடச் சதா உன் ஸ்மரணைதான்.

ஆனால் எதற்கும் கொடுத்து வைத்ததுதானே கிடைக்கும்? மாப்பிள்ளைக்குத் தீபாவளிப் பண்டிகையில் நம்பிக்கை இல்லை என்பது தாத்தாவுக்குத் தெரியும். மாப்பிள்ளை தொந்தரவாக நினைப்பார் என்பதை உத்தேசித்து மரியாதைக்குக் கடிதம் போடக்கூட அவர் துணியவில்லை. அவர் ஆசீர்வாதத்தோடு இந்தப் புடைவையையும் வேஷ்டியையும் பெற்றுக் கொள்!"

4

தலை தீபாவளி ஒரு தடபுடலும் இல்லாமல் இருப்பதைப் பாட்டியும் அறியாமல் இல்லை. "ஏண்டி, தங்கம்! மாப்பிள்ளையும் கமலமும் வரப் போகிறதில்லையா? உங்க அப்பா போய் அழைத்து வரப்படாதோ?" என்று கேட்டுக்கொண் டிருந்தாள். 'கிழவியால் சும்மாக் கிடக்க முடியாது. ஏதாவது நச்சரிப்பு' என்பதாக யாரும் அவளுக்குப் பதில் சொல்லுவாரில்லை.

தீபாவளிக்கு முதல் நாள் கமலமும் அவள் கணவனும் காரில் வந்து வீட்டு வாசலில் இறங்கினார்கள் என்றால், அப்பொழுது அந்த வீடு என்னவாக இருந்திருக்கும்? "அம்மா!" என்று கூவிக் கமலம் தாயைக் கட்டி அணைத்தாள். சாம்பசிவத்துக்கும் தங்கத்துக்கும் தங்கள் கண்களையே நம்ப முடியவில்லை. சிறிது நேரம் சென்றது, சமாளித்துக்கொண்டு வந்தவர்களை வரவேற்பதற்கு. "ஸ்டேஷனுக்கு வரும்படி தந்தி கொடுத்தேனே, வரவில்லையா? முன்னாடிக் கடிதம் போட முடியவில்லை. வடக்கே தீபாவளி வெகு முக்கியமான பண்டிகை. காலேஜ் ஒரு வாரத்திற்குச் சாத்திவிட்டார்கள்" என்றான் வைத்தியநாதன்.

"ஏதோ வந்தீர்களே, சந்தோஷம்" என்றார் சாம்பசிவம்.

கமலம் கணவன் முன்னிலையில் தாத்தாவிடமும் அம்மாவிடமும் மாறி மாறி வெகு கலகலப்பாகப் பேசி வீட்டிற்கே தனிச் சோபையையும் அழகையும் அளித்தாள். அதுவரையிலும் சாவு வீடுபோல் ஓய்ந்து கிடந்த

வீட்டில், ஆள்படைகள் உள்பட உத்ஸாகம் மேலிட்டுக் கல்யாண வீட்டைப்போல் கலகலப்பு உண்டாகி விட்டது.

மறுநாள் காலையில் ஸ்நானம் முடிந்து கையோடு கொண்டுவந்த சேலையையும் வேஷ்டியையும் உடுத்துக் கொண்டு கமலமும் அவள் கணவனும் சாம்பசிவத்தை நமஸ்கரித்தார்கள். மாப்பிள்ளையிடத்தில் ஏற்பட்டிருந்த மாறுதல் அவரைப் பிரமிக்கச் செய்தது. "அப்பா! நீகூடக் கங்கா ஸ்நானம் செய்தாயா?" என்று அவர் ஆச்சரியத்தோடு கேட்டார். "இல்லாவிட்டால் உங்கள் பேத்தி சும்மா விடுகிறாளா? என் சொல்படியெல்லாம் நடப்பதாகப் பாசாங்கு செய்து தன் இஷ்டப்படியே என்னை ஆட்டிவைக்கிறாள்!" என்றான் வைத்தியநாதன் மனைவியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே. வாஸ்தவத்தில் அவனிடம் உண்டான மாறுதல் சாம்பசிவத்துக்கு ஆச்சரியமாகவே இருந்தது. 'பெண்களுக்கு இவ்வளவு சக்தியா' என்று அதிசயித்து அவர் தம் பேத்தியை உவகையுடன் பார்த்தார். "தாத்தா, அவர் வார்த்தையை நம்பாதே! அந்த ஊர்களில் இந்தப் பண்டிகை அவ்வளவு முக்கியம். தீபாவளி கொண்டாடாதவர்களை அவர்கள் இந்துக்களென்றே நினைப்பதில்லை. அவர்கள் உத்வேகம் இவரையும் கொஞ்சம் பிடித்துக்கொண்டிருக்கிறது. அவ்வளவுதான்!" என்றாள் கமலம்.

சாம்பசிவம் தனியாகப் பேத்தியைக் கூப்பிட்டு, 'எப்பொழுது இப்படி இவன் மாறினான், அம்மா! ஏதாவது மந்திரம் தந்திரம் கற்றுக்கொண்டு அவனை மயக்கி விட்டாயா? அவன் 'ஸூட்'டைத் தவிர்த்து வேஷ்டி கட்டுவானென்று நான் நினைக்கவில்லையே! கல்யாணத்தில் அவன் ஒரு மந்திரம் சொன்னானா? அம்மி மிதிப்பது, ஸப்தபதி ஒன்றுமே செய்யவில்லையே! அப்பொழுது இருந்ததற்கும் இப்பொழுது இருப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம்?" என்று கேட்டார். "என்ன தாத்தா, இதைப் போய்ப் பிரமாதப்படுத்துகிறாய்?" என்றாள் கமலம் சாதாரணமாய்.

“கல்யாணத்தின்போது நாங்கள் சொன்னதை அவன் துளிக்கூட லக்ஷ்யம் செய்யவில்லையே! மணையை விட்டு எழுந்துவிட்டானே! ஓர் அநாசாரப் பயலுக்குக் கொண்டுபோய்ப் பெண்ணைக் கொடுத்துவிட்டோமே என்று நான் வருந்தினது ஈசனுக்குத்தான் தெரியும்” என்றார்.

“விநாயக சதுர்த்தியின்போது பூஜைகூட அவரே செய்தாரே? எல்லாம் சொன்னால் தானே செய்வார்!” என்றாள் கமலம். மனைவி சொன்னால் கேளாத கணவன் இருக்கிறானா என்பதுபோலத் தொனித்தது அவள் பதில்.

இவ்வளவு வயசு சென்ற தங்கள் வார்த்தைக்கு மதிப்பு வைக்காதவன் ஒரு சிறு பெண்ணின் சொற்படி நடப்பதென்பதை நினைக்க நினைக்கச் சாம்பசிவத்துக்கு அதிசயமாகவே இருந்தது.

கமலம் தாயிடம் தனிமையில், “அம்மா, உன் கடிதம் பார்க்கவும் நீயும் தாத்தாவும் என் பிரிவாற்றாமையால் எவ்வளவு வருந்துகிறீர்களென்று தெரியவந்தது. உடனே அவரிடம் பலவாறு எடுத்துச் சொல்லிப் புறப்பட்டு வந்தேன். உன் மாப்பிள்ளை புது நாகரிகத்தில் இருந்தாலும் வெகு நல்லவர் அம்மா, கவலைப்படாதே!” என்று சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டபோது சாம்பசிவத்தின் அதிசயம் பன்மடங்கு ஆயிற்று. அதுவரையில் துக்கமயமாக இருந்தவர் இப்போது அதிசயமயமாகி விட்டார்.

பாட்டியின் முகபாவத்திலும் இப்பொழுது சந்தோஷத்தின் அறிகுறிகள் தென்படுகின்றன. இனிமேல், தான் நிம்மதியாகக் கண்மூடத் தயார் என்பது அதன் பொருள் போலும்.

சம்பந்தி உபசாரம்

காவேரிக்கு நாத்தனார் கடிதத்தைப் பார்த்தும் தூக்கி வாரிப் போட்டது. கைகால்கள் வெலவெலத்து விட்டன.

"அக்கா கண்டிப்பாய் வரமுடியாது என்று எழுதியிருக்கிறாரே! படிக்கிறேன் கேளுங்கோ" என்று சொல்லி விட்டுப் படித்தாள்:

"'என்னை என்ன கல்லால் கட்டிச் சாந்தால் மெழுகி இருக்கிறதா? நான் இல்லாமல் காரியம் நடக்காதா? கல்யாணமா என்ன? தீபாவளிதானே? பாதி துலா ஸ்நானத்தில் என்னால் வரமுடியாது. எல்லாம் நீயே நடத்து.' —என்று எழுதியிருக்கிறார். இப்படித் திடீரென்று என்னைக் கைவிட்டால் நான் என்ன பண்ணுவேன்?" என்று காவேரி தன் கணவருடன் அங்கலாய்த்தாள்.

"அவள் சொல்வதும் வாஸ்தவந்தானே! எத்தனை காலம் அவள் உனக்குச் செய்கிறது? அவரவர் வீட்டுக் காரியத்தை அவரவரே பார்த்துக்கொள்ள வேண்டாமோ?" என்று காவேரியின் கணவர் மனைவியைக் கடிந்துகொண்டார்.

"அதையெல்லாம் பரீக்ஷை பார்க்க இதுவா சமயம்? துலாஸ்நானத்தை வருகிற வருஷம் முடித்துக்கொள்ளட்டும். நீங்கள் போய் உங்கள் அக்காவுக்குக் கொஞ்சம் சொல்லி அழைத்து வாருங்களேன்" என்று மன்றாடினாள் காவேரி.

"சொன்னால் உடனே நடத்துகிறவளா அவள்? தீபாவளி வரப்போவது தெரிந்துதானே துலாஸ்நானம் செய்யப் போயிருக்கிறாள்! ஒன்றும் வேண்டாம், தான் இல்லாவிட்டால் உலகமே அஸ்தமித்துவிடும் என்கிற எண்ணம் அக்காவுக்கும் போகட்டும்."

"உங்களுக்கு என்ன, லகுவாய்ச் சொல்லுகிறீர்கள். அக்கா அத்தனே பார்த்துப் பார்த்துச் செய்தபொழுதே சம்பந்திகள் கல்யாணத்தில் ஆயிரம் குற்றம் குறைகள் கண்டுபிடித்தார்கள். இப்பொழுது தனியே என்ருல் என்ன முடியும்?"

"இப்படிப் பயந்தாயாஞல் முடியாதுதான். எதற்கும் தைரியம் வேண்டும். சம்பந்திகளும் நம்மைப்போல் மனிதர்கள் தாமே? என்ன பண்ணிவிடுவார்கள்? என்ருல் அவளே அழைக்கப் போகிறதென்பது முடியாத காரியம். தலே தீபாவளி நீயே செய்துகொள்ளவேண்டியது தான்" என்று காவேரியின் கணவர் ஒரே பதிலாகச் சொல்லிவிட்டார்.

அப்புறம் அவரிடம் சொல்வதில் பிரயோஜனம் இல்லே என்று காவேரிக்குத் தெரியும். அவள் பயந்த ஸ்வபாவத்தைக் கண்டு அவளிடம் அங்கலாய்ப்பார் அந்த வீட்டில் யாரும் இல்லே. அவள் குழந்தைகள்கூட, 'அவளுக்கு என்ன தெரியும்?' என்று அலட்சியமாக இருந்தன. 'காவேரிக்கு ஒன்றும் தெரியாது' என்றுதான் ஊர் முழுவதும் பெயர்.

* * * *

உண்மையிலேயே அவளுக்கு ஒன்றும் தெரியாதா? விஷயம் இதுதான். அவள் கல்யாணமாகி வீடு வந்ததுமே சிறு வயசில் கைம்பெண்ணுன நாத்தனர் ஒருத்தி வீட்டில் அதிகாரம் செலுத்திவந்தாள். 'அவள் மனம் நோகக்கூடாது, அவளுக்கு எல்லாம் தெரியும்' என்ற மனோபாவத்தில் வீட்டில் தாய் தந்தையர்கள் அவளே நடத்திவந்தார்கள். பெரியவர்கள் அவ்விதமாக இருக்கும்பொழுது மற்றவர்களுக்குக் கேட்கவேண்டுமா? அதுவும் புது நாட்டுப்பெண் என்ன செய்வாள்? எல்லாம் நாத்தனர் இட்டது சட்டம். காவேரி ஸ்வபாவத்திலேயே மிக அடக்கமானவள். 'தான்' என்கிற அகந்தை கொஞ்சமும் இல்லே. கணவரின் தமக்கை சகலமும் கவனித்துக்கொள்ளவே, தன் வீடு, தன் கணவர், தன் குழந்தைகள் என்கிற பாத்தியங்கூட

அவள் தனியாகக் காண்பித்துக்கொள்ளவில்லை. "ஏதோ பெரியவர்கள் இருக்கிறார்கள், நமக்கென்ன?" என்று இருந்துவிட்டாள்.

தாய் தந்தையர்கள் இருக்கும்பொழுதே வீட்டிற்கு எஜமானியாக விளங்கின நாத்தனார், அவர்களுக்குப் பிறகு தம்பியின் குடும்பத்திற்கு முழுவதும் சர்வாதிகாரி யானாள். வீட்டுக் காரியங்களைக் கவனிப்பது, வருகிறவர் கள் போகிறவர்களுடன் பேசுவது, உபசரிப்பது எல்லாம் நாத்தனார்தான். காவேரி பின்னுக்கே போய்விட்டாள். அவளை ஒன்றும் செய்யவேண்டாமென்று வைத்து, பிறகு அவளுக்கு ஒன்றும் தெரியாது என்கிற வரைக்கும் வந்திருந்தன வீட்டு விஷயங்கள்.

இந்த விஷயத்தில் காவேரிக்கு மனக்குறை இல்லையா? உண்டுதான். இருந்தாலும் நாத்தனார் வஞ்சனை யின்றி உழைக்கும்போது அவள் என்ன செய்வாள்? வாழ்க்கைச் சுகம், சந்தோஷம் எல்லாம் இழந்த நாத்தனா ருக்குத் தம்பியின் குடும்பத்தைத் தாங்கி நிற்கும் பெருமையாவது இருக்கட்டுமே, அதில் தவறென்ன? எதை யும் செய்து பழக்கம் இல்லாத காவேரிக்குத் தன்னிடத் திலேயே நம்பிக்கை குறையத்தான் குறைந்தது. 'வீட்டுக் காரியமாக இருந்தாலும் ஏதோ முன்னே பின்னே இருந் தால் பாதகமில்லை. சம்பந்தி, மாப்பிள்ளை வந்து போகிற காரியமாயிற்றே!' என்று நினைக்கும்பொழுதே காவே ரிக்குக் கவலையும் பயமுமாக இருந்தன.

தெருக்கோடியில் வசித்த ஒன்றுவிட்ட ஓர்ப்படி அபிராமி, சுமங்கலி. அவள் கொஞ்சம் ஒத்தாசையாக இருப்பாளோ என்பது காவேரியின் ஆசை. அவளைக் கண்டபொழுது நாத்தனார் தலை தீபாவளிக்கு வர முடியா தென்று கடிதம் போட்டுவிட்டதைச் சொன்னாள்.

அவ்வளவுதான். உடனே அவள், "நன்றாயிருக்கு, மங்களம் இப்படிப் பண்ணுவாளோ? வெளியில் இருக் கிறவர்கள்கூட வந்து நடத்தவேண்டிய சமயத்தில் வீட் டில் இருப்பவள் எங்கோ போய் உட்கார்ந்துகொண்டு, வரமாட்டேன் என்பாளோ? வெறும் நாளில் இவள் என்ன குடித்தனம் பண்ணுகிறது? சம்பந்தி, மாப்பிள்ளை

வர போதுன்னு ஒத்தாசை செய்யணும்?'' என்று பெரி தாய் ஆரம்பித்தாள்.

காவேரிக்கு, 'ஏன் அவளிடம் சொன்னோம்? பெரிய குற்றம் உண்டுபண்ணிவிடுவாள் போல் இருக்கிறதே?' என்று பயங்கூடத் தோன்றிவிட்டது.

''அது ஒன்றும் இல்லை, மன்னி! போன காரியம் ஆகாமல் வர மனசில்லே. வேறே ஒண்ணுமில்லே. இவரைச் சொல்லுங்கோ; போய் அழைச்சுண்டு வாருங் கோன்னு, மாட்டேன் என்கிறாரே! அதுதான் எனக்குப் பெரிசாயிருக்கு'' என்று காவேரி புலம்பினாள்.

"இதோ பார். யார் எப்படி வேணுமானாலும் இருக் கட்டும். நீ கவலைப்படாதே, நான் பார்த்துக்கொள் கிறேன். எனக்கு என்ன வேணுமானாலும் சொல்லி அனுப்பு; ஓடி வருகிறேன். உன் சம்பந்தி என்னமோ, 'இந்த நாத்தனார் கார்வார் பிரமாதமாக இருக்கு' என்றா ளாம். அது மங்களத்தின் காதிலே பட்டுடுத்து. அத னால் அவா வரபோது, தான் இருக்கப்படாதுன்னு அவ ளுக்கு எண்ணம். அவளுக்குத் தெரிஞ்ச லக்ஷணம் அவ் வளவுதான்!'' என்று வெகு பரிவாகப் பேசினாள்.

இவர்களுக்குள் மனஸ்தாபம் என்கிறதில் அவளுக் குச் சந்தோஷம். 'இவர்கள் மட்டும் என்ன, தேவலோ கத்து மனுஷ்யாளா? சண்டை பூசல் இல்லாமல் இருப் பதற்கு?' என்று இவ்வளவு நாளும் அவளுக்கு வயிற் றெரிச்சல். அவள் பேச்சிலிருந்து காவேரிக்கு இது தெரிந்தது. இவைகளை எல்லாம் பார்த்தபொழுது அவ ளுக்கு யாரை நம்புவது என்றே தெரியவில்லை.

கல்யாணமான பெண் ஸரஸாவுக்கு இப்பொழுது கொஞ்சம் நினைவு தெரிந்துவிட்டபடியால், அம்மாவின் மனநிலை ஒருவாறு புரிந்தது. ''அம்மா! ஏன் கவலைப் படுகிறாய்? கண்டவர்களிடமெல்லாம் அங்கலாய்ச்சுக் கொள்வதில் பலன் என்ன? அவர்கள் பரிகாசம் செய் கிறார்கள். தீபாவ்ளி தானே நடக்கும். கவலைப் படாதே!'' என்று தைரியம் சொன்னாள்.

தன் கணவன் குற்றம் ஒன்றும் கண்டு பிடிக்க மாட்டானென்பது அவள் நம்பிக்கை. அவன் அடிக்கடி எழுதும் ஆசைக் கடிதங்கள், அந்தத் தைரியத்தை அவள் மனத்தில் ஊட்டியிருந்தன. தன்னைப் பார்க்கவும் பேசவும் அவனுக்கு இருக்கும் ஆவலைக் கடிதத்தில் படிக்கும் பொழுது, அவனுக்குத் தன்னிடத்திலோ, தன்னைச் சேர்ந்தவர்களிடத்திலோ குற்றம் குறைகள் தோன்றுமென்றே ஸரஸா நினைக்கவில்லை. தான் அவன் வரும்பொழுது அவனோடு பேசப்போவதைப் பற்றியும் நடந்து கொள்ளப் போவதைப் பற்றியுமே அவள் கனவு கண்டுகொண்டிருந்தாள்.

காவேரியின் தவிப்புக்காகவும் கவலைக்காகவும் தீபாவளி நிற்குமா? அது வரத்தான் வந்தது. அவளும் நினைத்து நினைத்து ஒன்றுவிடாமல்தான் செய்தாள். ஏதாவது முக்கியமானது தவறிவிட்டால் என்ன செய்வது என்பது அவள் கவலை. பார்த்துப் பார்த்து ஒன்றிலொன்று குறைவில்லாமல் செய்தாள். அப்படி இருந்தும் அக்கா செய்தால் இன்னும் நன்றாயிருக்குமென்று அவளுக்குப் பட்டது. நாத்தனார் கார்வார் இல்லாமல் வீட்டில் சத்தமே இல்லை. ஆட்கள் பயந்து பரபரப்பாய் ஓடியாடிச் செய்வதன் அமர்க்களம் இல்லை. அவசரத்திலும் பயத்திலும் அவர்கள் தவறு செய்வதும், அதை நாத்தனார் திருத்துவதும் இது மாதிரி ஒரு சம்பவமும் இல்லாமல், வெகு அமரிக்கையாகக் காரியங்கள் நடப்பதைப் பார்க்க, காவேரிக்கே சரியாகத் தோன்றவில்லை. வெறும் தீபாவளிகூட இன்னும் எவ்வளவோ அமர்க்களப்படுமே? தலை தீபாவளி இவ்விதம் சந்தடியின்றி இருந்தால்?

பக்ஷணம் செய்தாகிவிட்டது. மாப்பிள்ளைக்கு வேண்டிய மோதிரம் முதலானவை வாங்கியாகிவிட்டன. சம்பந்திக்கு முதல் தரமான புடைவை, வேஷ்டி பார்த்து எடுத்தாகிவிட்டன. இருந்தும், காவேரிக்கு ஏதோ குறை இருப்பதாகவே தோன்றிற்று. நடுக்கூடத்தில் உட்கார்ந்து ஆகவேண்டிய காரியங்களைப் பேசுவதும், ஆட்களை நினைத்து நினைத்து ஏவுவதும், அவர்கள் சரியாகச் செய்யவில்லை என்று சத்தம் போட்டுக் கண்டிப்பதும், இதெல்லாம் ஒன்றும் இல்லை அல்லவா?

அடிக்கு ஒருதரம் தன் ஒத்தாசையை நாடி வராமல் இவ்வளவு தூரம் செய்துகொண்டு விட்டாளே என்கிறதுதான் ஓர்ப்படி அபிராமிக்கு. அவள் தன்னிடம் அடிக்கடி வந்து நிற்பாள். தான் 'ரொம்ப ரொம்பப் பிகு' பண்ணிக்கொண்டு, தன் கௌரவத்தை நிலைநாட்டிக் கொள்ளலாம் என்பது அவள் ஆசை. அதற்கு இடமில்லாமல் போனது அவளுக்குப் பெரும் ஏமாற்றமே.

* * * *

தீபாவளிக்கு முதல் நாள் மாலை மாப்பிள்ளை, அவர் அம்மா இருவரும் வந்தபோது, அவர்களை வரவேற்கக் கூடக் காவேரிக்குச் சங்கோசமும் பயமுமாகவே இருந்தன. 'நாத்தனார் இல்லையே, நான்தானே வரவேற்று ஆக வேண்டும்?' என்று தானே ஒருவாறு சமாளித்துக் கொண்டு, வரவேற்க முன் வந்தாள். ஆனால் குரல் தாட்டியாகக் கிளம்பினாலன்றோ? அவள் அவர்களை வரவேற்றது, 'வாய் நிறைய 'வாருங்கோ!' என்ற அழைப்புக்கூட இல்லையோ!' என்று சம்பந்தியம்மா சந்தேகிக்கும்படி இருந்தது. கூடத்தில் உட்காரச் சொல்லும் சமயத்தில், உயரமாய் விசுபலகையில் உட்காரச் சொல்வதா, அவர்களுக்கென்று பிரத்தியேகமாகக் கீழே விரிக்கப்பட்டிருந்த ரத்தின கம்பளத்தில் உட்காரச் சொல்வதா என்கிற சந்தேகம் உதித்து, 'உட்காருங்கள்' என்று சொல்லவே தாமதிக்கச் செய்துவிட்டது. காபி கொடுக்க அவளுக்கிருந்த பரபரப்பிலும் கவலையிலும் சம்பந்தியைத் தனியே சில நிமிஷங்கள் இருக்கச் செய்து விட்டுப் போகிறோமே என்பதை அவள் உணரவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக ஸரஸாவை மாமியார் வந்ததும் நமஸ்கரிக்கச் சொல்ல மறந்துபோனாள். அந்தத் தவறுகளுக்கெல்லாம் காவேரியின் சங்கோசம், பயம், பரபரப்பு, கவலை இவைகளே காரணமென்று கண்டாளா சம்பந்தி? எல்லாவற்றையும் அவமரியாதை, அலக்ஷ்யம் என்பதாக எடுத்துக்கொண்டாள். ஏதோ தான் அழையாமல் வந்து உட்கார்ந்திருப்பது போலத் தோன்றிற்று அவளுக்கு. பிறகு கேட்க வேண்டுமா கோபம் வருவதற்கு? காவேரி, "வீட்டில் வேறு யாரையும் அழைத்து

வரவில்லையா ?'' என்று கேட்டதற்கு, ''நான் பெற்றுக் கொள்கிற மரியாதை போதாதா ? இன்னும் எல்லாருக் கும் இது வேணுமா ?'' என்று அவள் கோபமாகப் பதில் சொன்னாள்.

காவேரிக்கு அந்தக் கோபத்திற்குக் காரணம் தெரி யவே இல்லை. அவள் அதிகம் உபசரிக்க நினைத்துச் செய் யும் பொழுது மரியாதைக் குறைவு எங்கிருந்து வரும்? காவேரிக்குக் கொஞ்ச நஞ்சம் இருந்த தைரியமும் போய் விட்டது. இன்னும் என்ன நேருமோ என்கிற திகில் அவள் மனத்தில் புகுந்து கொண்டுவிட்டது. அவள் பயந்ததற்கு ஏற்றாற்போல் சம்பந்தியம்மாள் சாப்பிட உள்ளே வந்த மாப்பிள்ளையைத் தனியே கூப்பிட்டு, ''இதோ பார், ஏதோ தெரியாத்தனமாய் வந்துவிட்டேன். காலையில் ஊருக்குப் போக ஏற்பாடு செய்! என்னால் ஒரு நிமிஷ மும் இந்த வீட்டில் இருக்க முடியாது. உங்கள் மாமி யார், 'வா' என்பதற்குக்கூட வாய் முத்து உதிர்ந்து விடுமோ என்று இருக்கிறாள். பெண்ணை நமஸ்கரிக்கச் சொல்லக்கூட அவளுக்கு லேசில் மனசு வரவில்லை. இந்த அவமரியாதையை என்னால் பொறுத்துக்கொண் டிருக்க முடியாது'' என்றாள்.

மாப்பிள்ளைக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் மனைவியோடு சல்லாபம் செய்வது பற்றி எவ்வளவோ மனக்கோட்டைகள் கட்டி வந்திருக்கிறான். இப்பொழுது மனைவியைக் கண்டால் அரைகுறையாகப் பார்க்கிறானே தவிர, இன்னும் ஒரு வார்த்தை பேசவில்லை. இதற்குள் ஊருக்குக் கிளம்புவதுபற்றி அம்மா ஏதோ கிளப்பு கிறாளே ? அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ''என்ன அம்மா, என்ன நடந்தது ?'' என்று அம்மாவைச் சாவ தானமாக விசாரித்தான். விஷயம் தெரிந்ததும், அம்மா நினைக்கும் விதம் வேறு, மாமியார் நடக்கும் விதம் வேறு என்பது அவனுக்கு விளங்கிற்று. இருந்தாலும் அதைச் சொல்லி அம்மாளின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொள்ள அவனுக்குத் தைரியம் இல்லை. ஆகையால் அம் மாவை அவள் போக்கிலேயே சமாதானம் செய்வதில் முனைந்தான்.

"அம்மா! காலை ஏழரை மணிக்கெல்லாம் ரெயிலா யிற்றே. சாப்பிடாமல் கிளம்பினல் ஊராரெல்லாம் ஏதாவது நினைத்துக்கொள்ள மாட்டார்களா? அதற்கு இடம் வைத்துக்கொள்ளுவானேன்? நாளை ராத்திரிக்குப் போய்விடுவோமே!" என்று மெதுவாக எடுத்துச் சொல்லி, அதற்கு ஒருவாறு அவளை இணங்கும்படியும் செய்தான்.

* * * *

முதல் முதல் மனைவியோடு பேசவேண்டியவை களைப் பற்றி அவன் எவ்வளவோ யோசித்து வைத்திருந் தான். இப்பொழுது அவை ஒன்றும் உபயோகப்பட வில்லை. அம்மாவின் கோபத்தைப் பற்றித்தான் முதல் பேச்சுப் பேச வேண்டி வந்தது. தனக்கும் அம்மாவுக்கும் நடந்ததை அப்படியே மனைவியிடம் சொன்னன். "அம்மா சற்று முன் கோபக்காரி, அவ்வளவுதான்! சமாதானம் செய்தால் சீக்கிரத்தில் மனம் மாறிவிடுவாள். இல்லா விட்டால் அவள் என்னையும் கூட்டிக்கொண்டு மறு நாளே ஊருக்குப் போய்விடுவாள்!" என்று அவன் தன் மனைவியிடம் சொல்லிவைத்தான்.

இதைக் கேட்ட பின்னும் ஸரஸா பேசாமல் இருப் பாளா? படுத்துக்கொள்ளும்பொழுது அம்மாவிடம் தனிமையில் கணவன் சொன்னவைகளைச் சொல்லி வருந் தினள்.

"அம்மா! ஏதாவது செய்து எங்கள் மாமியாரைச் சமாதானம் செய். இல்லாவிட்டால் உன் மாப்பிள்ளை நாளைக்கே ஊருக்குக் கிளம்பவேண்டியதுதான்" என்றாள்.

காவேரி என்ன செய்வாள்? அவள் எதற்குப் பயந் தாளோ அதுவே நேருகிறதே! அவள் எவ்வளவோ நன்ருகச் செய்யவேண்டுமென்று செய்தும், குற்றம் பலமாய் ஏற்படுகிறதே! ஸரஸாவின் வருத்தத்தைக் காண அவளுக்குச் சகிக்கவில்லை. கணவரிடம், "இதற்கு என்ன செய்கிறது? இப்பொழுதே அந்தப் பெண் வருத் தப்படுகிறதே!" என்று அங்கலாய்த்துக்கொண்டாள்.

இதைக் கேட்ட காவேரியின் கணவருக்கு, 'இந்தப் பெண்களே இப்படித்தான். எதற்காவது அமர்க்களப் படுத்துகிறது' என்று தோன்றிற்று. வெறுப்பும் கோப மும் வந்தன. "சம்பந்தியம்மாள் கோபத்திற்கு நான் என்ன பண்ண முடியும்? ஏதோ செய்து சமாளித்துப் பார்" என்றார். 'உன்பேரில்தானே குற்றம் சொல்லு கிறாள்? நீதான் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்பது போல் இருந்தது அது.

இப்படி ஒரு புருஷன் சமயத்தில் ஒத்தாசை ஏதும் செய்யாவிட்டால் காவேரிதான் என்ன செய்வாள்? அவள் கவலை உச்சநிலையை அடைந்தது. 'விடிந்தால் தீபாவளி முடிந்துவிடுகிறது; சம்பந்தி போனால் போகட் டுமே!' என்று விட்டுவிடுவது நன்றாக இருக்குமா? அந்தக் கோபந்தான் எவ்வளவுக்குப் போகுமோ? இன்னும் இரண்டு நாள் இருந்து போக நினைத்து வந்திருக் கும் மாப்பிள்ளையை முன்னாடியே போகச் செய்வதுதான் அழகா? பிறகு ஸரஸாவை என்ன வார்த்தை சொல்லித் தேற்றுவது?

இந்த ஆபத்துக்களிலிருந்து விடுவித்துக்கொள்ள அவளுக்கு ஒரு வழி தோன்றிற்று. அதை நடத்திப் பார்ப்பது தவிர, வேறொன்றும் அவள் புத்திக்கு எட்ட வில்லை.

* * * *

மறுநாள் அதன் பயனாகத் தீபாவளி நிறைவேறியது. சம்பந்தியம்மாள் கோபம் தணிந்து கூடவே இரண்டு நாள் இருந்துவிட்டுச் சென்றாள். மாப்பிள்ளையைப்பற்றிக் கேட்க வேண்டுமா? அவ்வளவு சடுதியில் மனைவியை விட்டுப் பிரியவேண்டியிருக்கிறதே என்கிற ஒரு குறை தான் அவனுக்கு.

தீபாவளி எப்பொழுது முடியப்போகிறது என்று பரக்கப் பரக்கத் துலா ஸ்நானத்தை முழுதுங்கூட முடிக்காமல் வந்து சேர்ந்தாள் நாத்தனார். தம்பியின் குடும்பத்தை முழுவதும் கைவிட மனம் வருமா அவளுக்கு? ஏதோ வெறுப்பினால், ஸ்நானத்தைச் சாக்காக வைத்துக்

கொண்டு வராவிட்டாலும், அவள் மனம் முழுவதும் தலை தீபாவளியில்தான் இருந்தது.

அவள் வரும்பொழுதே பார்த்துவிட்ட கோடியகத்து அபிராமி, அவசரம் அவசரமாக அவளை வரவேற்கக் கூடவே வந்து சேர்ந்தாள். காவேரியின் மனத்தில் உண்டுபண்ண முடியாத வேற்றுமையை நாத்தனாரிடமாவது உண்டுபண்ண வேண்டுமென்பது அவள் ஆசை. அதற்கு இதை விட்டால் சமயம் வேறு ஏது?

"என்ன, மங்களம்! இப்படிப் போய் உட்கார்ந்துட்டே. தலை தீபாவளிக்கு வராமலேயே இருந்துட்டியே! காவேரி எல்லாம் நன்னாத்தான் பண்ணினா. நீ இல்லாத குறை ஒன்றுதான். காவேரிக்கு ஒண்ணும் தெரியாதுன்னு நாம் நினைச்சோம்! என்ன, போ! என்னமாத்தான் செஞ்சா? சம்பந்தி உபசாரந்தான் சாமான்யமா? வேளைக்கு வேளை என்ன டிபன், என்ன சாப்பாடு! ஒரே தடபுடல். சம்பந்திக்கு வாங்கின புடைவை ஒண்ணே போதும். மாப்பிள்ளைக்குச் செஞ்சது அதைவிட நன்னாயிருந்தது. சம்பந்திக்குப் பரம சந்தோஷம். கல்யாணத்திலே ஆயிரம் பாடு படுத்தினாளே! உன்னை அத்தனை குற்றம் சொன்னாளே! காவேரியை என்னமாக் கொண்டாடினா; தெரியுமா? நேற்றுத்தான் ஊருக்குப் போனா. காவேரிக்கு இவ்வளவு தெரியும்னு யாருக்குத் தெரியும்?" என்று மேலும் மேலும் அடுக்கிக்கொண்டே போனாள்.

காவேரியின் சாமர்த்தியத்தைப் புகழக் கேட்ட நாத்தனாருக்குச் சந்தோஷமாக இருக்குமா? அவள் மதிப்பேயன்றோ அதனால் குறைந்துவிடுகிறது?

ஆனால்? அதே சொற்கள் காவேரியை அவ்வளவுக்குச் சந்தோஷப்படுத்தி இருக்கவேண்டுமல்லவா? அதுதான் இல்லை. சம்பந்தியம்மாளின் கோபத்தைத் தணிக்க அவள் செய்தது தெரிந்தால், அபிராமி தன்னை அவ்விதம் புகழ்வாளா?

தீபாவளி ஸ்நானமானதும் காவேரி வெற்றிலைத் தட்டில் புடைவையை வைத்துச் சம்பந்தியிடம் கொடுத்து, "எனக்கு ஒன்றும் தெரியாது. நான் செய்ததைப் பெரிய

மனசு பண்ணி ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏதோ முன்னே பின்னே இருந்தாலும் மன்னித்துக் கொள்ள வேண்டும்'' என்று சொல்லிக் கண்களில் நீர் ததும்ப அவளை நமஸ்கரித்து வேண்டிக்கொண்டது யாருக்குத் தெரியும்? அவளுக்கும் சம்பந்தியம்மாளுக்கும், அந்த அறையில் மாட்டியிருந்த ஈசுவரியின் படத்திற்கும் மட்டுந்தான் தெரியும். கேவலம்! அடிபணிந்து காரியத்தை நிறைவேற்றியிருக்கிருள். அது சாமர்த்தியமாகுமா? நாத்தனுர் மட்டும் தீபாவளிக்கு இருந்திருந்தால் இது மாதிரி நேர்ந்திருக்குமா? நேர இடந்தான் கொடுத்திருப் பாளா? தவறு இருந்தாலும், சம்பந்திக்குக் காவேரியின் பேரில் கோபம் வந்திருக்குமா? காவேரி அவள் காலில் விழும்படி ஏற்பட்டிருக்குமா? பாவம்; இந்தச் சந்தேகம் காவேரியை உள்ளூற வாட்டி வருத்தும்பொழுது, யார் எவ்வளவு புகழ்ந்தாலும் அவளால் சந்தோஷப்பட்டுப் பெருமை கொள்ள முடியுமா?

நண்பருள் நடிப்பு

கோவிந்தராஜு என்பவன் சில வருஷங்களுக்குமுன் நாடகக் கொட்டகைகளில் ஒன்றில் சேர்ந்து அதில் மிகவும் பிரக்கியாதி பெற்றுவந்தான். ஆங்கிலக் கவியாகிய ஷேக்ஸ்பியரின் ஹாம்லட் என்னும் நாடகத்தை முதல்முதல் இணையற்றதாக நடித்துக் காண்பித்த இர்விங் என்பவனைப்போல் தானும் உலகில் யாவராலும் கொண்டாடப் படவேண்டுமென்பதே அவனது பேராசை. அவன் ஏன் அவ்விதம் ஆவலுறவேண்டும் என்ருல் ஆங்கிலேயர்களைப்போல் நாடகங்களில் வரும் பாத்திரங்களைப் பாவத்துடன் நடித்துக் காண்பிப்பதில் தங்கள் அறிவையும் மனத்தையும் செலுத்துவதைக் காட்டிலும், நாடகத் திரைகளிலும், ஆடை ஆபரணங்களிலும், மற்றும் சங்கீதத்திலுமே தம் ஊக்கத்தை நம் நாட்டில் அதிகம் செலுத்துகிருர்கள் என்னும் அவனது கொள்கையே காரணமாகும். அவன் வேறு விஷயங்கள் ஒன்றிலும் சிந்தையற்றவனுய், நாடகக்கொட்டகைகளில் மட்டுமன்றி வீட்டிலிருக்கும் நேரங்களிலும் அதைப்பற்றியே சிந்தித்தும் பேசியும் தன் பொழுதைக் கழிப்பானுயினன். தான் எவ்வேஷம் அணிந்தாலும் அதற்கு உகந்தவாறு நடித்து அதைச் சிறப்பித்துக் காண்பிக்கவேண்டுமென்பது அவன் முக்கிய கருத்து. இப்பொழுதும் அவன் இன்னும் இரண்டொரு தினங்களில் நடக்கப்போகும் ஓர் ஆட்டத்தில் வரும் கதாநாயகனின் முக்கிய சிநேகிதனுக நடிக்கப் போவதால் தன் பாகத்தை, ஒரு நிலைக்கண்ணுடியின்முன் நின்று அதற்குற்ற செய்கைகளுடனும் முகக்குறிகளுடனும் செய்து பார்த்துக்கொண் டிருந்தான். அந்நாடகத்தில் இவன் யாருடைய சிநேகிதனே, அவனே இவனைத் தன் மனைவியின்பால் தகாத நட்புக்கொண்டு தனக்குத் துரோகம் செய்துவிட்டதாக அபாண்டமாகத் திடீரெனப் பழி சுமத்திய பொழுது எவ்வித முகக்குறிகளாலும் செய்கை

களாலும் அப்பொழுது உண்டாகும் மன நிலைமையைக் காண்பிப்பது எனப் பலவாறு பாவனைகளைச் செய்துபார்த்தும் அவன் மனம் திருப்தியடையவில்லை. "இது மிகக் கடினமே" என இரைந்து அதிருப்தியோடு கூறிக்கொண்டான்.

இச்சமயம் இவன் குரலைச் செவியுற்ற இவனுடைய வேலையாள், "கூப்பிட்டீர்களா?" என்று மரியாதையோடு கேட்டுக்கொண்டு உள்ளே நுழையவும் கோவிந்தராஜுவுக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை. அவ்வேலையாளைக் கடுமையாக நோக்கவும்,அவன் இவனிடம் பலநாள் பழகி இவன் குணம் அனைத்தும் அறிந்தவனாதலால் பதில் பேசாமல் கதவைச் சார்த்தியவண்ணம் சென்றுவிட்டான். இவ்விதம் நடுவே நடுவே தொந்தரவு செய்வதற்காகத் தன் வேலையாளைத் தனக்குள்ளேயே வைதுகொண்டான். அச்சமயத்தில்தான் கவனியாமல் சுயேச்சையாக விட்டிருக்கும் தன் மனைவி இன்னும் சிறிது பொழுதில் வெளியிலிருந்து வந்து ஊர் விஷயங்களைக் கூறித் தொந்தரவு செய்வாளே என்று நினைக்கவும் அவனுக்கு வந்த கோபத்திற்கும் வெறுப்பிற்கும் அளவே இல்லை. அவள் தன்னை உபத்திரவிக்காமல் இருக்கவேண்டியே இஷ்டப்படி எங்கு வேண்டுமாயினும் அவள் மாமன் மகனும் தன் பிரிய சிநேகிதனும் நம்பத் தகுந்த குணம் வாய்ந்தவனுமான ஞானசம்பந்தத்தின் பாதுகாப்பில் செல்ல இடம் கொடுத்திருந்தான். இருந்தும் அவள் இடையிடையே தன்னைத் தொந்தரவு செய்வதை நினைக்கும்போது வெறுப்போடு புருவத்தை நெறித்துக்கொண்டான். அச்சமயம் உடனே அவன் மனத்தில் ஓர் எண்ணம் எழவே அவன் முகம் மலர்ந்தது. 'ஏன்? நான் எவ்வளவோ முயன்றும் கண்டுபிடிக்க முடியாமல் தவித்துக்கொண் டிருப்பதை என் சிநேகிதன் மூலமாகவே கண்டுகொண்டாலோ?'—கோவிந்தராஜு ஆனந்தக் கூத்தாடினான். உண்மையிலே ஒரு நாடகம் நடிப்பதெனத் தீர்மானம் கொண்டான். வேலையாளை அழைத்து, உடனே தன் நண்பனை அழைத்துவரச் சொல்லுவோமென எண்ணினான். ஆனால் இப்பொழுது அவன் வீட்டிலிருப்பது சந்தேகம் என்பதும் தன் மனைவி வீடு திரும்பும் நேரம் ஆகிவிட்டது என்பதும் நினைவிற்கு வரவே இப்பொழுது வேண்டாமென நிறுத்தினான். பிறகு அவன்,

'ஒரு சிறு கடிதத்தில் அவனை உடனே வரும்படி எழுதித் தபாலில் போடுவோம்; மறுநாள் கடிதம் கிடைக்கவும் அவன் தாமதமின்றி வருவான்' எனத் தீர்மானித்து அவ் விதமே செய்து அன்றிரவை மிகுந்த உத்ஸாகத்துடன் கழித்தான்.

மறுநாள் பொழுது விடிந்ததும் தன் நண்பன் வரவை ஆவலுடன் எதிர்நோக்கித் தன் அறையில் உட்கார்ந் திருந்தான். தான் சிறிதும் சந்தேகியாத நண்பன்பேரில் சுமத்தப்போகும் பழியை நினைத்துப் புன்சிரிப்புக் கொண் டான். அப்பொழுது அவன் நடந்துகொள்ளப் போகும் மாதிரியைக் காண இவனுக்கிருந்த ஆவலில் சிநேகிதன் வருவதற்கு மிகுந்த நேரம் ஆவதுபோலத் தோன்றிற்று. கடைசியாக ஞானசம்பந்தமும் உள்ளே நுழைந்தான்.

அவன் நல்ல உயரமாகவும் கண்களில் காந்தப் பார்வை உடையவனாகவும் மிருதுவாகப் பேசக்கூடியவனா கவும் தோன்றினான். அவன், "என்ன, கோவிந்தராஜு? இவ்வதிகாலையில் வருவது எனக்கு அசௌகர்யமாயினும் உன் கடிதம் இருந்த மாதிரியால் அதை அசட்டை பண் ணுவது சாத்தியமல்லவென்று தாமதமின்றிப் புறப்பட்டு வந்தேன்" என்றான்.

"ஆம், அது ஒரு முக்கியமான விஷயமே" எனக் கோவிந்தராஜு கோபமாக மொழியவும், அவன் கடுமை யான சொற்களும், அவற்றின்படியே அவன் நடந்து கொண்ட மாதிரியும் ஞானசம்பந்தத்தைத் திடுக்கிடச் செய்தன. அவன் "இதென்ன, ஏதாவது விசேஷம் நடந்ததா?" என்றான்.

இதற்குப் பதிலொன்றும் கூறாது கோவிந்தராஜு தன் நண்பனின் முகத்தை நோக்கி அதிலுண்டாகும் மாறு தல்களைக் கூர்மையாகக் கவனித்துக்கொண் டிருந்தான். ஞானசம்பந்தத்தின் முகம் வெளுத்தது; கைகளும் தாமா கவே சிறிது நடுங்கின. என்ன விசேஷம் என்பதை மறுபடி யும் கேட்டான். "நீ சிறிது யோசித்தால் உன் மனச்சாட் சியே அதை உனக்குக் கூறக்கூடும்" எனக் கோவிந்த ராஜு தன்னை மீறி வரும் கோபத்தை அடக்கி மொழிவது போல் மொழியவே, "என்னைப் பார்; என் நண்பனே!

இவ்விதம் ஏதோ ஒன்றை நினைத்துச் சும்மா வளைத்துக் கூருதே. நான் ஏதாவது உன்னை வருத்தப்படுத்தக் கூடியது செய்திருந்தால் அதை நீ கூறும் அக்கணமே அவ்விதம் நான் செய்யவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுவேன்" என்ருன் ஞானசம்பந்தம்.

கோவிந்தராஜு மெதுவாகவே பேசவெண்ணி, "என்னை வருத்தப்படுத்தி இருக்கிருய்?" என்று சொல்லி ஒரு கோபச் சிரிப்புச் சிரித்தான். அவன் தன் பாவத்தைச் சாமர்த்தியத்துடன் நடித்ததோடு தோழனையும் நன்ருகக் கவனித்தான்.

"தயைசெய்து நீ தெளிவாகக் கூறமாட்டாயா? இல்லாவிட்டால் இவ்வாறு நீ புண்படுத்துவதை நான் சகித்துக்கொண்டிருக்கப்போவதில்லை" என்ருன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் கோவிந்தராஜு கிளம்பி எழுந்து கதவண்டை சென்று அதைத் தாழிட்டுவிட்டு, "நான் உன்னை உதைத்துத் தள்ளும்வரையில் நீ இங்கேதான் இருக்கவேண்டும்" என்ருன்.

"கோவிந்தராஜு! கோவிந்தராஜு! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன?" என்ருன் ஞானசம்பந்தம்.

"இவ்விஷயம் அறியாதமுன்பு பைத்தியம் பிடித்திருப்பினும் நலமாக இருந்திருக்குமே" என்று கோவிந்தராஜு வருத்தத்துடன் கூறி, சிநேகிதன் இரு தோள்களையும் பிடித்து நாற்காலியில் உட்காரவைத்து, "சிநேகத் துரோகியே, முதலில் உட்கார்; நான் யாவையும் விளங்கச் சொல்லுகிறேன்" என்ருன்.

"எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே" என்று ஞானசம்பந்தம் தானே முணுமுணுத்துக்கொண்டான்.

"நான் சொல்வதைக் கவனி; நீயும் நானும், ஒருவன் மற்ருெருவன் மனைவியுடன் ஓடிவிட்டதாகப் புத்தகங்களில் வாசித்தும் உண்மையாக நடந்ததாகக் கேள்விப்பட்டும் இருக்கிருேமல்லவா? ஆனால் நான் இது வரையிலும் அப்படிப்பட்ட துர்ப்பாக்கியமுள்ள கணவர்களில்

நானும் ஒருவன் எனக் கனவிலும் கருதினதில்லை."—இவ்விதம் கோவிந்தராஜு சொல்லி வரும்பொழுதே ஞான சம்பந்தம் நாற்காலியில் நிம்மதியாக உட்கார முடியாதவனுகி, "நீ என்ன சொல்லுகிறுய்? அதன் பொருள் என்ன?" என்றுன்.

"நான் கூறுவது இதுதான். நாம் இருவரும் சிறுபருவம் முதல் நண்பர்களாய் இருந்துவருகிறேம். நான் உன்னிடத்தில் எவ்வளவு அன்புடன் இருந்தேனென்பது உனக்கே தெரியும்; எனக்குக் கல்யாணமான பிறகும் நீ என் வீட்டிற்கு முன்போலவே இஷ்டப்பட்டபோது வந்துபோகவும் என் மனைவியிடம் சுயேச்சையாகப் பழகி வரவும் நான் இடம் கொடுத்துவந்தேன். அதிகம் கூறுவானேன்? நான் என்னினும் வேறுக உன்னை எண்ணவில்லை. நான் சொல்வது முழுவதும் உண்மையல்லவா?" என்றுன். ஞானசம்பந்தம், "ஆம் உண்மையே" எனலும், "என் மனைவி, அவள் சிறுவயதில் எவ்விதம் இருந்தாளோ அவ்விதமே இப்பொழுதும் உன்னிடம் தாராளமாகப் பேசவும் உன்னேடு தனித்திருக்கவும் நான் விட்டிருந்தேன்" என்றுன். "ஆம், அதுவும் உண்மையே" என்றுன் ஞானசம்பந்தம். "ஆனல் நீ அத்துடன் சும்மாயிருக்கவில்லை. அவளிடமிருந்த உன் சிநேகத் தன்மை மாறி வேறு கெட்ட ஆசைகள் உன் மனத்தில் குடிகொண்டன." கோவிந்தராஜு இவ்வார்த்தைகளைச் சொல்லி நண்பனின் முகத்தில் உண்டாகும் ஒவ்வொரு மாறுதலையும் கவனித்தான். உடனே, "பேஷ்" என்று தன்னைத் தானே மெச்சிக் கொண்டான். ஆனல் இன்னும் முழுவதும் முடிந்தபாடில்லை. ஏனென்றல் தன் குற்றச்சாட்டை இன்னும் ஆழமாகப் பாயச்செய்து அதனல் தன் நண்பன் இன்னது செய்வது எனத் தெரியாமல் சொல்லொணுத உணர்ச்சிகள் மனத்தில் வந்து போராடத் தன் குற்றத்தை மறுக்க வேண்டுமல்லவா? அதல்லவோ அவன் வேண்டுவது! மறுபடி அவன் மேலே சொல்லத் தொடங்கி, "ஆம், நீ அத்துடன் திருப்தியடையவில்லை. உன் தகாத ஆசைகளை அவளிடம் மெதுவாக வெளியிட்டபொழுது..............."

"கோவிந்தராஜு!"

"வாயை மூடு, துரோகியே!"

"நான் முழுவதும் கூறுகிறேன். என் மனைவி ஒன்றும் அறியாத பேதை. யார் எதைக் கூறினும் அதன்படி நடப்பவள். ஆம், எனக்குத் தெரியும். அவள் முதலில் அதைக் கேட்கவும் அஞ்சினாள். ஆனால், அந்தோ! முடிவில் அவள் அதற்குச் சம்மதித்துவிட்டாள்."

"கோவிந்தராஜா! நீ என்ன சொல்கிறாய்? நான்... நான்..."

"சும்மா இருக்கமாட்டாயா? நீ அதிகம் பேசினால் நான் உன்னைக் கொன்றுவிடுவேன்!" என்று கோவிந்தராஜன் கோபாவேசத்துடன் கூறினான்: "அவள் அதற்கு இணங்கியபின் நீயும் அவளும் அடிக்கடி சந்தித்து உல்லாசமாயிருந்தீர்கள். என் கண்களில் மண்ணைத் தூவிவிட்டதாகவே நீங்கள் ஆனந்தமுற்றிருக்கையில் நான் விழித்துக்கொண்டுவிட்டேன். உங்கள் நடத்தை யாவும் எனக்கு வெட்ட வெளிச்சமாகிவிட இப்பொழுது நீ அதன் பலனை அநுபவிக்கப் போகிறாய்" என்று கூறிச் சற்று நிறுத்தினான். அவன் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. தன் நண்பன்பால் பல உணர்ச்சிகளால் உண்டாகும் முக மாறுதல்களையெல்லாம் சரியாகக் கவனித்துக்கொண்டான். இனி அவன் அதை மறுத்துக் கூறவேண்டியதே மிகுதியாய் நிற்கிறது. அதையும் அறிந்தபின் அவனைச் சமாதானம் செய்வது மிக எளிதான காரியமே. இவ்வெண்ணங்கள் அவன் குரலைத் தாமாகவே சற்றுச் சாந்தப்படுத்த, "இந்தக் குற்றத்தை மறுக்க உன்னால் கூடுமாயின் அவ்விதம் செய்யலாம்" என்றான்.

ஞானசம்பந்தம் மெதுவாய் எழுந்து நின்றான். அவன் முகம் சவம்போல் வெளுத்திருந்தது. "நான் கூறப் போவது வேறொன்றும் இல்லை" என்று ஒருவிதப் பயம், கோபம், துக்கம், யாவும் கலந்த குரலில் சொல்லத் தொடங்கி, "இதைக் கூறிய பின்பு நான் உன் முகத்திலும் விழிக்காமல் சென்றுவிடுகிறேன். உனக்கு நான் கனவிலும் துரோகம் நினைத்தவனல்ல. உன் மனைவியிடத்தில் நண்பன் என்பதை விட்டு வேறு நட்பு இல்லை. இது சத்தியம். யாரோ விரோதிகள் வேண்டுமென்றே

உன் மனத்தைக் கலைத்து இவ்விதம் உன்னையும் என்னையும் துன்பத்திற்கு ஆளாக்கியிருக்கிறார்கள் '' என்றான்.

இதுவரையிலும் அடங்கியிருந்த சந்தோஷமானது தாங்கமுடியாமல் போகவே இப்பொழுது அது சிரிப்பாக வெளிப்பட்டது. கோவிந்தராஜு சில நிமிஷங்கள் சேர்ந்தாற்போல் குலுங்க நகைத்தான். அப்புறம் அவன் அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு தன் நடத்தையின் காரணத்தைச் சிநேகிதனுக்கு விசதமாகக் கூறி மன்னிக்கும்படி கேட்டான். ''என்னை மன்னித்து என்னுடன் உணவருந்திவிட்டுப் போ'' என்று அழைத்தான். ''உன்னை மன்னிக்கிறேன். ஆனால் இனி உன்னோடு எப்பொழுதும் போலிருக்க என்னால் முடியாது. நீ செய்த வேடிக்கை என்னை மிகவும் கலவரப்படுத்திவிட்டது. நான் சென்று வருகிறேன்'' என்று ஞானசம்பந்தம் வேகமாய்க் கூறி அவ்விடம் விட்டுச் சென்றான்.

''சுத்தப் பைத்தியக்காரன். வேடிக்கையைப் பிரமாதமாகக் கருதுகிறான். எதுவாயினும் நாம் எண்ணிய எண்ணம் என்னவோ நிறைவேறிவிட்டது. இப்பொழுது இவனைச் சமாதானம் செய்ய ஒரு கடிதம் எழுதுகிறேன்'' என்று பின்வருமாறு எழுதினான்:—

''என் பிரிய சிநேகிதனே,

நீ இதற்குள் என்னை முழுவதும் மன்னித்திருப்பாய் என்று நம்புகிறேன். விளையாட்டை வினையாகநினைப்பது உன்போன்ற புத்திமானுக்குச் சற்றும் அழகல்ல. நான் நாளை நாடகக் கொட்டகை சென்றுவர நேரம் ஆகுமாகையால் என் மனைவி வீட்டில் தனித்திருப்பாள். நீ அவசியம் வந்திருந்து அவள் தனிமையைப் போக்குவாயென்று நம்புகிறேன். இன்று நடந்த சங்கதியொன்றும் அவளிடம் கூறாதே. அவள் அதைப் பெரிதாக எண்ணி வருந்தக்கூடும். உன்னை முழுவதும் நம்பும்,

உன் பிரியமுள்ள நண்பன்

கோவிந்தராஜு.''

இதை ஒரு முறை வாசித்தான். 'என் மனைவி தனித்திருக்கும்பொழுது அவனை வரச்சொல்லி இருப்பதாலேயே

எவ்வளவு தூரம் அவனை நம்பியிருக்கிறேனென்பது வெளியாகிறதல்லவா ?' எனத் திருப்திகொண்டு அக்கடிதத்தைத் தானே வெளியிற் செல்லுகையில் தபால்பெட்டியில் போட்டுச் சென்ருன்.

மறுநாள் காலை கோவிந்தராஜுலுவின் வீட்டில் ஓர் அறையில் அவன் மனைவியும் நண்பனும் உல்லாசமாகப் பேசியிருந்தனர். "நேற்று நடந்த ஒரு விந்தையை நினைக்கக் கோவிந்தராஜுலு அதை உன்னிடம் கூறவேண்டாமெனச் சொல்லியிருந்தபோதிலும் சொல்லவேண்டுமென்னும் ஆவல் உண்டாகிறது" எனக் கூறி நகைத்தான் ஞானசம்பந்தம்.

"அவன் அவ்விதம் விரும்பியிருப்பின் நான் அதை அவசியம் கேட்க வேண்டியதே" என்ருள் அவள்.

"அவ்விஷயத்தை அவனைப்போல் சுற்றி வளைத்துக் கூறித் தொந்தரவு செய்யாமல் சுருக்கிச் சொல்லுகிறேன்; கேள். என்னை அவன் நேற்று வரவழைத்து உனக்கும் எனக்கும் தகாத நட்பு இருந்துவருவதாகக் கூறி வைதான். முதலில் நான் இவன் எவ்விதம் அறிந்தானென மிகவும் பயந்துபோனேன். ஆனல் அவன் நடத்தையில் எனக்குச் சற்றுச் சந்தேகம் தோன்றவே முன்பு நான் வாசித்த ஆங்கில வேஷதாரி ஒருவனுடைய கதை ஞாபகத்திற்கு வந்தது. அவ்வேஷதாரி தன் பாகத்தைப் பிசகில்லாமல் நடிக்க வேண்டி அக்கதையில் இம்மாதிரியான சந்தர்ப்பம் ஒன்றில் தன் நண்பனைத் தன் மனைவியிடம் காதல் கொண்டு ஒழுகுவதாகத் திடீரெனக் குற்றம் சாட்டினும்" என்று ஞானசம்பந்தம் கூறி வரும்பொழுதே கோவிந்தராஜுலுவின் மனைவி பயத்துடன் கைகளால் அவன் கைகளை இறுகப் பிடித்து, "அம்மனிதன் என்ன பதிலுரைத்தான் ?" என்ருள். "அந்தக் கதையில் அம்மனிதன் ஒப்புக்கொண்டுவிட்டான். ஆனல் நான் இல்லை என்று மறுத்துவிட்டேன்" என்ருன்.

"அது அவனுக்கு நம்பிக்கை உண்டுபண்ணிற்ரு ?" என்று அவள் நடுக்கத்துடன் கேட்குமுன், "நான் அவனுக்கும் மேற்பட்ட நடிகன் என்பதை அவன் அறியாது போனன்" என்ருன் ஞானசம்பந்தம்.

கண்டிப்பு

"எவ்வளவு நேரமாகிறது! கையில் சர்க்கரைக் கார்டும் பணமுமாய் நிற்கிறேனே! இந்த வள்ளி அதை வாங்கிண்டு கடைக்குப் போகவில்லையே! நன்னாயிருக்கு!......அடி வள்ளி!" என்று உரத்துக் கூப்பிட்டாள் ஜானகி. அவள் குரலில் கோபம் தொனித்தது. வரவர வள்ளி வெகு அலக்ஷ்யமாய் வேலை செய்கிறாள்; சொன்னதைக் கேட்பதில்லை என்கிற கோபம் அது.

"இதோ வந்துட்டேம்மா" என்று பதில் சொன்ன வண்ணம் வள்ளி வந்து எதிரில் நின்றதும், "நன்னாருக்குடி, உன்னை எத்தனை தரம் கூப்பிடறது? ஒய்யாரமா வரயே! ஒரு நாழியாப் பணத்தை வச்சிண்டு நிக்கறேன்; மெதுவா வந்து என்னம்மா எங்கிறயே! காலையில் சர்க்கரை வாங்காட்டா அப்புறம் தராண்டி அங்கே? மத்தியானக் காபிக்கு என்னத்தைப் போடறதாம்? நன்னாருக்கு, போ!" என்றாள்.

"நான் சும்மா இருந்தேனும்மா? ஐயா ரூமைப் பெருக்கச் சொன்னாரு. பெருக்கினேன்."

"அதுக்குத்தானா இப்போ அவசரம்? நாள் முழுக்கப் பெருக்கப்படாதோ? நான் சொன்னா உனக்குக் காதிலே ஏறுகிறதில்லே. காலை வேளையை விட்டாக் கடைக்காரன் சர்க்கரை தரமாட்டான். போடி. சுருக்க, கடைக்கு!"

"ஏதோ நான் சும்மாக் குந்திக்கிட்டு இருக்கிற மாதிரி தான் இந்தம்மாளுக்கு!" என்று முணுமுணுத்துக் கொண்டே சென்றாள் வள்ளி.

அந்த வார்த்தைகள் காதில் விழுந்த ஜானகிக்குக் கோபம் தாங்காதுதான் வந்தது. இந்த வீட்டில் அவளால் குடித்தனம் செய்வது நாளுக்கு நாள் பெரும்

பாடாக இருப்பதாகத் தோன்றிற்று. ஆட்கள் யாரும் அவளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதில்லை. அதுவும் வள்ளி வெகு மோசம். அவளுக்கு வெகுநாள் பழகிவிட்ட தென்பு. அம்மா என்ன பண்ணிவிடுவாங்க என்கிற தைரியம். எதற்கும் பதில் பேசுகிருள். வேலையையும் சரியாகச் செய்கிறதில்லை. இப்பொழுதோ தொட்டதற்கெல்லாம் 'ரேஷன்'. நித்தியம் கடைக்குப் போகவேண்டியிருக்கு. வள்ளி பழகினவளாயிற்றே, தெரியுமே என்று பார்த்தால், இவள் இந்தப் பாடு படுத்தருளே! - என்று தனக்குத் தானே கோபமாய் எண்ணமிட்டுக்கொண்டு கூடத்து விசு பலகையில் வந்து உட்கார்ந்தாள் ஜானகி.

"பொழுதுவிடிந்தா 'ஆபீஸ்' வேலை செய்யவிடாமல் என்ன சத்தம்?" என்று கேட்டவண்ணம் அவள் கணவர் ராமசந்திரையர் அந்தச் சமயத்திற்குச் சரியாய் அங்கே வந்துசேர்ந்தார்.

"சத்தமா! இப்படி ஆட்கள் சொன்னபடி செய்யாட்டா, சத்தம் போடாமல் என்ன செய்யறதாம்?" என்ருள் ஜானகி.

"அவர்களை வேலை வாங்கும் விதம் உனக்குத் தெரியவில்லை. அதுதான் விஷயம்" என்ருர் அவள் கணவர் நிதானமாய்.

"போகிறது! இவ்வளவு நாள் குடித்தனம் செய்தவளுக்குப் புத்திசாலித்தனமாய்க் கண்டுபிடித்துப் பட்டம் கொடுத்தேளே! அதுவே போதும். எப்படித்தான் ஏவணும்? அதையாவது சொல்லுங்கோ, கத்துக்கொண்டு பார்க்கறேன்!" என்ருள் ஜானகி ஆத்திரம் பொங்க.

ஆட்களை வைத்து நிர்வகிக்கச் சாமர்த்தியமில்லை என்று தன்னைக் கணவர் சுட்டிக் காண்பிப்பதாக அவளுக்கு ஆத்திரம்.

"கோவிச்சுக்காதே! ஆட்களை ஏவுவதில் எவ்வளவோ இருக்கிறது. இப்பொழுது நான் சொன்னுல் அவர்கள் உடனே செய்யவில்லையா?"

"நீங்க எஜமான், சம்பளம் கொடுக்கறேள்; பயம் இருக்கு!"

"நீ மட்டும் எஜமானி இல்லையா? அந்தச் சம்பளத்தை நீ கொடுக்கல்லையா? தனியா நான்தான் கொடுக்கறேனு?"

"பின்னே என்னதான் விசேஷம் சொல்லுங்களேன்!"

"ஏவறத்திலேதான் வித்தியாசம். வழவழன்னு சந்தேகமாகச் சொல்லாமே, கண்டிப்பாய் ஒரே வார்த்தையில் ஏவணும். நமக்கே அந்தக் காரியம் நடக்க வேண்டியதில் நிச்சயமில்லைபோல் உத்தரவிட்டால், அவாளும் கண்டு கொள்கிரு. கால தாமதம் உண்டானதும் பண்ரு! இன்னும் ஒண்ணு; அவா காது கேட்கவே எப்பொழுதும் 'சொன்னச் செய்யறதில்லே'ன்னு நாமும் சொல்லிண்டிருந்தா அவர்களுக்கும் தைரியம் வந்துவிடுகிறது. 'அம்மாதான் செய்யல்லேங்கிருங்களே. முழுவதுந்தான் செய்யாமெ இருப்போமே. என்ன தலை போயிடும்?' இன்னு ஆரம்பிக்கரு. முன் போலவா இப்போ ஆட்கள் எஜமானுக்குப் பயப்பட?"

"அப்படி எப்பவெல்லாம் அவா காது கேட்கச் சொன்னேனும்?"

"ஏன் நீ இப்போ எங்கிட்டே சொல்றயே? அதை வள்ளி கேட்டுண்டுதானே போரு?"

"ஆனு நான் வாயே திறக்கப்படாது. ஆட்கள் அப்படி இப்படிப் பண்ருன்னு உங்க கிட்டக்கூடச் சொல்லப்படாது. சரிதான், உங்களுக்கென்ன? சொல்லுவேள். வாசல் ரூமிலே உட்கார்ந்து 'ஆபீஸ்' பண்றேள்; கோர்ட்டுக்குப் போறேள். வீட்டைப் பத்தி என்ன விசாரம்? குடித்தனம் எப்படியோ நடந்துவிட்டுப் போறது. பாடு படறதெல்லாம் பட்டாச் சொல்லமாட்டேளா?" என்று ஜானகி சொல்லும்பொழுது அவள் தொண்டை தழுதழுத்துக் கண்களில் நீர் ததும்பிற்று.

இனிப் பேச்சை நிறுத்திக்கொள்வதுதான் சரி என்பதை உணர்ந்த ராமசந்திரையர், தமக்குக் 'கோர்ட்'டுக்கு நாழிகையாகிவிட்டது என்கிற வியாஜத்தில் ஸ்நானம் செய்து சாப்பிடச் சென்ருர்.

ஜானகியின் மனம் நிம்மதியை இழந்தது. அவள் ஒருத்தியாய் அந்த வீட்டில் பாடு படும்பொழுது இந்த விசுவாசமில்லாத சொல்லா? அவளுக்குத் தன்னிடமே அங்கலாய்ப்புத் தாங்கவில்லை. 'கண்டிப்பு இல்லையாமே, கண்டிப்பு! எதற்கெல்லாம், எப்படியெல்லாம் கண்டிப் பாய் நடந்துகொள்கிறதாம்?' என்று அவள் மனம் மத்தியான்னம் சாப்பாடான பிறகு படுத்திருக்கும் பொழு தெல்லாம் எண்ணமிட்டுக்கொண் டிருந்தது. வள்ளி வந்து மெதுவாய் 'அம்மா' என்று கூப்பிட்டதுகூட அவள் காதில் விழவில்லை.

மறுபடியும் வள்ளி 'அம்மா' என்று அழைத்தாள். "என்னடி வேணும்?" என்று எழுந்து உட்கார்ந்தாள் ஜானகி. வள்ளி வழக்கம்போல் இல்லாமல் வெகு வணக்க மாக அறை வாசற்படியண்டை நின்றிருந்தாள். ஜானகி யிடம் அவளுக்கு ஏதோ ஆகவேண்டும் என்பதை அது நன்கு தெரிவித்தது.

"அம்மா, சாயங்கால வண்டிக்கு நான் கொஞ்சம் ஊருக்குப் போய்விட்டு வாரேன்" என்ருள் வள்ளி.

"என்னடி திடீர்னு இப்போ ஊருக்கு?"

"என் மவ பொன்னி உண்டாயிருக்குதாம். ஊரி லிருந்து ஆள் வந்திருக்கு. என்னை வரச் சொல்லிச்சாம்."

"பொன்னி உண்டாயிருந்தா அதுக்கு நீ போக ணுமா? எத்தனை மாசம்?"

"ஒன்பது மாசம்."

"நீ இத்தனை நாளாச் சொல்லல்லையே?"

"எனக்கே தெரியாதே, அம்மா! இப்பத்தானே எங்க மச்சான் வந்து சொல்லுது? எங்கேயோ பாத் துட்டு வரப்போன இடத்திலே தெரிஞ்சுதாம். உடம்பு நல்லாவே இல்லையாம்; காலெல்லாம் வீங்கிக் கிடக்கு தாம்."

"அது சரிதாண்டி! தீபாவளிப் பண்டிகைக்கு ஒரு வாரமில்லையே. நம்ம ஸரஸு அவ ஆம்படையான் எல் லோரும் வராங்க. பட்சணம் பாடி எல்லாம் செய்யணும்.

இடிக்கவும் புடைக்கவும் நிறையக் காரியம் இருக்கு. நீ என்னமாப் போறது! தீபாவளி ஆகட்டும், பிறகு போக லாம்!''

"இல்லேம்மா!......போய்ப் பார்த்து, இங்கேயே இட் டாந்துடறேன். அவங்க சொல்றதைக் கேட்டாப் பட்டிக் காட்டிலே வச்சுக்கப்படாதுன்னு தோணுது. ஆஸ்பத்தி ரியா இன்னொண்ணு, என்ன இருக்கு அங்கே?'' என்றாள் வள்ளி கவலையுடன்.

ஜானகிக்கும் இதைக் கேட்க ஒரு மாதிரிதான் இருந் தது. இருந்தாலும் வள்ளி இப்பொழுது போனால் தீபா வளிக்குள் எவ்விதம் திரும்புவாள்? அவள் பெண் பொன் னியின் புக்ககம் ஏதோ நாட்டுப்புறம். அதற்குப் 'பஸ்'ஸில் அரை நாள்; அப்புறம், வள்ளி வார்த்தையில், 'ஒன்பது கல் நடந்தோ கட்டை வண்டி கிடைத்தால் அதிலோ தான்' போக வேண்டும். போவதற்கு ஒரு நாள் முழுசாகப் பிடிக் கும். போக ஒரு நாள், வர ஒரு நாள். வண்டியோ 'பஸ்'ஸோ சரியாகக் கிடைத்தால்தான் அதுவும். இல்லா விட்டால் இன்னும் ஒரு நாள் கூட. அப்புறம் அங்கிருக்க ஒன்றிரண்டு நாள். ஏது, அவள் சொன்னது சொன்னபடி வந்தால்கூடத் தீபாவளிக்கு முதல் நாள் தான் வர முடியும். ஆட்கள் போனால் சொன்ன நாளைக்கு எங்கேயாவது வரு கிறதுண்டா? ஒரு நாளும் இல்லை. உள்ளுக்குள் சமையலா ளும் புதிது. வள்ளி இல்லாமல் என்ன காரியம் நடக்கும்? அதெல்லாம் வள்ளி இப்பொழுது போவது முடியாது என்று பட்டது ஜானகிக்கு.

"ஒன்பது மாசமென்று நிச்சயமாகத் தெரியுமாடி? அப்படி இருந்தா இத்தனை நாள் உம் மாப்பிள்ளை, பெண் யாருமேயா கடிதாசு போடாமே இருப்பா? எனக்குத் தோணலே?'' என்றாள் சந்தேகத்துடன்.

"ஏன் அவுங்க போடல்லையோ தெரியல்லே! அல் லாத்துக்கும் போனாத்தான் தெரியும்'' என்றாள் வள்ளி. அவள் போகவேண்டுமென்பதில் நிச்சயமாக இருப்ப தாகப் பட்டது ஜானகிக்கு. ஆனாலும் காலையில் அவள் கணவர் சொன்னதை நினைத்துக்கொண்டாள். கண்டிப்பு

வேண்டும் என்பதுதானே அது? இப்பொழுது அதற்கு அவசியம் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றிற்று அவளுக்கு. 'அது, இது' என்று வார்த்தைகளை வளர்க்காமல், "அதெல்லாம் முடியாது! தீபாவளிப் பண்டிகை முடிந்துதான் போகவேண்டும்" என்று ஒரே வார்த்தையில் திடமாகச் சொன்னாள். அதற்காக வள்ளி இவ்வளவு நாள் வேலை பார்த்த வீட்டைவிட்டு நின்றுவிடவா போகிறாள்? அப்படி நிற்பதாக இருந்தாலும் பாதகமில்லை என்றுதான் திடம் செய்துகொண்டாள்.

"உன் மாப்பிள்ளைக்கு வேணுக் கடிதாசி போடு. பெண்டாட்டியைக் கூட்டிண்டு வரட்டும். உன் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்குங்கூடத் தீபாவளி இங்கேயே நடக்கட்டும்" என்றாள். அவள் குரலில் சந்தேகம் சிறிதும் தொனிக்கவில்லை. பிறகு அங்கே தயங்கி நின்ற வள்ளியை அவள் நிமிர்ந்து பார்க்கவும் இல்லை.

வள்ளிக்கும் அம்மா திடமாக இருக்கிறாள் என்பது தெரிந்தது. கடிதாசு போட்டுப் பார்ப்போமென்று மெதுவாக அரைமனத்துடன் அவ்விடம் விட்டு நகர்ந்தாள்.

பிறகு தீபாவளியன்று வரையும் வள்ளி ஒன்றும் சொல்லிக்கொண்டு வரவில்லை. ஜானகிக்கும் தான் கண்டிப்பாக இருந்து காரியத்தைச் சாதித்துக்கொண்டதாக ஒரு திருப்தி.

மாப்பிள்ளை, பெண் ஸரஸு, அவள் குழந்தைகள் எல்லோருமாக வீடு 'ஜே ஜே' என்று நிறைந்துவிட்டது. வள்ளிக்குக் காரியம் ஓய்வு ஒழிச்சலே இல்லை. ஜானகியும் வள்ளிக்கு எப்பொழுதையும்விட நல்லதாய் ஜரிகை போட்ட நூல் சேலை வாங்கி வைத்தாள். அவளைப் பெண்ணிடம் அனுப்பாததற்கு அதையாவது செய்ய வேண்டுமென்று தோன்றியது.

தீபாவளியன்று காலை, புடைவையை வெற்றிலை பாக்கோடு வள்ளி கையில் கொடுத்து, "தலை முழுகிக் கட்டிக் கொண்டு வாடி!" என்றாள் ஜானகி.

'ஜிலு ஜிலு' வென்று ஜரிகை மின்னும் அந்தச் சேலையை வாங்கிக்கொள்ளும்பொழுது வள்ளியின் பற்

கள் எல்லாம் சந்தோஷத்தால் வெளிவரத்தான் வந்தன. பெண்ணைப் பற்றின கவலையெல்லாம் எங்கேயோ சென்றது. 'புள்ளைத்தாச்சி'ப் பெண்ணுக்குப் புடைவையைக் கட்டிப் பார்க்க வேணுமென்றுகூட நினைத்தாள். பண்டிகைக்கு வீடெல்லாம் மெழுகியிருந்தாள். சடுதியில் செம்மண்ணிட்டுக் கோலம் போட்டுவிட்டுத் தலை முழுகிப் புடைவையை உடுத்துவர எண்ணிப் பரக்கப் பரக்க வேலைகளை முடித்துக்கொண் டிருந்தாள்.

அப்பொழுதுதான் அவள் பெண்ணும் மருமகனும் வீட்டண்டை வந்திருப்பதாக அவளுக்குச் செய்தி வந்தது. அவள் வீட்டுக்குப் பக்கத்துவீட்டுப் பையன் ஓடோடியும் வந்து சொன்னான். இந்தச் சங்கதியை ஜானகியிடம் சொல்லிப் பறந்து வருவதாக அவள் கிளம்பினபொழுது, "பாத்தியா, நீ போகாமே உம் மருமவனே இட்டாந்துட்டான்!" என்று வள்ளிக்கு எடுத்துக் காண்பித்தாள் ஜானகி. அவளுக்குத் தன்னிடமே உண்டான திருப்திக்கு அளவே இல்லை. வீட்டு வேலையைத் திண்டாட விட்டு விட்டு வள்ளி போகவில்லை; அவள் பெண்ணும் வந்து விட்டாள்; இனி வள்ளி ஊருக்குப் போகவே வேண்டாம்; எல்லாம் அவள் கண்டிப்பாய் இருந்ததால்தான்!—இவ்விதம் ஜானகி சந்தோஷப்பட்டுக்கொண்டாள்.

வீடு சென்ற வள்ளி திரும்பி வந்து, "அம்மா, கொஞ்சம் சுடச்சுடக் காபி கொடுக்கச் சொல்லுங்க. பொன்னி ரொம்பக் களைத்து உசிர் போறுப்பிலே வந்திருக்குது. வண்டி கிடைக்காமே நடந்து வந்திருக்காங்க. வழியெல்லாம் மழை வேறேயாம். ஐயர் ஊட்டுக் காப்பின்னு அவளுக்கு உசிரு" என்றாள்.

"சரி, காபியைக் கொடுத்துவிட்டுச் சுருக்க வந்து சேரு. காரியம் அரைகுறையாக் கிடக்கிறது" என்றாள் ஜானகி.

"அம்மா! யாரையாவது சத்தேக் குறையும் பார்த்துக்கச் சொல்லுங்க. ஆஸ்பத்திரி வரையும் பொன்னியெ இட்டுப் போயிட்டு ஓடியாரேன்" என்றாள் வள்ளி.

"என்னடி வரத்துக்குள்ளே ஆஸ்பத்திரி? வந்த சிரமந்தான் தீரட்டுமே! சாயங்காலம் போகலாம்" என்று ஜானகி சொன்னதற்கு, "இப்பொழுதேதான் போகட்டுமே!" என்றார் அவள் கணவர் குறுக்கிட்டு.

"நாளும் கிழமையுமாப் பாதிக் கோலம் போட்டிருக்கு; பத்துத் தேச்சபாடில்லே; அப்படிப் போனால், யார் வந்து குறையும் செய்வா? அதைப் பண்ணிட்டுப் போகட்டும். நீங்க வந்து குறுக்கிடாதிங்கோ!" என்று அதட்டினாள் ஜானகி. தீர்மானம் வந்திருந்தது இப்பொழுது அவளுக்கு. ஐயாவுக்குக்கூட அம்மா பதில் சொல்லிட்டாங்களே! அப்புறம் வள்ளி என்ன செய்வாள்? முழு வேலையையும் செய்துவிட்டுத்தான் போனாள்.

மறுநாள் அவள் பெண் ஆஸ்பத்திரியில் பிரஸவிக்க முடியாமல் சிரமப்பட்டு, ஓர் ஆண் மகனைப் பெற்றுப் போட்டுவிட்டு உயிர்நீத்து விட்டதாகச் செய்தி வந்தது.

"மூட ஜனங்கள்! ஹூம்! முதலிலேயே கவனிக்கத் தெரிகிறதில்லை" என்றார் ராமசந்திரையர்.

இந்த வார்த்தை ஜானகியின் மனத்தில் சுருக்கென்று பட்டது. 'இவ்வளவு நாள் குடித்தனம் பண்ணிப் பழகின நமக்குப் புது வேலைக்காரி வைத்துக்கொண்டு சமாளிக்க முடிந்திராதா? வள்ளியை அவள் போகிறேனென்று கேட்டபொழுதே போக விடாமல் ஏன் தடுத்தோம்? வள்ளி பொல்லாதவளாயிற்றே. தன்னைக் குற்றம் சொல்லித் திட்டுவாளே' என்று அவள் மனம் பயந்தது.

ஆனால், வள்ளி பதினைந்து நாளும் கழித்து எல்லாம் முடிந்து வந்தபொழுது சும்மா அழுதுகொண்டு நின்றாளே ஒழிய, யாரையும் ஒன்றுமே சொல்லவில்லை. பெண்ணை இழந்த பெருந் துக்கம் அவளை மௌனியாக்கி விட்டது.

"ஏண்டி, அவ்வளவு மோசமாகவாடி இருந்தது பொன்னிக்கு உடம்பு? வந்து ஒரு நாள் இருக்கல்லே; போயிட்டாளேடி?" என்று ஜானகி அங்கலாய்த்த பொழுது, "மோசமாத்தாம்மா இருந்திருக்கணும்!

அதோடு அந்தப் பாவி வேறே 'பஸ்'ஸை வரைக்கும் நடத்தி இட்டாந்துட்டானே!" என்றாள் தீனமாய்.

"ஏண்டி அப்படிச் செய்தான்? அவனுக்குத் தெரியல்லையா?"

"ஆம்புள்ளைக்கு என்னும்மா தெரியும், பொம்புள்ளேயோடே பாதை? வண்டி கிடைக்கலலே; தான் நடந்து வராப்போலே நினைச்சுட்டான். எம்மேலேதான் பிசகு. நான் வரச்சொல்லிக் கடுதாசி போட்டிருக்கப்படாது. பண்டிகெ கழிஞ்சு போகலாம்னு இருந்திருக்கணும. இனிமே என்ன! நம் பாவம், வேணும்னு செஞ்சானு? அதில்லே! அவனுந்தான் அடிச்சிக்கிறுன். அல்லாம் விதி. ஆனு ஒண்ணு. ஐயா ஊட்டுக் காப்பின்னு அவளுக்கு உசிர். அதை லோட்டா நிறைய வாங்கிக் குடிச்சா. அம்மா புடைவையின்னாலும் கட்டிக்க ரொம்ப ரொம்ப ஆசை. ஒரு விசையும் தீபாவளிப் புடைவையை என்னெக் கட்டிக்க விடமாட்டா. தான் கட்டிப் பழசாக்கினப்புறந்தான் எங்கிட்டேக் கொடுப்பா. அத்தனை ஆசை அவளுக்கு அதிலே! அம்மா கோவிச்சுக்குவாங்களேன்னு, கேக்க மாட்டா. பூவும் மஞ்சளும் நெத்தியிலே குங்குமமுமா, இப்பவும் நீங்க கொடுத்த தீபாவளிப் புடைவையை ஆசை தீர மேலே போத்திண்டு போயிட்டா .....!" என்று வள்ளி பெண்ணின் கடைசிக் கோலத்தை நினைத்துச் சொல்லி விடாது புலம்பினுள்.

ஜானகிக்கு அவளைச் சமாதானம் செய்யும் வகை ஒன்றும் தெரியவில்லை, ஒரு நொடியில் பெண்ணை இழந்த அவளுக்கு எதுதான் சமாதானத்தைக் கொடுக்கும்? இருந்தாலும், பொன்னி அவ்வளவு சீக்கிரம் இறந்து போவாளென்று யார்தாம் நினைத்தார்கள்?

அது தெரிந்திருந்தால் ஜானகி ஒரு நாளும் வள்ளியை ஊர் போக விடாமல் இருந்திருக்க மாட்டாள். மேலும் கணவர் சொன்னபடி கண்டிப்பாயிருக்க எண்ணித்தான் அவள் அது மாதிரி முதல் முதல் சுயநலமாய் நடந்து கொண்டாள். இல்லாவிட்டால் அந்தத் தீர்மானம் அவளுக்கு வந்திராது. அதற்காக வள்ளியின் மகள் சாக வேண்டுமா? ஆனுல், வள்ளி என்னவோ யாரையும் குறை

கூறவில்லை. மழையில் நடத்தி அழைத்துவந்த மருமகனைக் கூட அதிகம் ஒன்றும் சொல்லிவிடவில்லை. விதியைத் தான் நொந்து கொள்ளுகிறாள்.

"பாவம், வள்ளி ரொம்ப நல்லவள்!" என்று தானே எண்ணமிட்டாள் ஜானகி.

வாஸ்தவத்திலும், விதியை விட்டால் வேறு யார் தாம் பொன்னியின் பிரிவுக்குப் பொறுப்பாளியாக முடியும்?

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் அவ்வை நூலகம் திருப்பரங்குன்றம்

புதிய வெளியீடுகள்

பிரதிமா நாடகம் ரூ. 1/-

பாஸமகாகவியின் கற்பனையில் உதயமான ராமாயண நாடகம். கைகேயியின் உயர்வு தோன்றச் சமத்காரமாகப் பின்னியிருக்கிறார் ஆசிரியர். சுவைகள் சம்பாஷணை வாயிலாக ஊறிப் படிப்போர் உள்ளத்தைக் கவரும். மூல ராமாயணத்திலிருந்து சில இடங்களில் வேறுபட்டிருப்பதும் யாவருக்கும் பயன்படுகிறது.

வாழ்வின் ஒளி (நாவல்) ரூ. 4/-

பி. எம். கண்ணன் எழுதியது. அவள் வாழ்வில், கணவனுக்குக்கூடச் சொல்ல முடியாத ஒரு ரகசியம். தன்னை நெருங்காத அவளிடம் கணவன் வெறுப்புக் கொள்கிறான்; அவளுடைய நடவடிக்கைகளினால் அவளிடம் அவனுக்கு இரக்கமும் உண்டாகிறது. அவனுடைய இன்பத்துக்காக அவள் தானே ஏற்பாடு செய்ய முனைகிறாள். கடைசியில்......?

பொய்த் தேவு (நாவல்) ரூ. 3/8

சாத்தனூர் மேட்டுத் தெருவில் ஏழைப் பையனாகத் திரிந்த சோமு, பிற்காலத்தில் ஒரு சொந்தக் கடைக்கு முதலாளியாகிறான். பணத்தையே தெய்வமாக எண்ணிய சோமு முதலியார் பல வழிகளிலே புகழும் பணமும் குவித்து வாழ்ந்து, கடைசியில் மேட்டுத் தெருவுக்கே வருகிறார். அது எப்படி என்பதை இதன் ஆசிரியர் க. நா. சுப்ரமண்யம் கதைப் போக்கிலே தெளிய வைத்திருக்கிறார்.

தபாற் செலவு தனி

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர்